# கிறிஸ்தவ கீர்த்தனைகள்

மின் நூல்: எஸ்.கே.ராஜன்
டக்கரம்மாள்புரம்.

# கீர்த்தனைகளின் பொருள் முறை


| | | கீர்த். |
|---|---|---|
| I. | **கடவுள் துதி** | |
| | பொதுத் துதி | 1 – 17 |
| II. | **கிறிஸ்து துதி** | |
| | (1) அவர் சரிதை | |
| | (i) மனுடாவதாரம் | 18 – 31 |
| | (ii) பிறப்பு | 32 – 38, 318, 389 |
| | (iii) பாலியம் | 39 |
| | (iv) ஊழியம் | 40 – 43 |
| | (v) பாடும் மரணமும் | 44 – 64 |
| | (vi) உயிர்த்தெழுதல் | 65 – 69, 107, 386, 388 |
| | (vii) பரமேறல் | 70 |
| | (2) அவர் வருகை | 71 – 76 |
| | (3) அவர் மாட்சிமை | 77 – 110, 320, 391 |
| III. | **பரிசுத்த ஆவி துதி** | |
| | பிரார்த்தனை | 111 – 122 |
| IV. | **கிறிஸ்தவ ஜீவியம்** | |
| | (1) இரட்சைக்கழைப்பு | 123 – 152 |
| | (2) இரட்சணியம் வேண்டுதல் | 153 – 157 |
| | (3) பிழையுணர்ந்தோதல் | 158 – 185 |
| | (4) கிறிஸ்துவைச் சேர்தல் | 186 – 218 |
| | (5) ஆத்ம பிரதிஷ்டை | 219 – 225 |
| | (6) நம்பிக்கை | 226 – 238 |
| | (7) ஜெபமும் வேதத் தியானமும் | 239 – 250 |

| | | |
|---|---|---|
| | (8) கிறிஸ்தவ ஒழுக்கம் | 251 – 265 |
| | (9) சுவிசேஷ ஊழியம் | 266 – 272, 382 – 384 |
| | (10) ஈகை | 273 – 276 |
| | (11) மோட்சம் | 277 – 284 |
| **V.** | **திருச்சபை** | |
| | (1) தேவார்ச்சனை | 285 – 299 |
| | (2) ஞானஸ்நானம் | 300 – 303 |
| | (3) திடப்படுத்தல் | 304, 305 |
| | (4) திருவிருந்து | 306 – 311 |
| | (5) குருவபிஷேகம் | 312 – 314 |
| | (6) தேவாலயப் பிரதிஷ்டை | 315 – 317 |
| | (7) திருச்சபையின் கீதங்கள் | 319, 381, 392 |
| | (8) பாலர் ஞாயிறு | 321, 322 |
| | (9) வைத்திய சேவை | 351, 352 |
| | (10) தொண்டு புரிதல் | 394, 395 |
| | (11) கிறிஸ்தவ இல்லறம் | 396 |
| **VI.** | **திருநாட்கள்** | |
| | (1) கிறிஸ்து ஜயந்தி | 320, 19–38, 318, 389 |
| | (2) பிரசன்னத் திருநாள் | 36 |
| | (3) குருத்தோலைத் திருநாள் | 42, 43, 110, 325 |
| | (4) பாலர் பாட்டுகள் | 321, 322 |
| | (5) பெரிய வெள்ளிக்கிழமை | 323, 324 |
| | (6) உயிர்த்தெழுந்த திருநாள் –ஈஸ்டர் | 65–69, 107, 386, 388 |
| | (7) பரமேறின திருநாள் | 70 |
| | (8) பரிசுத்த ஆவியின் திருநாள் – பெந்தெகொஸ்து | 111–119 |

| | | |
|---|---|---|
| | (9) திரித்துவத் திருநாள் | 2–5, 7, 10, 211, 383 |
| | (10) சகல பரிசுத்தவான்களின் திருநாள் | 326 – 328 |
| **VII.** | **விசேடித்த சமயங்கள்** | |
| | (1) காலை நேரம் | 329 – 336 |
| | (2) மாலை நேரம் | 337 – 339 |
| | (3) ஓய்வுநாள் | 340 – 342 |
| | (4) நிச்சயார்த்தம் | 343, 344 |
| | (5) திருமணம் | 345 – 350 |
| | (6) தேகவியோகம் | 353 – 356 |
| | (7) சேர்ப்பின் பண்டிகை | 357, 358 |
| | (8) ஆண்டுவிழா | 359 – 363 |
| | (9) விடை கொடுத்தல் | 364 |
| | (10) துன்ப துயர்க் காலம் | 365 – 369 |
| | (11) புதுமனை புகுதல் | 370 |
| | (12) நற்செய்தி | 371 – 376 |
| | (13) மங்களப் பாட்டுகள் | 377 – 381 |
| | (14) திருச்சபையின் கீதங்கள் | 319, 381, 392 |
| | (15) உயிர்த்தெழுந்த திருநாள் | 386, 388 |
| | (16) தொழும்பு, தொண்டு, இல்லறம் | 389 – 396 |
| | (17) இளைஞர், தேசியம், நிறைவு | 397 – 400 |

# கீர்த்தனைகளின் முதலடி அகராதி

## அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ |
| க | ச | ஞா | த | ந |
| ப | ம | ய | ர | வ |
| ஜ | | | | |

| வ.எண் | பாடல் | கீர்த் |
|---|---|---|
| | **அ** | |
| 1. | அஞ்சாதே யேசு ரட்சகர் | 231 |
| 2. | அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தையுமே | 214 |
| 3. | அடைக்கலம் அடைக்கலமே, இயேசுநாதா, உன் | 197 |
| 4. | அதி – மங்கல காரணனே | 23 |
| 5. | அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே;–தே | 534 |
| 6. | அந்த நாள் பாக்கிய நாள்–நான் மீட்கப்பட்ட | 140 |
| 7. | அந்தகாரப் பூமிஇதையா,–இருளோ டிமெய் | 376 |
| 8. | அப்பா, அருட்கடலே, வரம் | 312 |
| 9. | அப்பா, தயாள குணாநந்த மோனந்த வேதா,–பொல்லா | 47 |
| 10. | அமலா, தயாபரா, அருள்கூர், ஐயா,–குருபரா | 12 |
| 11. | அரசனைக் காணமலிருப்போமோ?–நமது | 36 |
| 12. | அருட்கடலே, வரந் தர இது சமயமே; | 313 |
| 13. | அருமருந்தொரு சற்குரு மருந்து, | 127 |
| 14. | அருமை ரட்சகா, கூடிவந்தோம்;–உம | 310 |
| 15. | அருமையுற நீ இறங்கி அடியனுள மீது தங்க, | 224 |
| 16. | அருளே! பொருளே! ஆரணமே அல்லும்பகலுந்துணை | 394 |
| 17. | அரூபியே, அரூப சொரூபியே,–எமை | 111 |
| 18. | அல்லேலுயா ஜெயமே அமலன் எழுந்தார் அதிசயமே | 366 |
| 19. | அல்லேலூயா துதி, அல்லேலுயா ஜெயம், | 383 |

20. அறுப்போ மிகுதி, ஆட்கள் தேவை,................................268

21. அனந்த ஞான சொரூபா, நமோ நம! அனந்த ..................... 86

22. அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்?–அதிசய ...................311

23. அன்பே பிரதானம்,–சகோதர........................................251

24. அனுக்ரக வார்த்தையோடே–இப்போ–து...........................377

## ஆ

25. ஆ யேசுவே நீர் எங்களை..............................................298

26. ஆ! அம்பர உம்பர மும் புகழுந்திரு.................................. 35

27. ஆ! இன்ப கால மல்லோ–ஜெபவேளை ............................242

28. ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!...............................3

29. ஆசையாகினேன், கோவே–உனக்.................................193

30. ஆண்டவர் பங்காகவே, தசம பாகம், ...........................273

31. ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன்;–அவர் .........256

32. ஆண்டவனே கிருபை கூராய்–எனக்...............................170

33. ஆண்டவா, உன்றன் சேவைக்கடியேன் அர்ப்பணஞ் ..........393

34. ஆண்டவா, மோட்சகதி நாயனே,....................................155

35. ஆத்தும அடைக்கலம் அன்புள்ள யேசுவே, ......................237

36. ஆத்தும ஆதாயம் செய்குவோமே,–இது ..........................269

37. ஆத்துமமே, என் முழு உள்ளமே,–உன் ............................ 78

38. ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே,–என்றன் ...................319

39. ஆதம்புரிந்த பாவத்தாலே மனுடனாகி .............................. 46

40. ஆதாரம் நீ தான் ஐயா, என்துரையே, ..............................210

41. ஆதி அந்தம் இல்லானே, அளவில்லா வல்லபனே, ............. 89

42. ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா,–எனக் .............162

43. ஆதி யாம் மகா ராசனே,–எந்த வேளையும் .......................212

44. ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப் பாலகனாகப் ........... 20

45. ஆதிபிதாக் குமாரன்–ஆவி திரி யேகர்க்–கு ....................... 10

46. ஆதியில் ஏதேனில் ஆதாமுக் கேவாளை .........................348

47. ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா;................. 67

48. ஆயன் நான் தானே மெய்யாய், நல்ல ............................. 91

49. ஆர் இவர் ஆராரோ–இந்த–அவனியோர் மாதிடமே ............ 34

50. ஆர் இவர் ஆரோ? ஆர் இவர் ஆரோ? ............................. 24

51. ஆரணத் திரித்துவமே,–எமை ........................................211

52. ஆரிடத்தில் ஏகுவோம்?–எம் ஆண்டவனே, .......................189

53. ஆரும் துணை இல்லையே, எனக்..................................165

54. ஆலயம்போய்த் தொழவா ருமென்ற தொனி......................289

55. ஆவியை அருளுமே, சுவாமீ,–எனக் ...............................117

56. ஆவியை மழைபோலே யூற்றும்,–பல ...............................116

57. ஆறுதல் அடை, மனமே;–கிறிஸ்துவுக்குள்........................353

58. ஆனந்தமே! ஜெயா! ஜெயா!..........................................359

## இ

59. இத்தரைமீதினில் வித்தகனா யெழுந்த............................... 97

60. இந்த மங்களம் செழிக்கவே–கிருபை செயும்,......................349
61. இந்த வேளையினில் வந்தருளும், தேவ ஆவியே! ..............113
62. இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே....... 300
63. இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள், ................................138
64. இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார், கம்பீரமாய் ...................... 69
65. இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த ..................363
66. இம்மணர்க் கும்மருள் ஈயும், பர வாசா! .............................350
67. இமயமும் குமரியும் எல்லைக்கடலுடை ............................398
68. இயேசு நான் நிற்குங் கன்மலையே!–மற்ற ..........................215
69. இயேசு நேசிக்கிறார்,–இயேசு நேசிக்கிறார்;........................217
70. இயேசுவின் நாமமே திருநாமம்,–முழு ............................... 94
71. இரங்கும் இரங்கும், கருணைவாரி, .................................167
72. இவரே பெருமான், மற்றப் ............................................. 82
73. இறைவன் நீயே;–எளியனுக் ..........................................175
74. இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், இயேசுநாதையா; .....231
75. இன்னமும் நாம் யேசு பாதத்தில்–சந்திக்கும் வரை ...............364
76. இன்னிய முகமலர்ந்து இருதயத் துருகுமன்பால்..................323

## ஈ

77. ஈசனே! கிறிஸ்தேசு நாயகனே! உன்றன் ............................194

## உ

78. உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்;–.......................283
79. உச்சித மோட்ச பட்டணம் போக ....................................284

80. உதவி செய்தருளே!-ஒருவர்க்கொருவர் யாம் ....................265

81. உந்தன் ஆவியே, சுவாமி, என்றன் மீதினில் ......................112

82. உயர்பரனில் உதித்ததெல்லாம் உலகதனை ஜெயிக்கு ..........221

83. உருகாயோ நெஞ்சமே.................................................. 59

84. உலகில் பவப் பாரத்தால் சோரும்-இளைப் ........................137

85. உனக்கு நிகரானவர் யார்?-இந்த ................................... 88

86. உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம்,-இதோ! .........227

87. உன்றன் சுயமதியே நெறி என்-று...................................141

88. உன்றன் திருப்பணியை உறுதியுடன் புரிய..........................271

89. உன்னதத்திற் பரற்கு மகிமை உலகிற் சமாதானம்.................. 22

90. உன்னதப் பரமண் டலங்களில் வசிக்கும்.......................... 400

91. உன்னையன்றி வேறே கெதி ..........................................390

## எ

92. எங்கும் புகழ் யேசு ராசனுக்கே .......................................397

93. எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்.......................... 60

94. எங்கேயாகினும்-ஸ்வாமி-எங்கேயாகினும்,........................142

95. எத்தனை திரள் என் பாவம், என் தேவனே! .......................163

96. எத்தனை நாவால் துதிப்பேன்-எந்தன் .............................108

97. எது வேண்டும், சொல், நேசனே,-உனக்............................262

98. எந்நாளு மேதுதிப்பாய்-என்னாத்துமாவே, நீ......................360

99. எந்நாளுந் துதித்திடுவீர்,-அந்த .....................................392

100. எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக்கொள்வதற்கு .............134
101. எப்போ காண்பேனோ? எப்போ சேர்வேனோ?.....................282
102. எருசலேமே! எருசலேமே! எருசலேமே! எருசலேமே!............ 61
103. எல்லாம் யேசுவே,–எனக்கெல்லா மேசுவே. ........................225
104. எழுந்தருளும் ஏசு சுவாமி ............................................... 66
105. எழுந்தார் இறைவன்,–ஜெயமே ஜெயமெனவே.................... 68
106. என் உள்ளங் கவரும்,–நீர் மரித்த ...................................199
107. என் ஐயா, தினம் உனை நம்பி நான் ................................178
108. என் சிலுவை எடுத்து, என் இயேசுவே, .............................223
109. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்..........................208
110. என்தன் பரம குரு செய்த உபகாரத்தை ............................. 79
111. எனது கர்த்தரின் ராஜரீக நாள் ......................................... 74
112. என்றைக்கு காண்பேனோ, என் ஏசு தேவா?........................ 73
113. என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்! ................... 77
114. என்ன பாக்கியம், எவர்க்குண்டு ...................................... 38
115. என்னாலுரைக்க முடியாதே–என்றன் ..............................391
116. என்னாலே ஜீவன் விடுத்தீரோ, – ஸ்வாமீ?......................... 56
117. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன், ..............................220
118. என்னையும் உம தாட்டின் மந்தையோ.............................186
119. என்னோ பல நினைவாலும் நீ உன்னை. ...........................233

## ஏ

120. ஏங்குதே என்னகந்தான், துயர் ........................................ 52

121. ஏசு கிறிஸ்து நாதர்..................................................109

122. ஏசு நாயகனைத் துதி செய், செய்,.................................... 87

123. ஏசு மகாராசனுக்கே இன்றும் என்றும் ஜே! ........................102

124. ஏசுவைப் போல நட–என் மகனே!.....................................254

125. ஏசுவையே துதிசெய் நீ, மனமே, ........................................ 80

126. ஏற்றுக்கொண்டருளுமே, தேவா!–இப்போ ..........................241

127. ஏன் இந்தப் பாடுதான்!–சுவாமி ....................................... 44

## ஐ

128. ஐயரே, நீர் தங்கும் என்னிடம், .......................................337

129. ஐயனே! இவர்க் காசி ஈகுவாய்,.......................................303

130. ஐயனே! உமது திருவடி களுக்கே ....................................330

131. ஐயனே, நரர்மீதிரங்கி அருள், ஐயனே,.............................118

132. ஐயா, உமது சித்தம் ஆகிடவே வேணும்,...........................205

133. ஐயா, உனதருள் புரி, அருமை மேசையா!..........................169

134. ஐயா, நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில் ....................... 54

135. ஐயையா, நான் ஒரு மா பாவி;–என்னை ............................122

136. ஐயையா, நான் பாவி,–என்னை.........................................166

137. ஐயையா, நான் வந்தேன்;–தேவ .......................................185

138. ஐயோ, நான் ஒருபாவ ஜென்மி ஆனேனே! ........................160

## ஒ

139. ஒரு மருந்தரும் குருமருந்-(து) ........................................126

140. ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க, ....................341

## ஓ

141. ஓ! ஸ்திரீ வித்தேசையா, ................................................287

142. ஓகோ யேசுவின் நேச மதுரமே, .......................................104

143. ஓகோ! பாவத்தினைவிட் டோடாயோ? ...........................149

144. ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,............................ 43

145. ஓடிவா, ஜனமே;-கிறிஸ்து வண்டைக் ..............................291

146. ஓய்வு நாளதை ஸ்தாபித் தருளிய ....................................342

147. ஓய்வுநாள் இது, மனமே,-தேவனின்.................................340

## க

148. கண்களை ஏறெடுப்பேன் - மாமேருநேராய் என் .................. 17

149. கண்டேனென் கண்குளிர-கர்த்தனை யின்று ...................... 37

150. கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்..................332

151. கர்த்தரின் பந்தியில் வா,-சகோதரா................................. 300

152. கர்த்தருக்குக் காணிக்கையிதோ! தம்மையே தந்த ..............275

153. கருணா கரனே பரமே சுரனே,.......................................... 21

154. கருணாகர தேவா, இரங்கி இந்தக் ....................................338

155. கல்லும் அல்லவே, காயம்-வல்லும் அல்லவே-இது............355

156. கல்வாரி மலையோரம் வாரும்,........................................ 55

157. கவலை வைக்காதே, மகனே, நீ.......................................213

158. கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை .....191

159. காணிக்கை தருவாயே–கர்த்தருக்குனது............................276
160. காயம் ரத்தங் குத்துகள் நிறைந்து .................................... 51
161. காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்.....................129
162. காலமே தேவனைத் தேடு;–ஜீவ .......................................329

163. கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே;–நல்ல.........................229
164. கிருபை கூரும் ஐயனே;–பாவி என் ..................................173
165. கிருபை புரிந்தெனை ஆள்;–நீ பரனே!..............................183
166. கிறிஸ்தவ இல்லறமே–சிறந்திடக் .....................................396

167. குணப்படு, பாவி; தேவ ..................................................148
168. குணம் இங்கித வடிவாய் உயர் கோவே, யேசு தேவே,...........346
169. கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்;–எங்கள்.....................105
170. குருசினில் தொங்கியே குருதியும் வடிய, ............................ 64

171. கெம்பீரமாகவே, சங்கீதம் பாடுவோம்................................372

## ச

172. சகோதரர்க ளொருமித்துச் ..............................................258
173. சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய மும்இலதாய், ......................1
174. சத்திய வேதத்தைத் தினம் தியானி,..................................243
175. சத்தியச் சுவிசேடம் எத்திசையிலும் பரம்பத்,.......................384

176. சந்தத மங்களம், மங்களமே! ....................................347
177. சமயமிது நல்லசமயம், உமதாவி ....................................115
178. சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து ....................................... 29
179. சரணம் நம்பினேன் யேசு நாதா–இது ...............................296
180. சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா, ......................... 49
181. சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா, ......................... 50
182. சரணம், சரணம், சரணம் எனக்குன் ...............................292
183. சருவ லோகாதிபா, நமஸ்காரம்! .......................................5
184. சருவ வலிமை கிருபைகள் மிகுந்த சருவேசா! ..................... 14
185. சருவேசுரா, ஏழைப்பாவி–என் பேரிலே .............................171
186. சாலேமின் ராசா, சங்கையின் ராசா, ஸ்வாமி, வாருமேன், ..... 72
187. சித்தம் கலங்காதே, பிள்ளையே, ....................................187
188. சிந்தனைப் படாதே, நெஞ்சமே,–உனை ரட்சித்த.................230
189. சிந்தைசெய்யும் எனில் நிரம்புவீர், தேவாவி உமைச்.............305
190. சிந்தையுடன் தெய்வாலயந்தனில் சேர்வோம்,–திரி ..............290
191. சீர் அடை தருணம் இதறி மனமே; ..................................147
192. சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்; ஆதி............................ 83
193. சீர்திரியேக வஸ்தே, நமோ, நமோ, நின் ..............................4
194. சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம், ....................................6
195. சீரேசு பாலன் ஜெயமனு வேலன் ...................................... 25

196. சுத்தபரன் சுத்த ஆவியே நின்மாமகிமை ............................114
197. சுத்திகரியாயோ, துர்க்குணம் நீங்க என்னைச்......................120
198. சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்குத் ................ 98
199. சுபஜெய மங்களமே–நித்திய சுபஜெய மங்களமே,.................107
200. சுய அதிகாரா, சுந்தரக் குமாரா!........................................ 16

201. சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்........................351
202. சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது. ............................385

203. செய்ய வேண்டியதைச் சீக்கிரம்......................................261

204. சேர், ஐயா; எளியேன் செய் பவ வினை .............................168
205. சேனைகளின் கர்த்தரே! நின்..........................................288

206. சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்ரபுவே, ................. 93

## ஞா

207. ஞான சுவிசேஷமே ..................................................247
208. ஞானஸ்நான மா ஞானத்திரவியமே; திரு..........................302

## த

209. தந்தானைத் துதிப்போமே;–திருச் ....................................286
210. தந்தேன் என்னை இயேசுவே,..........................................219
211. தந்தை சருவேஸ்பரனே, உந்தன் மகன் யேசுவுக்காய் ...........174
212. தந்தையே இவர்க்கு மன்னி, தாம் செய்வ தின்னதென்று.......324

213. தயை கூர், ஐயா; என் ஸ்வாமீ, பாவி நான், ........................156

214. தரி–தாழ்மையே தெரிந்து,–வெறு ....................................259

215. தருணம் இதில் அருள் செய், யேசுபரனே, ........................172

216. தருணம் இதில் யேசுபரனே!–உமதாவி..............................314

217. தருணம் இதுவே, கிருபை கூரும், ....................................295

218. தருணம் ஈதுன் காட்சி சால ...........................................294

219. தருணமே, பரம சரீரி; எனைத்.........................................179

220. தாகம் மிகுந்தவரே, அமர்ந்த ..........................................139

221. தாசரே, இத்தரணியை அன்பாய்.....................................267

222. தாரகமே,–பசிதாகத்துடன் உம்மிடம்...............................309

223. திரி முதல் கிருபாசனனே, சரணம்! ......................................2

224. திருப் பதம் சேராமல் இருப்பேனோ–நான் ..........................164

225. திரும்பிப் பாராதே,–சோதோமைத் ...................................260

226. திருமா மறையே–அருள்பதியே! நின்...............................285

227. திருமுகத் தொளிவற்று; பெருவினைகளில் உற்றுச்..............164

228. தினமே நானுனைத் தேடிப்பணியச் .................................209

229. தீய மனதை மாற்ற வாரும், தூய ஆவியே,–கன .................121

230. தீயன் ஆயினேன், ஐயா; எளியேன் உற்ற .........................158

231. துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான்.............228

232. துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,........................ 81

233. துதிக்கிறோம் உம்மை – வல்ல பிதாவே ..............................7

234. துதிதுதி பரன்றனையே–சுகிர்தமாக. ................................375

235. தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,...................8

236. தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க–மனு........................ 40

237. தேவ தேவனே, எகோவா,...............................................9

238. தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ,............................216

239. தேவ லோகமதில் ......................................................326

240. தேவ வசனத்தையே நீராவலுடன் கேட்டதனின்..................248

241. தேவசுதனுயிர்த்தார்–மிருதினின்று ................................. 65

242. தேவதே, ஒர் ஏக வஸ்து, தேவ நாமனாம் கிறிஸ்து, ............... 90

243. தேவனே உம்மை யாந் துத்தியஞ் செய்கிறோம்;....................381

244. தேவனே, நான் உமதண்டையில்–இன்னும் நெருங்கிச் .........198

245. தேவனே, யேசு நாதனே, இத்........................................317

246. தேவா எனைமறக்காதே,–இந்தச் ....................................369

247. தேவா, இரக்கம் இல்லையோ?–இயேசு.............................176

248. தேவா, இவ்வீட்டில் இன்றே மேவி எழுந்து ........................370

249. தேவா, திருக்கடைக்கண் பார், ஐயா! ...............................182

250. தேவாசனப்பதியும், சேனைத் தூதரைவிட்டுத்......................110

251. தேவாதி தேவன் தனக்குச் ...........................................378

252. தேவாதி தேவே, நீரே–சேவிக்கில் உமை,..........................264

253. தேன் இனிமை யதிலும் சத்திய வேதம்.............................244

254. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்விய....................125

255. தொண்டு செய்யத் தோழரே, துடிப்புடன் செல்வோம்;...........395

256. தோத்திர பாத்திரனே, தேவா, .......................................336

257. தோத்திரப் பண்டிகை ஆசரிப்போமே,..............................357

258. தோத்திரம் செய்வேனே–ரட்சகனைத் ............................... 85

259. தோத்திரம்! க்ருபை கூர், ஐயா!.......................................333

260. தோத்திரம், புகழ் கீர்த்தனம், ஜெய சோபனம் ...................... 13

## ந

261. நம்பிவந்தேன் மேசியா, நான் நம்பிவந்தேனே,–திவ்ய...........196

262. நம்பினேன், உன தடிமை நான், ஐயா;–........................... 200

263. நல்ல தேவனே, ஞான ஜீவனே;.......................................335

264. நல்லாயன் யேசு சாமி, ராஜன்தாவீதுடை மகவு,–................234

265. நல்வழி, மெய், ஜீவன் எனும் நாம தேயனே,–உனை ............204

266. நன்றி செலுத்துவாயே–என் மனமே நீ ............................... 28

267. நான் விடமாட்டேன் என் இயேசுவை...............................222

268. நிச்சயம் செய்குவோம் வாரீர்,–வதுவரர்க்கு.......................343

269. நித்தம் அருள்செய் தயாளனே!–எங்கள்..........................362

270. நித்தம் முயல் மனமே! பரி ....................................253

271. நித்திய கன்மலை எனக்காய்ப்-பிளந்தது ..........................195

272. நிறைவுற வரந்தா,-நியமகம் .....................................343

273. நின் பாதம் துணை அல்லால், வேறொரு துணை ................190

274. நினையேன், மனம், நினையேன் தினம்..............................206

275. நீதியாமோ? நீ சொல்லும்,-ஓய்! ........................................274

276. நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி, ..................152

277. நீயே நிலை, உனதருள் புரிவாயே,-ஏசு ............................. 96

278. நெஞ்சமே, கெத்சமேனக்கு நீ நடந்து வந்திடாயோ?.............. 63

279. நெஞ்சமே, தள்ளாடி நொந்து,........................................236

280. நெஞ்சே நீ கலங்காதே;-சீயோன் மலையின் .......................232

281. நேசபரனைத் துதிப்பாய், ஓ நெஞ்சமே! ............................365

## ப

282. பக்தருடன் பாடுவேன்-பரம சபை ....................................328

283. பக்தியாய் ஜெபம் பண்ணவே ..........................................218

284. பண்டிகை கொண்டாடுவோம்,-ஆம், நாம் ...........................387

285. பணிந்து நடந்துகொண்டாரே-பரன் பாலனும் ......................352

286. பணியா யொசிரசே, படியோர் பவமே சுமந்து...................... 15

287. பயந்து கர்த்தரின் பாதை யதனில் ....................................318

288. பரத்திலே நன்மை வருகுமே,-நமக்கு நித்திய ......................280

289. பரம வைத்தியா! அருமை ரட்சகனே! பிணிதீர்க்கும் ............352
290. பரனே, திருக்கடைக்கண் பாராயோ?–என்றன் ..................177
291. பரனே, பரப்பொருளே–நித்ய–பாக்கியனே சத்ய .................. 53
292. பரிசுத்தாவி நீர் வாரும்!–திடப்........................................304
293. பவனி செல்கின்றார் ராசா–நாம் ...................................... 42
294. பஜித்திடும் சுவிசேட திருச்சபையாரே,...............................382

295. பாக்கியர் இன்னார்–என்றிறைவன் .................................252
296. பாடித் துதி மனமே; பரனைக் கொண்................................ 18
297. பாதகன் என் வினைதீர், ஐயா, கிருபாகரா, நின் .................154
298. பாதம் ஒன்றே வேண்டும்;–இந்தப் ...................................201
299. பாதம் வந்தனமே! – வரப்பிர........................................... 84
300. பாதைக்கு தீபமாமே .....................................................246
301. பார்க்க முனம் வருவேன்;–நெருக்கத்தில்........................... 99
302. பாருங்கள், தொடர்ந்து வாருங்கள், கொல்கதா .................... 58
303. பாரும், பாரும், ஐயா,–எனை அன்பாகப்..........................361
304. பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும், .................................321
305. பாலர் நேசனே,–மிகப்–பரிவுகூர்ந்திந்தப்...........................301
306. பாலரே, நடந்து வாருங்கள், ...........................................322
307. பாவப்பாரில் உன்னத–சமாதானம்;..................................203
308. பாவம் போக்கும் ஜீவநதியைப்........................................135
309. பாவி நான் என்ன செய்வேன்,–கோவே, ........................... 57

310. பாவி, இன்றே திரும்பாயோ?–நேச ................................151

311. பாவி, என்னிடம் வர ................................................144

312. பாவி, மனதுருகே!......................................................26

313. பாவிக்கு நேசராரே ....................................................103

314. பாவியாகவே வாறேன்; பாவம் போக்கும் ...........................184

315. பாவியாம் எனை மேவிப்பார், ஐயா–யேசுநாதா,..................161

316. புண்ணியன் இவர் யாரோ?–வீழ்ந்து ஜெபிக்கும் .................. 45

317. புத்தியாய் நடந்து வாருங்கள்;–திரு வசனப்........................257

318. புறப்படுங்கள், தேவ புதல்வரின் ஊழியரே,.........................266

319. பூமியின் குடிகளே, நீர் தாமதமிலாதியேசு ..........................373

320. பெத்தலையில் பிறந்தவரைப் ......................................... 33

321. பெத்லேகம் ஊரோரம் சத்திரத்தை நாடிக் ........................... 32

322. பொக்கிஷம் சேர்த்திடுங்கள்–பரத்திலே............................263

323. பொற்பு மிகும் வானுலகும்............................................ 48

324. பொன்னகர்ப் பயணம் போகும் புண்ணியர்களே ..................356

325. போசனந்தா னுமுண்டோ–திருராப் ................................307

## ம

326. மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ?.........................150

327. மகிழ், மகிழ், மந்தையே, நீ; அல்லேலூயா! பரன் ................. 70

328. மகிழ்ந்து, புகழ்ந்து, மிகப்பணிந்து, துதித்தேசுவை .................255

329. மங்களம் சதா – ஜெய – மங்களம் வேதா! ...........................380

330. மங்களம்! ஜெயமங்களம்! மகத்துவற்கு...............................379

331. மரித்தாரே கிறிஸ்தேசு .....................................................132

332. மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார், ................................277

333. மலையாதே, நெஞ்சமே,–இப்படி நம்மை ...........................136

334. மறவாதே, மனமே,–தேவ சுதனை ....................................320

335. மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க................................ 19

336. மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும் ............................100

337. மாசற்ற தெய்வாட்டுக்குட்டி மனுவேல் மேசியாவே! .............308

338. மாசில்லாத் தேவ புத்திரன் ............................................. 30

339. மாட்சிமையானதோர் காட்சியைப் பார்க்கலாம்,................... 62

340. மாமனோகரா! இவ்வாலயம்–வந்தருள் கூரும், ...................316

341. மாற்றீர் என் கவலை அருள்பெற ....................................238

342. மானுவேல் தொண்டரே!–ஆர்ப்பரித்து..............................374

343. மீட்பர் யேசுவே வல்லவராம் ..........................................399

344. மேசியா ஏசு நாயனார், – எமை ........................................ 31

## ய

345. யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார், ................................388

346. யேசு நசரையி னதிபதியே,-பவ நரர்பிணை ........................ 95

347. யேசு நாமம் ஒன்றை நம்புவீர், ..........................................131

348. யேசு நாமமல்லாம்-உலகினில் .......................................124

349. யேசு ராசா,-எனை-ஆளும் நேசா! ................................188

350. யேசுநாதனே!-இரங்கும் என்-யேசு நாதனே! .....................159

351. யேசுநாயகா, வந்தாளும்;-எந்நாளும், திவ்ய ......................345

352. யேசுவின் ஒதுக்கில் நான் இறக்க அருள்புரியும். .................279

353. யேசுவுக்கு நமது தேசத்தைச் சொந்தமாக்கப் ......................371

354. யேசுவே திருச்சபை ஆலயத்தின் ...................................315

355. யேசுவே, கிரு பாசனப்பதியே, கெட்ட ..............................181

356. யேசுவை அன்றி வேறொரு ரட்சகர் ................................123

## ர

357. ராச ராச பிதா மைந்த தேசுலாவுசதா நந்த .........................106

358. ராசாதி ராசன் யேசு, யேசு மகா ராசன்!-அவர் ...................325

## வ

359. வந்தருள், இவ்வாலயத்தில்; மகிமை ஏகோவாவே...............297

360. வந்தனம், வந்தனமே! தேவ துந்துமி கொண்டிதமே ............... 11

361. வந்து நல்வரம் தந்தனுப்பையா,-ஆதிநாதா, ஜோதீ,............299

362. வந்தே கடைக்கண் பாருமேன்,-சர்வேசுரனே, ....................368

363. வர வேணும், என தரசே, ........................................... 71
364. வரவேணும் பரனாவியே, ..........................................119
365. வருவார் விழித்திருங்கள்;-இயேசுநாதர் ......................... 75

366. வா, பாவீ, மலைத்து நில்லாதே, வா. ..............................145
367. வாரா வினை வந்தாலும் சோராதே மனமே; ......................235
368. வாரீரோ? வினை தீரீரோ? எனைக் ................................207
369. வாரும் ஐயா, போதகரே, ............................................202
370. வாரும் நாம் எல்லோரும் கூடி, .....................................293
371. வாரும், எமது வறுமை நீக்க வாரும், தேவனே; ...................367
372. வாரும், பெத்லகேம் வாரும்,-வாரும், ...............................389
373. வான இராச்சியம் வந் ததோ கோகோ! .............................130
374. வான நகரத்தின் மேன்மையென சொலுவோம், கன ............281
375. வானம் பூமியோ? பராபரன் ........................................... 27
376. வானமும் பூமியும் வகித்திடுந்தேவே! ..............................358
377. வானோர் பூவோர் கொண்டாட .....................................386

378. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்;-மெய் .....................226
379. விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம் ...................128
380. விண்மணி, பொன்மணி, வித்தக மணியே, ..........................101
381. விந்தை கிறிஸ்தேசு ராசா! ............................................192
382. விரும்பாதே, மனமே,-உலக வாழ்வை .............................354

383. விலைமதியா ரத்தத்தாலே.............................................133

384. வினை சூழா திந்த இரவினில் காத்தாள், ..........................339

385. வீராதி வீரர் யேசு சேனை நாங்கள், ................................272

386. வெகு பேர்களுக் கின்பமான ...........................................278

387. வெள்ளை அங்கிகள் தரித்த ...........................................327

388. வேத புத்தகமே, வேத புத்தகமே,...................................245

389. வேத வசன விதைகளைப் புவியில் ................................250

390. வேதமே, என்ன சொல்லுவேன்?–நின் மாட்சியை................249

391. வேளை இது சபையே–நித்திரையை...............................146

392. வேறு ஜென்மம் வேணும்,–மனம் ...................................143

393. வையகந்தனை நடுத்தீர்க்க இயேசு ................................. 76


## ஜ


394. ஜகநாதா, குரு பரநாதா, திரு.......................................... 41

395. ஜீவ வசனங் கூறுவோம்,–சகோதரரே; .............................270

396. ஜீவனே, நித்திய ஜீவனே! ............................................. 92

397. ஜீவனேசு கிருபாசன்னா, எனின் ...................................180

398. ஜெப சிந்தை எனில் தாரும், தேவா,–என்னை....................239

399. ஜெபம் மறவாதே நேசனே–எக்காலமும் நீ!........................240

400. ஜென்மமார் கருவிலே வினைவிடம் தீண்டலால்................153

# கிறிஸ்தவ கீர்த்தனைகள்

## கடவுள் துதி

### உன்னையல்லாமல் எனக்கார் துணை

**1. சங்கராபரணம்** **ரூபகதாளம்**

**சத்தாய் நிஷ்களமாய்[1] ஒருசாமிய மும்[2] இலதாய்,**
சித்தாய்[3] ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நாயடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந்–து;
அத்தா, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

2. எம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்[4]
கைம்மா றுண்டுகொலோ? கடைகாறுங் கையடையாய்,
சும்மாரட்சணைசெய், சொல்சுதந்தரம் யாதுமிலேன்,
அம்மான், உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

3. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்க[5]வென்றே புணையாயினை[6] கண்ணிலியான்,
பரசேன் பற்றுகிலேன்; என்னைப்பற்றிய பற்றுவிடாய்,
அரசே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

4. தாயே, தந்தைதமர், குருசம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்;
'ஏயே' என்றிகழு உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

5. பித்தே றிச்சுழலும் ஜெகப்பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன்; உன்னருளால் பிழைத்தேன்மறு ஜென்மமதாய்;
எத்தோ ஷங்களையும் பொறுத்தென்றும் இரங்குகவென்–று
அத்தா, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

6. துப்பார்[7] சிந்தையிலேன் மறைந்தீட்டிய[8] தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநாளெனைத் தாங்கிக்கொள்ள,
இப்பா ருய்யவென்றே மனுக்கோலமெ டுத்த எங்கள்
அப்பா உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

*–எ.ஆ. கிருட்டிணன்*

---

1 ஓரிடமென்றில்லாமல்
2 ஒப்புமை
3 அறிவாய்
4 காப்பாற்றியதற்கோர்
5 தப்புவிக்க
6 தெப்பமானாய்–படகானாய்
7 தூய
8 மறைந்து செய்த

## திரிமுதல் கிருபாசனனே

**2. (3) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**திரி முதல் கிருபாசனனே, சரணம்!**
ஜெக தல ரட்சக தேவா, சரணம்!
தினம் அனுதினம் சரணம்; – கடாட்சி!
தினம் அனுதினம் சரணம், – சருவேசா!

2. நலம் வளர் ஏக திரித்துவா, சரணம்!
நமஸ்கரி உம்பர்கள் நாதா, சரணம்
நம்பினேன் இது தருணம்; – தருணம்;
நம்பினேன், தினம் சரணம், – சருவேசா!

3. அருவுருவே, அருளரசே, சரணம்!
அன்று மின்று மென்றும் உள்ளாய் சரணம்!
அதிகுணனே, தருணம் – கிரணமொளிர்
அருள் வடிவே, சரணம். – சருவேசா!

4. உலகிட மேவிய உனதா – சரணம்!
ஓர் கிருபாசன ஒளியே, சரணம்!
ஒளி அருள்வாய், தருணம் – மனுவோர்க்–கு
உத்தமனே, சரணம், – சருவேசா!

5. நித்திய தோத்திர நிமலா, சரணம்!
நிதி இசுரேலரின் அதிபதி, சரணம்!
நீதா, இது தருணம் – கிருபைக் கொரு
ஆதாரா, சரணம் – சருவேசா!

***– தஞ்சை சத்தியநாதன்***

## வேதா நமோ நமோ

**3. சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**திருப்புகழ்**

**ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!**
வாகு[1] தங்கு குருநாதா, நமோ நமோ!
ஆயர் வந்தனைசெய் பாதா, நமோ நமோ, – அருரூபா,

1. அழகு

மாகமண்டல விலாசா,[1] நமோ நமோ!
மேகபந்தியி னுலாசா, நமோ நமோ!
வான சங்கம விஸ்வாசா, நமோ நமோ, – மனுவேலா,

நாகவிம்பம் உயர் கோலா,[2] நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா, நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா, நமோ நமோ, – நரதேவா,

ஏக மந்த்ரமுறு பூமா, நமோ நமோ!
யூக தந்த்ரவதி சீமா, நமோ நமோ!
ஏசு வென்ற திருநாமா, நமோ நமோ, – இறையோனே!

2. அறிவி னுருவாகிய மூலா, நமோ நமோ!
மறையவர்கள் தேடிய நூலா, நமோ நமோ!
அதிசய பராபர சீலா, நமோ நமோ, – அருளாளா,

பொறிவினை யுறாத சரீரா, நமோ நமோ!
குறையணுவிலாத குமாரா, நமோ நமோ!
புவன முழுதாள் அதிகாரா, நமோ நமோ, – புதுவேதா,

நிறைவழியின் மேவிய கோனே, நமோ நமோ!
முறைகள் தவறாத விணோனே, நமோ நமோ!
நிதிபெருகு மாரச தேனே! நமோ நமோ, – நெறிநீதா,

இறை தவிது பாடிய கீதா, நமோ நமோ!
பறைகள்பல கூடிய போதா, நமோ நமோ!
எருசலை யினீடிய நாதா, நமோ நமோ, – இறையோனே.

***–வேதநாயகம் சாசுதிரியார்***

**சீர்திரியேக வஸ்தே நமோ**

**4. பூரிகல்யாணி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**சீர்திரியேக வஸ்தே, நமோ, நமோ, நின்**
திருவடிக்கு நமஸ்தே நமோ, நமோ!

---

1 மாகமண்டல விலாசா= விண்ணெங்கும் வியாபித்திருக்கின்றவனே

2நாகவிம்பம் உயர் கோலா = வான விரிவைப் போன்று எல்லையில்லாமல்

**அனுபல்லவி**

பார்படைத்தாளும் நாதா,
பரம சற்பிரசாதா,
நாருறுந் தூயவேதா, நமோ, நமோ, நமோ! – சீர்

**சரணங்கள்**

1. தந்தைப் பராபரனே நமோ நமோ, எமைத்
தாங்கி ஆதரிப்போனே – நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய்,
எந்தவிர் போக்குமெந்தாய், நமோ, நமோ, நமோ. – சீர்

2. எங்கள் பவத்தினாசா நமோ நமோ, புது
எருசலேம் நகர்ராசா நமோ நமோ!
எங்கும் நின் அரசேற,
எவரும் நின் புகழ்கூற,
துங்க மந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ. – சீர்

3. பரிசுத்த ஆவிதேவா நமோ, நமோ, திட
பலமளித் தெமைக்காவா, நமோ, நமோ!
கரிசித்துத்தா நற்புத்தி,
கபடற்ற மனசுத்தி,
திருமொழி பற்றும்பக்தி, நமோ, நமோ, நமோ – சீர்

***– ஞா. சாமுவேல்***

**சருவ லோகாதிபா**

**5. (29) சங்கராபரணம் ஆதிதாளம்**

**சருவ லோகாதிபா, நமஸ்காரம்!**
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்.

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் திரட்சகனே, நமஸ்காரம்!
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில்[1] மாண்டோய், நமஸ்காரம்.

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரம சற்குருவே, நமஸ்காரம்!
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்.

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா,
நித்ய திரியேகா, நமஸ்காரம்.

*– ம. வேதமாணிக்கம்*

**சீர்மிகு வான்புவி தேவா**

**6. (277) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்,**
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்,
ஏர்குணனே தோத்ரம், அடியர்க்-கு
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா.

2. நேர் மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்,
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்,
ஆர் மணனே, தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா

3. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்,
தினம் தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்,
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா

1 மரத்தில்

4. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்,
சாற்றுகிறோம் தோத்ரம், உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா

5. மாறாப் பூரண நேசா, தோத்ரம்,
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்,
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு, தோத்ரம், மா நேசா

*– வே. மாசிலாமணி*

**துதிக்கிறோம் உம்மை**

**7. (155 L) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**துதிக்கிறோம் உம்மை – வல்ல பிதாவே**
துத்தியம் செய்வோம் – உமை மா அரசே
தோத்ரம் உம் மாட்சிமைக்கே – பரனே
துந்துமி மாட்சிமைக்கே – பிதாவே.

2. சுதனே யிரங்கும் – புவியோர் கடனைச்
சுமந்ததைத் தீர்த்த – தூயசெம்மறியே,
சுத்தா ஜெபங்கேளும் – பரன்வலத்
தோழா ஜெபங்கேளும் – கிறிஸ்தே.

3. நித்தியபிதாவின் – மகிமையில் நீரே,
நிமலாவியினோ – டாளுகிறீரே,
நிதமேகார்ச்சனையே – உன்னத
நேயருக் கர்ச்சனையே – ஆமேன்.

*– ஞா. சாமுவேல்*

**தெய்வன்பின் வெள்ளமே**

**8. குந்தளவராளி** **ஆதிதாளம்**

***கண்ணிகள்***

**தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,**
மெய் மனதானந்தமே!
செய்ய நின்செம்பாதம் சேவிக்க இவ் வேளை
ஐயா, நின் அடி பணிந்தேன்

2. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்தி[1]க்கமலமாம் பூமாலை கோர்த்து நின்
பொற்பதம் பிடித்துக் கொள்வேன்.

3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்
தேவே தவறிடினும்,
கூவி விளித்துந் தன் மார்போடணைத்தன்பாய்
யாவும் பொறுத்த நாதா!

4. மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்
மோக ஏக்கம் யாவும்
தாக்கிடத் தடுமாறித் தயங்கிடும் வேளையில்,
தூக்கித் தற்காத்தருள்வாய்.

5. ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்
பூசைப் பீடம் படைப்பேன்;
மோச வழிதனை முற்று மகற்றியென்
நேசனே நினைத் தொழுவேன்.

6. மரணமோ, ஜீவனோ, மறுமையோ, பூமியோ,
மகிமையோ, வருங்காலமோ,
பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ
பிரித்திடுமோ தெய்வன்பை?

*–சவரியான் ஏசுதாசன்*

**தேவ தேவனே எகோவா**

**9. (63) துசாவந்தி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**தேவ தேவனே, எகோவா,**
வா, என் ஜீவனே.

*அனுபல்லவி*

காவலர்க் குபதேசனே,– கனபாவிகட் கதிநேசனே – உயர்
கர்த்தன் ஏக திரித்துவ ஞான மகத்துவ ராஜகிறிஸ்துவாகிய–தேவ

---

1. புத்தி

*சரணங்கள்*

1. அந்த[1] மேனியே,– கனம் பெரும்–அனந்த ஞானியே,
விந்தை மானியே,[2]–சுந்தரம்–மிகுந்த தானியே,[3]
தந்தையர் தர, வந்தவா,–பசு
மந்தை யூடு பிறந்தவா,–கதி
தந்தவா, சொல் உவந்தவா,–மெய்
சிறந்தவா, விண்ணெழுந்தவா, திவ்ய – தேவ

2. சத்திய வாசனே,– யூதர்குலத்–தவிது ராஜனே,
நித்திய நேசனே,–அடியவர்–நிலைமை ஈசனே,
பத்தருக்குப காரனே,–வளர்
பெத்தலைக் கதிகாரனே,–வளர்
பாரனே, அதி தீரனே,– நல்
உதாரனே, பெல வீரனே, ஜெய – தேவ

3. வான சீலனே,– மனு உரு–வான கோலனே,
ஞான பாலனே,–அதிசய–நன்மை நூலனே,
பானுவே[4] மனுவேலனே,–இம்
மானுவேல் அனுகூலனே,–கன
பத்தியே தரு துத்தியமே,–நெடு
நித்தியமாய் வளர் வஸ்துவே ஒரு – தேவ

*–வே. சாஸ்திரியார்*

**அனவரதமும் தோத்திரம்**

**10. (31) பூரிகல்யாணி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**ஆதிபிதாக் குமாரன்–ஆவி திரி யேகர்க்–கு**
அனவரதமும் தோத்திரம்! – திரியேகர்க்–கு
அனவரதமும் தோத்திரம்.

*அனுபல்லவி*

நீத[5] முதற் பொருளாய் நின்றருள் சருவேசன்,
நிதமும் பணிந்தவர்கள் இருதயமலர் வாசன்,

---

1. அழகு
2. பெருமையுள்ளவனே
3. இடம்பெற்றவனே
4. சூரியனே
5. நீதி

நிறைந்த சத்திய ஞான மனோகர,
உறைந்த நித்திய வேத குணாகர,
நீடு வாரி[1] திரை சூழு மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய். - ஆதி

*சரணங்கள்*

1. எங்கணும் நிறைந்த நாதர்-பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்,
துங்கமாமறைப்பிர போதர்[2],-கடைசி நடு
சோதனை செய் அதி நீதர்,
பங்கில்லான், தாபம் இல்லான் பகர்அடி[3] முடிவில்லான்,
பன் ஞானம், சம்பூரணம், பரிசுத்தம், நீதி, என்னும்
பண்பதாய்சு யம்பு விவேகன்,
அன்பிரக்கத யாளப்பிரவாகன்
பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி
பாலனத்தையும்பண் பாய்நடத்தி அருள். - ஆதி

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு-நடத்தினால் நாம்
நீணிலத்தில்லாமல் அழிந்து,
தீதறு நரகில் தள்ளுண்டு-மடிவோ மென்று
தேவ திருவுளம் உணர்ந்து,
பாதகர்க் குயிர் தந்த பாலன் யேசுவைக்கொண்டு
பரன் எங்கள்மிசை தயை வைத்தனர்; இது நன்று
பகர்ந்த தன்னடி யார்க்குறு சங்சலம்,
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும். - ஆதி

*- காபிரியேல் உபதேசியார்*

**வந்தனம் வந்தனமே**

**11. (35) சங்கராபரணம்** **சாபுதாளம்**

*பல்லவி*

**வந்தனம், வந்தனமே! தேவ துந்துமி[4] கொண்டிதமே![5] - இது**
வரையில் எமையே வளமாய்க் காத்த எம்துரையே, மிகத் தந்தனம்.

---

1. கடல்
2. ஞானமுள்ளவர்
3. தொடக்கம்
4. துதி
5. இனிமையாய்

*சரணங்கள்*

1. சந்ததஞ்சந்ததமே, எங்கள் தகுநன்றிக் கடையாளமே,– நாங்கள் தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில் தயைகூர், சுரர்பதியே.

2. சருவ வியாபகமும் எமைச் சார்ந்து தற்காத்ததுவே, – எங்கள் சாமி, பணிவாய் நேமி[1] துதிபுகழ் தந்தனமே நிதமே!

3. சருவ வல்லபமதும் எமைத் தாங்கினதும் பெரிதே, – சத்ய சருவேசுரனே, கிருபாகரனே, உன்சருவத்துக்குந் துதியே.

4. உன்தன் சர்வ ஞானமும் எங்களுள்ளிந்திரியம் யாவையும் –பார்த்தால்
ஒப்பே தருங் காவலே உன்னருளுக்கோ தரும்[2] புகழ் துதி துதியே

5. மாறாப் பூரணனே, எல்லா வருடங்களிலும் எத்தனை–உன்றன் வாக்குத் தவறாதருளிப் பொழிந்திட்ட வல்லாவிக்குந் துதியே.

***–வே. மாசிலாமணி***

**அமலா தயாபரா**

**12. (33) ரீதிகௌள** **ஆதிதாளம்**

*பல்லவி*

**அமலா, தயாபரா, அருள்கூர், ஐயா,–குருபரா**

*சரணங்கள்*

1. சமயம் ஈராறோர் ஆறு சாஸ்திரங்கள் வேத நான்கும்
அமையும் தத்துவம் தொண்ணூற் றாறும், ஆறுங்கடந்த – அம

2. அந்தம் அடி[3] நடு இல் லாத தற்பரன் ஆதி,
சுந்தரம் மிகும் அதீத[4] சோதிப்பிரகாச நீதி. – அம

3. ஞானத் ரவிய வேத நன்மைப் பரம போத,
வானத் தேவப் ரசாத மகிமைக் களவில்லாத. – அம

---

1. கடல் அளவில்
2. ஒப்பு ஏது அரும் காவலே உன் அருளுக்கு ஓதரும் புகழ்
3. ஆதி
4. மனதுக்கு எட்டாத

4. காணப்படா அரூப, கருணைச் சுய சொரூப,
தோணப்படா வியாப, சுகிர் தத் திருத் தயாப. – அம

5. சத்ய வசன நேயா, சமஸ்த புண்ய சகாயா,
கர்த்தத்துவ உபாயா, கருணை பொழியும் வாயா – அம

6. எல்லை இல்லா மெய்ஞ் ஞான ஏக பர வஸ்தான
சொல் அரிதாம் நிதான, துல்லிபத்[1] தொன்றாம் மேலான – அம

7. கருணாகரா, உப காரா, நிராகரா,[2]
பரமேசுரா, கிரு பாகரா, சர்வேசுரா – அம

*– வே. சாஸ்திரியார்*

**தோத்திரம் புகழ் கீர்த்தனம்**

**13. (280) ஆனந்த பைரவி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**தோத்திரம், புகழ் கீர்த்தனம், ஜெய சோபனம் உமக்கையா!–துதி**
சொல்லவும் தீதை வெல்லவும் க்ருபை சூட்டுவீர், கிறிஸ்தையா!

*அனுபல்லவி*

கோத்திரவழி சிறந்த யூத நல் கொற்றவா, தேவபாலா,
மனுவேலா, மறைநூலா, செங்கோலனு கூலா .– தோத்

*சரணங்கள்*

1. எந்தனை மீட்க நீர் இந்த உலகினில் வந்து பிறந்தீர்; நன்
மனுவாய்– மறை
ஏற்றித் தினம் எனை ஆற்றி நன் மொழியால் தேற்றினீர்;
முற்றிலும் தனுவாய்[3]
நிந்தை அடைந்து மெய்ச் சொந்த உதிரத்தைச் சிந்தினீர்;
எத்தனை பரிவாய்– தேவ
நீதியும் விளங்கச் செய்து பவமனு சாதிக்கிரங்கி நற்குருவாய்
நின்றீரே, நடுவராய் நின்றீரே; தீதை எல்லாம்
கொன்றீரே, பசாசையும் வென்றீரே, ஜெயம் கொண்டீரே நித்ய.
– தோத்தி

---

1. நிறைவு 2. உருவமற்றவனே 3. சிறுமையாகி

2. சுத்த சுவிசேஷ சத்தியமொழியை வித்தரிக்க வரந்தாரும்;–நேய
சூரிய கிரண வீரியத்தால் எனக் காரோக்கியம் அருள்கூரும்;
நித்தம் எனைத் தேவ பத்தியில் நடத்திச் சித்தம் இரங்கிக்
கண்பாரும்;– கரம்
நீட்டிக் கிருபையைச் சூட்டிக் கவலையை ஓட்டி என் துயரைத்
தீரும்;
நில்லும், ஐயா, என் பக்கத்தில் நில்லும், ஐயா; தினம் நலம்
சொல்லும், ஐயா; தீயோன் தனை வெல்லும், ஐயா; தீதைக்
கொல்லும், ஐயா, துய்யா! – தோத்தி

3. நித்திய ஜீவனைப் பெற்றும்மோடிருக்கச் சுத்தி கரித்தென்னை
ஆளும்;–பவ
நிந்தையோ டென் சுய கந்தை[1] அகற்றி மெய் விந்தைக்
கிருபையால் சூழும்;
சத்திய வசனவித்தால் எனை ஜெனிப்பித் தென் மனதினில்
வாழும்; – பதஞ்
சாற்றித் தினம் உமைப் போற்றிப் பணிந்திடத் தேற்றி எனை
அரசாளும்;
சற்குருவே, கிறிஸ்தெனும் சற்குருவே, ஜீவன் உள
சொற்குருவே, நித்தியானந்த நற்குருவே, பரப் பொற்குருவே,
தேவே. – தோத்தி

***– மரியான் உபதேசியார்***

**கிருபைகள் மிகுந்த சருவேசா**

**14. சாமா** **ஆதிதாளம்**

**சருவ வலிமை கிருபைகள் மிகுந்த சருவேசா!**
தரிசனம் பெறஉன் சன்னிதி புகுந்தேன்–திருவாசா

2. தூயசிந்தை உண்மையில் உனையே, தொழுதேத்த!
தூய ஆவி கொண்டெனை நிரப்பும் – ஜகதீசா!

3. இருதயத்தைச் சிதற விடாமல் ஒருநேராய்
இசைத்தமைத்துப் பரவசமாக்கும் – நசரேயா!

1 சுய அகந்தை

4. அருளின் வாக்கைக் கருத்துடன் கேட்டு அகத்தேற்று
அறுபது நூறு முப்பதாய்ப் பெருக - அருளீசா!

*- ஜி.சே. வேதநாயகம்*

**பணியாயோ சிரசே**

**15. செஞ்சுருட்டி** **சாபுதாளம்**

*அங்கமாலை*

**பணியா யொசிரசே, படியோர்[1] பவமே சுமந்து**
அணியா முண்முடி பூண்ட சிரசனைப்-பணியாயோ

2. நெற்றியே நிமிராய், நீதி யுாயநடுத்தீர்ப்பில்
வெற்றி யுதிரச் சிலுவைக் குறிபூணும்-நெற்றி

3. கேண்மினோ செவிகாள், கிடைக் காதரும் வாசகனார்
சேணும்[2] மண்ணும் புகழுரை சொற்றதைக்-கேண்

4. காணீரோ விழிகாள், கண்ணி ரருவிபெருக
தோணெரு சாலம் துயர்கண்டழு தோனைக்- கேண்

5. உதடே முத்திசெய்யாய், உனைத்தேடி அலைந்துநொந்து,
உதிரஞ் சொரிந்த தூயசெம் பாதத்தை-உதடே

6. துதியாயோ நாவே, தூயதூதர் சேராபீன்கள்
நிதமும் சூழ்ந்தஞ் சலிசெய்யும் நாதனைத்-துதி

7. கண்டமே நீபாடாய், கதிகண்ட நரர்கணங்கள்
அண்டம் புகழ நவகீதம் பாடுவர்-கண்டமே

8. நெஞ்சே நீயணையாய், நேசசீடனும், பாலகரும்
அஞ்சா துய்ய[3] வணைத்திடு மார்பனை-நெஞ்சே

9. சேவிப்பீர் செங்கரங்காள், தீயர் நல்லாரெவரெவர்க்கும்
தாவிப்பணி செய்து யர்த்துங் கரத்தனைச்-சேவி

---

1. உலகோர் 2. வானமும் 3. அஞ்சாது உய்ய

10. கால்காள் ஒடுங்களே, கானான் தேசத்திசைகளெங்கும்
மேலாம் ஞானம் விதைத்தவர் சேவைக்குக்–கால்காள்

11. பாதங்களே நடமின், படுபாவி கண்ணீராடிக்
கோதல கைச்சிரம்[1] நைத்த வடிகளில்–பாதங்களே

***–ஜி.சே. வேதநாயகம்***

**சுய அதிகாரா, சுந்தரக்குமாரா**

**16. கமாஸ்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**சுய அதிகாரா, சுந்தரக் குமாரா!**
சொந்த உலகந்தனைத் துறந்த மரி மைந்தனான – சுய

***சரணங்கள்***

1. அகிலத்தை ஒரு சொல்லால் அமைத்தனையே,
அதையொரு பம்பரம் போலிசைத்தனையே,
துகில்போலா காயமதை லகுவாய்ச் சமைத்ததிலே
சோதி பல மாதிரியாய்த் தூக்கி அங்கிலங்க வைத்த – சுய

2. கரை மத கற்ற குளம் புவியிலுண்டோ?
கடலுக்கவன் சொல்லயன்றிக் கரைகளுண்டோ?
திரைதிரையாகச்சலம் மலைபோல் குவிழ்ந்தெழுந்தும்
சேதமின்றிப் பூதலத்தை மாதயவாய்ப் பாதுகாக்கும் – சுய

3. நரர் பலர் கூடியொரு மனைமுடிக்க
நாளெல்லாம் உழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே;
மரமுயிர் தாது இன்னும் வான்புவி அனைத்தையும் ஓர்
வார்த்தையால் க்ஷணப்பொழுதில் நேர்த்தியாய் உண்டாக்கி
வைத்த – சுய

4. பாவமனுவோர் முகத்தைப் பார்த்தாயே,
பாவச்சுமை தோள் சுமந்து தீர்த்தாயே;
சுவாமியுனைப் பற்றும் தேவ தாசருக்கிரங்கவேண்டும்,
தஞ்சம் தஞ்சம் ஓடிவந்தோம், கெஞ்சமனு கேட்டருள் வாய்–சுய

***– யோவான் பால்மர்***

---

1. கோது அலகை சிரம் (தீய
பிசாசின் தலை)

**கண்களை ஏறெடுப்பேன்**

**17. பியாகு** **சாபுதாளம்**

**பல்லவி**

**கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்.

***அனுபல்லவி***

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும். – கண்

***சரணங்கள்***

1. காலைத்தள்ளாட வொட்டார்–உறங்காது காப்பவர்
காலைத்தள்ளாட வொட்டார்,
வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர் – கண்

2. பக்க நிழல் அவரே – எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே
எக்கால நிலைமையும் எனைச் சேதப்படுத்தா–து
அக்கோலம் கொண்டென்னை அக்காவல் புரியவே – கண்

3. எல்லாத் தீமைகட்கும்–என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்

***–த. ஐயாத்துரை***

## கிறிஸ்து துதி

**பாடித் துதி மனமே**

**18. (279) காம்போதி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**பாடித் துதி மனமே; பரனைக் கொண்**
டாடித் துதி தினமே.

*அனுபல்லவி*

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப் – பாடி

*சரணங்கள்*

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
விளக்கின அன்பை விழைந்து தியானித்துப் –பாடி

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறசாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காகப் –பாடி

3. எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்–கு
இத்தனையாய்க் கிருபை வைத்த நம் கர்த்தனைப் – பாடி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**மன்னுயிர்க்காக**

**19. (39)** **ஆதிதாளம்**

*பல்லவி*

**மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க**
வல்ல பராபரன் வந்தார், வந்தார். –பாரில்

2. இந்நிலம் புரக்க, உன்னதத் திருந்தே
ஏகபராபரன் வந்தார், வந்தார். –பாரில்

3. வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்,
மகிமைப் பராபரன் வந்தார், வந்தார். –பாரில்

4. நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி[1] அனைத்தும் வாழ வந்தார், வந்தார். –பாரில்

---

1. பூமி

5. மெய்யான தேவன், மெய்யான மனுடன்,
மேசியா, ஏசையா, வந்தார், வந்தார். –பாரில்

6. தீவினை நாசர், பாவிகள் நேசர்,
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார். –பாரில்

7. ஜெய அனுகூலர், திவ்விய பாலர்
திரு மனுவேலனே வந்தார், வந்தார். –பாரில்

*–வே. சாஸ்திரியார்*

## ஆதித் திரு வார்த்தை

**20. (37)** **திஸ்ர ஏகதாளம்**

*பல்லவி*

**ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப் பாலகனாகப் பிறந்தார்;**
ஆதந் தன் பாவத்தின் சாபத்தை தீர்த்திட
ஆதிரை[1]யோரையீ டேற்றிட.

*அனுபல்லவி*

மாசற்ற ஜோதி திரித்துவத் தோர் வஸ்து
மரியாம் கன்னியிட முதித்து

மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,
உன்ன தகஞ்சீர், முகஞ்சீர் வாசகர்,
மின்னுச்சீர் வாசகர், மேனிநிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே சர்வ
நன்மைச் சொரூபனார், ரஞ்சிதனார்,
தாம், தாம், தன்னரர் வன்னரர்[2]
தீம், தீம், தீமையகற்றிட
சங்கிர்த, சங்கிர்த, சங்கிர்த சந்தோ
ஷமென சோபனம்பாடவே,
இங்கிர்த,[3] இங்கிர்த, இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட – ஆதி

---

1. உலகம் 2. தம் மக்கள்; கொடிய மக்கள் 3. இனிய

***சரணங்கள்***

1. ஆதாம் சாதி ஏவினர்; ஆபிரகாம் விசுவாசவித்து,
யூதர் சிம்மாசனத்தாளுகை செய்வோர்
ஈசாய் வங்கிஷத்தானுதித்தார். – ஆதி

2. பூலோகப் பாவ விமோசனர், பூரண கிருபையின் வாசனர்,
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார் – ஆதி

3. அல்லேலூயா! சங்கீர்த்தனம், ஆனந்த கீதங்கள் பாடவே,
அல்லைகள்,[1] தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார். – ஆதி

***–வே. சாஸ்திரியார்***

**கருணாகரனே**

**21. (48) காம்போதி** **சாபுதாளம்**

**பல்லவி**

**கருணா கரனே பரமே சுரனே,**
கனிவினை தீர்க்க வந்த தனிமுதல் ஏசு நாதா.

**சரணங்கள்**

1. பரன் ஆதியிலே திருவாய்மையிலே
பகுத்து விந்தையினோடு மகத்வ சந்தோட நீடு
பரிவுடனே அறு தின மதிலே உயர்
பரம் உலகி யாவையும் அருளிய நேரமே
பாருலகந் தனில் ஓர் மனுடன் தனை
ஏவையர் என்றொரு பாவையுடன் செய்து
படர்ந்த காவிடை இரண்டு மரந் தர,
அடர்ந்த ஜீவியம் நன்றறி வென்றொரு
பழத்திலே புசியாமல் விலக்கின
வழிப் படாது பசாசுட, சொற்படி
பாவையர் ஆர்ந்தின தீவினையால் நர
தாவீது சேயென மேவு குணா நிதி. – கருணா

---

1. மனத்துயர்

2. மறையாரணனே, நிறை பூரணனே,
வலமைக்கொரே யோவாவே,[1] தலைமைத் தேவாதிதேவே,
வருகையை மாமறை இருடியர்[2] ஓதின
வரிசையின் ஓர் தவி தரசனின் ஊர் அயல்
மந்தையின் ஆயர்கள் வந்து பணிந்தெழ,
விந்தை மெய்ஞ் ஞானியர் சிந்தை உவந்திட,
மகிழ்ந்து வானவர், பூதலர் பாதலர்
புகழ்ந்து பாடியும் ஆடியுமே தொழ,
மரியவள் உந்தியில் அரிய பரன் திரு
மகனென அன்புடன் நரர் உருவங் கொடு[3]
மானிடர் யாவரும் வானிடமே பெற,
மாடடையுங் குடில் நீடிய சுந்தர. – கருணா

***– வே. சாஸ்திரியார்***

**தேவதூதர் பாடல்**

**22. (12) பைரவி** **சாபுதாளம்**

**கண்ணிகள்**

**உன்னதத்திற் பரற்கு மகிமை உலகிற் சமாதானம்**
இந்நில மானிடர் மேல்பிரியம் இன்றென்றும் உண்டாக.

2. வான பரன்மகிமை பவத்தால் மறைந்த தாயிருக்கப்
பானொளிபோற் சுதனார் பிறந்தார் பாவ இருள் நீக்க.

3. பாவத்தினால் புவிக்கும் பார்க்கும் பலத்து நின்றயுத்தம்
தாவீதின் சிற்றூரில் பிறந்தோர் தக அமர்த்தினரே.

4. மானிடனாய்ப் பிறந்த சுதன்மேல் வைத்திடுங் கண்ணதற்கு
ஈன மானிடர்மேல் பிரியம் இன்றே உண்டாயினதே.

***ஞா. சாமுவேல்***

---

1. எகோவாவே 2. ரிஷிகள் 3. கொண்டு

## அதி மங்கல காரணனே

**23. (39)** **திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**அதி – மங்கல காரணனே**
துதி – தங்கிய பூரணனே – நரர்
வாழ விண் துறந்தோர் ஏழையாய்ப் பிறந்த
வண்மையே தாரணனே! – அதி

***சரணங்கள்***

1. மதி – மங்கின எங்களுக்கும்
திதி – சிங்கினர்[1] தங்களுக்கும் – உனின்
மாட்சியும்,[2] திவ்விய காட்சியும் தோன்றிட
வையாய் துங்கவனே! – அதி

2. முடி – மன்னர்கள் மேடையையும்,
மிகு – உன்னத வீடதையும் – எண்ணா
மாட்டிடையே பிறந் தாட்டிடையர் தொழ,
வந்தனையோ தரையில்? – அதி

3. தீய – பேய்த்திரள் ஓடுதற்கும்,
உம்பர் – வாய்திரள் பாடுதற்கும், – உனைப்
பின்பற்றுவோர் முற்றும் துன்பற்று வாழ்வதற்கும்
பெற்ற நல் கோலம் இதோ? – அதி

***– தேவவரம்***

## ஆர் இவர் ஆரோ?

**24. (42) செஞ்சுருட்டி** **சாபுதாளம்**

***பல்லவி***

**ஆர் இவர் ஆரோ? ஆர் இவர் ஆரோ?**
ஆர் இவர்? பரன் வார்த்தை மாமிசம்
ஆயினர் இவரோ?

1. நிலைகுலைந்தோர் 2. மகிமை

***சரணங்கள்***

1. ஈர் ஐந்து குணம் இல்லாதோர் போலே,
பாரினில் ஓர் எளிய கன்னிகையின்
பாலர் ஆனாரோ? –ஆர்

2. ஊரில் ஓர் இடமும் உகந்திட இல்லையோ?
சீர் அல்லாக் குடியிற் பிறந்தார் அதி
சயம் ஆனவரோ? –ஆர்

3. கர்த்தத்துவமோ காணாது தோள் மேல்;
சுற்றிவைக்கப் பழந்துணியோ? இவர்
தூங்கப் புல் அணையோ? –ஆர்

4. சேனை தூதர் இதோ! சிறப்புடன் பாட,
கானகக் கோனர் காண வர, இவர்
கர்த்தர் ஆவாரோ? –ஆர்

***–வே. சாசுதிரியார்***

**சீரேசுபாலன் ஜெயமனுவேலன்**

**25. ஹம்சத்வனி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**சீரேசு பாலன் ஜெயமனு வேலன்**
சீர் நாமத்தைத் தினமே போற்றுவோமே

**அனுபல்லவி**

பாராளும் வேந்தன் பகரொண்ணா மைந்தன்,
தாராள மாகத் தாமே மனுவான. – சீரேசு

**சரணங்கள்**

1. எண்ணரும் பெருமான் ஏழைச் சாயலாக
மண்ணி லேகின மாட்சிமை யாலே,
விண்ணவர்கள் போற்ற, வெற்றிக்கவி சாற்ற
வண்ணம்[1] பாடி நாம் மகிழ்ந்திட வேண்டாமோ?–சீரேசு

---

1. இசைப்பாடல்

2. உன்னத பரனுக் கொப்பில்லா மகிமை
இந்நிலத்தினில் எழில்சமா தானம்,
மன்னுயிர்கள் மீது மாபிரியம் ஓங்க
தன்னுயிர் தந்த தயவை என்ன சொல்வோம்? – சீரேசு

3. பாவப் பிணியாலே பாதகரைப் போலே
சாபத்தை நம்மேல் நாம் தேடினோமே,
கோபத்தை ஒழித்தே குவலயத்தை[1] மீட்க
தீபமாய் வந்த தேவமைந்தனான – சீரேசு

4. நித்தனே, என் பாவம் எத்தனையானாலும்
சித்தம் உருகிச் சீர்கூற வேணும்,
அத்தனே, உன் பாதம் அண்டினேன் இப்போதும்;
பத்தியாய் உனைப் பகருவேன் எப்போதும் – சீரேசு

*–சா. பரமானந்தம்*

**பாவி, மனதுருகே**

**26. (43) ஆனந்தபைரவி ஆதி தாளம்**

**பல்லவி**

**பாவி, மனதுருகே!**

**அனுபல்லவி**

ஆ[2] வீட்டில் ஏர்[3] காட்டு தேவாட்டுக்குப் – பாவி

**சரணங்கள்**

1. மாது தின்ற கனிவினை போக, மனுடர் வடிவமாக – நம்
வல்லமைப் பிதாவின் மைந்தன் புல்லதில் பிறந்தார்; அந்தோ!
– பாவி

2. வேத வாசகப்படி நெறிகாட்ட, வேதாளக்குடி ஓட்ட,–இதோ!
வித்தகத் திரித்துவ ஏகத் தத்துவ சொரூபன் வந்தார்.– பாவி

---

1. பூலோகத்தை 2. பசு 3. அழகு

3. விந்தைத் திருமுதல் நரர் உரு உவந்தார்,
கந்தைத் துணி அணிந்தார்; – இப்படி
மெத்தனவ ராகக் கரி சித்துனைப் புரக்க வந்தார். – பாவி

4. மேட்டிமையைத் துறந்தார், காட்டினிடை சிறந்தார்.
மேன்மை அனைத்தும் மறந்தார்; – இந்த
விந்தைக் கோலத் துன்னைக் கண்டு சந்திக்க வந்திருக்கிறார்.
– பாவி

5. நெரிந்த நாணலை முறியார், பொரிந்த திரியை அவியார்
நிர்ப்பந்தர் தமைப்பிரியார்; – இவர்
நீதிமான்களை அல்ல, உன்னைப்போல் பாதகரைத் தான் தேடி
வந்தார் – பாவி

***– வே. சாஸ்திரியார்***

**வானம் பூமியா**

**27. (46) செஞ்சுருட்டி** **திஸ்ர ஏகதாளம்**

**பல்லவி**

**வானம் பூமியோ? பராபரன்**
மானிடன் ஆனாரோ? என்ன இது?

**அனுபல்லவி**

ஞானவான்களே, நிதானவான்களே, – என்ன இது? – வானம்

**சரணங்கள்**

1. பொன்னகரத் தாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை,
பூபதி வந்ததே அதிசயம்!–ஆ! என்ன இது! – வானம்

2. சத்ய சருவேசன், துத்ய கிருபைவாசன்,
நித்ய பிதாவினோர்ம
கத்துவக் குமாரனோ இவர்?–ஆ! என்ன இது? – வானம்

3. மந்தைக் காட்டிலே மாட்டுக்கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி,[1]
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி!–ஆ! என்ன இது?
– வானம்

4. வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல;
மாறில்லாத ஈறில்லாத
வல்லமைத் தேவனே புல்லில் கிடக்கிறார்! – ஆ! என்ன இது?
– வானம்

5. சீயோனின் மாதே, இனி க்ஷெணந்தரியாதே,
மாயமென்ன? உனக்குச் சொல்லவோ?
வந்தவர் மணவாளனல்லவோ?–ஆ! என்ன இது? – வானம்
***–வே. சாசுதிரியார்***

**நன்றி செலுத்துவாயே**

**28. (12 L.) தன்யாசி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**நன்றி செலுத்துவாயே–என் மனமே நீ**
நன்றி செலுத்துவாயே.

***சரணங்கள்***

1. அன்றதம் செய்தபாவம் பொன்று நிமித்தமாக
இன்றவதாரம்செய்த இயேசுவுக்கே – நன்றி

2. தேவசேயனும் தன் சேணுலகத்தை விட்டு
ஜீவ மனிதனாகவே ஜெனித்ததாலே – நன்றி

3. அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர்
துதிபெறப் பாத்திரராம் சுதனவர்க்கே. – நன்றி

4. வல்லமையுள்ளதேவன் வானநித்தியபிதா
சொல்லரும் பரப்பொருளாம் சுதனவர்க்கே. – நன்றி

1. ஞானம்

5. உன்னதத்தேவனார் தமக்கே மகிமையுடன்
இந்நிலம் சமாதானம் என்றுமுண்டாக. – நன்றி

6. ஆண்டவர் தாசரை அன்பின் பெருக்கத்தால்
ஆசீர்வதிப்பதாலே அருமையாக. – நன்றி

***– ஆ. தேவதாசன்***

**சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து**

**29. (52) காமி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து**
இவர் தாம், இவர் தாம், இவர் தாம்.

***சரணங்கள்***

1. நம தாதி பிதாவின் திருப் பாலர் இவர்,
அனுகூலர் இவர், மனுவேலர் இவர். – சமாதானம்

2. நேய கிருபையின் ஒரு சேயர்[1] இவர்,
பரம ராயர் இவர், நம தாயர்[2] இவர். – சமாதானம்

3. ஆதி நரர் செய்த தீதறவே,
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய். – சமாதானம்

4. ஆரணம்[3] பாடி, விண்ணோர் ஆடவே,
அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே. – சமாதானம்

5. மெய்யாகவே மே சையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே. – சமாதானம்

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே,
நிலை நாட்டினாரே, முடி சூட்டினாரே – சமாதானம்

***– வேதநாயகம் சாசுதிரியார்***

---

1. மகன் 2. மேய்ப்பர் 3. வேதம்

## மாசில்லாத் தேவ புத்திரன்

**30. (55) சயிந்தவி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**மாசில்லாத் தேவ புத்திரன்**
மானிட னானார், ஜெய! ஜெய!

**சரணங்கள்**

1. ஆசீர் வாதமே!–கன தேசார்[1] நீதமே!–ஒளிர்
காசினி மீததி நேசப் பிரகாச விண் வாச கிருபாசன– மாசில்லாத்

2. சத்திய வாசகர்–சதா–நித்திய தேசிகர்–வளர்
பெத்லகேம் ஊர்தனிலே கரி சித்துக் கன்னியாஸ்திரி வித்தினில்
– மாசில்லாத்

3. அந்தரம் பூமியும்–அதி–சுந்தர நேமியும்[2]–தினம்
ஐந்தொரு நாளினிலே தருமுந்தின மூன்றிலொன்றாகிய
– மாசில்லாத்

***– வே. சாஸ்திரியார்***

## ஏசு நாயனார் நரனாயினார்

**31. (66) கமாஸ்** **சாபுதாளம்**

***பல்லவி***

**மேசியா ஏசு நாயனார், – எமை**
மீட்கவே நரனாயினார்.

***சரணங்கள்***

1. நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே,
மாசிலான் ஒரு நீசனாகவே
வந்தார் எம் கதி நோக்கவே. – மேசியா

---

1. ஒளி சிறந்த 2. கடலும்

2. தந்தையின் சுதன் மாந்தர் பாதகம்
சகலமும் அற வேண்டியே,
விந்தையாய்க் குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே. – மேசியா

3. தொண்டர் வாழவும், அண்டரின் குழாம்
தோத்திரம் மிகப் பாடவும்,
அண்டு பாவிகள் விண்ணடையவும்
ஆயர் தேடிக் கொண்டாடவும். – மேசியா

4. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே
திருச்சுதன் மனுவேலனார்
பாவிகள் எங்கள் பாவம் மாறவே
பார்த்திபன் தேவ பாலனாய். – மேசியா

*– ச. யோசேப்பு*

**பெத்லேகம் ஊரோரம்**

**32. சங்கராபரணம்** **ஏகதாளம்**

**சரணங்கள்**

**பெத்லேகம் ஊரோரம் சத்திரத்தை நாடிக்**
கர்த்தன் ஏசு பாலனுக்குத் துத்தியங்கள் பாடிப்
பக்தியுடன் இத்தினம் வாஓடிப் – பெத்

2. காலம் நிறைவேறின போதிஸ்திரியின் வித்து
சீலகன்னி கர்ப்பத்தில் ஆவியால் உற்பவித்துப்
பாலனான யேசுநமின் சொத்து – பெத்

3. எல்லையில்லா ஞானபரன் வெல்லைமலையோரம்
புல்லனையிலே பிறந்தார் இல்லமெங்கு ஈரம்
தொல்லைமிகும் அவ்விருட்டு நேரம் – பெத்

4. வான் புவி வாழ் ராஜனுக்கு மாட்டகந்தான் வீடோ,
வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல் பூடோ
ஆன பழங் கந்தை என்ன பாடோ? – பெத்

5. அந்தரத்தில் பாடுகின்றார் தூதர் சேனை கூடி
மந்தை ஆயர் ஓடுகின்றார் பாடல் கேட்கத் தேடி
இன்றிரவில் என்ன இந்த மோடி – பெத்

6. ஆட்டிடையர் அஞ்சுகிறார் அவர் மகிமை கண்டு,
அட்டியின்றிக் காபிரியேல் சொன்ன செய்தி கொண்டு,
நாட்டமுடன் ரட்சகரைக் கண்டு – பெத்

7. இந்திரியுடு[1] கண்டரசர் மூவர் நடந்தாரே,
சந்திரந்[2] தூபம் போளம் வைத்துச் சுதனைப் பணிந்தாரே
விந்தையது பார்க்கலாம் வா நேரே – பெத்

## பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித் துதி

**33. சரசாங்கி** **திஸ்ர ஏகதாளம்**

**பல்லவி**

**பெத்தலையில் பிறந்தவரைப்**
போற்றித்துதி, மனமே–இன்னும்

**சரணங்கள்**

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர்–இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார். – பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார்–இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார். – பெத்

3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக–இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே. – பெத்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்–இங்கு
ஆக்களுட[3] சத்தத்துக்குள் அழுது பிறந்தார். – பெத்

5. இந்தடைவாய் அன்புவைத்த எம்பெருமானை–நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே. – பெத்

*– யோ. பால்மர்*

---

1. கிழக்கு நட்சத்திரம் 2. பொன் 3. பசுக்களுடைய

## ஆர் இவர் ஆராரோ

**34. (350) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆர் இவர் ஆராரோ–இந்த–அவனியோர் மாதிடமே**
ஆனடை குடிலிடை மோனமாய் உதித்த இவ்வற்புதப் பாலகனார்?

***சரணங்கள்***

1. பாருருவாகுமுன்னே–இருந்த–பரப் பொருள் தானிவரோ?
சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ் சிருட்டித்த
மாவலரோ? – ஆர்

2. மேசியா இவர்தானோ?–நம்மை–மேய்த்திடும் நரர்கோனோ?
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி அன்புள்ள
மனசானோ? – ஆர்

3. தித்திக்குந் தீங்கனியோ?–நமது–தேவனின் கண்மணியோ?
மெத்தவே உலகிருள் நீக்கிடும் அதிசயமேவிய
விண்ணொளியோ? – ஆர்

4. பட்டத்துத் துரைமகனோ?–நம்மைப்–பண்புடன் ஆள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக் காட்டிடுந்
தாயகனோ? – ஆர்

5. ஜீவனின் அப்பமோதான்?–தாகம்–தீர்த்திடும் பானமோதான்?
ஆவலாய் ஏழைகள் அடைந்திடும் அடைக்கல மானவர் இவர்
தானோ? – ஆர்

## ஆதிபன் பிறந்தார்

**35. (47) கரஹரப்பிரியை** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆ! அம்பர உம்பர மும் புகழுந்திரு**
ஆதிபன்[1] பிறந்தார்

1. அதிபன்

***அனுபல்லவி***

ஆதிபன் பிறந்தார்,–அமலாதிபன் பிறந்தார். – ஆ!

***சரணங்கள்***

1. அன்பான பரனே!–அருள் மேவுங் காரணனே!–நவ
அச்சய[1] சச்சித–ரட்சகனாகிய
உச்சிதவரனே! – ஆ!

2. ஆதம் பவமற,–நீதம்[2] நிறைவேற,–அன்று
அல்லிராவினில்–தொல்லையிடையினில்
புல்லணையிற் பிறந்தார். – ஆ!

3. ஞானியர் தேட,–வானவர் பாட,–மிக
நன்னய, உன்னத–பன்னரும்[3] மேசையா
இந்நிலம் பிறந்தார். – ஆ!

4. கோனவர் நாட, தானவர்[4] கொண்டாட–என்று
கோத்திரர்[5] தோத்திரஞ்–சாற்றிட வே, யூத
கோத்திரன் பிறந்தார். – ஆ!

5. விண்ணுடு தோண,–மன்னவர் பேண,–ஏரோது,
மைந்தனின் சிந்தையமுந்திக் கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார். – ஆ!

***– யோ. யாக்கோப்பு***

**அரசனைக் காணாமலிருப்போமோ?**

**36. மாஞ்சி ஆதிதாளம்**

***பல்லவி***

**அரசனைக் காணமலிருப்போமோ?–நமது**
ஆயுளை வீணாகக் கழிப்போமோ?–அரசனை

---

1. கடவுள்
2. நீதி
3. சொல்லமுடியாத
4. அரசர்
5. இனத்தார்

### *அனுபல்லவி*

பரம்பரை ஞானத்தைப் பழிப்போமோ?–யூதர்
பாடனு பவங்களை ஒழிப்போமோ?–யூத – அரசனைக்

### *சரணங்கள்*

1. யாக்கோபிலோர் வெள்ளி உதிக்குமென்றே,–இஸ்ரேல்
ராஜ செங்கோலெங்கும் கதிக்குமென்றே,
ஆக்கமிழந்து மறுவாக்குரைத்த பாலாம்
தீர்க்கன் மொழிபொய்யாத பாக்கியமே!–யூத – அரசனைக்

2. தேசோ மயத்தாரகை[1] தோன்றுது பார்!–மேற்குத்
திசை வழி காட்டிமுன் செல்லுது பார்!
பூசனைக் காண நன்கொடைகள் கொண்டே–அவர்
பொன்னடி வணங்குவோம், நடவுமின்றே!–யூத – அரசனைக்

3. அலங்காரமனை யொன்று தோணுது பார்!–அதன்
அழகு மனமுங் கண்ணும் கவர்ந்தது பார்!
இளவர சங்கிருக்கும் நிச்சயம் பார்!–நாம்
எடுத்த கருமம் சித்தியாகிடும் பார்!–யூத – அரசனைக்

4. அரமனையில் அவரைக் காணோமே!–அதை
அகன்று தென்மார்க்கமாய்த் திரும்புவமே!
மறைந்த உடு[2] அதோ! பார் திரும்பினதே,–பெத்லேம்
வாசலில் நமைக்கொண்டு சேர்க்குது பார்!–யூத – அரசனைக்

5. பொன் தூபவர்க்கம் வெள்ளைப் போளமிட்டே,–ராயர்
பொற்கழல் அர்ச்சனை புரிவோமே!
வன்கண்ணன் ஏரோதைப் பாராமல்,–தேவ
வாக்கினால் திரும்பினோம் சோராமல்,–யூத – அரசனை

*– ஜி.சே. வேதநாயகம்*

### கர்த்தனைக் கண்டேன்

**37. பியாகு (தேசிகம்)** **ஏகதாளம்**

**பல்லவி**

**கண்டேனென் கண்குளிர–கர்த்தனை யின்று**

---

1. நட்சத்திரம் 2. நட்சத்திரம்

**அனுபல்லவி**

கொண்டாடும் விண்ணோர்கள் கோமானைக்[1] கையிலேந்திக்–கண்

**சரணங்கள்**

1. பெத்தலேம்–சத்திர முன்னணையில்
உற்றோருக்–குயிர்தரும் உண்மையாம் என் ரட்சகனைக் – கண்

2. தேவாதி–தேவனை, தேவசேனை
ஓயாது–தோத்தரிக்கும் ஒப்புநிகர் அற்றவனைக் – கண்

3. பாவேந்தர்–தேடிவரும் பக்தர் பரனை,
ஆவேந்தர்–அடிதொழும் அன்பனை, என் இன்பனைநான்
–கண்

4. முத்தொழிற்–கர்த்தாவாம் முன்னவனை,
இத்தரை–மீட்க எனை நத்தி வந்த[2] மன்னவனைக் – கண்

5. மண்ணோர்–இருள்போக்கும் மாமணியை,
விண்ணோரும்–வேண்டிநிற்கும் விண்மணியைக்,
கண்மணியைக் – கண்

6. அண்டி னோர்க்–கன்புருவாம் ஆரணனை,
கண்டோர்கள்–கலிதீர்க்கும் காரணனை, பூரணனைக் – கண்

7. அன்னையாம்–கன்னியும் ஐயனுடன்
முன்னறி–யாப்பசுவின் புல்லணையில் உன்னழகைக் – கண்

***–மு. ஆபிரகாம் பண்டிதர்***

**என்ன பாக்கியம்**

**38. (53) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**என்ன பாக்கியம், எவர்க்குண்டு**
இந்தச் சிலாக்கியம்?

---

1. அரசனை 2. விரும்பி

*அனுபல்லவி*

விண்ணவரும், புவிமேவும் முனிவர்களும்,
மன்னவருங் காணா மகிபனை யான் கண்டேன்; - என்ன

*சரணங்கள்*

1. வானகந் தானோ,-அல்லதிது-வையகந் தானோ?
ஆனகம்[1] சென்று எழுந்த அரும்பொருள்
கானகந் தன்னில் என் கையில் அமர்ந்தது; - என்ன

2. போதும் இவ்வாழ்வு;-பரகதி-போவேன் இப்போது;
ஏதேன் என்ற பரதீசும் வந்திட்டது;
எண்ணில்லாத செல்வம் என் கையில் கிட்டுது; - என்ன

3. சாமியைக் கண்டேன்,-மகானந்தம் சாலவுங்கொண்டேன்,
காமரு தேங்கனி[2] வாய்கள் துடிப்பதும்,
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்; - என்ன

4. அன்னமும் நீயே;-கிடைத்தற்கருஞ்-சொன்னமும்[3] நீயே;
மின்னறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ? - என்ன

***- காபிரியேல் உபதேசியார்***

## கிறிஸ்துவின் சரிதை

### பணிந்து நடந்துகொண்டாரே

**39. (352) காம்போதி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**பணிந்து நடந்துகொண்டாரே-பரன் பாலனும்**
கனிந்து தாய் தந்தையருக்கு.

**அனுபல்லவி**

அணிந்து தேவ தயவைப் பணிந்த மனதினோடு
அவர்க்கு தணிந்து எதிர்முனைந்து சொல்லாதபடி, - பணி

---

1. தொழுவம் 2. இனிய கனி 3. தங்கம்

### சரணங்கள்

1. தந்தை தாய் தனை மதித்து–அவருடைய
தயவின் சித்தத்துக் கமைந்த
மைந்தர்கள் உலகினில் வாழ்ந்து இருப்பாரென்று
சிந்தை மகிழ்ந்து பரன் செப்பிய மொழிப்படி, – பணி

2. தந்தைக் குகந்தவேலையில்–அவருடனே
விந்தை யுடனே பயின்றார்;
நிந்தை யிதுவென்றெண்ணிச் சிந்தைக் கலங்கிடாமல்
எந்த விதமும் நரர் தன்னைப் பின்பற்றியேகப் – பணி

3. ஆவி பலமடைந்தார்;–உலக தேவ
அறிவிலும் நிறைவுகொண்டார்;
தேவ கிருபையிலும் திருமறை முறையிலும்
பூவில் அவர்க்கு நிகர் புனித னில்லாதபடி, – பணி

***– சா. சீமோன்***

### தேவசுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க

**40. (87) காம்போதி** **திஸ்ர ஏகதாளம்**

### அந்தாதி

**தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க–மனு**
ஜென்மமாக வன்மையுள்ளோன் தன்மையாய் வந்தார்.

2. வந்த பின் தன் தந்தையர்க் குகந்தபடியே–பர
மண்டலன் பூ மண்டலத்தோர் தொண்டன்போல் ஆனார்.

3. தொண்டனாகி, அண்டர் கோமான்[1] விண்ட[2] மறையே,–பரி
சுத்தம், மகா சத்யம், மிகு புத்திக்கும் ஊற்றே.

4. புத்தி மிகு வித்தமறை யைத் துலக்கவே–பல
போதகன்மார் பூதலத்தின் மீதில் தெரிந்தார்.

---

1. வானவர் அரசன் 2. உரைத்த

5. பூதலத்தில் வேதமறை ஓதி, நரர்க்குள்–அற்
புதங்கள் செய்துசிதங்கள்[1] ஓதிக் கதங்களை[2] வென்றார்.

***– தேவ வரம்***

**ஜகநாதா குருபர நாதா**

**41. (88, 89) சங்கராபரணம் ஆதிதாளம்**

**பல்லவி**

**ஜகநாதா, குரு பரநாதா, திரு**
அருள் நாதா, ஏசுபிரசாதா நாதா!

**அனுபல்லவி**

திகழுறுந்[3] தாதா, புகழுறும் பாதா,
தீதறும் வேத போதா! – செக

**சரணங்கள்**

1. முற்காலம் ஆதிமைந்தர் மோசப் பிசாசு தந்திர
மொய்[4] கொண்டு கனியுண்ட பழியாலோ?
நற்காலம் நீ தெரிந்து, நவின்ற வண்ணம் பரிந்து,
நரதேவனாக வந்தாய் மொழியாலோ? – ஜகநாதா

2. எளிய வேஷந் தரித்தே இங் கவதரித்தாலும்,
இமையோர் வந்திறைஞ்சிடத் தெரிந்தாயே;
ஒளிசெய்யும் பணிமுடி உயர் மன்னர் தொழும்படி
உடு[5] வழி காட்டிடப் புரிந்தாயே. – ஜகநாதா

3. அருந் தவன்[6] கையில் தங்கி, அன்பின்பக் கடல் பொங்கி,
ஆலயத்தில் துதிக்க களித்தாயே,
வரும் தவ மதியால் முன் மற[7] மன்னன் தேடிட, உன்
மலர் முகங் காட்டாமல் ஒளித்தாயே. – ஜகநாதா

---

1. சிறந்தவை
2. பாம்புகளை
3. பிரகாசமுள்ள
4. பெருமை
5. நட்சத்திரம்
6. சிமியோன்
7. கோபமுள்ள

4. மக்கள் உளக் களங்கம் மாசற்றொளி விளங்க,
மதுரப்பிரசங்கம் யார்க்கும் உரைத்தாயே;
சிக் கடர் துன் மனத்தைத் திருத்தி, அறத்தின் வித்தை
திருத் தயை கூர்ந் தெவர்க்கும் விதைத்தாயே. – ஜகநாதா

5. தனையர் வல் நோயைக்கண்ட தாயார் மருந்துட் கொண்ட
தகைமை எனப் பேரன்பு கூர்ந்தாயே;
வினையர் வெம் பாவக் கேடு விலக அரிய பாடு
மேவி அனுபவிக்க நேர்ந்தாயே. – ஜகநாதா

6. அமரர்[1] முற்றும் அறியார், அடிகள்[2] சற்றும் அறியார்,
ஆர் உன் திறல்[3] அறிவார், கர்த்தாவே?
எமது பவம் பொறுத்தே, இரக்கம் எம்மேல் உகுத்தே,
எமைப் புரந்தாளும், மானப் பர்த்தாவே. – செகநாதா

**– வீரமா முனிவர்**

## பவனி செல்கின்றார் ராஜா

**42. யமுனா கல்யாணி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**பவனி செல்கின்றார் ராசா–நாம்**
பாடிப் புகழ்வோம், நேசா!

***அனுபல்லவி***

அவனிதனிலே மறி[4]மேல் ஏறி
ஆனந்தம் பரமானந்தம். – பவனி

***சரணங்கள்***

1. எருசலேமின் பதியே[5] –சுரர்
கரிசனையுள்ள நிதியே!
அருகில் நின்ற அனைவர் போற்றும்
அரசே, எங்கள் சிரசே! – பவனி

---

1. தூதர்கள்
2. திருப்பாதங்கள்
3. வலிமை
4. கழுதைக் குட்டி
5. மணவாளன்

2. பன்னிரண்டு சீஷர் சென்று–நின்று
பாங்காய் வஸ்திரம் விரிக்க,
நன்னயம்சேர் மனுவின் சேனை
நாதம் கீதம் ஓத. – பவனி

3. குருத்தோலைகள் பிடிக்க,–பாலர்
கும்புகும்பாகவே நடக்க,
பெருத்த தொனியாய் ஓசன்னாவென்று
போற்ற மனம் தேற்ற. – பவனி

## ஓசன்னா பாடுவோம்

**43. சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,**
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

***சரணங்கள்***

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னபாலர் பாடினார்,
அன்றுபோல இன்றும் நாமும் அன்பாய்த்துதி பாடுவோம்.

2. சின்ன மறி மீதில்ஏறி அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்.

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்,
பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்,
ஜாலர் வீணையோடுபாடித் தாளைமுத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்,
கூடி அருள் பெற்றுநாமும் த்ரியேகரைப் போற்றுவோம்.

***– யோ. பால்மர்***

## ஏன் இந்தப் பாடுதான்

**44. (91) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஏன் இந்தப் பாடுதான்!–சுவாமி**
என்ன தருவேன் இதற் கீடுநான்?

***அனுபல்லவி***

ஆனந்த நேமியே[1] – எனை ஆளவந்த குரு சுவாமியே – ஏன்

***சரணங்கள்***

1. கெத்செமனே யிடம் ஏகவும்,–அதின்
கெழு[2] மலர்க் காவிடை போகவும்,
அச்சயனே, மனம் நோகவும்,–சொல்
அளவில்லாத் துயரமாகவும், – ஏன்

2. முழுந்தாள் படியிட்டுத் தாழவும்,–மும்
முறை முகம் தரைபட விழவும்,
மழுங்கத் துயர் உமைச் சூழவும்,–கொடு
மரண வாதையினில் மூழ்கவும், – ஏன்

3. அப்பா, பிதாவே, என்றழைக்கவும்,–துயர்
அகலச் செய்யும், என்றுரைக்கவும்,
செப்பும் உன் சித்தம் என்று சாற்றவும்,–ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும், – ஏன்

4. ஆத்துமத் துயர் மிக நீடவும்,–குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்,
சாத்திர மொழிகள் ஒத்தாடவும்,–உந்தன்
தாசரும் பதந்தனை நாடவும். – ஏன்

*– ஏசுதாசன் அண்ணாவியார்*

---

1. கடல் 2. நிறமுள்ள

## புண்ணியன் இவர் யாரோ?

**45. கேதாரகௌனம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**புண்ணியன் இவர் யாரோ?–வீழ்ந்து ஜெபிக்கும்**
புருஷன் சஞ்சலம் யாதோ?

**அனுபல்லவி**

தண்ணிழல் சோலையிலே சாமநடு வேளையிலே,
மண்ணில் குப்புற வீழ்ந்து வணங்கிமன்றாடிக் கெஞ்சும். – புண்

**சரணங்கள்**

1. வேளை நீங்காதோ வென்கிறார்;–கொடுமரண
வேதனை யுற்றேனென்கிறார்;
ஆளுதவியு மில்லை அடியார் துயிலுகின்றார்;
நீளுந் துயர்க்கடலில் நீந்தித் தத்தளிக்கின்றார். – புண்

2. பாத்திரம் நீக்கு மென்கிறார்;–பிதாவே, இந்தப்
பாடகலாதோ வென்கிறார்;
நேத்திரம் நீர்பொழிய நிமலன் மேனியில் ரத்தம்
நீற்று வியர்வையாக நிலத்தில் சொட்ட மன்றாடும் – புண்

3. என்சித்த மல்ல வென்கிறார்;–அப்பா, நின்சித்தம்
என்றைக்குமாக வென்கிறார்;
அன்பின் கடவுள் தமதருங் கரத்திலேயீந்த
துன்பப் பாத்திரத்தடி வண்டலையும் பருகும். – புண்

***– ல.ஈ. ஸ்தேவான்.***

## சிறை விடுத்தீரோ, பரனே

**46. (34 L) சகானா** **ஆதி தாளம்**

***கண்ணிகள்***

**ஆதம்புரிந்த பாவத்தாலே மனுடனாகி**
வேதம்[1] புரிந்த சிறை விடுத்தீரோ பரனே.

---

1. நியாயப்பிரமாணம்

2. ஏவை பறித்த கனியாலே விளைந்த எல்லாப்
பாவத்துக்காகப் பழியானீரோ பரனே.

3. வேத கற்பனையனைத்தும் மீறி நரர் புரிந்த
பாதகந் தீரப்பாடுபட்டீரோ பரனே.

4. தந்தைப் பிதாவுக் கும்மைத் தகனப்பலியளித்து
மைந்தரை[1] மீட்க மனம் வைத்தீரோ பரனே.

5. சிலுவைச் சுமைபெறாமல் தியங்கித் தரையில் விழக்
கொலைஞர் அடர்ந்து கோட்டிகொண்டாரோ பரனே?

6. வலிய பவத்தை நீக்கி மனுடரை ஈடேற்றிச்
சிலுவை சுமந்திறங்கித் திகைத்தீரோ பரனே?

7. சென்னியில் தைத்தமுடிச் சிலுவையின் பாரத்தினால்
உன்னியழுந்தத் துயர் உற்றீரோ பரனே?

8. வடியும் உதிரமோட மருகித் தவித்துவாடிக்
கொடிய குருசில் கொலையுண்டீரோ பரனே?

9. வானம் புவிபடைத்த வல்லமைப் பிதாவின் மைந்தர்
ஈனக்கொலைஞர் கையாலிறந்தீரோ பரனே?

10. சங்கையின் ராஜாவே, சத்ய அனாதி தேவே,
பங்கப்பட்டுமடிப் பட்டீரோ பரனே?

***– வே. சாஸ்திரியார்***

**அப்பா தயாள குணநந்தா மோனந்த வேதா**

**47. (92) நாதநமக்கிரியை** **சாபுதாளம்**

**கண்ணிகள்**

**அப்பா, தயாள குணாநந்த மோனந்த வேதா,–பொல்லா**
இப்பாரில் காய்பாமுன் ஏகினீரோ, ஏசுநாதா?

1. மாந்தரை

2. குற்றம் சுமத்தப் பொய்ச் சாட்சிகளைத் தேடினாரோ?–அந்தச்
செற்றலர்[1] எல்லாம் திரண்டேகமாய்க் கூடினாரோ?

3. கன்னம் அதைத்ததோ? கண்கள் சிவந்ததோ? சுவாமி,–பொறி
மின்னிக் கலங்கி, விசனம் உற்றீரோ, நன் னேமி?

4. மெய்யான சாட்சி இட்டையனே, சொன்ன உம் மீதே–தீயர்
பொய்யான சாட்சி இட்டையோ, சுமத்தினார் தீதே.

5. என் கட்டை நீக்கிஈடேற்ற வாதைக்குள்ளானீரோ?–உம்மைப்
பின் கட்டாய்க் கட்டி, பிலாத்திடங்கொண்டு போனாரோ?

6. இத்தனை பாடுகள் நீர் பட்ட தென்கொடும் பாவமே,–என்றன்
கர்த்தனே, உன் மீதில் வந்ததையோ, தேவ கோபமே?

7. நீர் பட்ட பாட்டைப்போல், ஆர் பட்டுத்தாங்குவார், தேவே?–பல
கார்பட்ட[2] நெஞ்சமும் சீர்பட்டுப் போகுமே, கோவே.

***– ஏசுதாசன் அண்ணாவியார்***

**காரணமேன் கோவே**

**48. (94) நீலாம்புரி** **ரூபகதாளம்**

**தரு**

**பொற்பு[3] மிகும் வானுலகும்**

**சீயோன் 1** பூவுலகும் படைத்த பரப்பொருளே,–இங்கே
பொந்திப்பிலாத் தரண்மனையில்
வந்து நிற்கும் காரணமேன், கோவே?

**கிறிஸ்து** கற்பனை மீறிய பாவத்தால்
கடின நரகாக்கினைப் படாமல்–உன்னைக்
காப்பதற் கிங்கே ஞாய
தீர்ப்பில் உற்றோம், சீயோனின் மாதே.

---

1. பகைவர் 2. இருளடைந்த 3. அழகு

சீயோன் 2 துய்ய திரு மேனி எல்லாம்
நொய்ய உழுத நிலம்போல ஆகி,–உன்
சோரி[1] சிந்த, வாரதினால்
நீர் அடிக்கப்பட்டதென்ன, கோவே?

கிறிஸ்து வையகத்தின் பாதகத்தால்
பெய்யும் நடுதீர்வையெல்லாம் ஆற்ற,–இந்த
வாதை எல்லாம் பட்டிறக்க,
போத[2] மனம் சம்மதித்தோம், மாதே.

சீயோன் 3 செய்ய[3] கண்கள் உறச் சிவந்து,
திருக் கன்னங்கள் தடித்து, மிக வீங்கி,–முழுச்
சென்னியின் ரோமங்கள் எல்லாம்
வின்னமுற்றிங்[4] கிருப்பதென்ன, கோவே?

கிறிஸ்து மையிருளில் குருக்களுடை
மாளிகையில் படுத்தின பாடெல்லாம்–இங்கே
வன் கொலைஞரால் அடிக்க,
பங்கமுற்ற கோலம் இது, மாதே

***– வே. சாஸ்திரியார்***

**சரணம் சரணம் அனந்தா**

**49. (95) நீலாம்புரி திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா,**[5]
தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந்தா.

***சரணங்கள்***

1. தேவசுதன் பொந்தியுப் பிலாத்தினிடமே,
சென்று பல பாடுபடவும் தயவானார்.– சரணம்

---

1. இரத்தம்
2. பூரணமாய்
3. அழகான
4. சிதைவு
5. சத்து, சித்து, ஆனந்தம் என்னும் இறைநிலை

2. தந்து[1] செய்து பொந்தியுப் பிலாத்து துரைதான்,
தற்பரனை விட்டுவிடத் தன்னுள் எண்ணினான். – சரணம்

3. பரபாசோ டதிபதியைப் பணிய நிறுத்தி,
பாதகனை யோ? இறையை யோ? விட, என்றான். – சரணம்

4. ஜீவனுட அதிபதியைச் சிலுவையில் கொன்று,
திருடனையே விட்டுவிடத் தீயவர் கேட்டார். – சரணம்

5. தண்ணீர் தனை எடுத்துக் கை கழுவியே,
தற்பரனைக் கொல்வதற்கங் கொப்புக்கொடுத்தான். – சரணம்

6. கள்ளனையே விட்டு விட்டு யூதர்கட்காக,
காவலனைக் குருசறைப் பாவியும் தீர்த்தான். – சரணம்

***– வே. சாஸ்திரியார்***

**சரணம் சரணம் அனந்தா**

**50. (85) நீலாம்புரி** **திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா,**
தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந்தா.

***சரணங்கள்***

1. பித்தன் என்று வெள்ளை அரைச் சட்டை அணிந்து,
பேதக ஏரோதே பரி காசம்பண்ணினான். – சரணம்

2. கற்றூணில் சேர்த்திறுகக் கட்டி, வலுவாய்க்
காவலன்[2] தன் சேர்வை எல்லாம் கூடி அளித்தார். – சரணம்

3. முள்ளின் முடி செய்தழுத்தி, வள்ளல் எனவே,
மூர்க்க முடனே தடிகொண் டார்க்க அடித்தார். – சரணம்

4. கையினில் செங்கோலதென்று மூங்கில் ஒன்றிட்டு,
காவலன் நீ யூதருக்கென் றோவியஞ் சொன்னார். – சரணம்

---

1. தந்திரம் 2. அரசன்

5. துப்பினார் முகத்தினில் அதிக்கிரமமாய்,
துன்னிய[1] கைக்கோலை வாங்கி சென்னியில் போட்டார்.
– சரணம்

6. முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே,
முன்னவனைத்தான் இறைஞ்சிக் கன்னத்தறைந்தார். – சரணம்
***– வே. சாஸ்திரியார்***

**நோக்கிப் பணிந்து நின்றேன்**

**51. (41 L.) முகாரி.** **சாபுதாளம்**

**கண்ணிகள்**

**காயம் ரத்தங் குத்துகள் நிறைந்து**
கணக்கில்லா நிந்தையுற்று முள்ளால் பின்னும்
தீய க்ரிடத்தாலே சூடுண்ட
திருச்சிரசே முன்னமே,
நீயுற்ற மேன்மை எங்கே, கொடும் லச்சை
நீ காணக் காரணமேன், ஐயோ மிக
நோயடைந்தே வதைந்த உன்பக்கமே
நோக்கிப்பணிந்து நின்றேன்

2. மூலோகமும் பணியும் கதிரோன்
முகத்தின் திருமேனியே ஏனுந்தனை
பூலோகத்தாருமியும் தீழ்ப்பாயிற்று;
பொற்புமிகுஞ் சோதியே,
தீலோகந் தாங்காதென்றோ வேறுபட்டாய்
ஜீவ பரவெளிச்சம் கண்ஜோதியிக்
காலமே மா இக்கட்டால் இருள் மூடிக்
கலங்கி மங்கினதோ?

---

1. கெட்டியான

3. அன்புள்ள கன்ன ரூபும் ஒப்பில்லா
அழகாம் இதழ் வர்ணமும் வேறரவெட்
டுண்டபுல் பூவையும்போல் உருவற்
றுலர்ந்திடக் காரணமேன்,
என் கர்த்தாவே ஆண்டவா, நீர்தானே
இறந்திட ஞாயமுண்டா, பாவந்தரும்
துன்பம் அழிவினுக்கும் நானல்லவோ
சொற்படியே பாத்திரன்?

4. நீருற்றவாதையெலாம் மாசுத்தா! இந்
நீசன் பாவங்கொணர்ந்த கணக்கரும்
பாரமல்லோ, தீங்கும் நோவுஞ் சாவும்
பாவியின் குற்றமல்லோ?
நேரஸ்தன் நானென்றும் மடிய
நிதானமென்றே சொல்கிறேன்; பரா என்மேல்
பார்வை அன்பாய் வையுமேன் உங்கண் அன்று
பட்டதுபோல் குன்றனமேல்

5. என்னை உமதாடாய் அறிந்திடும்
என் நல்ல கோனாரே பரிந்து நீர்
முன்னே சீவன் ஊறும் ஆற்றால் என்
முசிப்புத் தீர்த்தரறிவேன்,
என்னை நீர் போதிவிக்க தேவாமிர்தம்
இன்பமுடன் ருசித்தேன், பராஉனின்
உன்னத தேற்றரவால் என் உள்ளத்தில்
உண்டானதே பேரின்பம்.

6. அடியேனுமைத் தாழ்மையாய்ப் பரனே
அடிபணிந்தே தினமும் தினமும்
கொடிய நின்பாடு கஸ்திகட்காகவே
கோவே உமைத் துதிப்பேன்
முடிவுமட்டும் உம்மிலே அடியேன்
முயற்சியாயூன்றி நிற்க அருள்செய்யும்,
இடும் எனக்குக்கட்டளை மரித்திட
இயேசுவே நானும்மிலே.

7. நான் மாளுங்காலம் வந்தால், என்றன் பிராண
நாயகா, நீர் பிரிந்தே இராதேயும்.
நான் தொய்ந்துபோய்க்கிடந்தால் எனக்கு நின்
நன்முகமே காண்பியும்,
ஈனனாம் என்னுடைய மனக்லேசம்
எந்நேரமும் மெத்தவாம் சகாயரே,
ஞானமாய் நீர்சிந்தின இரத்தத்தின்
நற்பலத்தால் ரட்சியும்.

8. ஐயா என் மூச்சொடுங்கிச் சீவன்போகும்
அக்கடையிக்கட்டிலும் சிலுவையில்
துய்யா நீர் என்றனுக்காய் இறந்த
சுரூபந்தனைக் காண்பியும்,
மெய்யாய் விசுவாசத்தின் கண்ணால் எனின்
மீட்பரை நான் நோக்கி, என் நெஞ்சினில்
ஐயமற அணைத்துக் கொண்டே காத்
தயர்ந்து நான் தூங்கிடுவேன்.

*-ஞா. சாமுவேல்.*

## ஏங்குதே என்னகந்தான்

**52. (98) நாதநாமக்கிரியை** **சாபுதாளம்**

*பல்லவி*

**ஏங்குதே என்னகந்தான், துயர்**
தாங்குதில்லை முகந்தான்.

*அனுபல்லவி*

பூங்காவிலே கனிந்தேங்கி நீர் மன்றாட
ஓங்கியே உதிரங்கள்
நீங்கியே துயர் கண்டு - ஏங்குதே

***சரணங்கள்***

1. மேசியாவென்றுரைத்து, யூத
ராஜனென்றே நகைத்து,
தூஷணித்தே அடித்து, நினைக்குட்டி
மாசுகளே சுமத்தி,
ஆசாரமின்றியே ஆசாரியனிடம்
நீசர்கள் செய் கொடும் தோஷமது கண்டு – ஏங்குதே

2. யூதாஸ் காட்டிக்கொடுக்க, சீமோன்
பேதுரு மறுதலிக்க,
சூதா யெரோதே மெய்க்க, வெகு
தீதாயுடை தரிக்க,
நாதனே, இவ்விதம் நீதமொன்றில்லாமல்
சோதனையாய்ச் செய்யும் வேதனையைக் கண்டு – ஏங்குதே

3. நீண்ட குரு செடுத்து, எருசலேம்
தாண்ட மலையெடுத்து
ஈண்டல்[1] பின்னே தொடுத்து, அவரின்மேல்
வேண்டும் வசை கொடுத்து,
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினால் நரர் மீண்ட தென்றாலுமே – ஏங்குதே

*– தேவசகாயம் எழுத்தர்*

## பரனே பரப்பொருளே

**53. (44) உசேனி** **சாபுதாளம்**

**கண்ணிகள்**

**பரனே, பரப்பொருளே–நித்ய–பாக்கியனே சத்ய வாக்கியனே,**
நரரான பாவிகட்காய்–இந்த–நானிலத்தில் வந்த வானவனே!

2. காவில் அதம் ஏவை–தேவ–கற்பனை மறீனதால் உலகில்
மேவிய பாவம் அற–பொல்லா–வெஞ்சினக் கூரியின் வஞ்சமற

---

1 கூட்டம்

3. வேறோர் மலர்க்காவில்–சென்று–வேதனைப் போற்றி, மனம் நொறுங்கி
ஆறாக் கொடுந் துயரம்–உந்தன்–ஆத்துமத்தில் வரலானதுவோ?

4. ஈராறு சீடர்களில்–பண இச்சை–மிகுந்த ஒரு சீடன்,
பேர் யூதாஸ்காரி யோத்தாம்,–அவன்–பேசினதின்படி காசு பெற்று.

5. ஒன்னாரின் கும்புகளை–அழைத்–தோடிவந்தே, உம்மை நாடி வந்தே,
கன்னத்தில் முத்தமிட்டே,–உம்மைக்–காட்டிக் கொடுக்கத் துணிந்தானோ?

6. காட்டிக் கொடுத்திடவும்,–அந்த–காதகராகிய பாதகர் கை
போட்டே பிடித்திடவும்,–பின்னும்–பொற்கரங் கட்டி இழுத்திடவும்.

7. செம்புருவையைப் போலே–கூடச்–சென்றிடக் காய்பாமுன் நின்றிடவும்,
அம்பரனே, உந்தனுக்கு–இந்த–ஆபத்துவந்த தென் பாவம் அல்லோ?

– *வே. சாஸ்திரியார்*

**யேசையாவே**

**54. (109) நீலாம்புரி.** **ஆதிதாளம்**

**கண்ணிகள்**

**ஐயா, நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்**
நையவே பட்ட பாடு, ஏசையாவே!
கைகள் கட்டப்பட்டதோ? கால்கள் தள்ளாடினவோ?
கயவர்கள் தூஷித்தாரோ, ஏசையாவே!

2. திரு முகம் அருள் மங்க, செங்குருதிகள் பொங்க,
இருளர்[1] கஸ்திகொடுக்க, ஏசையாவே!
பொறுமை, அன்பு, தயாளம் புனிதமாக விளங்க
அருமைப் பொருளதான ஏசையாவே!

3. முள்ளின் முடியணிந்து, வள்ளலே, என் றிகழ
எள்ளளவும் பேசாத ஏசையாவே!
கள்ளன் போலே பிடித்துக் கசையால்[2] அடித்து மிகக்
கன்மிகள் செய்த பாவம், ஏசையாவே!

4. கற்றூணில் சேர்த்திறுக்கிச் செற்றலர்தாம்[3] முறுக்கிக்[4]
கர்வங்கொண்டே தூஷிக்க, ஏசையாவே!
சற்றுமிரக்கமில்லாச் சண்டாளன் ஓடி வந்து
சாடிக் கன்னத்தறைய ஏசையாவே!

5. பொன்னான மேனியதில் புழுதி மிகப் படிய
புண்ணியன் நீர் கலங்க, ஏசையாவே!
அண்ணலே, அன்பருய்ய அவஸ்தைகளைச் சகித்தீர்!
அடியேனைக் காத்தருளும், ஏசையாவே!

*– சவரிமுத்துப் போதகர்*

## கல்வாரி மலையோரம் வாரும்

**55. ஆனந்தபைரவி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**கல்வாரி மலையோரம் வாரும்,**
பாவம் தீரும்.

**அனுபல்லவி**

செல்வராயன் கிறிஸ்து தியாகேசன் தொங்குறாரே

---

1 கொடியவர்
2 சவுக்கால்
3 பகைவர்கள்
4 சினந்து

**சரணங்கள்**

1. லோகத்தின் பாவமெல்லாம் ஏகமாய்த் திரண்டு,
நொம்பலப்[1] படவைக்க ஐயன்மேல் உருண்டு,
தாகத்தால் வாடில்வாடிக் கருகியே சுருண்டு,
சடலமெல்லாம் உதிரப் பிரளயம் புரண்டு,
சாகின்றாரே நமது நாதா ஜீவதாதா[2] – ஜோதி – கல்

2. ஒண்முடி மன்னனுக்கு முண்முடியாச்சோ?
உபகாரம் பரிகரம் சிதையவும் ஆச்சோ?
விண்ணிலுலாவும் பாதம் புண்ணாகலாச்சோ?
மேனியெல்லாம் வீங்கி விதனி[3]க்கலாச்சோ?
மேசையன் அப்பன் கோபம்மேலே இதற்குமேலே–ஜோதி – கல்

3. மலர்ந்த சுந்தரக் கண்கள் மயங்குவதுமேனோ?
மதுரிக்கும் திருநாவு வறண்டதுமேனோ?
தளர்ந்திடா திருக்கைகள் துவண்டதுமேனோ?
ஜலத்தில் நடந்த பாதம் சவண்டது[4] மேனோ?
சண்டாளர்கள் நம்மால்தானே, நம்மால்தானே–ஜோதி – கல்

4. ரட்சகனை மறந்தால் ரட்சண்யம் இல்லை,
நாமக்கிறிஸ்தவர்க்கு இருபங்கு தொல்லை,
பட்ச பாதம் ஒன்றும் பரதீசில் இல்லை,
பரதீசில் பங்கில்லோர்க்குப் பாடென்றும் தொல்லை,
பந்தயத்திலே முந்தப் பாரும், முந்தப் பாரும்–ஜோதி – கல்

***– ரத்ன பரதேசியார்***

## என்னாலே ஜீவன் விடுத்தீரோ?

**56. (100) ஆனந்தபைரவி ஆதிதாளம்**

**பல்லவி**

**என்னாலே ஜீவன் விடுத்தீரோ, – ஸ்வாமீ?**
இத்தனை பாட்டுக்கிங்கே அடுத்தீரோ?

---

1 துன்பம்
2 தந்தை
3 துயருடைய
4 துவண்டது

**அனுபல்லவி**

பொன்னாட்டதிபதி பரமன் ஆட்டுக்குட்டியே,
பொறுமைக் களவிலாத கிருபைத் திருக்குமாரா,
பூண்டு பொற் குருசினில் அறையுண்டெனை
மீண்டனுக்ரக மிட நெறி கொண்டதோ? – என்

**சரணங்கள்**

1. கள்ளனைப்போல் கட்டுண்ட பரிதாபம், – மெய்ப்பூங்
காவில் ஆத்துமத்துற்ற மனஸ்தாபம்,–வேர்த்து
வெள்ளமாய் ரத்தம் புரண்ட சோபம்,–யாரால்
விபரித்து முடியும் உன் பிரஸ்தாபம்?
எள்ளத்தனை அன்பிலா உள்ளத் துரோகி நானே;
எனால் உமக்கென்ன லாபம்? யேசு
மனா பரப்ரம[1] திரு வுளமோ இது? – என்

2. சிலுவை மரத்தில் கைகால் நீட்டி, தேவரீர்
திருவிலாவைத் துளைக்க ஈட்டி, காயம்
வலிய அன்பின் கடைக்கண் காட்டி,–இன்னம்
வரவழைக்கிறீர் தயை பாராட்டி;
விலைகொடுத்தெனைக் கூட்டி, மிக்க சலாக்யம் சூட்டி,
மீண்டவாறிது மிக்க விசாலமே,
ஆண்டவா, அது பக்கிஷ[2] நேசமே. – என்

***– வே. சாஸ்திரியார்***

**பாவி நான் என்ன செய்வேன்?**

**57. (101) நாதநாமக்கிரியை** **சாபுதாளம்.**

***பல்லவி***

**பாவி நான் என்ன செய்வேன்,–கோவே,**
ஜீவன் நீர் விட்டதற்காய்?

***அனுபல்லவி***

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, ஜீவித்த தென்கொலோ? – பாவி

---

1 பரம்பொருள் 2 பட்சமுள்ள

### *சரணங்கள்*

1. நாடி எனைத் தயவாய்–மணஞ் செய்ய–தேடி வந்தீர், அரசே
ஆடுகளுக்காக நீடி உயிர் தர,
பாடு பட்டுக் குரு குடிறந்தீர் அன்றோ? – பாவி

2. பொன்னுல காதிபனே,–தேவரீர்–என்ன செய்தீர், ஐயனே?
சின்னப் படுத்தவும் கன்னடித்தடிக்கவும்,
சென்னியில் முண்முடி தன்னை அழுத்தவும். – பாவி

3. வாரால் அடிக்கப்பட்டு,–குட்டுண்டு–வாதைப்ட்டெண்ணம் அற்றீர்;
சீரா[1] மனுடவ தாரா, சருவாதி
காரா, பரம குமாரா, ஓலோலமே! – பாவி

4. வாதை உமக்கெதினால்–உண்டாயிற்று?–பாதகி பாவத்தினால்
வேதம் நிறைவுற, ஆதி பவம் அற,
நீதி தரும் யேசு நாத சுவாமியே. – பாவி

5. குற்றமற்ற மீட்பர்,–பவக்கடன்–முற்றும் அறத்தீர்ப்பர்,
கொற்ற வர்க்கும், கல்வி கற்றவர்க்கும், சுரர்
மற்ற வர்க்கும் அளவற்ற கிருபையே. – பாவி

***– வே. சாஸ்திரியார்***

## பாருங்கள், தொடர்ந்து வாருங்கள்

**58. முகாரி** **ஆதிதாளம்**

### பல்லவி

**பாருங்கள், தொடர்ந்து வாருங்கள், கொல்கதா**
பாதையிற், கோதையரே.

### அனுபல்லவி

ஆருங் காணவே ஆட்டுவாசல் கடந்து மலை
மேட்டில் நடந்தனந்தங் கோட்டிகள்[2] படுகின்றார் – பாருங்கள்

---

1 மேன்மையுள்ளோரே 2 துன்பங்கள்

**சரணங்கள்**

1. பொன்னாய் ஒளிரு மேனி மண்ணாய் மடியுதே,
புங்க[1] உடலெல்லாம் புழுதிகள் படியுதே,
நன்னய மலர்க் கண்கள் கண்ணீர்கள் வடிக்குதே,
நாவும் அஸ்தியும் காய்ந்து சாவுமே பிடிக்குதே. – பாருங்கள்

2. பாவியைத் தேடி வந்த பாதங்கள் பொரியுதே,
பட்சத்தினால் விரித்த கைகளும் நெரியுதே,
நாபிக்கமலம் பற்றிக் கோபித்துக் கரியுதே,
நடையு முடையுந் தொய்ந்து சதைகளும் சரியுதே. – பாருங்கள்

3. திருமுக அருள் ஒன்றும் தெரியாதடைந்ததே,
செங்குரு திகளெல்லாம் பொங்கி வடிந்ததே,
சருவ வல்லபம் குன்றித்திறையும் நிறைந்ததே,
ஜகமும் பரமுந் துக்க சாகரத்தழுந்துதே. – பாருங்கள்

4. துன்ப துரிதத்திலும் அன்பையே பொழிகின்றார்,
துட்டர்கள் அதற்காகத் திட்டுகள் மொழிகின்றார்,
அன்பாய்ப் பிழைக்கத் தமதாவியைக் கெடுக்கின்றார்,
அந்தோ நசரேத்தையர் நொந்தடி எடுக்கின்றார். – பாருங்கள்

***– வே. சாஸ்திரியார்***

## உருகாயோ நெஞ்சமே

**59. சலநாட்டை** **திரிபுடை தாளம்**

| | |
|---|---|
| **உருகாயோ** | **நெஞ்சமே** |
| குருசினில் | அந்தோ பார்! |
| கரங் கால்கள் | ஆணி யேறித் |
| திரு மேனி | நையுதே! |

2.

| | |
|---|---|
| மன்னுயிர்க்காய்த் | தன்னுயிரை |
| மாய்க்க வந்த | மன்னவனாம், |
| இந்நிலமெல் | லாம் புரக்க |
| ஈன குரு | சேறினார். |

---

1 சிறந்த

| | | |
|---|---|---|
| 3. | தாக மிஞ்சி | நாவறண்டு |
| | தங்க மேனி | மங்குதே. |
| | ஏகபரன் | கண்ணயர்ந்து |
| | எத்தனையாய் | ஏங்குறார். |
| 4. | மூவுலகைத் | தாங்கும் தேவன் |
| | மூன்றாணி | தாங்கிடவோ? |
| | சாவு வேளை | வந்த போது |
| | சிலுவையில் | தொங்கினார். |
| 5. | வல்ல பேயை | வெல்ல வானம் |
| | விட்டு வந்த | தெய்வம் பாராய் |
| | புல்லர் இதோ | நன்றி கெட்டுப் |
| | புறம் பாக்கி | னார் அன்றோ? |

***– சத்தியவாசகம்***

## எங்கே சுமந்து போகிறீர்?

**60. (103) புன்னாகவராளி — ஆதிதாளம்**

***பல்லவி***

**எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்**
எங்கே சுமந்து போகிறீர்?

***சரணங்கள்***

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உமது
அங்கம் முழுதும் நோக, ஐயா, என் ஏசுநாதா – எங்கே

2. தோளில் பாரம் அழுத்த, தூக்கப் பெலம் இல்லாமல்
தாளுந் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர் – எங்கே

3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர – எங்கே

4. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர – எங்கே

5. வல்ல பேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்,
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் – எங்கே

6. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து– எங்கே

*– ஏசுதாசன் அண்ணாவியார்*

**எருசலேமே**

**61. இந்துஸ்தானி** **அடதாளம்**

**எருசலேமே! எருசலேமே! எருசலேமே! எருசலேமே!**
என் பிரிய சாலமே!
விரும்பி வந்தேன் பார்,
இதோ பார், இதோ பார்!

2. கனியைக் காணேன், கனியைக் காணேன்,
கனியைக் காணேன், கனியைக் காணேன்,
கசிந்துருகியே
தனியே யான் வந்து
தவிக்கிறேன், தவிக்கிறேன்

3. இந்த நாளாயினும், இந்த நாளாயினும்,
இந்த நாளாயினும், இந்த நாளாயினும்
இணங்க மனமோ
எந்தனிடம் பெறச்
சமாதானம், சமாதானம்.

4. கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ?
கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ?
கர்த்தன் உன் ராஜாவைக்
கண்டானந்தித்துமே
களிகூர, களிகூர

*– வேதநாயகம் பாகவதர்*

**62. (105) கேதாரகௌளம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**மாட்சிமையானதோர் காட்சியைப் பார்க்கலாம்,**
வா,-ஆ! கல்
வாரிச் சிலுவையில் வானவன் தொங்கின்ற
மாட்சிமையானதோர் காட்சியைப் பார்க்கலாம், வா

**அனுபல்லவி**

சூட்சமுறு தேவ சாட்சியாங் கற்பனை
துய்யத்தை[1] நரர் மீறி – மகா
துர்க்குணப் பேயின் தந்திரத்தினால்
தூய்மை விட்டனர், வாய்மை கெட்டனர்;
சுத்த கிறிஸ்தரசன்,-தேவனுட
சித்தன், அமை சிரசன், மாந்தர்களின்
துன்பத்தைப் போக்கவும், இன்பத்தைச் சேர்க்கவும்,
தோஷஞ் செய்பாதகன் வேஷமாய்த் தொங்கின்ற -மாட்சி

**சரணங்கள்**

1. எருசலை நகர் மருவுங் கல்வாரி
என்னப்பட்ட ஒரு மேடு;-அதில்
ஏசுக்கிறிஸ் தெனும் நேசமகத்துவன்
எங்களுக்காய்ப்படும் பாடு-மரக்
குருசில் ஏறியே சிரசில் முண்முடி
கொண்டதும் நொந்ததும் நீடு – அப்போ
கொற்றவன்[2] தன்முகம் சற்றேனுங் காட்டாத
குறையதும் ஒரு பீடு;
குருதி வடியவே, சுருதி முடியவே,
பருதி மறையவே, திரையுங் கிழியவே,
கொலைஞர் அவமதிக்க,-துஷ்டனாம்
அலகை[3] மனங்கொதிக்க, கசப்புடன்
கோனே, என்னை நீர் ஏனோ கைவிட்டீர்?
கொடுக்கிறேன் ஜீவனை, எடுத்திடு மென்றமும் – மாட்சி

---

1 பரிசுத்தத்தை 2 கடவுள் 3 பேய்

2. பூலோகத்தாரே, இம்மேலான காட்சியின்
புண்ணியத்தை வந்து பாரும்;–தேவ
புத்திரன் பக்கத்தில் குத்துண்டு பாய்கின்ற
புனித ரத்தமும் நீரும்–நமை
மேலோகஞ் சேர்க்கின்ற சாலக்கிருபையின்
விஸ்தார ஊற்றென்று சேரும்;–அதில்
விழுந்து ஆத்துமம் முழுகிப் பாவந் தீ
வினை அகன்றிட வாரும்;
சீலமற்ற மாந்தர் கோல முற்ற வேந்தர்
ஜீவனாதிபதி சாவினாலே நம்மைத்
தெய்வ லோகஞ் சேர்க்க–நித்தியமாய்
உய்யும் சுத்தோராக்கத்–தேவசுதன்
செல்வக் கிறிஸ்தந்தக் கல்வாரி மேட்டினில்
ஜீவன் துடிக்கத்தம் ஆவி விடுகின்ற – மாட்சி

## நெஞ்சமே கெத்சேமனேக்கு

**63.**

**கண்ணிகள்**

**நெஞ்சமே, கெத்சமேனக்கு நீ நடந்து வந்திடாயோ?**
சஞ்சலத்தால் நெஞ்சுருகித் தயங்குகின்றார் ஆண்டவனார்.

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி, அங்கலாய்த்து வாடுகின்றார்
தேற்றுவார் இங்காருமின்றித், தியங்குகின்றார் ஆண்டவனார்.

3. தேவ கோபத் தீச்சூளையில் சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய்த் தரையில் வீழ்ந்து அழுது ஜெபம் செய்கின்றாரே.

4. அப்பா பிதாவே, இப்பாத்ரம் அகலச்செய்யும் சித்தமானால்
எப்படியும் நின் சித்தம்போல் எனக்காகட்டும் என்கின்றாரே.

5. ரத்த வேர்வையாலே தேகம் மெத்த நனைந்திருக்குதே,
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்க்கிவ் வாதை ஏனோ?

6. வானத்திலிருந்தோர் தூதன் வந்தவரைப் பலப்படுத்தத்
தான் சஞ்சலத்தோடு முழந்தாள்நின்று வேண்டுகின்றார்.

7. தாங்கொணா நித்திரைகொண்டு தன் சீஷர்கள் உறங்கிவிழ
ஆங்கவர் தனித்திருந்து அங்கலாய்த்து வாடுகின்றார்.

*–ஐ.ஏ. சாமுவேல்*

## குருசினில் தொங்கியே

**64. (107) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

*பல்லவி*

**குருசினில் தொங்கியே குருதியும் வடிய,**
கொல்கதா மலைதனிலே—நம்
குருவேசு சுவாமி கொடுந் துயர், பாவி,
கொள்ளாய் கண் கொண்டு.

*சரணங்கள்*

1. சிரசினில் முண்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ!—தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்,
சேனைத்திரள் சூழ. – குருசினில்

2. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன்போல் தொங்க,—யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை. – குருசினில்

3. சந்திரசூரிய சகல வான் சேனைகள்
சகியாமல், நாணுதையோ!—தேவ
சுந்தர மைந்த னுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ? – குருசினில்

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே,—அவர்
தீட்டிய திட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூறோடுது, பார்; – குருசினில்

5. எருசலேம் மாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ?—நின்
எருசலையதிபன் இள மணவாளன்
எடுத்த கோல மிதோ? – குருசினில்

***– சு.ச. ஏசடியான்***

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

## தேவசுதன் உயிர்த்தார்

**65. (51 L.) சங்கராபரணம் ஆதிதாளம்**

**பல்லவி**

**தேவசுதனுயிர்த்தார்–மிருதினின்று**

**அனுபல்லவி**

பாவ, லோக, ரோக, மேக, மேக, மேசியாபரிதி. – தேவ

**சரணங்கள்**

1. நலவடு வைந்துமிலங்க, திருச்சிலுவை பதாகை துலங்க,
பொல்லா எமனுடமன மிலங்க. – தேவ

2. மனுடர் குலங்கள் துலங்க, பிதாவினுட கிருபை இலங்க,
துஷ்ட அலகை மனங்கலங்க – தேவ

3. பரபலியாய், நரபலியாய், திருபலியாய், ஒரு பலியாய்ப்
பரமும், வரமும், திறமும், மருவும்
படிஉயிர் விடுபரன் நரர்நிதி கதியென – தேவ

4. கிறிஸ்தவரே, தரித்திரரே, கிருபையிலே பெருகுவீரே,
கெடிசெய் கொடியன் கடியுமிடியும்
கெடவும் படவுமிதோ, அடியுமுடியுமில்லா – தேவ

***– பா. மிகாவேல்***

## எழுந்தருளும் ஏசு சுவாமி

**66. (111) பூபாளம் ஆதி தாளம்**

**பல்லவி**

**எழுந்தருளும் ஏசு சுவாமி**

**அனுபல்லவி**

விழுந்தலகை அழிந்தொழியத்
தொழுஞ் சுரரும்[1] வரல் ஆச்சே – எழுந்

---

1 தேவதூதரும்

**சரணங்கள்**

1. இஸ்திரீகள் கந்தவர்க்கம் எடுத் தேந்தி, பிரேதலங்கா
ரத்தின முறை நாடி, இதோ! ஆசரிக்க வந்தாரே. – எழுந்

2. மகதலா ஊர் மரியாள் மகிழ்ந்து தரிசித் தேற்ற,
அகமகிழ்ந்தப் போஸ்தலர்கள் அதிசயித்துப் போற்ற. – எழுந்

3. பாடுபட்டு மரித்தடக்கப் பட்ட தினம் மூன்றாச்சே,
ஏடுமுட்ட வரைந்த தெல்லாம் நிறைவேறி முடித்தாச்சே – எழுந்

4. முத்திரையும் காவல்களும் மூடிய கல்லதும் நீங்கி,
சத்துருக்கள் நடுநடுங்கித் தயங்கி மனங் கலங்க. – எழுந்

5. வேதாளம் நடுங்கி விழ, விண்ணோர் திரண்டு தொழ,
பாதாளம் இடிந்து விழப், பராபரனே, எழுந்தருளும். – எழுந்

6. விஸ்தார உலகமதில், மெய்யான திருச்சபையில்,
தோத்ர சங்கீர்த்தனம் எந்நாளும் உண்டாக. – எழுந்

***– வே. சாஸ்திரியார்***

## ஆமென் அல்லேலூயா

**67. (114) சங்கராபரணம் திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா;**
ஆமென், அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த தோத்திரா.

***அனுபல்லவி***

ஓம்[1] அனாதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே! – ஆமென்

1 திருவார்த்தை

***சரணங்கள்***

1. வெற்றிகொண் டார்ப்பரித்து–கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,–முறித்து;
பத்ராசனக்[1] கிறிஸ்து–மரித்து,
பாடுபட்டுத்தரித்து, முடித்தார். – ஆமென்

2. சாவின் கூர் ஒடிந்து,–மடிந்து,
தடுப்புச் சுவர் இடிந்து,–விழுந்து,
ஜீவனே விடிந்து,–தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது. – ஆமென்

3. வேதம் நிறைவேற்றி,–மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி,–பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,–கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார். – ஆமென்

***–வேதநாயகம் சாசுதிரியார்***

## எழுந்தார் இறைவன்

**68. பியாகு** **ஆதிதாளம்**

***பல்லவி***

**எழுந்தார் இறைவன்,–ஜெயமே ஜெயமெனவே**
எழுந்தார் இறைவன்.

***சரணங்கள்***

1. விழுந்தவரைக் கரையேற்றப்,–பாவத்
தழுந்து[2] மனுக்குலத்தை மாற்ற,–விண்ணுக்
கெழுந்து நாம் அவரையே போற்ற, – எழுந்தார்

2. செத்தவர் மீண்டுமே பிழைக்க,–உயர்
நித்திய ஜீவனை அளிக்கத்,–தேவ
பக்தர் யாவரும் களிக்க. – எழுந்தார்

---

1 தலைமை ஆசனம் 2 அமிழ்ந்து

3. கருதிய காரியம் வாய்க்கத்,–தேவ
சுருதி மொழிகளெல்லாம் காக்க,–நம்
இரு திறத்தாரையும் சேர்க்க. – எழுந்தார்

4. சாவின் பயங்கரத்தை ஒழிக்கக்,–கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க,–இப்
பூவின்மீது சபை செழிக்க. – எழுந்தார்

5. ஏதுந் தீவினை செய்யாத் தூயன்,–எப்
போதுமே நன்மைபுரி நேயன்,–தப்
பாது காத்திடும் நல்லாயன். – எழுந்தார்

***– சா. பரமானந்தம்***

## இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார்

**69. (113) சங்கராபரணம்** **திஸ்ர ஏகதாளம்**

**இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார், கம்பீரமாய்**
இகல்[1] அலகை[2] சாவும் வென்றதிக வீரமாய்,
மகிழ் கொண்டாடுவோம்,
மகிழ் கொண்டாடுவோம்.

2. போர்ச்சேவகர் சமாதி சூழ்ந்து காவலிருக்க,
புகழார்ந்தெழுந்தனர், தூதன் வந்து கல்மூடிப் பிரிக்க –மகிழ்

3. அதி காலையில் சீமோனொடு யோவானும் ஓடிட,
அக்கல்லறையினின் றேகினார் இவர் ஆய்ந்து தேடிட –மகிழ்

4. பரி சுத்தனை அழிவுகாண வொட்டீர், என்று முன்
பகர் வேதச்சொற்படி பேதமற்றெழுந்தார் திருச்சுதன் –மகிழ்

5. இவ்வண்ணமாய்ப் பரன் செயலை எண்ணி நாடுவோம்;
எல்லோருமே களி கூர்ந்தினிதுடன் சேர்ந்துபாடுவோம். –மகிழ்

***– யோ. பால்மர்***

---

1 பகை 2 பிசாசு

## மகிழ் மகிழ் மந்தையே

**70. (118) பூரிகல்யாணி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**மகிழ், மகிழ், மந்தையே, நீ; அல்லேலூயா! பரன்**
மைந்தன் பரமேறினார், அல்லேலூயா!

*அனுபல்லவி*

மகிழ், மகிழ்; பரன் மைந்தன் மகத்துவ பரமேறினார்;
திகழ் திருச்சேனை பாடும் அல்லேலூயா, இன்று. –மகிழ்

*சரணங்கள்*

1. வானமெல்லாம் நிரப்ப மனுஷ மைந்தன் எல்லா
வானங்கள் மேலேறினார், அல்லேலூயா!
தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவராயினார்,
ஞானமுடன் பாடுங்கள், அல்லேலூயா, இன்று –மகிழ்

2. ஏசுபரன் நமக்கு இறையானார்; இது
எல்லாவர்க்குஞ் சந்தோஷம், அல்லேலூயா!
வாசம் நாம் செய்யத் தந்தை வளவில்[1] இடம்பிடித்த
நேசமுன்னத நேசம், அல்லேலூயா, இன்று –மகிழ்

3. தந்தை வலப்பாகத்தில் சத்திய கிறிஸ்து எங்கள்
சத்துருக்கள் மேற்சிறந்தார், அல்லேலூயா!
சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெபிப்பார்;
மந்தையே, உந்தனுக்காய் அல்லேலூயா, இன்று –மகிழ்

4. மோட்ச சுதந்தரர் நாம் வானோருக்கும் ஒப்பர்,
முடிவில்லாப் பாக்கியர் நாம், அல்லேலூயா!
பாழ்ஜெகம் நிலையல்ல, பரம சஞ்சாரிகள் நாம்
சூட்சுமக் கர்த்தனுக்கே அல்லேலூயா, இன்று –மகிழ்

5. பூதலமந்தமட்டும் உங்களுடனே நித்தம்
புனிதன் இருப்பேனென்றார்; அல்லேலூயா!
ஏதெமக்குக் குறைச்சல் ஏசெங்களோடிருந்தால்,
யாதுமோசந்தொடரும்? அல்லேலூயா, இன்று –மகிழ்

*– ஞா. சாமுவேல்*

---

1 வீட்டில்

**வரவேணும் எனதரசே**

**71. (119) கரஹரப்பிரியா** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வர வேணும், என தரசே,**
மனுவேல், இஸரேல் சிரசே.

**அனுபல்லவி**

அருணோ தயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சரு வேசா! – வர

**சரணங்கள்**

1. வேதா, கருணா கரா, மெய்யான பரா பரா,
ஆதார நிராதரா[1], அன்பான சகோ தரா,
தாதாவும் தாய் சகலமும் நீயே;
நாதா, உன் தாபரம் நல்குவாயே. – வர

2. படியோர் பவ மோசனா, பரலோக சிம்மாசனா,
முடியா தருள் போசனா, முதன் மா மறை வாசனா,
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்,
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய், – வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே,
கானாவின் அதீதனே[2], கலிலேய வினோதனே,
ஞானாகரமே, நடு நிலை யோவா,
நண்பா, உனத நன்மையின் மகாதேவா! – வர

**– வே. சாஸ்திரியார்**

**சடுதி வாருமேன்**

**72. (121) மோகனம்** **ஆதிதாளம்**

**சாலேமின் ராசா, சங்கையின் ராசா, ஸ்வாமி, வாருமேன்,**
ஸ்வாமி, வாருமேன்,–இந்தத்
தாரணிமீதினில் ஆளுகை செய்திடச் சடுதி வாருமேன். –சா

---

1 ஆதாரமில்லாதவரே 2 மனதிற்கெட்டாதவரே

2. சீக்கிரம் வருவோமென்றுரைத்துப்போன செல்வக்குமாரனே;
−இந்தச்
சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற செய்திகேளீரோ? −சா

3. எட்டி எட்டி உம்மை அண்ணாந்துபார்த்துக் கண்பூத்துப்
போகுதே;−நீர்
சுட்டிக்காட்டிப்போன வாக்குத்தத்தம் நிறைவேறலாகுதே −சா

4. நங்கை[1] எருசலேம்பட்டணம் உம்மை நாடித்தேடுதே;−இந்த
நானிலத்திலுள்ள ஜீவப்பிராணிகள் தேடிவாடுதே. −சா

5. சாட்சியாகச் சுபவிசேஷம் தாரணிமேவுதே;−உந்தஞ்
சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே. −சா

***− அருளானந்தம்***

## என்றைக்குக் காண்பேனோ?

**73. (71) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**என்றைக்கு காண்பேனோ, என் ஏசு தேவா?**

***அனுபல்லவி***

குன்றாத தேவ குமாரனைத் தானே நான் − என்

***சரணங்கள்***

1. பரகதி திறந்து, பாரினில் பிறந்து,
நரர் வடிவாய், வந்த ராஜ உல்லசானை. − என்

2. ஐந்தப்பம் கொண்டு அநேகருக்குப் பகிர்ந்து,
சிந்தையில் உவந்த வ சீகர சினேகனை. − என்

3. மாசிலாத நாதன், மாமறை நூலன்,
ஏசுவின் திருமுக தரிசனம் நோக்கி நான். − என்

***− வே. சாஸ்திரியார்***

1 பெருமாட்டி

## கர்த்தரின் ராஜரீக நாள் எப்போது வரும்?

**74. (122) அசாவேரி** **திஸ்ர ஏகதாளம்**

*பல்லவி*

**எனது கர்த்தரின் ராஜரீக நாள்**
எப்போ வருகுமோ?
ஏங்கும் என் கலி நீங்க மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ?

*அனுபல்லவி*

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணும், என்றாரே,
வல்லமையோடு மகிமையாய்த்தோன்றி, வருவேன் என்றாரே.
–எனது

*சரணங்கள்*

1. தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே;
ஜெகத்தில் ஏசுவைப் பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே,
ஜீவனுள்ளோரும் அவருடன் மறு ரூபமாகவே;
ஜெகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்துபோகவே –எனது

2. தூதர் எக்காளத்தொனியில் என்னிடம் சேர்ப்பேன் என்றாரே!
சோதனை காலந்தனில் தப்பவுன்னைக் காப்பேன் என்றாரே;
பாதக மனுஜாதி வேதனை அடையும் என்றாரே;
பாவ மனுஷன் தோன்றி நாசமாய்ப் போவான் என்றாரே –எனது

3. ஜாதிகட்குக் கொடியாய் ஈசாயின் வேரன் றேறுவார்;
சகலரும் அவர் கொடியின் கீழ் வந்து பணிந்து சூழுவார்;
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்,
நித்தம் பிரபுக்களும் நியாயமாய்த் துரைத்தனம் செய்வார்.–எனது

4. எருசலேமி லிருந்து ஜீவ நதிகள் ஓடுமே,
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே;
வருஷமாயிரம் அளவும் பூமியில் பலன்கள் நீடுமே;
வானராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே. –எனது

4. சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே;
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே;
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே;
நித்திய ஜீவனைப் பெற என்றன் மனம் துடிக்குமே. – எனது

**வருவார் விழித்திருங்கள்**

**75. (126) சௌராஷ்டிரம் ஆதிதாம்**

***பல்லவி***

**வருவார் விழித்திருங்கள்;–இயேசுநாதர்**
வருவார் விழித்திருங்கள்.

***அனுபல்லவி***

பெரியவர், சிறியவர், பேதையர், மேதையர்[1]
சருவர்க்கும் நடுத்தீர்த்துத் தகு பலன் அளித்திட. – வரு

***சரணங்கள்***

1. பேரிகையால் அண்டபித்திகளும்[2] குலுங்க,
பேர் எக்காளத் தொனியால் பேய்க் கணங்கள் கலங்க,
தாரணியோர் மலங்க, தமைப் பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து சூழ்ந்திலங்க. – வரு

2. வானம் மடமடென்க, வையம் கிடுகிடென்க,
ஈனப் பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க,
மானம் இன்றி வாழ்ந்த மா பாதகர் அடங்க,
ஞான கானம் பாட நல்லோர் சபை தொடங்க. – வரு

3. விசுவாசிகள் தமை மெச்சிப் புகழுதற்கும்,
மேலா மோட்ச தலத்தோர் சால மகிழுதற்கும்,
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்,
விண்ணோர் குழாங்கள் சூழ, அண்ணல் கிறிஸ்தரசர் – வரு

***–தேவவரம்***

1 புலவர் 2 சுவர்கள்

**வையகந்தன்னை நடுத்தீர்க்க**

**76. (127) காபி ஆதி தாளம்**

***பல்லவி***

**வையகந்தனை நடுத்தீர்க்க இயேசு**
வல்லவர் வருகிறார் திருமறைக்கேற்க!

***அனுபல்லவி***

பொய்யுலகோர்களின் கண்களும் பார்க்க,
பொற்பதிதனிற் பரன் சேயரைச் சேர்க்க. – வைய

***சரணங்கள்***

1. வானங்கள் மடமடப்போ டொழிந்திடவே,
மாகிதலம்[1] அதிர்ச்சியாய்த் தானடுங்கிடவே;
பானுவுன் மதி யுடு அனைத்தும் மங்கிடவே,
பஞ்சபூதியங்களுந் தானழிந்திடவே. – வைய

2. முக்கிய தூதனெக்காளமே தொனிக்க,
முதல் மரித்தோரெல்லாந் தாமெழுந்திருக்க,
ஆக்கணமுயிருள்ளோர் மறு உருத்தரிக்க,
ஆண்டவர் வருகிறார், பக்தர்கள் களிக்க. – வைய

3. யாவரின் சிந்தை செய்கையும் வெளிப்படற்–கு
இரண்டு புத்தகங்களுந் திறந்தவரவர்க்குப்
பூவுலகினிலவர் நடந்து வந்ததற்குப்
புண்ணியனளவுடன் பலனளிப்பதற்கு. – வைய

4. அடைக்கலன் யேசுவை அறிந்தவர் நாமம்,
அழிந்திடாதவர்களின் வாழ்வது க்ஷேமம்;
படைத்திடுவாயிந்தக் கணமுனை, ஷாமம்
பற்றிடக் கூடுமே திடுக்கெனவே, நம். – வைய

***– ஞா. சாமுவேல்***

---

1 பூதலம்

**என்ன என் ஆனந்தம்!**

**77. சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!**
இயம்பலாகாதா,
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே.

**சரணங்கள்**

1. கூடுவோம், ஆடுவோம், பாடுவோம், நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்.

2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே;
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே.

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்-கு
அருளினதாலே,
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகரவேண்டியதே.

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே,
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் தோத்தரிப்போம்.

***– சத்தியநாதன்***

**உன் ஆண்டவரைத் தொழுதேத்து**

**78. (7) ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆத்துமமே, என் முழு உள்ளமே,–உன்**
ஆண்டவரைத் தொழு தேத்து;–இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த–உன்
ஆண்டவரைத் தொழு தேத்து.

***சரணங்கள்***

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள – ஆத்துமமே

2. தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன்தோன்றி ஒழியாத – ஆத்துமமே

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும், மேலான – ஆத்துமமே

4. வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும்[1] தயை செய் துயிர் தந்த – ஆத்துமமே

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – ஆத்துமமே

6. துதி மிகுந்தேறத் தோத்தரி தினமே,
இதயமே, உள்ளமே, என் மனமே – ஆத்துமமே

***– தைரியம் எழுத்தர்***

## ஏத்தித் துதிப்பேனே

**79. (8) ரீதிகௌளை** **சாபுதாளம்**

**பல்லவி**

**என்தன் பரம குரு செய்த உபகாரத்தை**
ஏத்தித் துதிப்பேன் நானே.

**அனுபல்லவி**

தந்தைப் பரனிடத்தா னந்தத் தொனி விளங்கச்
சத்தமாக நின்ற நித்திய வஸ்துவான – என்

1 சொல்லுதற்கரிய

**சரணங்கள்**

1. வானத் தமலர்[1] சேனை கிரகித்து முடியாத
மகிமைப்ர தாபம் மிகுத் தோன்,-அதி
ஞானத்துடன் உலகும், பரமும், அதில் நிறைந்த
யாவும் நெறியில் பகுத்தோன்,
மேன்மை பொருள தாகத் தேவ மகத்துவத்தின்
விளங்கும் அனந்த சுகத்தோன்,-அக்கி
யானத் திருள் அகலத் தான் இப்புவியில் உற்ற
அந்த முடி வில்லாத சுந்தர கிறிஸ்துநாத - என்

2. மிக்கப் பராபரனோ டொக்க ஒன்றித்திருந்த
முக்கியம் அனைத்தும் விடுத்து,-ஏவை
மக்கள் துயர் அகலத் துக்க உலகமதில்
மனுடாவதாரம் எடுத்து,
பக்ஷமாக அடிமைக் கோலம் கொண்டரும்
பாடு பட்டுயிர் கொடுத்து,-நரர்
அக்கிரமம் அனைத்தும் நிக்கிரகம் புரிந்து,
அந்தகாரம் அற வந்த யேசுகிறிஸ்து - என்

3. பாவத் திகில் அறுத்துச், சாபத்தையும் தொலைத்து,
பகைஞன் வினையை நீக்கிக்-கொடும்
ஆபத்திலும், அடர்ந்த கோபத்திலும் விழுந்த
அடிமைகளைக் கை தூக்கி,
தேவத்திரவியம் என்ற ஜீவ போஜனத்தைத்
திருவுள மாய் உண்டாக்கி,-நித்தம்
மாபத்தி ரமாய்ப் பிரதாபித் தனுக்ர கித்து,
வைத்துக் காத்த ஒரே நித்திய திரித்வமான - என்

***- வே. சாஸ்திரியார்***

**ஏசுவையே துதிசெய்**

**80. (56) எதுகுலகாம்போதி ஆதிதாளம்**

***பல்லவி***

**ஏசுவையே துதிசெய் நீ, மனமே,**
ஏசுவையே துதிசெய்,-கிறிஸ் தேசுவையே,

---

1 பரிசுத்தர்

*சரணங்கள்*

1. மாசணுகாத பராபர வஸ்து,
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து, – ஏசுவையே

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன். – ஏசுவையே

3. எண்ணின காரியம் யாவும் முகிக்க[1]
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க. – ஏசுவையே

***– வே. சாஸ்திரியார்***

**பரமண்டல சுவிசேடக நாமம்**

**81. (57) சூரியகாந்தம் ரூபக தாளம்**

*பல்லவி*

**துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,**
சுப மங்கள மிகு சம்பிரம சுக சோபன க்ஷேமம்!

*சரணங்கள்*

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ[2] தீபன்,
கதி உம்பர்கள் தொழும் இங்கித[3] கருணைப் பிர தாபன். – துதி

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி சுத்தனார். – துதி

3. திருவான் உல கரசாய் வளர் தேவ சொரூபனார்
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபமதானார். – துதி

4. அபிராம் முனி யிடமேவிய பதிலாள் உபகாரன்,
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற் கோர்குமாரன். – துதி

5. சாதா ரண வேதா கம சாஸ்த்ர சுவிசேஷன்,
கோதே புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன். – துதி

---

1 முடிக்க 2 மோட்ச 3 இனிய

6. விண் ணாடரும் மண் ணாடரும் மேவுந் திருப் பாதன்,
பண்ணோதுவர்[1] கண்ணாம் வளர் பரமண்டல நாதன். – துதி

***– வே. சாஸ்திரியார்***

## இவரே பெருமான்

**82. பியாகு** **ஆதிதாளம்**

**பல்லவி**

**இவரே பெருமான், மற்றப்**
பேர் அலவே பூமான்,–இவரே பெருமான்.

**சரணங்கள்**

1. கவலைக் கிடங்கொடுத் தறியார்,–வேறு
பவவினை யாதுமே தெரியார்,–இப்
புவனமீது நமக்குரியார். – இவரே

2. குருடர்களுக் குதவும் விழியாம்,–பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம்,–தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம் – இவரே

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி,–சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி,–எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி. – இவரே

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன்,–கொடு
மறம்விடு பவர்க்கருள் முத்தன்,–இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன். – இவரே

5. அலகைதனை[2] ஜெயித்த வீரன்,–பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன்,–விண்
ணுலகு வாழ் தேவ குமாரன். – இவரே

---

1 கவி பாடுவார் 2 பிசாசை

6. பொன்னுலகத் தனில்வாழ் யோகன்,–அருள்
துன்ன[1] உலகில் நன்மைத் தேகன்,–நம்பால்
தன்னை யளித்த ஓர் தியாகன். – இவரே

***– த. ஐயாத்துரை***

**சீர் ஏசுநாதனுக்கு ஜெயமங்களம்**

**83. (58) சுருட்டி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்; ஆதி**
திரி யேக நாதனுக்குச் சுபமங்களம்.

***அனுபல்லவி***

பாரேறு நீதனுக்கு, பரம பொற் பாதனுக்கு,
நேரேறு[2] போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு. – சீர்

***சரணங்கள்***

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அகிலப்[3] பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,[4]
ஓதும் அனு கூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு. – சீர்

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர் கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்
கானான் நல் தேயனுக்குக், கன்னிமரிசேயனுக்கு
கோனார் சகாயனுக்குக், கூறு பெத்த லேயனுக்கு. – சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்குச், சுத்தனுக்கு மங்களம்;
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்குச், சருவாதி காரனுக்கு,
பத்தர் உப காரனுக்குப், பரம குமாரனுக்கு. – சீர்

***– வே. சாஸ்திரியார்***

---

1 நிறைய
2 நன்னெறி
3 பூமி
4 குணாலயனாகிய கடவுளுக்கு

## பாதம் வந்தனமே

**84. (59) யமுனாகல்யாணி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**பாதம் வந்தனமே! – வரப்பிர**
சாதம் எந்தனமே.

***சரணங்கள்***

1. ஆதரவொடு வேதமே விடுத்
தாளும் அற்புதனே, திவ்ய சுதனே, கிருபைப்
பதனே, சுசிகர – பாதம்

2. பேசுதற்கரிதான துத்திய
பெருமைக் கோமானே,[1] மெய்ச் சீமானே, அருள்
கோனே, சுசிகர – பாதம்

3. ஞானமாய் நரர்க் கான ஜீவனை
நல்கிய சீலா, மனு வேலா, துரை பாலா, சுசிகர – பாதம்

4. தீவினை தொலைத் தாவியே மிகுத்
தேவும் இங்கிதமே,[2] என் ரஞ்சிதமே, நீ
சந்ததமே! சுசிகர. – பாதம்

5. தாசரை விசுவாசமாய்க் கையில்
தாங்குபகாரா, அதிகாரா, கன தீரா[3] சுசிகர – பாதம்

***– ஆ. அல்வின்***

## தோத்திரம் செய்வேனே

**85. (60) பைரவி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**தோத்திரம் செய்வேனே–ரட்சகனைத்**
தோத்திரம் செய்வேனே

---

1 அரசனே 2 பிரியமே 3 வீரனே

***அனுபல்லவி***

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை[1] யூதக் கோத்திரனை, என்றும் – தோத்திரம்

***சரணங்கள்***

1. அன்னை மரி சுதனை,–புல் மீது
அமிழ்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை. – தோத்திரம்

2. கந்தை பொதிந்தவனை,–வானோர்களும்
வந்தடி பணிபவனை,
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை
வான பரன் என்னும் ஞான குணவானை. – தோத்திரம்

3. செம்பொன் னுருவானைத்,–தேசிகர்கள்
தேடும் குருவானை,
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று, பைம் பொன் மலர் தூவி. – தோத்திரம்

***–தஞ்சை சத்தியநாதன்***

**அனந்த ஞான சொரூபா**

**86. (69) செஞ்சுருட்டி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**அனந்த ஞான சொரூபா, நமோ நம! அனந்த ஞான சொரூபா!**

***சரணங்கள்***

1. கனங்கொள் மகிமையின் கர்த்தாவே, காத்திர நேத்திர
பர்த்தாவே,–நரர்
காண வந்தாரே;–பரன் நரர் காண வந்தாரே.
கரு ணாகர தேவா, அனந்த ஞான சொரூபா! – அனந்த

---

1 அரசனை

2. அந்தப் பரமானந்த குணாலா,[1] ஆதத்தின் தீதற்ற மனுவேலா!– எமை
ஆண்டு கொண்டாரே,–பரன் எமை ஆண்டு கொண்டாரே,
ஞானாதிக்கத்[2] துரையே அனந்த ஞான சொரூபா! – அனந்த

3. ஆடுகளுக் குரிமைக் கோனே, ஆரண[3] காரணப் பெருமானே– நரர்க்
கன்பு கூர்ந்தாரே;–பரன் நரர்க் கன்பு கூர்ந்தாரே,
கிருபாசனத் தானே, அனந்த ஞான சொரூபா! – அனந்த

4. பந்தத் துயரந் தீர்த்தாரே, பாவத்தைச் சாபத்தை ஏற்றாரே;– எமைப்
பார்க்க வந்தாரே;–பரன் எமைப் பார்க்க வந்தாரே,
பரமாதிக்கத் தோரே, அனந்த ஞான சொரூபா! – அனந்த

***– வே. சாஸ்திரியார்***

**ஏசு நாயகனைத் துதிசெய்**

**87. (175) கமாஸ்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஏசு நாயகனைத் துதி செய், செய்,**
செய், செய், செய், ஏசு நாயகனை.

**சரணங்கள்**

1. பாசந்தனிலுழலும் பேய் மதியே, ஐயன்
பாதத்தை அன்றி உனக்கார் கதியே?
பூசும் மாங்கிஷ மொடு புவி நிதியே வெறும்
பொய், பொய், பொய், பொய், பொய். – ஏசு

2. ஆணுவ மெனும் பேயினை முடுக்கும், பர
மானந்த சுக கிரக[4] பதம் கொடுக்கும்,
வேணு அபீஷ்டங்கள்[5] வந்தடுக்கும், இது
மெய், மெய், மெய், மெய், மெய். – ஏசு

---

1 குணாலயமானவரே
2 ஞானத்தைச் சுதந்தரமாகவுடைய
3 வேதத்திற்கு
4 வீடு
5 அதிகம் விரும்பப்பட்டவை

3. தகை பெறும் விண்டலந் தனிலுதயம் செயும்
சசி[1], கதிர்,[2] மீன் முதல் பொருளெதையும்
வகையுடன் அருள் கடவுளை இருதயந்தனில்
வை, வை, வை, வை, வை. – ஏசு

4. நாதபூதபௌதீக ஸ்தாபகனை, வேத
நாவலர் மீதிலென்றும் ஞாபகனை
ஓதரிதான சர்வ வியாபகனைப் பணிந்து
உய், உய், உய், உய், உய். – ஏசு

***– தேவவரம்***

**உனக்கு நிகரானவர் யார்?**

**88. தோடி** **ஏகதாளம்**

***பல்லவி***

**உனக்கு நிகரானவர் யார்?–இந்த**
உலக முழுவதிலுமே.

***அனுபல்லவி***

தனக்கு தானே நிகராம் தாதை திருச் சுதனார்
மனுக்குலம் தன்னை மீட்க மானிடனாக வந்த. – உனக்கு

***சரணங்கள்***

1. தாய் மகளுக்காகச் சாவாளோ–கூடப் பிறந்த
தமையன் தம்பிக்காய் மாய்வானோ?
நேயன் நேயர்க்காய் சாவானோ? தனதுயிரை
நேர் விரோதிக்காய் ஈவானோ?
நீ இம் மண்ணுலகில் நீசர்கட்காக வந்து
காயும் மனமடவர்க்காக மரித்தாய் சுவாமி. – உனக்கு

2. கந்தை உரிந்தெறிந்தனை–நீதியின் ஆடை
கனக்க உடுத்துவித்தனை,
மந்தையில் சேர்த்து வைத்தனை, கடும்வினைகள்
மாற்றி எந்தனைக் காத்தனை;
கந்த மலர்ப் பாதனே, கனக ரத்ன மேருவே,
சிந்தை உவந்து வந்த தியாக ராசனே, சுவாமி. – உனக்கு

***– ல. பொன்னுசுவாமி***

---

1 சந்திரன் 2 சூரியன்

## ஆதியந்த மில்லானே

**89. (62) முகாரி** **ஆதிதாளம்**

**ஆதி அந்தம் இல்லானே, அளவில்லா வல்லபனே,**
அன்பே, மானுடவதாரத் திருவடிவே,
மாது பொருட்டாலே மாடடையுங் கொட்டிலிலே
வானத்திலே இருந்து வந்தீரோ, மன்னவனே?

2. அன்பே, என் ஆருயிரே, ஆனந்தப் பேரொளியே,
ஆர்க்குந் தயாபரமே, அற்புத கருணாகரமே,
இன்பப்ர வாகமே, இம்மானுவேல் அரசே,
ஏசுக் கிறிஸ்தையாவே, ரட்சியும் ஒரே கர்த்தாவே.

3. ஆராய்தல் இல்லாத ஆழக்ருபா நதியே,
ஆரும் அளவறுக்கக் கூடாத அற்புதமே,
வாராயோ? பாவிகளைப் பாராயோ, பார்த்திரங்கி
வானத்தில் நின்றெழுந்து வந்த பரிபூரணமே?

4. தேவ கிருபை பொழிய, ஜீவ நதி பெருக,
சீயோனின் மக்கள் எல்லாம் சேர்ந்ததிலே பருக,
ஏவை துயர் அகல, எவ்வுயிரும் பிழைக்க,
ஸ்தீரியின் வித்தில் வந்தீரோ, இஸ்ராவேலின் கோமானே?[1]

5. ஞான மலை அருவி நன்மைப்ர வாகம் வர,
நாடனைத்துந் தழைக்க, நல்லோர் குழாம்[2] செழிக்க
வானில் மகிமை பெற, மண் மீதில் ஆசி உற,
மாந்தரில் அன்புண்டாக வந்தீரோ மானுவேலே?

***– வே. சாஸ்திரியார்***

## தேவதே ஓர் ஏக வஸ்து

**90. (65) புன்னாகவராளி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**தேவதே, ஓர் ஏக வஸ்து, தேவ நாமனாம் கிறிஸ்து,**
தேவன் ஆதியே நமா!

---

1 அரசனே 2 கூட்டம்

***அனுபல்லவி***

ஜீவ ஆவி எகோவா, அல்பா ஒமேகா, நமஸ்து–ஒரு–தேவதே

***சரணங்கள்***

1. மூவராய் அரூபியாய் முன் ஊழி ஊழி காலம் வாழ்
பாவ தாழ்விலா வலா, பராபரா, தயாபரா!–ஒரு – தேவதே

2. ஆதியாய் அனாதியாய், அரூபியாய்ச் சொரூபியாய்,
நீதி ஞாய நேர்மையாய், நீடூழி ஆள் சுயாதிபா!–ஒரு – தேவதே

3. மாசில்லா நேச வாச மட்டில்லா நன்மையே,
தேசுலா[1] வனாதி ஏசு மா சிறந்த உண்மையே!–ஒரு – தேவதே

4. ஈறில்லா மெய்ஞ்ஞான ஜோதி, ஏகமாம், ஆனந்தமே,
மாறிலா தனுக்ரகஞ்செய வந்த ஆதியந்தமே!–ஒரு – தேவதே

***– வே. சாஸ்திரியார்***

## ஆயன் நான் தானே

**91. (55L) காம்போதி** **சாபு தாளம்**

**பல்லவி**

**ஆயன் நான் தானே மெய்யாய், நல்ல**
ஆயன் நான் தானே.

**சரணங்கள்**

1. ஆயன் நான் தானே நேயமிகுத்துச்ச
காயம்புரியும் மாதூய பிதாவினோர்
சேயனுந் துஷ்ட ஓநாயென்ற பொல்லாத
பேயை யழிக்கும் ஐங்காயனுமாகிய – ஆயன்

2. சீலகுண இஸ்ராவேலென்ற பத்தனைப்
போலமந்தைக் கனுகூலகமாய்த் தன்னண்டை
ஞாலத்தினாடுகள் கோலத்துடன் சேரக்
காலந் தப்பாதென்றும் வேலைசெய்யும் நல்ல – ஆயன்

---

1 ஒளி பரந்த

3. இட்டமுள்ள ஆட்டுக்குட்டிகளைக் கொல்லுந்
துட்ட நரிகளைக் கட்டுக்கண்ணிக்குள்ளே
பட்டுக் கொள்ளப்பண்ணி திட்டத்துடனின்று
வெட்டிப்போடும் மிகக் கெட்டிக்கரமுள்ள – ஆயன்

4. அன்புற்ற தாயவள் தன்பெற்ற பிள்ளையை
இன்புற்று நோக்கும்போல் துன்புற்ற ஆட்டினை
என்பெற்ற பிள்ளையாய் நண்புற்று நோக்கியே
பொன் பெற்ற கையினால் நான் பற்றித் தூக்குவேன் – ஆயன்

5. ஆட்டுமந்தைக்கூலிக் கேட்டுவன் போலநான்
காட்டோனாயைக்கண்டால் ஒட்டம் பிடிப்பேனோ?
மாட்டேனே மெய்யாக ஈட்டியினாற்குத்திப்
போட்டிடுவேன் அப்போ வேட்டைக்காரன் போலே – ஆயன்

6. சாவுறு மாட்டிற்காய் ஓவியமான வென்
சீவன்விடக் கொஞ்சமாவ தஞ்சுவேனோ?
ஆவலுடனல்லோ ஆவியைப் போக்குவேன்
பாவப் பசாசுகள் கூவிச் சாகும்படி – ஆயன்

7. காலை நேரத்திலும் மாலை நேரத்திலும்
சீலந் தப்பாமலும் காலந் தப்பாமலும்
நூலென்ற வேதத்தின் பாலென்றுந் தங்கியே
வேலைசெய்யும் நல்ல வேலைக்காரருள்ள – ஆயன்

***– ஞா. சாமுவேல்***

## ஜீவனே நித்திய ஜீவனே

**92. (68) வனஸ்பதி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஜீவனே, நித்திய ஜீவனே!**
ஜீவனே, பரமானந்த திவ்ய பாலகனாகவந்த
ஜீவனே, நித்திய ஜீவனே!

**அனுபல்லவி**

காவ தில் விளைந்த ஆதி ஏவை வினைதீரவந்த – ஜீவனே

**சரணங்கள்**

1. வல்லமைத் திரித்துவ தேவன், சொல்லரும் கிருபைப் பிரதாபன்
துல்லிபத்தின்[1] ஞான தீபன், நல்லவர்க்கருள் தயாபன்
அல்லிருள்[2] போதே–அடர்–புல்லதின் மீதே–வரல்
ஆன வான மோன ஞான நேசமே! – ஜீவனே

2. நித்திய கிருபைப் பிரகாசன், அத்தனார்க் கொரே குமரேசன்,
சத்திய வேதத்தின் வாசன், ஸ்துத்திய மிகுஞ் சருவேசன்,
சித்திரச் சுதனே,–திரி–தத்வ அற்புதனே,–பர
தேசு லாச நேச மேசியா வேந்தே! – ஜீவனே

3. வானத்தைப் படைத்த கர்த்தர், ஞானத்தை உடைத்த நித்தர்
மேன்மை தேவத்துவ பரிசுத்தர், கானத்துற்றெமைக்கரிசித்தர்,
மட்டளவற்றோர்,–மாட்டுக்–கொட்டிலுற்றோர்–இன்று
வாழ்த்தி, ஏற்றி, போற்றி, ஸ்தோத்திரஞ் சொல்வோம். – ஜீவனே

***– வே. சாஸ்திரியார்***

## சொல்லரும் மெய்ஞ்ஞானரே

**93. (70) உசேனி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்ரபுவே,**
சுரூபத் தரூபக் கோனாரே.–உரை

***அனுபல்லவி***

வல்லறஞ் சிறந்து மனுவானாரே,–உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே,–உரை – சொல்

---

1 புகழ்பெற்றவன் 2 சுத்தத்தின்

*சரணங்கள்*

1. மாடாயர்[1] தேடும் வஸ்துபகாரி,–மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,[2]
வையகம் புரப்பதற்கு வந்தாரே,–அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே,–உரை – சொல்லரும்

2. அச்சய[3] சவுந்தர அசரீரி,–அதி
உச்சித சுதந்தர அருள்வாரி,[4]
ஐயா வல்லாவே, மாதேவா,–ஓ!
துய்யா,[5] நல்லாவே, ஏகோவா,–உரை – சொல்லரும்

3. பாவ வினை யாவையுந் தீர்த்தாரே,–உயர்
தேவ குலமாய் எமைச் சேர்த்தாரே;
பக்கிஷத்தால்[6] முகம் பார்த்தாரே,–பெரும்
பொக்கிஷம் போல் எமைச் சேர்த்தாரே,–உரை – சொல்லரும்

***– வே. சாஸ்திரியார்***

## இயேசுவின் நாமமே திருநாமம்

**94. (73) ஹரிகாம்போதி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**இயேசுவின் நாமமே திருநாமம்,–முழு**
இருதயத்தால் தொழுவோம் நாமும்.

*சரணங்கள்*

1. காசினியில் அதனுக் கிணையில்லையே;–விசு
வாசித்த பேர்களுக்குக் குறையில்லையே. – இயேசு

2. இத்தரையில் மெத்தவதி சயநாமம்;–அதை
நித்தமுந் தொழுபவர்க்கு ஜெயநாமம். – இயேசு

---

1 மாட்டிடையர்
2 தயாளன்
3 அழிவில்லாத
4 அருட்கடலே
5 பரிசுத்தனே
6 பட்சத்தால்

3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்;-இது
சத்திய விதேய மனமொத்தநாமம். - இயேசு

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும்நாமம்;-நமை
அண்டிடும்பேய் பயந்தோடு தேவநாமம். - இயேசு

5. பட்சமுள்ள ரட்சைசெயு முபகாரி;-பெரும்
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி. - இயேசு

***-ச. ஞானமணி***

**யேசு நசரையின் அதிபதியே**

**95. (79) தோடி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**யேசு நசரையி னதிபதியே,-பவ நரர்பிணை யென வரும்.**

***அனுபல்லவி***

தேசுறு[1] பரதல[2] வாசப் பிரகாசனே
ஜீவனே, அமரர் பாவனே[3] மகத்துவ. - யேசு

***சரணங்கள்***

1. இந்த உலகு சுவை தந்து போராடுதே,
எனதுடலும் அதுவோ டிசைந்து சீராடுதே;
தந்தர அலகை சூழ நின்று வாதாடுதே;
சாமி, பாவியகம் நோயினில் வாடுதே. - யேசு

2. நின் சுய பெலனல்லாமல் என் பெலன் ஏது
நினைவு, செயல், வசனம், முழுதும் பொல்லாது;
தஞ்சம் உனை அடைந்தேன், தவற விடாது;
தாங்கி ஆள் கருணை ஓங்கி எப்போதும். - யேசு

3. கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்;
கேடு பாடுகள் யாவையும் தீரும்;
பொறுமை, நம்பிக்கை, அன்பு, போதவே தாரும்;
பொன்னு லோகமதில் என்னையே சேரும். - யேசு

***- சவரிமுத்து உபாத்தியாயர்***

1 ஒளிவீசும் 2 பரலோகம் 3 மகானுபாவனே

## நீயே நிலை

**96. (81) காம்போதி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**நீயே நிலை, உனதருள் புரிவாயே,–ஏசு**

**சரணங்கள்**

1. தூய அர்ச்சயர்கள் சூழ சீயோன் மாமலையில் ஆளும்
சுந்தரக் கிருபை வாரியே மைந்தர் கட்கனுசாரியே,
சோபன ஜீவி–மகிமைப்ர,–தாப அரூபி, சொரூபி,
ஜோதி, ஆதி நீதி ஓதி சுயவல்லமையில் நரர் திரு உரு என
வந்த – நீயே

2. நன்மை நிறை வாகரமே,[1] ஞானப் பிரபாகரமே,
வன்மைத் தர்ம சாகரமே, வான சுரர் சேகரமே,
மகிமை வந்தனமே,–அடியார்–துதிகள் தந்தனமே, கனமே,
வாச நெச ஏசு ராஜ மனுடர்களுடகதி தின அருச்சனை[2] துதி
– நீயே

3. வானும் இகமும் படைத்த, வலுசர்ப்பம் வினை துடைத்த,
ஞான நன்மைகள் உடைத்த, நரர்க்குக் கிருபை கிடைத்த,
நய கிருபாலி,–உலகின்–பவம் அறு மூலி, செங்கோலி,
நாடி, நீடி, தேடி, கூடி, நயம் அருள் அரசன் நீ, தயவுடன்
பரிசனி.[3] – நீயே

**– வே. சாஸ்திரியார்**

## உத்தமனே தோத்திரம்

**97. சாவேரி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**இத்தரைமீதினில் வித்தகனா[4] யெழுந்த**
உத்தமனே தோத்ரம்!

---

1 உறைவிடமே
2 பூசனை
3 சேர்த்துக்கொள்
4 ஞானியாகி

*அனுபல்லவி*

நித்தமென் னிருதயம் சுத்தமாக விளங்கச்
சித்தங்கொள்வாயென்மீது தத்தஞ்செய்தேனிப்போது. – இத்

*சரணங்கள்*

1. கண்ணே மணியே உன்னைக் கண்டபின் விடுவேனோ?
காதலாய்ப் பவத்தில்வீண் காலம்பின் னிடுவேனோ?
விண்ணே உனைமறந்து வேறொன்றைத் தொடுவேனோ?
வேஷ மார்க்கம் நடந்து வேதனைப் படுவேனோ? – இத்

2. அன்னையும் தந்தையும் ஆளும் பொருளும் நீயே;
ஆசாரியன் தீர்க்கன் ஆயனும் ஆடும் நீயே;
உன்னைப் பிரிந்தால் வேறு போக வழியிலையே;
உத்தம சத்திய முத்தே அதிபதியே! – இத்

3. தேனே, கனியே, என்றுந் திகட்டாத அமிர்தமே,
தீயனென் மனப்புண்கள் ஆற்றிடும் அவிழ்தமே,
வானே யிருந்துபுவி வந்தபெரும் பதமே,
மறவாது திருப்புகழ் வரைவேன் நிதம் நிதமே. – இத்

4. வானாசனத்திலிருந்து மனுக்குலத்தை நினைத்து
தானாமனமுவந்து தாரணியில்[1] பிறந்து,
கோனாய் விளாங்கா நிற்கும் குருவேசுநாதனை நான்
ஏனோ மறந்து இங்கே வீணே தவிப்பது காண். – இத்

5. செஞ்சோதிபோன்ற அவன் சீர்பாதத்தை எந்நாளும்
நெஞ்சாசனத்தில் வைத்து நீடூழிவாழ்தல் வேணும்,
பஞ்சாய்ப் பறந்திடுமென் பஞ்சபாதகம் யாவும்,
அஞ்சேன் அஞ்சேனே, தேவ தஞ்சம் கண்டதே போதும் – இத்

*– சா. பரமானந்தம்*

## தேவ மைந்தனுக்கு நித்திய கீர்த்தனம்

**98. (303) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

*பல்லவி*

**சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்குத்**
தோத்திரம், புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்!

1 பூலோகத்தில்

### *அனுபல்லவி*

அந்தரம்[1] புவியும் தந்து, சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்; நமை ஒன்றாய் கூட்டினார்; அருள் முடி
சூட்டினார்; கிருபையால் தேற்றினாரே, துதி – சுந்தரப்

### *சரணங்கள்*

1. பாதகப் பசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி[2] மீட்டாரே;
வேத பிதாவுக் குகந்த ஜாதியாகக் கூட்டவந்த
மேசியாவைப் பற்றும் விசு வாச வீட்டாரே,
கோதணுகா[3] நீதிபரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்;–பவத்துயர்
போடுங்கள்;–ஜெயத்தைக் கொண்
டாடுங்கள், துதிசொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும்
– சுந்தரப்

2. விண்ணிலுள்ள ஜோதிகளும், எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே,
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும் பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே,
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணியகுமாரனைக்கொண்
டாடிட,–அவர் பதம்
தேடிட,–வெகு திரள்
கூடி டத்துதிபுகழ் பாடிடப், பாடிட என்றும் – சுந்தரப்

3. சத்தியத் தரசர்களும் வித்தகப் பெரியார்களும்
சங்கத்தோர் களுங்கிருபை தங்கி வாழவே,
எத்திசை மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே,
உத்தம போதகர்களும் சத்யதிருச் சபைகளும்,
உயர்ந்து–வாழ, தீயோன்
பயந்து–தாழ, மிக
நயந்து கிறிஸ்துவுக்கு ஜெயந்தான், நயந்தான் என்றும் – சுந்தரப்

***– மரியான் உபதேசியார்***

---

1 வானம் 2 தேடி 3 குற்றமற்ற

## பார்க்க முனம் வருவேன்

**99. (72) உசேனி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**பார்க்க முனம் வருவேன்;−நெருக்கத்தில்**
பத்ரமாகத் கரிசித்த மேசியாவை.

***அனுபல்லவி***

ஆர்க்கும் இரங்கும் பராபரனின் சுதன்
அன்பின் மனுடவ தாரத்தைச் சிந்தித்து, − பார்

***சரணங்கள்***

1. நிச்சய சாதாரண சத்திய வேதனை,
நின்மல ஞான வரப்பிரசாதனை,
உச்சித வாக்ய சுவிசேட போதனை,
உன்னத ரட்சகர் கிறிஸ்தேசு நாதனை, − பார்

2. முற் பிதாக்கள் விரும்பிய தேட்டம்,
முன்னே ஆதிப் பிதாவின் சிரேட்டம்,
எப்பு விக்கும் எவர்க்கும் கொண்டாட்டம்,
எந்தையின் சுதன் மேல் என்றன் நாட்டம். − பார்

3. ஆசைக் கிறிஸ்துண்மை யான நல் ஆயனை,
ஆத்தும நாயகர் ஆன என் நேயனை,
பாச வலையில் கை தூக்கின நாயனை,
பக்ஷ மொடு காத்த முக்ய சகாயனை. − பார்

4. ஆச்சரிய மான நேசத்தை, பாசத்தை,
அன்பின் திருமுகத்தை, ஐந்து காயத்தை,
காட்சி தரும் இரு பாதத்தைப், பாவியைக்
கைதூக்கி விட்ட கரத்தை, உரித்தாக. − பார்

***− வே. சாஸ்திரியார்***

## திருநாமத் தோத்திரம்

**100. சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்**
இந்நிலத் தினும்பிறி திலையென் றேமறை
பன்னியேத்[1] தெடுப்பது, பாவ ஜீவருக்-கு
இன்னமு தாயதி யேசு நாமமே.

2. தெருளெலாந் தனதெனுந் தெய்வ மாமறைப்
பொருளெலாந் தனதெனப் பொலிந்தி லங்குவ-து
அருளெலாம், அன்பெலாம், அறனெலாம் வளர்-த்து
இருளெலாந் தொலைப்பதி யேசு நாமமே.

3. நித்திய ஜீவனும் நெறியும் போதமும்
சத்திய நிலையமும் தானென்றுள்ளது.
பத்தியில் பரவுவோர் பரம வீடுற
இத்தலத் திறத்ததி[2] யேசு நாமமே.

4. நன்னெறி புகுத்திடும், நவையி[3] னீக்கிடும்
இன்னிலை யகற்றிடும் இகல் செகுத்திடும்,
உன்னதத் துய்த்திடும், ஒருங்கு காத்திடும்,
எந்நலத்தையுந் தரும் யேசு நாமமே.

5. அன்பினுக் குருவநல் லறத்துக் காலயம்
மன்பதைக் கருண்மழை வழங்கு பைம்புயல்,
நின்பர மென்றினை வோர்க்கு நித்தியபேர்
இன்பசஞ் சீவிதம் யேசு நாமமே.

6. தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலால், கருதில் யாதுமோர்
அருமையும் பயனுமொன் றில்லை யாதலால்,
இருமையுந் துணையெனக் கியேசு நாமமே.

***– எ.ஆ. கிருஷ்ணன்***

---

1 பன்னி ஏத்து எடுப்பது – சொல்லிப் சொல்லிப் புகழ்வது
2 தங்கியது
3 குற்றம்

## அருள் சூடாமணியே

**101. சுருட்டி** **சாபு தாளம்**

**விண்மணி, பொன்மணி, வித்தக[1] மணியே,**
விட்புலம்[2] பூவிற்கு விழைத்திடுங் கனியே,
சொன்மணி மாலை தொகுத்த நல்மணியே,
சோதியாய் இங்கெழந் தருள் சூடா மணியே!

2. பன்மணி கோத்தொளிர் பாவலர் மணியே,
பாக்கியம் தருஞ்சீவ காருண்ய மணியே,
கண்மணி பொன்றினோர்[3] கண்மணி ய்ருளக்
கண்டனர் உரைகேட்டக் கண்ணருள் மணியே!

3. மங்கை சீயோன்மகள் பூண்ட வானணியே,
மாசிலார் உளமதில் ஒளிரும் அம்மணியே,
நங்கைமரிகன்னி யீன்ற கண்மணியே,
நரர்சுரர் போற்றிடு நாயக மணியே!

***– த. ஐயாத்துரை***

## ஏசு மகாராசனுக்கு ஜே

**102. புன்னாகவராளி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஏசு மகாராசனுக்கே இன்றும் என்றும் ஜே!**

**அனுபல்லவி**

மீசுரர்கள் போற்றும் எங்கள் ஈசனுக்கு ஜே, ஜே!

**சரணங்கள்**

1. சின்ன மறி யொன்றைச் சீடர் கொண்டு சேர்த்தனர்,
கன்னி மரி மகனைப் பாலர் காண ஏகினார்.

---

1 ஞான 2 வானம் 3 இழந்தோர்

2. மாவிலையும் மரக்கிளையும் தரித்துவந்துமே,
பாவியின் நேசருக்கவர் தாவி விரித்தார்.

3. காணரிய கூட்ட ஜனம் கண்டு களித்துச்
சேணமாக வஸ்திரம் விரித்துச் சேவித்தார்.

4. சோலைக்கிளி குயலினங்கள் சூழ்ந்து பாடியே,
மாலையிட்டால்போல் அவரை மகிழ்ந்து போற்றவே.

5. ஈந்து செடி குருத்துகளை எடுத்துக் கைகளில்
ஏந்தி நின்று ஆடிப்பாடிச் சென்ற சிறுவரே.

6. ஆண்டவருக் கேற்ற மறி நானும் ஆவேனே,
தாண்டவம் ஆடி அவரை ஈண்டு போற்றுவேன்.

***– ஜி.ச. வில்லியம்***

**பாவிக்கு நேசர்**

**103. ஹரிகாம்போதி** **ஏக தாளம்**

***பல்லவி***

**பாவிக்கு நேசராரே**
யேசு மானுவேலரே,–ஆ! நரர்

1. மாசற்ற தேவனார், மைந்தப் பிரதாபரே,
யேசுகிறிஸ்துநாதரே, ஆசை மானுவேலரே! – ஆ!

2. பிரயாசத்தோரே, பாரஞ் சுமந்தோரே,
கிருபைக் கண்ணுள்ளோரே, யேசு மானுவேலரே! – ஆ!

3. நெரித்த நாணல் முறியார், பொரித்த திரயவியார்,
நிர்ப்பந்தரைத் தள்ளாரே, யேசு மானுவேலரே! – ஆ!

4. கெட்ட குமாரர்க்குக் கிருபைப் பிதா வந்தார்,
இட்ட ப்ரசா தத்தாரே, யேசு மானுவேலரே! – ஆ!

***– வே. சாஸ்திரியார்***

## உணர்வாயே பாவி

**104. (101 L) தன்யாசி** — **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஓகோ யேசுவின் நேச மதுரமே,**
உணர்வாயே பாவி.

**சரணங்கள்**

1. ஓகோ நேசமதுயரமே நீளமோ டாழம்
வாகாய்ச் சுரர்நரர் வழுத்துதற் கரிதே. – ஓகோ

2. மாகொடும் பாவம தாலழும் பாவியே,
ஏக தயாபரர் ஸ்நேகமே யுணர்வான். – ஓகோ

3. பாதகந் தீர்க்க இப்பூதலந் தனிலே
நாதனின் அன்புபோலே யேதும் உளதோ? – ஓகோ

4. சத்ரு பூலோகந் தயாபர நேசம்
வைத்த பொருளிதை மறந்திடலாமோ? – ஓகோ

5. நீ பிறவாமுன்னே நின்னை நேசித்தே
சாப நிவர்த்திசெய் சற்குரு நோக்கு. – ஓகோ

6. நின்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்த
உன்னத நேசம் ஒப்புள தாமோ? – ஓகோ

7. தீவினை தீர்க்கும் தூய்மை யுண்டாக்கும்
சாவினைப் போக்கும் சற்குரு நேசம். – ஓகோ

8. இக்கணம் யேசுவையே விசுவாசி
அக்கினி மரணம்போல் அன்பதுபலமாய். – ஓகோ

***– ஞா. சாமுவேல்***

## குருவேசுநாதர் பாதங் கும்பிடுகிறேன்

**105. (354) சக்ரவாகம் ஏகதாளம்**

***பல்லவி***

**கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்;–எங்கள்**
குருவேசுநாதர் பதங் கும்பிடுகிறேன்.

***சரணங்கள்***

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்;–எனை
ஆண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்;
நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன்;–பவ
நாசனைக் க்ருபாசனைக் கும்பிடுகிறேன்;
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்;–நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;
உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்;–தொனித்
தோசன்னா வோசன்னாவென்று கும்பிடுகிறேன். – கும்பிடு

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன்;–ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்
திருவுருவானவனைக் கும்பிடுகிறேன்;–தவிது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்;
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்;–யூதர்
குருகுல தேவதையைக் கும்பிடுகிறேன்;
அருமை ரட்சகனைக் கும்பிடுகிறேன்;–என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன். – கும்பிடு

***–வே. சாஸ்திரியார்***

## மேசியா நந்தனே

**106. (40) ஹரிகாம்போதி ஆதி தாளம்**

***பல்லவி***

**ராச ராச பிதா மைந்த தேசுலாவுசதா நந்த**
யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே!

***அனுபல்லவி***

ஜெகதீசு ரேசுரன் சுக நேச மீசுரன் மக – ராச

***சரணங்கள்***

1. மாசிலா மணியே! மந்த்ர ஆசிலா அணியே! சுந்த்ர
நேசமே பணியே, தந்திர மோசமே தணியே;
நிறைவான காந்தனே! இறையான சாந்தனே! மறை – ராச

2. ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே, முந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே;
பத ஆமனாமனா! சுதனாமனாமனா! சித[1] – ராச

3. மேன்மையா சனனே, நன்மை மேவுபோசனனே, தொன்மை
பான்மை வாசனனே, புன்மை பாவ மோசனனே,
கிருபா கரா நரா! சருவேசுரா, பரா ஸிரீ – ராச

4. வீடுதேடவுமே, தந்தை நாடுகூடவுமே, மைந்தர்
கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே,
நரவேட மேவினான்; சுரராடு கோவினான்;[2] பர – ராச

***– வே. சாஸ்திரியார்***

**உயிர்த்த நாதருக்கே மங்களம்**

**107. இராகம்: சங்கராபரணம்** **சாபு தாளம்**

**பல்லவி**

**சுபஜெய மங்களமே–நித்திய சுபஜெய மங்களமே,**
சுகமே–தரவே–புவிமீ–துயிர்த்தசுதனேசு நாதருக்கே.

**சரணங்கள்**

1. தீர்க்க ருரைத்தனரே,–இன்று
ஜேசு உயிர்த்தனரே;
ஜெகதீஸ்–பரனார்–சுதனார்–கிறிஸ்து
ஜெயமா யெழுந்தவர்க்கே – சுப

---

1 ஞானம் 2 மோட்சத்தான்

2. தூதர்-சங்க முழங்க,-வானம்
ஜோதியினு லிலங்கத்
துரிதாய்ப்-பரனார்-களிகூர்ந்-திடவே
தொனியா யெழுந்தவர்க்கே. - சுப

3. அங்கங் குளிர்ந்திடவே,-உல
கெங்கும் மகிழ்ந்திடவே,
அடியா-ருடசா-வுடகூ-ரொடித்து
அகில மெழுந்தவர்க்கே. - சுப

4. காலையிலே எழுந்து-நிதம்
கர்த்தனையே நினைத்துக்,
கரமே-குவித்துத்-துதிபா-டிடவே
காலை யிலெழுந்தவர்க்கே. - சுப

5. ஆனந்தம் பாடிடவும்,-பரன்
அன்பைக் கொண்டாடிடவும்,
அசையா-நிலையோ-டெழுந்து-தொழவே
அருள் கூர்ந்திடு பவர்க்கே. - சுபா

6. எக்காளமே தொனிக்க-பக்தர்
யாவருமே யெழும்ப,
இனிதாய்-அரசா-ளவுமேயுலகில்
எழு மிம்மானு வேலர்க்கே. - சுப

***- அ.ஜ. பிச்சைமுத்து***

**எத்தனை நாவால் துதிப்பேன்?**

**108. அமிர்தகல்யாணி** **சாபு தாளம்**

***பல்லவி***

**எத்தனை நாவால் துதிப்பேன்-எந்தன்**
கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து.

***அனுபல்லவி***

நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் உருகும்,
நின்னைச் சொல் மாலையால் சூட்டி மகிழும். – எத்தனை

***சரணங்கள்***

1. நம்பினோரல்லோ அறிவார்–எந்தன்
தம்பிரானே உந்தன் கம்பீர குணம்,
அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்
சம்பூரண சவரட்சணை செல்வம். – எத்தனை

2. பிரார்த்தனை கேட்கும் பெம்மானே–இந்தப்
பேதை பலவீனம் பாராதருள் கோனே!
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
தாவிப் பிடித்துக் கவலை தீர்த்தோனே! – எத்தனை

3. துணிவாய் என் நெஞ்சே தீவிரமாய்–மிகத்
தொழுது ஆண்டவன் செயல் நினைந்து,
எண்ணில் அடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையில் வீரமாய்ச் செல்லு. – எத்தனை

***– சவரிராயன் ஏசுதாசன்***

**எல்லோர்க்கும் இரட்சகர்**

**109. (351) கேதாரம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஏசு கிறிஸ்து நாதர்**
எல்லாருக்கும் ரட்சகர்.

**சரணங்கள்**

1. மாசில்லாத மெய்த்தேவன்
மானிடரூ புடையார்;
யேசுகிறிஸ்துவென்ற
இனிய நாமமுடையார்; – ஏசு

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதகள்மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்கமுள்ளோர்; – ஏசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்!
பாவிமேல் கோபம் வையார்,
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலம் ஆக நிற்பார்; – ஏசு

4. தன்னுயிர் தன்னை விட்டுச்
சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க
மரித்தே உயிர்த்த கர்த்தர்; – ஏசு

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே ரட்சகர். – ஏசு

***– பாக்கியநாதன் தாவீது***

## தேவாசனப்பதி

**110. காம்போதி** **ஆதி தாளம்**

**தேவாசனப்பதியும், சேனைத் தூதரைவிட்டுத்**
தேவர் குலமாய் வாரதாரையா? இவர்
தேவ னுரைப்படி,
பாவ வினைப்படி,
ஏவை மனப்படி,
ஆவல் மிகப்படி;
வணங்குங் ஜெகஜோதிப் பொருள் தானையா. –இவர்

2. முன்னணி பின்னணியி லோசன்னா! ஓசன்னா வென
ஓர் மறியின்மீதில் வாரதாரையா? இவர்
உத்தம நேசனாம்,
சத்திய போசனாம்,
பக்தரின் வாசனாம்;
நித்திய ஈசனாம்;
உன்னதத்தின் மேன்மைத் தெய்வந் தானையா. –இவர்

3. பாலர் துதித்திடவும் ஞாலம் மதித்திடவும்
பாவலருடன் வாரதாரையா? இவர்
பசியற்றிருந்தவர்,
பொசிப்பற்றிருந்தவர்,
வசை பெற்றிருந்தவர்,
அசைவற்றிருந்தவர்;
பாவ விமோசன ராசன் தானையா. –இவர்

4. சீயோன் குமாரியிடம் நேயமதாகத் தேடிச்
சிங்காரமாய் வாருவதாரையா? இவர்
சீருற்றதிபனாம்,
பேர் பெற்றிறைவனாம்,
பாருற்றதிபனாம்,
வேருற்றெழுந்தனாம்;
சீவ வழி சொல்வரிவர் தானையா. –இவர்

5. எருசலேம் வீதிவழி பெரிய திரளுடனே
குருத்தோலை வீச வாரதாரையா? இவர்
அரிவை பவமற,
பெருமை நிதந்தர,
கிருபை துரந்தர,
அருமை நிரந்தர,
ஏசு கிறிஸ்திறைவர் தானையா. –இவர்

6. வழியில் மரக் கிளைகள் வரிசையதாய்ப் பரப்ப
வஸ்திரமீதில் வாருவதாரையா? இவர்
வல்லவராங் குரு,
சொல் தவறாக் குரு,
நல்லவராங் குரு,
துல்லிய சற் குரு,
வரமிகுந்த சற்குரு தானையா. –இவர்

***– மு. தேவசகாயம்***

### பரிசுத்தாவி துதி

### எமை ஆளும் பரிசுத் தரூபியே

**111. (131) சேனாவதி** **ரூபக தாளம்**

*பல்லவி*

**அரூபியே, அரூப சொரூபியே,–எமை**
ஆளும் பரிசுத்தரூபியே, அரூப சொரூபியே.

*அனுபல்லவி*

திருவிணா[1] டுறை நிதான கருணையா திபதி மோன[2]
சுரநரர் வணங்கும் வான ஒரு பரா பர மெய்ஞ்ஞான – அரு

*சரணங்கள்*

1. ஆதி காரண அரூபியே,–அசரீரி சத்ய
நீதி ஆரண[3] சொரூபியே,
வேத வாசக சமுத்ர, ஓதும் வாய்மைகள் சுமுத்ர,[4]
தீதிலா துயர் விசித்ர, ஜாதி யாருட பவித்ர – அரூ

2. சீரு லாவிய தெய்வீகமே,–திரி முதல் ஒரு பொருள்
ஏரு[5] லாவிய சிநேகமே,
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியா,[6] அடியர் சாற்றும்
நேரமே புகழை ஏற்றும்; வீரமாய் மனதை ஆற்றும் – அரூ

3. பக்தர் பாதகம் அடாமலே,–பசா சுலகுடல்
சத்ரு சோதனை படாமலே,
அத்தனார் தேவ கோபம், நித்ய வேதனைகள் சாபம்,
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீடுன் ப்ரதாபம் – அரூ

***– வே. சாஸ்திரியார்***

### உந்தன் ஆவியே வந்து சேரவே

**112. (129) நாதநாமக்கிரியை** **ரூபக தாளம்**

*பல்லவி*

**உந்தன் ஆவியே, சுவாமி, என்றன் மீதினில்**
வந்து சேரவே, அருள் தந்து காவுமே.

---

1 மோட்சலோகம்
2 மௌன
3 வேதம்
4 சரியளவான
5 அழகு
6 குருவே

***சரணங்கள்***

1. முந்துமானிடர் வினை தந்த சாபமும்
நிந்தை யாவுமே பட வந்த ஏசுவே. - உந்தன்

2. மதி மயக்குதே; பேயும் மன தியக்குதே,[1]
அதிகமாய்க் கடல் அலை அறைந்து பாயுதே; - உந்தன்

3. சத்ய ஆவியைச் சீடர்க் கித்தரை விட,
சித்தமாய் உரை புரி நித்ய தேவனே. - உந்தன்

4. பெந்தே கோஸ் தெனும் மா சிறந்த நாளிலே
விந்தை ஆவியின் அருள் தந்த நேர்மையே, - உந்தன்

5. தாசன் யானுமே புகழ் வீசும் வாய்மையே[2]
வாச மாகவே அருள், நேச தேவனே. - உந்தன்

***– சவரிமுத்து உபாத்தியார்***

## இந்த வேளையினில் வந்தருளும்

**113. (130) நாதநாமக்கிரியை** **சாபு தாளம்**

**சரணங்கள்**

**இந்த வேளையினில் வந்தருளும், தேவ ஆவியே!–இப்போ**
எங்கள் மீதிறங்கித், தங்கி வரம் தாரும், ஆவியே.

2. அந்தணர் தம்மிடம் விந்தை செய்த சத்ய ஆவியே!–முன்
ஆச்சரியமாகக் காட்சி தந்த ஞான ஆவியே.

3. ஆர்ச்சியர்க் கந்நாளில் அற்புதம் செய்தாண்ட ஆவியே!–இந்த
ஆதிரை மீதினில் தீதகற்றியாளும், ஆவியே.

4. ஆருமறியாத ஆறுதல் செய்திடும் ஆவியே!–இங்கு
அஞ்ஞானம் அகற்றி, மெய்ஞ்ஞானம் புகட்டும், ஆவியே

---

1 அசைக்குதே 2 வலிமை

5. சித்தம் இரங்காயோ, நித்தியராகிய ஆவியே!–அருள்
ஜீவ வழி காட்டிப் பாவம் அகற்றிடும், ஆவியே.

6. வாரும், வாரும்; கண் பாரும், பரிசுத்த ஆவியே!–இன்று
வந்து சபை மீதில் சிந்தை வைத்தருளும், ஆவியே.

7. தேற்றரவாளன் என்றேற்றிப் புகழ்ந்திடும் ஆவியே!–நிதம்
சித்தம் வைத்தென் மீதில் முற்றிலும் காத்திடும், ஆவியே.

*–ச. யோசேப்பு*

**சுத்தபரன் சுத்த ஆவியே**

**114. (67 L) ஆனந்தபைரவி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**சுத்தபரன் சுத்த ஆவியே நின்மாமகிமை**
சொல்லவரம் எனக்கீவையே.

**அனுபல்லவி**

மெத்தவும் அசுத்தன் நானே
மேவினேன் நின் பாதந்தானே,
உத்தமனம் கெஞ்சுவேனே,
உன்னையல்லா லழிவேனே. – சுத்த

**சரணங்கள்**

1. அடியேன் புத்திபலத்தினால் என் ஆத்மமீட்பர்
அருளைப் பெறவும் போகுமோ?
மிடியுறும் ஏழைச்சிஷ்டி தான் மனந்திரும்பி
விசுவாசங் கொள்ளலாகுமோ?

கடினம் என் மனங்கல்லு,
கத்தா ஓர் வார்த்தை சொல்லு,
திடசீவன் வரக்கொல்லு,
சேவடி நீ சேர்த்துக்கொள்ளு – சுத்த

2. சுவிசேடத்தின் தொனியினால் எனையழைக்கும்
சுகிர்தந்தனை யானறிந்தேன்,
உவந்தளிக்கும் வரங்களால் என் இதயத்துக்
கொளிதருவதை யுணர்ந்தேன்.

அவமாகா மெய்விஸ்வாசம்,
அதனால் தூய்மை நன்னேசம்,
கவர்ந்துனைத் தொழும்பாசம்,
கனிந்தளித்தாய் நல்வாசம். – சுத்த

3. பூமியெங்கும் உள்ள சபையை வரவழைத்துப்
பொற்புற[1] விணைத்துச் சேர்த்துச்
சாமியொளிதந்து தூய்மை அளித்துயேசு
தற்பரனில் நித்தங்காத்து

க்ஷேமகரஞ்செய்யும் நேயா,
தின்மையைப் பகைக்குந் தூயா,
பாமரர்க்கு நற்சகாயா,
பார்த்திபா என்றென்றும் மாயா. – சுத்த

4. நித்தமும் பவம் பொறுக்கிறாய் திருச்சபையில்
நீதிதீர்வை நாளிலேயன்பாய்ச்
செத்த விசுவாசிகளையும் என்னையும் உடல்
ஜீவனோடெழுப்புவாய் இன்பாய்.

நித்திய ஜீவன் தருவாய்,
நின்மலன் யேசுவை மெய்யாய்ப்
பத்தியாகவே மனம்வாய்
பற்றினோர்க்கு மா தயவாய். – சுத்த

***– ஞா. சாமுவேல்***

1 மாட்சியுள்ள ஐக்யம்

## உமதாவி தரவேணுமே

**115. மோகனம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**சமயமிது நல்லசமயம், உமதாவி**
தரவேணுமே சாமி.

***அனுபல்லவி***

அமையுஞ் சத்துவங்குன்றி,
அருள்ஞானத் துயிரின்றி,
அமர்ந்து சேர்ந்தெழும்பா துறங்கிடும்
அடியன்மீ தனல்மூட்டி யுயிர்தர, - சமய

1. யேசுகிறிஸ்துவின்மேல் நேசம் பக்தியும்விசு
வாசம் நம்பிக்கை சமாதானம் மங்கிடலாச்சே;
வீசுங்கிரணத்தாவி நேசச்சுவாலைமூட்டி
மிஞ்சுஞ்சீவ நற்கனிகளீங்குமைக்
கெஞ்சுதாசனின் மனதிலோங்கிட, - சமய

2. ஜெயமோதவமோ தேவதியானமோ வாஞ்சையோ
செய்யுஞ்சுயமுயற்சி தொய்யுங் காரணமேனோ?
தவனம்[1] ஞானாமுதின்மேல் சற்றுமில்லாததேனோ?
தந்தையேயுயிர் தந்தென்னைத்தாங்கிட
உந்தயையினுற் சாகநல்லாவியை, - சமய

3. ஓதும் பிரசங்கமும் ஓசைக்கைத்தாளம்போல
ஒலிக்குதல்லாமல் பலன் பலிக்குதில்லை, தாக்குள்
ஏதுமற்றிடும் பள்ளத்தெலும்பு உயிர்த்தெழும்ப
எசேக்கியேலுரை வாக்கிலுயிரருள்
போக்கியே செய்த ஆவியே இங்ஙனம். - சமய

4. பெந்தெகோஸ்தினில் கூடிவந்த சீடரையன்று
உந்தனாவியினைப் பொழிந்தபிஷேகஞ்செய்த
விந்தைபோலெமதிடம் வந்தெம் வேலைகள்முற்றும்
வேதனே உமதருளி னுயிர்பெறப்
பூதலர் உமைப் போற்றநின் சேயராய். - சமய

***–வே. மாசிலாமணி***

---

1 ஆசை

## ஆவியை மழைபோலே யூற்றும்

**116. (137) அமிர்தகல்யாணி** **சாபு தாளம்**

*பல்லவி*

**ஆவியை மழைபோலே யூற்றும்,–பல**
சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.

*அனுபல்லவி*

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும். –ஆவியை

**சரணங்கள்**

1. அன்பினால் ஜீவனை விட்டீர்,–ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும். –ஆவியை

2. சிதறுண்டலைகிற ஆட்டைப்–பின்னும்
தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,
பதறாதே நான்தான் உன் நல்மேய்ப்பன் யேசு
பாக்கியரென்னும் நல் வாக்கையருளும். –ஆவியை

3. காத்திருந்த பல பேரும்–மனங்
கடினங்கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்தலோகம் வரத் தூயாவி ஊற்றும். –ஆவியை

4. தோத்திரக் கீதங்கள் பாடி–எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாரி ஊற்றும். –ஆவியை

***– அருளானந்தம்***

## ஆவியை அருளுமே

**117. (136) காபி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஆவியை அருளுமே, சுவாமீ,–எனக்**
காயுயிர் கொடுத்த வானத்தினரசே!

***சரணங்கள்***

1. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்,
பரம சந்தோஷம், நீடிய சாந்தம்,
தேவ சமாதானம், நற்குணம், தயவு,
திட விசுவாசம் சிறிதெனுமில்லை. – ஆவியை

2. தீபத்துக் கெண்ணையைச் சீக்கிரம் ஊற்றும்;
திரி யவியாமலே தீண்டியே யேற்றும்,
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்,
பரிசுத்தவரந் தந்தென் குறைகளைத் தீரும். – ஆவியை

3. நற்கனி தேடிவருங் காலங்க ளல்லவோ?
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ?
முற்கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ?
முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நில மல்லவோ? – ஆவியை

***– அருளானந்தம்***

## நரர்மீதிரங்கி அருள்

**118. (138) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஐயனே, நரர்மீதிரங்கி அருள், ஐயனே,**

**சரணங்கள்**

1. வையங் கெடுக்கப்பட்டு நொய்யு தனாதி! உன்தன்
துய்ய ஆவியை விடுத்துய்யக் கிருபை புரியும். – ஐய

2. ஆதத்தின் மக்கள் எல்லாம் போதத் தவிக்கிறார்கள்;
வேதத் துரைப் பிரகாரம் நீதத்துன் ஆவி தந்தாள். – ஐய

3. மைந்தர் மடிந்து நர கந்தனில் வீழாதுன்றன்
மைந்தனின் ஆவியைத் தந் தெந்தவிதமும் காப்பாய். – ஐய

4. முந்து மனுடருக்குத் தந்த வாக்குத்தத்தத்துன்
சிந்தை மகிழ்ந்தவர் நிர்ப் பந்தம் தவிர்க்கவேண்டும். – ஐய

5. ஆகாதவன் மடிந்து சாகா துயர் பிழைக்க,
வாகாய் அருள் செயும் திரி யேகா; உமக்குத் தோத்ரம். – ஐய

***– வே. சாஸ்திரியார்***

**வரவேணும் பரனாவியே**

**119. கரஹரப்பிரியை** **ஆதி தாளம்**

***பல்லவி***

**வரவேணும் பரனாவியே,**
இரங்குஞ் சுடராய் மேவியே.

***அனுபல்லவி***

மருளாம் பாவம் மருவிய எனக்கு
வானாக்கினியால் ஞான தீட்சை தர, – வர

**சரணங்கள்**

1. பலமான எப்பாவமும் பாழாக்கும் மாநோய்களும்
வலியகொடும் ரோகமும் மாம்சசிந்தை ஒடுமே;
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்,
எலியாவின் ஜெபத்துக் கிரங்கிய வண்ணம். – வர

2. என்றன் பவம்யாவையும் எரிக்கும்வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்;
என்றன் செயலால் யாதொன்றும் முடியா
தின்றே வானாக் கினி வரவேணும். – வர

3. குடிகொள் எந்தப்பாவமும் அடியோடே தொலைந்திடும்,
தடுத்தாட்கொள்ளும் தோஷமும் சாம்பலாகச் செய்திடும்;
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல்போல்
அடியேன் ஏசுவுக் கனுதினம்பணி செய்ய, – வர

***– வே. சந்தியாகு***

### சுத்திகரியாயோ

**120. (134) செஞ்சுருட்டி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**சுத்திகரியாயோ, துர்க்குணம் நீங்க என்னைச்**
சுத்திகரியாயோ,

**சரணங்கள்**

1. மத்தியஸ்தர் பிரசாதனே, பரிசுத்தாவி எனும் நாதனே,
பக்தி தரும் போதனே, உயர் முக்திதரும் நீதனே! – சுத்

2. பெந்தெகொஸ்து முருகிலே,[1] அங்கு வந்தே சீஷரருகிலே,
உந்திய[2] கருணை வாரியே, அருள் தந்திடு நல் உதாரியே! – சுத்

3. அந்தகாரம் விலகவே, ஒளி சந்ததமும் இலங்கவே,
சந்தரப்பிரகாசனே, தேவமைந்தர் போற்றும் நல்நேசனே! – சுத்

4. சத்திய நெறியில் ஏறவே, நற்பத்தியில் தினம் தேறவே,
புத்தியைத்தரும் ஆவியே, இதயத்தை உன்னருள் மேவியே.
– சுத்

5. தேவ நல் வர மானவா, எங்கு மேவு மூன்றில் ஒன்றானவா,
பாவ மாசினைப் போக்குவாய், நித்திய சாபம் யாவையும்
நீக்குவாய். – சுத்

***– யோ. பால்மர்***

### தீய மனதை மாற்ற வாரும்

**121. (135) மணிரங்கு** **ஏசு தாளம்**

***பல்லவி***

**தீய மனதை மாற்ற வாரும், தூய ஆவியே,–கன**
நேய ஆவியே.

---

1 பண்டிகையில் 2 உயர்ந்த

*சரணங்கள்*

1. மாய பாசத் தழுந்தி வாடி மாளுஞ் சாவிதால்,–மிக மாயும்
பாவி நான். – தீய

2. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே,–மருள்
தீர்க்கும், தஞ்சமே. – தீய

3. பரத்தை நோக்க மனம் அற்றேனே, பதடிதான்,[1] ஐயா.–ஒரு
பாவி நான் ஐயா. – தீய

5. புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே,–அதைப்
புகழ்ந்து காக்கவே. – தீய

5. ஏக்கத்தோடென் மீட்பைத் தேடி, இரந்து கெஞ்சவே,–தினம்
இதயம் அஞ்சவே. – தீய

6. கிறிஸ்து மீது நாட்டங் கொண்டு கீதம் பாடவே,–அவர்
கிருபை தேடவே. – தீய

7. தேவ வசனப் பாலின்மீது தேட்டம் தோன்றவே,–மிகு
தெளிவு வேண்டவே. – தீய

8. ஜெபத்தின் தாகம் அகத்தில் ஊற்றி ஜெபித்துப் போற்றவே,–
மிகச் சிறப்பாய் ஏற்றவே. – தீய

***– வின்பிரட்***

## என்னை ஆண்டு நடத்துவீர்

**122. (132) சயிந்தவி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஐயையா, நான் ஒரு மா பாவி;–என்னை**
ஆண்டு நடத்துவீர், தேவாவி!

---

1 பதர்

### சரணங்கள்

1. மெய் ஐயா, இது தருணம், ஐயா;–என்றன்
மீதிலிரங்கச் சமயம், ஐயா;
ஐயையா, இப்போ தென்மேல் இரங்கி–வெகு
அவசியம் வரவேணும், தேவாவி! – ஐயையா

2. எனதிருதயம் பாழ்நிலமாம்;–ஏழை
என்னைத் திருத்தி நீர் அன்பாகத்
தினமும் வந்து வழி நடத்தும்,–ஞான
தீபமே, உன்னத தேவாவி! – ஐயையா

3. ஆகாத லோகத்தின் வாழ்வை எல்லாம்–தினம்
அருவருத்து நான் தள்ளுதற்கு
வாகான[1] சுத்த மனம் தருவீர்,–நீர்
வல்லவராகிய தேவாவி. – ஐயையா

4. பத்தியின் பாதை விலகாமல்,–கெட்ட
பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப்படி நடக்க,–என்னைத்
தாங்கி நடத்திடும், தேவாவி! – ஐயையா

5. அன்பு, பொறுமை, நற் சந்தோஷம்,–என்
ஆண்டவரின் மேல் விசுவாசம்,
இன்ப மிகு மெய்ச் சமாதானம்,–இவை
யாவும் தருவீரே, தேவாவி! – ஐயையா

6. ஏசுகிறிஸ்துவில் நான் சார்ந்து,–அவர்
இடத்திலேயே நம்பிக்கை வைக்க,
மாசில்லாத் துய்யனே, வந்துதவும்;–நீர்
வராமல் தீராதே, தேவாவி! – ஐயையா

*– பாக்கியநாதன் தாவீது*

1 அழகான

## வேறொரு ரட்சகர் உண்டோ

**123. (150) மணிரங்கு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**யேசுவை அன்றி வேறொரு ரட்சகர்**
காசினி தனிலுண்டோ, மனமே?–அவர்
நேசமறிந்து விசுவாசம் இல்லாமலே,
மோசம் போவதேன், மனமே?

**சரணங்கள்**

1. ஆதம் ஏவை செய்த பாதகம் தொலைந்திடப்
பூதலம் வந்ததார், மனமே?–கொடும்
யூதர்களால் பல வாதைகள் கொண்டு திவ்ய
போதகம் செய்ததார், மனமே? – யேசு

2. இந்த வாழ்வு கன நிந்தை என்றுனது
சிந்தை தெளிந்திருந்தும், மனமே–ஐயோ!
பந்த பாசமதில் நொந்து நாள் தோறும் அ
லைந்து திரிவதேன், மனமே? – யேசு

3. பூதல மீதினில் ஓதரி[1] தாம் பரஞ்
சோதியைப் போற்றிசெய் மனமே;–செய்தால்
பாதகம் போய் மோட்ச சாதகம் ஆமென்று
வேதமுரைக்கு தல்லோ மனமே? – யேசு

***– தஞ்சை சத்தியநாதன்***

1 சொல்லுதற்கரிய

## வேறு நாமம் இல்லை

**124. (151) வனஸ்பதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**யேசு நாமமல்லாம்–உலகினில்**
வேறு நாமம் இல்லை,–கிறிஸ்து

***அனுபல்லவி***

தேசுலாவிய கேரூபீம்பணி
திவ்ய வானவர் முனிவர் கண்மணி,
மாசில்லாத மெய்ஞ்ஞான சிகாமணி,
மதிக்கும் சத்திய வேத சிரோமணி – யேசு

***சரணங்கள்***

1. வானமும் புவியும்–கதி–ரோன் மதி[1] உடுவும்[2]
கானல் வரை[3] கடலும்–நர–ரான எவ்வுயிரும்
தானே படைத்தருள் ஆதி காரணன்,
சர்வ ஜீவ தயாபரா பூரணன்,
ஈனர் வாக்குக் கெட்டாத மெய்யாரணன்,
இலங்கும் வேத சங்கீத பாராயணன். – யேசு

2. காவிலாத மேவை–செய்–தீவினையதனால்
பூவின் மாந்தர் படும்–துயர்–தேவ கோபமற,
பாவிகளைப் பரனோடுற வாக்கப்,
பரம எருசலேம் நகர் சேர்க்க,
மேவுமலகை அரணைத் தூளாக்க,
மேதினியில் சமாதானம் உண்டாக்க. – யேசு

3. பண்டு வேதியர்கள்–கைக்–கொண்ட மாமறையில்
விண்ட நாமமல்லாமல்–உயர்–அண்ட மீதினிலும்,
மண்டலத்திலும், ஆழி கீழிலும்
மாருதம்[4] செலும் அட்ட திக்கிலும்,
தொண்டர் கூக்குரல் எட்டும் தூரத்திலும்,
துஷ்டர் வர விரும்பாத இடத்திலும். – யேசு

***– ஈசாக்கு பாக்கியநாதன்***

---

1 சந்திரன்
2 நட்சத்திரம்
3 மலை
4 காற்று

## ஏசுவின் நாமம் திவ்ய மதுரமாமே

**125. (206) ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்விய மதுர மாமே;**
−அதைத்
தேடியே நாடி ஓடியே வருவாய், தினமும் நீ மனமே.

***சரணங்கள்***

1. காசினிதனிலே நேசமதாகக் கஷ்டத்தை உத்தரித்தே;−பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்; கண்டுணர் நீ, மனமே.
− தேன்

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம்;−பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு; நிதம் துதி, என் மனமே. −தேன்

3. காலையில் பனிபோல் மாயமாய் உலகம் உபாயமாய் நீங்கிவிடும்;
−என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ, மனமே. −தேன்

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணைவராம் நேச ரிடம்;
−நீயும்
அன்பதாய்ச் சேர்த்தால் அணைத்துனைக் காப்பார்; ஆசைகொள் நீ,
மனமே. −தேன்

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்று நாமம்;−அதைப்
பூண்டுகொண் டால்தான் பொன்னகர் வாழ்வில் புகுவாய் நீ, மனமே.
− தேன்

***− அ. சவரிமுத்து***

## அரும் குருமருந்தே

**126. (367) மோகனம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஒரு மருந்தரும் குருமருந்−(து)**
உம்பரத்தில் கண்டேனே.

***அனுபல்லவி***

அருள் மருந்துடன் ஆனந்த மருந்து,
ஆதியிற்றனாய் முளைத்த மருந்து,
வரும் வினைகளை மாற்றும் மருந்து
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து. - ஒரு

***சரணங்கள்***

1. சிங்கார வனத்தில் செழித்த மருந்து,
ஜீவதரு மீதில் படர்ந்த மருந்து,
மங்கை ஏவை பவம் மாற்றும் மருந்து
வல்ல சர்ப்ப விஷம் மாய்த்த மருந்து. - ஒரு

2. மோசே முதல் முன்னோர் காணா மருந்து,
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து,
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து,
தீர்க்கத் தரிசிகள் செப்பிய மருந்து. - ஒரு

3. தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து,
செவிடு, குருடூமை தின்ற மருந்து,
மானா[1] திருத்துவ மான மருந்து,
மனுவாய் உலகினில் வந்த மருந்து. - ஒரு

4. செத்தோரை உயிரோ டெழுப்பும் மருந்து,
ஜீவன் தவறா தருளும் மருந்து,
பத்தரைச் சுத்திகரித்திடும் மருந்து,
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து. - ஒரு

***-யோ. பால்மர்***

## அருமருந்தொரு சற்குரு மருந்து

**127. தேசியதோடி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அருமருந்தொரு சற்குரு மருந்து,**
அகிலமீடேற இதோ திவ்யமருந்து.

---

1 மகிமையுள்ள

**சரணங்கள்**

1. திருவளர்தெய்வம் சமைத்த மருந்து,
   தீனர் பாவப்பிணியைத் தீர்க்கு மருந்து.

2. செத்தோரை வாழ்விக்கும் ஜீவ மருந்து,
   ஜெகமெல்லாம் வழங்கும் இத்தெய்வ மருந்து.

3. இருதய சுத்தியை ஈயுமருந்து,
   இகபரசாதனம் ஆகும் மருந்து.

4. ஆத்மபசிதாகம் தீர்க்கு மருந்து,
   அவனியோர்[1] அழியா கற்பக மருந்து.

5. சித்த சமாதானம் உண்டாக்கு மருந்து,
   ஜீவன்முத்தி தருஞ்சேணுள்ள மருந்து.

6. உலகத்தில் ஜீவசக்தி தந்த மருந்து,
   உலவாத[2] அமிழ்தென வந்த மருந்து.

7. தேசநன்மை பயக்கும் திவ்ய மருந்து,
   தேவதேவன் திருவடி சேர்க்கு மருந்து.

8. பணமில்லை இலவசமான மருந்து,
   பாவிகளுக் கெளிதில் ஏற்படு மருந்து.

9. என்றும் அழியாத தேவருள் மருந்து,
   என் பவநீக்கும் யேசு நாதர் மருந்து.

***– த. ஐயாத்துரை***

## யேசுவென்ற நாமம் இனிப்பாகுது

**128. (207) சூரியகாந்தம்** **ரூபக தாளம்**

***பல்லவி***

**விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்**
விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்.

---

1 உலகோர் 2 நீங்காத

*சரணங்கள்*

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே;
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றும் அந்தப்
பெயரே. – விசு

2. துயரையது நீக்கிக் காயமாற்றிக் குணப்படுத்தும்;
பயங்கள் யாவும் யேசுவென்றால் பறந்தோடியேபோகும். – விசு

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
மாயைகொண்ட நெஞ்சையது மயக்கமின்றிவிடுக்கும் – விசு

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்றுநிறைந்திருக்கும்,
எல்லா நாளும் மாறாச்செல்வம் யேசுவென்ற பெயரே. – விசு

5. என்னாண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே, முடிவே,
என்னால் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே. – விசு

**என் காலம் உமது கரத்திலிருக்கிறது**

**129. தன்யாசி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்**
கண்ணீர் விடுவாயே.

*அனுபல்லவி*

ஞாலத்தில் பரனுன்னை நாட்டின நோக்கத்தைச்
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய் – கால

*சரணங்கள்*

1. மதியை யிழந்துதீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் ரக்ஷண்ய வாழ்வை கண்டு நீ மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ? – கால

2. இகத்தினில் ஊழியம் அகத்தினில் நிறைவேற
ஏசுனை அழைத்தாரல்லோ?
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய்? - கால

3. நோவாவின் காலத்தில் நூற்றிருபது ஆண்டு
நோக்கிப்பின் அழித்தாரன்றோ?
தாவாத கிருபையால் தாங்கி உனக்களித்த
தவணையின் காலமிவ் வருட முடியலாமே - கால

4. முந்தின எரேமியா அனனியாவுக் குரைத்த
முடிவை நீ அறியாயோ?
எந்தக் காலமும் சிரஞ்சீவியென்றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ? - கால

***- சா. பரமானந்தம்***

## வான ராச்சியம் வந்தது

**130. (159) பைரவி** **சாபு தாளம்**

**பல்லவி**

**வான இராச்சியம் வந் ததோ கோகோ!**
மாந்தரே! தவம்செய்யும்; ஒகோகோ!

**அனுபல்லவி**

ஆன சாட்சி, தியான சூட்சி, மெய்ஞ்
ஞான காட்சியர், தோன்றினார். - வான

**சரணங்கள்**

1. மன்னவன் கிறிஸ்தாதிபன் வந்தார்,
வாகுறப் பவமே ஒழிந்திடவே குணப்படுவீர்களே;
என்னிலும் பெரியார் வலியார் அவர்
இந்நிலத்திடை மேவினார்; உயர் உன்னதக் கிருபை ஆழமே!
- வான

2. பிந்தி வந்தவர், முந்தி இருந்தவர்;
பேசரும் பொருளார், பரம்பர[1] நேசர், நம் கருணாம்பரர்,[2]
சுந்தரப் பரிபூரணர், காரணர்,
ஜோதிசொந்த அனாதி மைந்தன் இம் மாதிரந்தனில்[3] மேவினார்
– வான

3. அண்ணலார் பாத ரட்கையின் வாரையே
அவிழ்க்க, வாய்மையில்[4] எடுக்க, அல்லது சுமக்கப் பாத்திரன்
அல்ல நான்;
திண்ணம் என் முழுக்கோ ஜலத்தீர்த்தமே;
தீயினாலும் அரூபியாலும் ஸ்நானமே அவர் ஈகுவார். – வான

4. மரத்தின் வேர் அருகே முன் கோடாலியும்
வைத்திருக்குது, பத்திரத்துடன் எச்சரிக்கை விடாதேயும்,
வரத்தில் நற்கனி தான் தருகாத் தரு
வைத்திடக் கிட வெட்டி மிக்கழல் அக்கினிக்கிரையாக்குவார்
– வான

5. தூற்றுக்கூடை கரத்தில் இருக்குது;
துறையினில் தமதுரிய நற்களம் மற விளக்கி, அறுதியிலே
தோற்றக் கோதுமை கேயத்தில்[5] சேர்த்துமே
தீயதுர்ப்பதர் ஆனதைத் தழலால் எரிப்பர் இந் நேரமே – வான
***– வே. சாஸ்திரியார்***

### யேசுநாமம் ஒன்றை நம்புவீர்

**131. (152) கமாஸ்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**யேசு நாமம் ஒன்றை நம்புவீர்,**
பூலோகத்தாரே.

---

1 பரலோக
2 கடவுள்
3 பூமியில்
4 வலிமையில்
5 வீட்டில்

**சரணங்கள்**

1. யேசு நாமம் ஒன்றை நம்பும்;
ரட்சண்யத்துக் கிதுவே ஸ்தம்பம்;
பேசும் வேறே நாமமெல்லாம்
பேருலகை ரட்சிக்காதே, – யேசு

2. பார்த்திபன் தவீது குல
கோத்திரக் கன்னிமரிபால்,
நேத்திரம் போலே உதித்து
நேமியின்[1] ரட்சகனான, – யேசு

3. பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெஞ்ஞான பெருஞ்
ஜோதியாய் விளங்கும் நீதிச்
சூரிய னான மகத்வ – யேசு

4. பாவிகளீடேற மோட்ச
பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த்தெழுந்து
சேணுலகுக்[2] கேறிச் சென்ற, – யேசு

5. விண்டலத்தவர்கள் சூழ,
வெருண்டலகை பதறி வீழ;
மண்டலத்தைத் தீர்வை செய்ய
மாமுகில்[3] மீதேறி வரும், – யேசு

***– ஈ. பாக்கியநாதன்***

**மரித்தாரே கிறிஸ்தேசு**

**132. (155) கரஹரப்பிரியை** **ஆதி தாளம்**

***பல்லவி***

**மரித்தாரே கிறிஸ்தேசு**
உனக்காகப் பாவி.

1 பூமியின் 2 வானலோகத்திற்கு 3 மேகம்

***சரணங்கள்***

1. திரித்துவத் துதித்தோர் தெய்வீக சேயே,[1]
தீன தயாளத்வ மனுவேலே பாராய். - மரித்தாரே

2. லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே,
லோலாயமாயச் சிலுவையிலே பாராய். - மரித்தாரே

3. மகத்தான தண்டனை நிவிர்த்திப்பதற்கே,
மா பாடுபட்டுத் தரித்ததே பாராய். - மரித்தாரே

4. மன்னிப்புண்டாக்கவே மத்தியஸ்தராக
மாவாதைக்குள்ளானானார் தாமே நீ பாராய். - மரித்தாரே

***- ஈ. பாக்கியநாதன்***

## மீட்கப்பட்டீரே

**133. (157) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**விலைமதியா ரத்தத்தாலே**
மீட்கப்பட்டீரே.

***சரணங்கள்***

1. உலையும் பொன் வெள்ளி
உலோகத்தாலல்ல,-ரீ-ரீ-ரீ-ரீ
சிலுவையி லேசுபரன்-வலத்
திருவிலாவில் வடியும். - விலை

2. நீருமக் குரிமை
சினைப்பதுமலையே,-ரீ-ரீ-ரீ-ரீ
சீர்மண மகனுடைமை,-நீவிர்
சிந்திப்பது கடமை. - விலை

---

1 குமாரன்

3. ஆகங்கள்[1] அவர்க்கு
ஆலய மலவோ?-ரீ-ரீ-ரீ-ரீ
மோகஇச்சைக ளணுகாதிருத்தல்
முக்கியமென்றறியீர். - விலை

4. ஆவியுந் தேவன்
அகமதுதானே;-ரீ-ரீ-ரீ-ரீ
தேவதுதிக ளதிலே-எழச்
செய்வீர் தினமு மிகவே. -விலை

5. மனமது அவர்க்கு
மாத்திரம் சொந்தம்,-ரீ-ரீ-ரீ-ரீ
பிளமுறு கேடறிவு-அதைப்
பின் தொடர்வது இழிவு. - விலை

***- வே. மாசிலாமணி***

**பாவிகளை ஒப்புரவாக்கிக்கொள்வதற்கு உதித்தார்**

**134. (158) காம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக்கொள்வதற்கு**
இப்புவியிலே உதித்தார்; அற்புதந்தானே.

***அனுபல்லவி***

மெய்ப்பரம் புவியும் தந்த தற்பரன் அனாதி பிதா
நற்புதல்வனான ஏசு நாத கிருபாகரனார். - எப்

***சரணங்கள்***

1. மட்டில்லாப் பொருள் அனைத்தும் திட்டமாகவே படைத்து
இட்டமாய் அனுக்கிரகித்த சிட்டிகன் தானே;
கட்டளையிட்ட கற்பனை விட்டொரு சர்ப்பத்தின் வாயில்
பட்டு நரகத்துக்காளாய்க் கெட்டழிந்த பேர் என்றாலும். - எப்

1 சரீரங்கள்

2. அச்சயன்[1] மோசேயைக் கொண்டன் றெச்சரித் தெழுதித்தந்த
உச்சித கற்பனை கடந் திச்சையினாலே,
துர்ச்சனப் பாசாசைக் கூடி மிச்சமாய்ப் பாவங்கள் செய்து
நிச்சயம் கெட்டுப் போனார்கள்; ரட்சிக்கக்கூடாதென்றாலும்.
– எப்

3. தாக்கிய பராபரன் உண்டாக்கிய அனந்த செல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே,
யோக்கியம் தெய்வ புத்ர சிலாக்கியம் எல்லாம் இழந்து
பேய்க்கடிமை ஆட்கள் கேட்டை நீக்குதற் கேலாதென்றாலும்,
– எப்

4. மேட்டிமை எல்லாம் துறந்து, காட்டுக்குள் இருக்கும் அந்த
மாட்டுக்கொட்டிலில் பிறந்தோர் ஆட்டுக்குட்டி போல்,
பாட்டுக்கிடமாய் உலகை மீட்டுக்கொண்டனந்த மோட்ச
வீட்டுக்குட்படுத்த மாந்தர் நாட்டுக்குள் மரித்துயிர்த்து. – எப்

***– வே. சாஸ்திரியார்***

**ஜீவ நதியைப் பாராய்**

**135. (156) செஞ்சுருட்டி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**பாவம் போக்கும் ஜீவநதியைப்**
பாரீர், வந்து பாரீர்–பாரில்!

***அனுபல்லவி***

தீவினை தீர்க்கும் தேவமரியின்
திருரத்த மிந்த ஆறாம்,–பாரில்! – பாவம்

**சரணங்கள்**

1. கல்வாரி மலைச்சிகர மீதுற்றுக்
கண்கள் ஐந்து திறந்தே;–அதோ!
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாரீர்,–பாரில்! – பாவம்

---

1 கடவுள்

2. பாவச்சுமையால் நொந்து சோர்ந்து
பதறி விழுந் தலறி–நிதம்
கூவியழுத அனந்தம் பேரிதில்
குளித்தே யுளங் களித்தார்,–பாரில்! – பாவம்

3. பத்தருளத்தி லிடைவிடாமல்
பாய்ந்து வளமீந்து–அதை
நித்தமும் பரிசுத்த குணத்தில்
நிலைநாட்டுது பாரீர்,–பாரில்! – பாவம்

4. ஒருதரம் இந்த நதியின் தீர்த்தம்
உண்டோர் ஜீவன் கண்டோர்,–தாகம்
அறுதி[1] யடைவர்; வேறொருநதிக்
கலையார், தேடி யலையார்,–பாரில்! – பாவம்

5. நித்தியந்தனில் கலந்துறையுஞ் செந்
நீரார் நதியிதிலே–தங்கள்
வஸ்திரந் தோய்த்த சுத்தர் சபையில்
வாழ்ந்துகீதம் பாட,–பாவி – பாவம்

***– ஜி.சே. வேதநாயகம்***

**மலையாதே நெஞ்சமே**

**136. (44) காம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**மலையாதே, நெஞ்சமே,–இப்படி நம்மை**
வகுத்தவனே தஞ்சமே.

**அனுபல்லவி**

அலையாதருள் மந்த்ர கலையாகம சுந்த்ர
அருத்தப் பண் கருத்தர்க்கென்
றுரித்தல் கொண் டிருத்திக்கொள். – மலை

---

1 முடிவு

**சரணங்கள்**

1. கருத்தர் கட்டுவதல்லோ வீடு,–நரர்
கட்டும் கிரியைகள் வீண் பாடு,
வருத்தப்படுவதென்ன கேடு?–பேயின்
மயக்கமெல்லாம் விட்டுப்போடு;
தரித்திரத் திரள் இக்கட்டு பெருத்த கவலைப்பட்டுச்
சலியாதிரு, நலியாதிரு
தந்தையார் சுதன் வந்த நாள் இது. – மலை

2. எண்ணத்தினால் என்னகூடும்?–தெய்வம்
இட்டதல்லோ வந்து நீடும்;
மண்ணைச் சதம் என்றெண்ணி, வாடும்–மக்கள்
மனதில் துயரம் வந்து மூடும்;
கண்ணைத் திறந்து நோக்கு, விண்ணைச் சிறந்துள்ளார்க்குக்
குருத்தாய் இரு; உரித்தாய் இரு;
குருத்தரானவர் ஒருத்தரே துணை. – மலை

3. என்ன கவலைப்பட்டும் நஷ்டமே,–கிறிஸ்
தேசு பிறந்ததுன் அதிஷ்டமே;
உன்னதன் பண்ணின திட்டமே,–உனக்
கொழுங்கு ப்ரமாணத்தின் சட்டமே;
பின்னப்பட் டுலையாதே, சின்னப்பட் டலையாதே;
பெருத்த நாள் இது, கருத்தர்நாள் இது,
பெலப்பாய் இரு, கெலிப்பாய் இரு. – மலை

***– வே. சாஸ்திரியார்***

### இளைப்பூர்ந்த நரரே வந்து சேரும்

**137. (166) எதுகுலகாம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**உலகில் பவப் பாரத்தால் சோரும்–இளைப்**
பூர்ந்த நரரே, வந்து சேரும்.

***அனுபல்லவி***

அலைசடிப் பட்டவரே, வாரும்,–என்றன்
ஆறுதலால் அவற்றைத் தீரும்;–பொல்லா – உலகில்

**சரணங்கள்**

1. பாவி என்றெண்ணித் திகைப் போரும்,–என்றன்
பாவம் தீராதென் றிருப் போரும்,
ஆவலாய் ஓடி வந்து சேரும்;–நான்
ஆகாமியர்க்காக வந்த தோரும்;–பொல்லா – உலகில்

2. இளமை என்றே எண்ணி, நில்லாதே;–சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே;
வளமாய் வருவதைத் தள்ளாதே;–கெட்ட
வழக்க மிதையே கைக் கொள்ளாதே.–பொல்லா – உலகில்

3. வாலிப ப்ராய மிதில் நாளும்–இன்ப
வாழ்வு சுகிக்கவென்று மாளும்
சீலரே, இன்றென் னுரை கேளும்;–அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும்,–பொல்லா – உலகில்

4. காலம் கடந்த கிழவோரே,–வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தாரே,–உங்கள்
கவலையைத் தீர்ப்பேன், அறிவீரே.–பொல்லா – உலகில்

***– ஏசுதாசன் சவரிராயன்***

## இந்நாள் ரட்சிப்புக்கேற்ற நல் நாள்

**138. (148) ஆனந்தபைரவி** **சாபு தாளம்**

**பல்லவி**

**இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்,**
ஏற்ற நல் நாள், ஏற்ற நல் நாள்.

**அனுபல்லவி**

சொன்னார் கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து. - இந்

**சரணங்கள்**

1. சந்தோஷந்தனைச் சொல்ல வந்தேன்;-தேவ
சமாதான வார்த்தையைப் பெலனாகத் தந்தேன். - இந்

2. வாடித் திகைத்துப் புலம்பாதே;-உன்தன்
மனதில் அவிசுவாசம் வைத்துக் கலங்காதே. - இந்

3. உலகச் சிநேகம் வெகு கேடு;-அதற்
குடந்தைப் படாமல் ஜீவ மார்க்கத்தைத்தேடு. - இந்

4. இன்றுன் இரட்சகரிடம் திரும்பு;-அவர்
இயற்றும் சம்பூரண ஜீவனை விரும்பு. - இந்

5. இனிமேலாகட்டும், என் றெண்ணாதே;-பவ
இச்சைக் குட்பட்டால், திரும்ப ஒண்ணாதே. - இந்

6. கிறிஸ் தேசுவை உற்றுப் பாரு;-அவர்
கிருபையாய்ச் சிந்தின ரத்தத்தைச் சேரு. - இந்

7. பாவங்கள் அறச் சுத்திகரிப்பார்;-உனைப்
பரிசுத்த வஸ்திரத்தால் அலங்கரிப்பார். - இந்

8. மகிமை நிறைந்த கிரீடஞ் சூடி,-நித்திய
வாழ்வை அருள்வார் உனக்கின்பங் கொண்டாடி. - இந்

9. ஏசுபெருமானை நீ நம்பு;-அவர்
என்றென்றைக்கும் உனக் கிரட்சிப்பின் கொம்பு. - இந்

***- மரியான் உபதேசியார்***

## **தாகம் மிகுந்தவரே**

**139. (161) முகாரி** **சாபு தாளம்**

***பல்லவி***

**தாகம் மிகுந்தவரே, அமர்ந்த**
தண்ணீரண்டை வாரும். -ஓ!

1. ஏகன் நானுங்களையே அழைக்கும் என்தன்
இன்பவாக்குத்தத்தமே,-நம்பி
வேகமாக ஓடி வாருமெனதிடம்,
வேண்டியதைத் தருவேன். - ஓ!

2. காசுபணமது, அற்றுலகந்தன்னில்
கஷ்டப்படுவோரே,-விசு
வாசமாய் என்னிடம் வந்து விலையின்றி
வாங்கியே சாப்பிடுமே. - ஓ!

3. பாரச்சுமையோடு பாரில் வருத்தங்கள்
பட்டு உழல்வோரே,-வாரும்,
நேரே, உமக்கிளைப்பாறுதலாவியை
நேசமாய்த் தந்திடுவேன். - ஓ!

4. அப்பமல்லாத பொருளையும் திருப்தி
ஆகாத வஸ்துவையும்,-நம்பித்
தப்பிதமாய்ப் பிரயாசத்தையும் பணம்
தன்னையுமேன் கெடுப்பீர்? - ஓ!

5. கர்த்தரைக் கண்டடையத்தக்க காலத்தில்
கண்டிடுமே உடனே;-உந்தன்
அத்தன் சமீபமாக இருக்கும் போதே
ஆவலாய்க் கூப்பிடுமே. - ஓ!

***-வே. மாசிலாமணி***

## அந்த நாள் பாக்கிய நாள்

**140. வசந்தபைரவி** **திரிபுடதாளம்**

### பல்லவி

**அந்த நாள் பாக்கிய நாள்–நான் மீட்கப்பட்ட**
அந்த நாள் பாக்கிய நாள்.

### அனுபல்லவி

அந்த நாள் ஆனந்த நாள், அருமை இரட்சகரென்னை
அன்போடழைத்தெனது அசுத்தங்கள் நீக்கின நாள் – அந்த

### சரணங்கள்

1. அன்றே எனக்குப் பேதித்தார்,–அவர் வழியில்
அநுதினம் செல்லக் கற்பித்தார்;
என்றும் அவர்மேல் சார்ந்தே இன்ப ஜீவியம் செய்ய
ஏவினார் என் இரட்சகர், எங்கும் ப்ரஸ்தாபிப்பேனே. – அந்த

2. என்றனை அன்றே இழுத்தார்–தமதன்பினால்
இசைவாய்த் தம்முடன் இணைத்தார்;
சொந்தம் நான் அவருக்குச் சொந்தம் அவர் எனக்கு,
இந்த உறுதிபண்ணி இனிய ஐக்கியம் பெற்றேன். – அந்த

3. ஆறுதல்களால் நிறைந்தேன்,–அளவில்லாத
ஆசிகளினால் மகிழ்ந்தேன்;
தாறுமாறான உள்ளம் மாறுதலை யடைந்து
மாறாத யேசுவினில் மகிமையாய்த் தங்கப் பெற்றேன். – அந்த

4. அந்நாளில் வாக்குப் பண்ணினேன்,–உறுதியாக
எந்நாளும் நான் புதுப்பிப்பேன்;
சொன்ன இவ்வாக்கை நிதம், சுத்தமாய் நிறைவேற்ற
உன்னத பலம் தாராய், என்னையாட்கொண்ட தேவா. – அந்த

***– வே. சந்தியாகு***

## சுயமதியே நெறியென்று சாயாதே

**141. (362) பியாகு** **ரூபக தாளம்**

*பல்லவி*

**உன்றன் சுயமதியே நெறி என்–று**
உகந்து சாயாதே;–அதில் நீ
மகிழ்ந்து மாயாதே.

*சரணங்கள்*

1. மைந்தனே, தேவ மறைப்படி யானும்
வழுத்தும்மதித னைக் கேளாய்;–தீங்
கொழித் திதமாய் மனந் தாழாய்; அருள் சூழாய். – உன்றன்

2. சொந்தம் உனதுளம் என்று நீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு;–அதின்
தந்திரப் போக்கை விட்டோடு; கதி தேடு. – உன்றன்

3. துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே;–தீயர்
கெட்ட வழியில் நில்லாதே; அது தீதே. – உன்றன்

4. சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே;–அவர்
ஐக்யம் நலம் என்றெண்ணாதே; அதொண்ணாதே. – உன்றன்

5. நான் எனும் எண்ண மதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாவம்;–அதின்
மேல் நிற்குமே தேவ கோபம்; மனஸ்தாபம். – உன்றன்

*– யோ. பால்மர்*

## எங்கேயாகினும் ஸ்வாமி

**142. தோடி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**எங்கேயாகினும்–ஸ்வாமி–எங்கேயாகினும்,**
அங்கே யேசுவே,–உம்மை–அடியேன் பின்செல்லுவேன்.

**சரணங்கள்**

1. பங்கம், பாடுகள்–உள்ள–பள்ளத்தாக்கிலும்,
பயமில்லாமல் நான்–உந்தன்–பாதம் பின்செல்வேன். – எங்கே

2. வேகும் தீயிலும்–மிஞ்சும்–வெள்ளப் பெருக்கிலும்,
போகும்போதும் நான்–அங்கும் ஏகுவேன் பின்னே. – எங்கே

3. பாழ் வனத்திலும்–உந்தன்–பாதை சென்றாலும்,
பதைக்காமல் நான்–உந்தன்–பக்கம் பின்செல்வேன். – எங்கே

4. எனக்கு நேசமாய்–உள்ள–எல்லாவற்றையும்
எடுத்திட்டாலுமே–உம்மை–எங்கும் பின்செல்வேன். – எங்கே

5. உந்தன் பாதையில்–மோசம்–ஒன்றும் நேரிடா;
மந்தாரம் மப்பும்–உம்மால்–மாறிப்போகுமே. – எங்கே

6. தேவையானதை–எல்லாம்–திருப்தியாய்த் தந்து,
சாவு நாள் வரை–என்னைத்–தாங்கி நேசிப்பீர். – எங்கே

7. ஜீவித்தாலும் நான்–எப்போ–செத்தாலும் ஐயா!
ஆவலாகவே–உம்மை–அடியேன் பின்செல்லுவேன். – எங்கே

***– வே. சாஸ்திரியார்***

## வேறு ஜென்மம் வேணும்

**143. (154) உசேனி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**வேறு ஜென்மம் வேணும்,–மனம்**
மாறுதலாகிய உள்ள சுத்தி என்னும்

***சரணங்கள்***

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண்பேறு பெற இங்கே; –வேறு

2. பாவசுபாவமும் ஜீவியமும் மாறத்
தேவனின் சாயலை மேவுவதாகிய; –வேறு

3. மானிடரின் அபிமானத்தினாலல்ல,
வானவரின் கிருபா தானமாய் வரும்; –வேறு

4. ஒன்றான ரட்சகர் வென்றியை நம்பி,
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய; –வேறு

5. மைந்தர் கெடாமல் உகந்து ஈடேறவே,
சொந்த மகன்தனைத் தந்த பிதா அருள்; –வேறு

6. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்,
விண்ணினில் தூயராய் தண்ணளி[1] கொள்ளவும்; –வேறு

***– த. யோசேப்பு***

**என்னிடம் வர மனதில்லையா?**

**144. மோகனம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**பாவி, என்னிடம் வர**
மனதில்லையா? ஓ!

**சரணங்கள்**

1. பாவத்துள் மூழ்கிச் சாவுற்றாயே நீ,
சீவன் தனைப்பெறவே. – ஓ! பாவி

2. இருளுக்குட் சிக்கி அருளற்றுப் போனாய்த்
தெருளொளி தனைப் பெறவே. – ஓ! பாவி

3. என் சமாதானம் உன் சுகமாகும்,
நெஞ்சைப் பூராய்த் திறந்து. – ஓ! பாவி

4. அசுத்தங்கள் நீங்கிப் பசிதாகமில்லையோ?
பரிசுத்தஞ் செய்வேனே. – ஓ! பாவி

---

1 கருணை

5. மண்ணிலே நேசம் வைப்பாயோ மோசம்,
விண்ணிலிடங் கிடையா. – ஓ! பாவி

6. எனதிடம் அருகும் எவரையுந் தள்ளேன்,
கணத்தில் விரைந்திடுவாய். – ஓ! பாவி

***– வே. மாசிலாமணி***

**வா, பாவி**

**145. (162) ஹரிகாம்போதி** **ஏக தாளம்**

***பல்லவி***

**வா, பாவீ, மலைத்து நில்லாதே, வா.**

***சரணங்கள்***

1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்
றெண்ணித் திகையாதே;
உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே,
உள்ளபடி வாவேன். – வா

2. உன்றனுக்காகவே நானேயடி பட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்;
சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்
தீர்த்து விட்டேன், பாவி, வா. – வா

3. கொடிய பாவத்தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,
ஒன்றுக்கும் அஞ்சாதே, வா. – வா

4. விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிகளடைக்கலமல்லோ?
சீக்கிரம் ஓடி வாவேன். – வா

5. என்னிடத்தில் வரும் பாவி யெவரையும்
இகழ்ந்து தள்ளேனே;
மன்னிய மேலோக வாழ்வை அருள்வேனே,
வாராயோ, பாவி? – வா

***– தேவசகாயம் உபாத்தியாயர்***

## வேளை இது சபையே

**146. (9) பைரவி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வேளை இது சபையே–நித்திரையை**
விட்டுஎழுந்திருக்க–நல்ல.

**அனுபல்லவி**

நாளைக்கு இன்னொருவேளைக் கென்றெண்ணாமல்
காலத்தைத் தப்பாமல் கைகுட்பிடித்திட. – வேளை

**சரணங்கள்**

1. நாம் விசுவாசிகளாய்த்–திரும்பின
நல்வேளை தன்னிலுமே,
ஆமீ துநல்வேளை ஐயனின் ரட்சிப்பு
அண்டையிற்கிட்டிய தென்றறிந்தோமல்லோ. – வேளை

2. பாவஇருள்விடுத்தோம்,–பகலதுக்
கான வொளியடுத்தோம்;
மேவுமந்தகார வேஷக்கிரியையை
விட்டுவெளிச்சப் பேராயுதம் பூண்டிட. – வேளை

3. தானவனாலயமே–உன்தனுட
சரீரமும் ஆத்துமமும்
நானிலமீதேசு நாயகர்க்கேற்காமல்
மேனியைப்பேணும் விருப்பமாகாது. – வேளை

4. கத்தரினாலயத்தைக்–கொடுப்போனைக்
கர்த்தர் கெடுப்பதல்லால்
நித்தியதேவ கோபாக்கினைக்காளாகி
நீடூழியும் நரகாழியில் வேவானே. –வேளை

***– சு. முத்துசாமி***

## சீரடை தருணம் இதறி

**147. (168) கமாஸ்** **ஆதி தாளம்**

*பல்லவி*

**சீர் அடை தருணம் இதறி மனமே;**
சிதைவு படும் முனமே
சீர் அடை; தருணம் இதறி, மனமே;

*அனுபல்லவி*

பார் உடலொடு வலுபோர் இடும் அலகையும்–(ரீ)
ஆரவாரம் எடுத் தழிக்கும் உனை கணத்தில். – சீர்

*சரணங்கள்*

1. நொடியதில் அழிவடை புடவியில் நணுகுதல் நலமோ,–
பேதாய்?
நோய் துயர் உறும்இது மேலுல கிற்கிணை பங்கோ?
கடினப்படுத்து வலு மறம் அது நிலை அற–(ரீ)
காதலோடு நல் வேத நெறி தொடர்ந்து. – சீர்

2. பொருள் அதில் உறு விருப்பதி சிதைவுளதென அறியாய்?–
ஓகோ
போர் இடு பல பல தீதுகளுக் கது வேரே;
மருளைத் தவிர்க்கும் இறை அருளைக் கருதி நனி–(ரீ)
மாசிலாத தெய் வீகன் அடி பணிந்து. – சீர்

***– யோ. பால்மர்***

## குணப்படு பாவி

**148. (169) உசேனி** **ரூபக தாளம்**

*பல்லவி*

**குணப்படு, பாவி; தேவ**
கோபம் வரும் மேவி–இப்போ.

### *அனுபல்லவி*

கணப்பொழுதினில் காயம் மறைந்துபோம்;
காலமிருக்கையில் சீலமதாக நீ. - குணப்படு

### *சரணங்கள்*

1. கர்த்தனை நீ மறந்தாய்,-அவர்
கற்பனையைத் துறந்தாய்,
பக்தியின்மை தெரிந்தாய்,-பொல்லாப்
பாவ வழி திரிந்தாய்,
புத்திகெட்ட ஆட்டுக் குட்டியே ஓடிவா,
உத்தம மேய்ப்பனார் கத்தி யழைக்கிறார். - குணப்படு

2. துக்கமடையாயோ?-பாவி
துயரமாகாயோ?
மிக்கப் புலம்பாயோ?-மனம்
மெலிந்துருகாயோ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ?
தக்க அருமறைப் பக்கந் தொடராயோ? - குணப்படு

3. தாவீ தரசனைப்போல்,-தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப்போல்,
பாவி மனுஷியைப்போல்,-மனம்
பதைத்த பேதுருபோல்,
தேவனுக்கேற்காத தீமைசெய்தேனென்று
கூவிப் புலம்பு நல் ஆவியின் சொற்படி. - குணப்படு

4. உன்னை நீ நம்பாதே!-இவ்
வுலகையும் நம்பாதே;
பொன்னை நீ நம்பாதே;-எப்
பொருளையும் நம்பாதே;
தன்னைப் பலியிட்டுத் தரணி மீட்டவர்
நின்னையும் ரட்சிப்பார், அனைவரைப்பற்று - குணப்படு

***-ஞா. சாமுவேல்***

## பாவத்தினை விட்டோடாயோ?

**149. (171) ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஓகோ! பாவத்தினைவிட் டோடாயோ?**
உள்ளமே, யேசு அன்பை நாடாயோ?

***சரணங்கள்***

1. மா கிருபையாக, ஏகன் அன்பாக
வந்ததிலையோ பூவில் உனக்காக? – ஓகோ!

2. நாற்பது நாளாய்த் தீப்பசிக் காளாய்
நாதன் உன் பொருட்டிருந்தார், கேளாய்? – ஓகோ!

3. யூதர்கள் வைய, வேதனை செய்ய,
உன் பவம் செய்த தவர் உளம் நைய. – ஓகோ!

4. சிலுவையில் இறுக்க, உலகரும் நொறுக்கச்
செய்த துன் பவம் மேசியா இறக்க. – ஓகோ!

5. அலகை[1] உன் மீது பல வகைத் தீது
ஆவலுடன் செய்வதால் புவி மீது. – ஓகோ!

6. ஐயோ! என் மனமே, வையகம் வனமே;
அழியா உலகில் அன்புற் றனுதினமே. – ஓகோ!

***– யோ. பால்மர்***

## உன் நெஞ்செனக்குத் தாராயோ?

**150. (172) ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ?–மோட்ச**
வாழ்வைத் தருவேன், இது பாராயோ?

---

1 பிசாசு

*சரணங்கள்*

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே,-பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே, - மகனே

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே-அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே. - மகனே

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ?-நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ? - மகனே

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே,-மகா
உவப்பாய்க் கதி ஈவேன்; மகிழ்வாயே. - மகனே

5. உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே,-அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே. - மகனே

*- ச. யோசேப்பு*

## இன்றே திரம்பாயோ?

**151. (173) செஞ்சுருட்டி ஆதி தாளம்**

*பல்லவி*

**பாவி, இன்றே திரும்பாயோ?-நேச**
ஆவியின் சத்தம் கேளாயோ?

**அனுபல்லவி**

மேவி தயை நிரம்பி, ஏவி உனை விரும்பிக்
கூவி அழைக்கையிலே தாவி யேசுவை நோக்கி. -பாவி

*சரணங்கள்*

1. பாவம் தொடர்ந்து செல்லுமே;-பாவ
சாபம் அடர்ந்து கொல்லுமே;-உனின்ப
லாபம் எல்லாமே சாபம்; காலமிதுவே காலம்;
தாபம் உளவுன் யேசு மா பரிதாபம் கண்டு. -பாவி

2. எத்தனை போதனை பெற்றாய்,–ஐயையோ!
சுத்தமாய்ச் சாதனை அற்றாய்,–என்றாலும்
அத்தனை பாவத்தையும் முற்றுமாக வெறுத்து,
அத்தனே, தத்தம் செய்தேன், நித்தமும் காவுமென்று. –பாவி

3. கல்வாரியில் தொங்கினோர் யார்?–உனக்
கல்லோ நேசர் ஏங்கினோர் பார்!–இன்னும்
பொல்லா மனதுடனே கல்போல் கடினமாகிச்
செல்வோரையும் நிந்தித்து எல்லாக் கேட்டுக்குள்ளான. –பாவி

4. நிலை யின்றலை கின்றோரே,–ரத்த
விலை மதியாமல் சென்றோரே,–போதும்;
மலையாமல் யேசுவிடம் தொலையாத கவலை சொல்லி,
உலையா, நம்பிக்கை வைத்து நிலையான ரட்சைபெற. –பாவி

***– ஐ.த. சாமுவேல்***

## நீ உனக்குச் சொந்தமல்லவே

**152. (201) கமாஸ்** **ரூபகதாளம்**

***பல்லவி***

**நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,**
நீயுனக்குச் சொந்தமல்லவே.

***அனுபல்லவி***

நீயுனக்குச் சொந்தமல்லவே,
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம். – நீ

***சரணங்கள்***

1. சிலுவைமரத்தில் தொங்கி மரித்தாரே; திருரத்தம், ரத்தம்
திரு விலாவில் வடியுது, பாரே;
வலிய பரிசத்தால் கொண்டாரே;
வான மகிமை யுனக்கீவாரே. – நீ

2. இந்த நன்றியை மறந்துபோனாயோ? யேசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுனதிதயங் காயமும்,
சாமி கிறிஸ்தினுடையதல்லவோ? – நீ

3. பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே,
அக்கினிக் கடல் தள்ளுவானேன்? – நீ

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகைவிட்டுப்
பிரியினும் அவர்க்கே மரிப்பாயே,
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்,
உயர் பதவியில் என்றும் நிலைப்பாய். – நீ

***– தேவசகாயம் உபாத்தியாயர்***

**நன்மையேனுஞ்செயத் திறனிலேன்**

**153. நவரோஜ்** **சாபு தாளம்**

**ஜென்மமார் கருவிலே வினைவிடம்[1] தீண்டலால்**
நன்மனோ தத்துவ நாசமா யினவெலாந்
தின்மையே செயவருந் திறனுளேன், சிறியவோர்
நன்மையே னுஞ்செயத் திறனிலேன், நவையினேன்.[2]

2. நான்பிறந் ததுமுயிர்ச் சுமையினா னலியவோ
கான்பிறங் கலினுறுங் கதழ்விடப்[3] பாந்தளில்[4]
ஊன்பிறங் குடல்வளர்த் துழலுவேன், உணர்விலேன்,
ஏன்பிறந் தேன்கொலாம் ஏழையிவ்வுலகினே?

3. அன்னையாய் அப்பனாய் அன்றுதொட் டின்றுமட்–டு
என்னையாய் பொடுபுரந் தென்றுநன் றேதரும்
தன்னையே நிகர்வதோர் தம்பிரான் தயைமறந்–து
என்னையே முப்பகைக் கீடழித் தினைகுவேன்.[5]

---

1 விஷம்
2 குற்றமுள்ளேன்
3 கோபிக்கும் விஷமுள்ள
4 பாம்பைப்போல
5 அழுவேன்

4. ஓரணுத் துணையுநல் லுணர்விலேன் உலகுசெய்
கோரணிக்[1] குளமுடைந் திடையுமோர் கோழையான்,
ஆரணத் துரைபடிந் தயர்வுயிர்த் திலனினி
மாரணக்[2] கடல் குளித் தயர்வனோ மதியிலேன்?

5. எப்பெரும் பதகரும்[3] இதயநொந்; தேங்கிவந்–து
அப்பனே பிழைபொறுத் தருளு மென் றடையிலோர்
ஒப்பரும் புதல்வனுக் குருகிமன் னிப்பமென்–று
இப்பெருஞ் சுருதிதந் திறைமறந் திடுவரோ?

***– எ.ஆ. கிருஷ்ணன்***

**பாதகன் என் வினைதீர்**

**154. (82) ஆனந்த பைரவி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**பாதகன் என் வினைதீர், ஐயா, கிருபாகரா, நின்**
பாடு நினைந் தெனைச் சேர், ஐயா.

***அனுபல்லவி***

தீதகற்றவே சிறந்த
சேண் உலகினிமை விட்டு,
பூதலத் துகந்து வந்த
புண்ணியனே, யேசு தேவா. – பாதகன்

***சரணங்கள்***

1. வந்துறும் எப்பாவிகளையும்–அங்கீகரிக்கும்
மாசில்லாத யேசு நாதனே,
உந்தன் இடம் வந்துளமே உருகி அழுத மாது
முந்தி மிகச் செய்த பாவம் முழுதும் பொறுத்தாய் அன்றோ?
– பாதகன்

2. சிந்தின உன் உதிரம் அதே–தீயோன் மறத்தைச்
சின்ன பின்னம் செய்ய வல்லதே;
பந்தம் உற உன்றன் வலப் பாகமுற்ற கள்வனையே
விந்தையுற வேரட்சித்த வேதனே, அவ்விதமாயே – பாதகன்

---

1 பாசாங்கு 2 மரண 3 சண்டாளரும்

3. அற்பவிசுவாசமுளன் ஆம்-அடியேனை இனி
ஆதரிப்பதார்? உன் தஞ்சமே;
தற்பரா, உனைத் தரிசித் தன்றி நம்பிடேன், எனவே
செப்பின தோமாவுக்குப்போல், திரு உருக்காட்சி தந்து.

- பாதகன்

**– *யோ. பால்மர்***

**பாவிக் கிரங்கையனே**

**155. (83) சங்கராபரணம் ஆதி தாளம்**

***பல்லவி***

**ஆண்டவா, மோட்சகதி நாயனே,**
மீண்டவா, பாவிக் கிரங்கையனே.

***சரணங்கள்***

1. நீண்ட ஆயுளுள்ளவா, நெறிமறை கொடுத்தவா,
தாண்டி உலகில் வந்தாயே, தயாளமுள்ள யேசுவே –ஆண்டவா

2. பெத்தலேக மூரிலே பிள்ளையாய்ப் பிறந்தாயே;
சித்தம் வைத்திரங்கமாட்டாயோ, தேவசீல மைந்தனே?
–ஆண்டவா

3. பாவியான மனுஷி உன் பாதமுத்தி செய்திட
ஜீவவாக்குரைக்கவில்லையோ, தேற்றல் செய்யும் மீட்பரே?
– ஆண்டவா

4. பேதலித்த சீமோனைப் பேணி முகம் பார்த்தாயே;
ஆதரவுநீ தான் அல்லவோ, அருமையுள்ள அப்பனே?
– ஆண்டவா

5. கொல்கதா மலையிலே குருசினில் தொங்கையிலே,
பொல்லாருக்கிரங்கவில்லையோ, பொறுமையுள்ள தேவனே?
– ஆண்டவா

6. பாவவினை தீர்க்கவே பாடு மிகப் பட்டாயே;
கோபமின்றி என்னை நோக்காயோ, குருசில் அறையுண்டவா?
– ஆண்டவா

***– யோ. அருளப்பன்***

**தயைகூர் ஐயா**

**156. (84) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தயை கூர், ஐயா; என் ஸ்வாமீ, பாவி நான்,**
தயை கூர், ஐயா; நின்தாசன், ஏசையா;
தயை கூர், ஐயா.

***சரணங்கள்***

1. ஜெய மனுவேலன், நய அனுகூலன்,
சீரா, தீரா, அதிகாரா, திருக்குமார,
சேயர்கள் பணிவிடை மேவிய நேச வி
லாச க்ருபாசன யேசு நரேந்திரா![1] –தயை

2. வானத்திலிருந்து வந்து, ஞானத் துரு உவந்து,
வளமை[2] கொண்டு, கிருபை விண்டு, குடில் கண்டு,
மாடடை வீடதி னூடு புல் மேடையில்
நீடின போதினி மோடியதாமோ? –தயை

3. தந்தை பிதாவின் மைந்தன் மைந்தர் வடிவமாகி,
தராதலமேவி[3] வா, பாவி' எனக் கூவி,
சாங்கமதாய்[4] அருள் ஓங்கி, மகா பெரு
ஈங்கிசையாய்[5] உயிர் நீங்கினதாலே நீ. –தயை

4. தேவ ரட்சிப்பனைத்தும் பாவிகட்காய் விளைத்தும்,
சிலுவையில் மாண்டும், துயர் பூண்டும், சிறை மீண்டும்
ஜீவனோடதிபதி பராபரனார் வல
பாரிசமே அர சாளும் இந் நேரம் நீ –தயை

***– வே. சாஸ்திரியார்***

---

1 அரசனே
2 மேன்மை
3 பூமியிடம் வந்து
4 முழுவதும்
5 உபத்திரவமுள்ளதாய்

## திருப்பதம் சேராமல் இருப்பேனோ?

**157. செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**திருப் பதம் சேராமல் இருப்பேனோ–நான்**
தெய்வத்தைத் தேடாமல் பிழைப்பேனோ?

*சரணங்கள்*

1. அருட்கடலாம் ஈசன் அடியவர் பாசன்!
உருக்கம் நிறைந்த விண்ணுயிரான நேசன்! – திரு

2. ஆவியும் ஆத்மமும் ஆண்டவர் பங்கே,
பூவில் அவரல்லால் புகலிடம் எங்கே? – திரு

3. சத்திய மார்க்கமும் சகலமுமான
நித்திய ஜீவனும் நிமலனுமான. – திரு

4. ஆறுதல், தேறுதல் அளித்திடும் சேயன்,
கூறு மகிமையில் சேர்த்திடும் தூயன். – திரு

5. உலையில் மெழுகு போல் உருகுதென் நெஞ்சம்,
மலையாதுன் திருவடி வணங்கினேன் தஞ்சம். – திரு

***– சா. பரமானந்தம்***

## தீயன் ஆயினேன்

**158. (176) முகாரி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**தீயன் ஆயினேன், ஐயா; எளியேன் உற்ற**
தீவினை அனைத்தும் தீரும்;
தேவரீர் மேலே என் பாரம்,
தீயன் ஆயினேன், ஐயா.

*அனுபல்லவி*

மாயவலை வீசுவலு பேயின் வினை தீர,
நேயமுடனே உறுசகாயனாய் எமக்கென்றிங்கு
நிச்சயித்தெழுந்த எங்கள்
அச்சயா[1] திருக்குமாரா. – தீயன்

---

1 கடவுளே

*சரணங்கள்*

1. நன்மை செய்யவே நான் நினைத்தாலும், என்
தன்மை வேறதாய்ப் பின்னம் ஆகுமே;
என்ன என்தன் நீதி கந்தை
அன்ன அருவருப்பாமே;
எத்தனை ஆனாலும் உன்தன்
சித்தம் வைத்தனுக்கிரகிப்பாய். –தீயன்

2. பாவம் மீறி என் ஆவி தள்ளாடி நற்
சீவ பாதையைத் தாவி ஓடியே,
ஆவலாய் அழி வுறும் துர்ச்
சாவின் வழியே தொடர்ந்து
அக்கிரமச் செய்கைகளில்
சிக்கினேன்; ஐயோ, உன் தஞ்சம்! –தீயன்

3. தீது செய்பவன் தேவன் முன்னே உத்ர
வாதியாய் உறு நீதம் உண்டென,
போதம் உற வேத நெறி
ஓதிய ஏசு நாதா, உன்
புண்ணியத்தால் என்னை உய்யப்
பண்ணிடக் கிருபை செய்வாய். –தீயன்

*– யோ. பால்மர்*

**யேசுநாதனே, இரங்கும்**

**159. (64 L) உசேனி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**யேசுநாதனே!–இரங்கும் என்–யேசு நாதனே!**

*அனுபல்லவி*

ஆசைக் கிறிஸ்தென தன்புள்ள நேசனே!
அருளே! தெருளே! பொருளே!
ஆவல் ஆகினேன், மகா பிரலாபம் மூழ்கினேன்;
ஆயா! ஆயா! தூயா! ரட்சியும்;
ஆபத்தினால் பரிதபித்து நிற்கிறேன். – யேசு

*சரணங்கள்*

1. அருமைரட்சகனே! உனை அல்லாமல் ஆதரவார்? ஐயா!
ஆத்துமநாயகன் நீ என்னக்கல்லவோ? அன்புகூர் மெய்யா!
தருணம், தருணம், கைவிடாதேயும்;
தலைவா! நலவா! வலவா!
தாமதியாதே–கிருபைசெய்யும்–சாமி இப்போதே
தாதா! நாதா! நீதா! நீகா!
தருமப்பிர காசனே! பரம சருவேசனே! – யேசு

2. ஐந்துகாயத்தின் கிருபைக்கோட்டையில் அடைக்கலந் தாவே
ஆதாமின் பாவத்தாலே மானிடன் ஆன மெய்வாழ்வே
விந்தைக்கிருபை அளிக்கவேண்டும்;
விமலா! நிமலா! அமலா!
வேறுபண்ணாதே–மிகும்சீறு–மாறுநண்ணாதே,
மேலா! கோலா! நூலா! நீயே
விரும்பிச்சேரும், கோவே! திரும்பிப்பாரும், தேவே! – யேசு

3. உன்னைப்போல் நரர்க்கார் பாடுபட்டது? உரிமைச் சீமானே!
உத்தமமேய்ப்பனே! சத்தியமீட்பனே! உண்மைக் கோமானே!
என்னை ரட்சிப்ப துன்கடன் அல்லவோ?
இறையே! நிறையே! பொறையே!
ஏதம் இல்லானே!–அடியாரைத்–தீது சொல்லானே!
ஏகா! வாகா! ஆகா! இரட்சியும்;
இரக்கமே உன்தஞ்சம்; நெருக்கமே பிரபஞ்சம். – யேசு

***– வே. சாஸ்திரியார்***

## நான் ஒரு பாவ ஜென்மி

**160. (178) நீலாம்புரி** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**ஐயோ, நான் ஒருபாவ ஜென்மி ஆனேனே!**
ஆண்டு ரட்சித் தருள்வாய்,–மனுவேலனே!
உய்யும்படி, தெய்வமே உன்னை அல்லால் எனக்கோர்
ஒதுக்கிட முண்டோ வேறே? – மனுவேலனே!

2. நல் வரமாய்ப் பெற்ற நீதி, சுசி, பாக்கியம்
ஞானம் எலாம் இழந்து,–மனுவேலனே!
சொல்ல வெட்கம் அநீதி, சுசிகேடு, நிர்பாக்கியம்,
துர்ப்புத்தியும் அடைந்தேன், – மனுவேலனே!

3. மாட்சி உறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு[1] கடாக்கி னேனே,–மனுவேலனே!
ஆட்சி கொளும் உன் சுத்த ஆலயமாம் என் நெஞ்சை
அலகைக் கிடம் ஆக்கினேன், – மனுவேலனே!

4. உன்னை முழுப் பெலத்தால் நேசியாமலே நெஞ்சம்
உரங் கொண்ட பாவி ஆனேன்;–மனுவேலனே!
என்னை நிகராக என் பிறனை நேசியாமல் நான்
இகலுற்[2] றிருந்தேனையா, – மனுவேலனே!

5. துப்புர வாம் சுத்தக் கண்ணனே, உன் முன் இன்னும்
துணிகர மாய் நடந்து,–மனுவேலனே!
இப்படி ஜென்ம கன்ம பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய், – மனுவேலனே!

***– யோ. பால்மர்***

**பாவியாம் எனை மேவிப்பார்**

**161. (179) உசேனி** **ரூபகதாளம்**

**கண்ணிகள்**

**பாவியாம் எனை மேவிப்பார், ஐயா–யேசுநாதா, ஸ்வாமி;**
பட்சமாக என் பாவந் தீர் ஐயா.

2. தேவத்ரோகி பாவி நான் அன்றோ,–யேசுநாதா, ஸ்வாமி,
சீர்பதம் துணையன்றி வேறுண்டோ?

3. தீவினையுறு சாவு மேவிற்றே,–யேசுநாதா, ஸ்வாமி;
சித்தம் வைத்திரட்சித்தாள் ஏழையே.

4. சஞ்சல மிகுந்தஞ்சல் ஆயினேன்,–யேசுநாதா, ஸ்வாமி;
தங்கும் உனை விட்டெங்கே ஏகுவேன்?

---

1 வாடிய 2 பகைகொண்டு

5. மனது, வாக்கு, வினைகளில் எல்லாம்,–யேசுநாதா, ஸ்வாமி;
மாசுளோனாய்க் கூசினேன், ஐயா.

6. என்தன் நீதி ஓர் கந்தை அல்லவோ,–யேசுநாதா, ஸ்வாமி;
என்செய்வேனே? மறு தஞ்சம் இல்லையே.

7. அலகையோடெனை உலகம் ஏய்க்குமே,–யேசுநாதா, ஸ்வாமி;
ஆதரவில்லை, பாதுகா, ஐயா.

8. மன்னுயிர்க் கெனத் தன்னுயிர் விட்ட,–யேசுநாதா, ஸ்வாமி;
வந்தெனது நிர்ப்பந்தம் பார், ஐயா.

*– யோ. பால்மர்*

**எனக்காகவே பாடுகள் பட்டீரோ?**

**162. (180) ஆகிரி** **சாபுதாளம்**

*புலம்பல்*

**ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா,–எனக்**
காகவே இத்தனை பாடுகள் பட்டீரோ, யேசுநாதா?
தீதணுகாத பராபரன் சேய் அல்லோ, யேசுநாதா?–நீர்
செய்த குற்றம் அணுவாகிலும் தான் உண்டோ, யேசுநாதா?
பாதகன் நான் அல்லோ கட்டுண்ண வேண்டிய தேசுநாதா?
–சற்றும்
பாவம் இல்லாத நீர் கட்டுண்ணப் பட்டதேன், யேசுநாதா?
வாதை எனக்கு வரத்தகும் அல்லவோ, யேசுநாதா?–சற்றும்
மாசணுகாத நீர் வாதைக்குள் ஆனீரோ, யேசுநாதா?

2. மத்யஸ்தனாய் எனக்காக வந்தீர் அல்லோ, யேசுநாதா?–இந்த
வஞ்சகன் சொந்தப் பிணையாளி நீர் அல்லோ, யேசுநாதா?
எத்தனை பாதகம் செய்தவனாகிலும், யேசுநாதா?–எனை
ரட்சிப்பதுன் கடன் அல்லாமல், ஆர் கடன், யேசுநாதா?
சத்துரு நான் என் றறிந்தும் இருந்தீரே, யேசுநாதா?–கெட்ட
சண்டாளன் சிந்தையை முற்றும் அறிவீரே, யேசுநாதா?
சித்தம் இரங்கி, எனை முகம் பார்க்கவே, யேசுநாதா?
–என்னைத்
தேடி, வலிய வரத் தயவானீரோ, யேசுநாதா?

3. பத்தம் இல்லாததுரோகி நான் அல்லவோ, யேசுநாதா?–உமைப்
பாடுபடுத்தின பாதகன் நான் அல்லோ, யேசுநாதா?
பெத்தரிக்கமான பெருமையினாலே நான், யேசுநாதா?–கெட்ட
பேயைச் சிநேகித்து, இக்கோலம் ஆகினேன், யேசுநாதா?
புத்தி யில்லா மிருகம்போல் ஆயினேன், யேசுநாதா?–மனம்
போன வழியெல்லாம் போய் அலைந்தேங்கினேன், யேசுநாதா!
சித்தம் வைத்தென் பேரில் திருக்கடைக் கண்ணோக்கி, யேசு
நாதா!–உன்தன்
சீர்பதம் சாஸ்வதம் சேவை புரியச்செய், யேசுநாதா?

*– வே. சாஸ்திரியார்*

**எளியேன்மேல் இரங்கையனே**

**163. (181) தன்யாசி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!**
எளியன்மேல் இரங்கையனே

*அனுபல்லவி*

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே;
நிலைவரம் எனில் இல்லை; நீ என் தாபரமே – எத்தனை

*சரணங்கள்*

1. பந்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்தமுறுங் கரம்கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள், தூய சிநேகா! – எத்தனை

2. என்றன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடாதிருக்கையிலே,
உன்றன் மிகுங் கிருபை, ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய், எனை ஆளும்! – எத்தனை

3. ஆயங் கொள்வோன்போல், பாவ ஸ்திரீபோல்,
அருகிலிருந்த கள்ளன்போல்,
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்;
நீ எனக்காகவே மரித்தனை, பரனே! – எத்தனை

4. கெட்ட மகன்போல் துட்டனாய் அலைந்தேன்,
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்;
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல னான்,
எனை ரட்சித்திடல் உன்றன் நிமித்தமே, அப்பனே! - எத்தனை

***- த. பலவேந்திரம்***

### சீர்கெட்ட பாவி ஆனேன்

**164. (183) காம்போதி** **சாபு தாளம்**

*பல்லவி*

**திருமுகத் தொளிவற்று; பெருவினைகளில் உற்றுச்**
சீர்கெட்ட பாவி ஆனேன்;-நான்
ஒரு முகமாய் உனதிடம் மனந்திரும்பிட,
ஊக்கம் அருள், பரனே.

2. துரிச்சையினால் என் அசுத்தம் நிறைந்து நல்
சோபிதம் நான் இழந்தேன்;-பேய்ப்
பரீட்சையினாலும் மயக்கம் அடையும் இப்
பாவிக் கிரங் கையனே.

3. பாதகர் மீதில் பரிதபியாமலும்,
பாவம் பெறாமலும் நீ-சுத்த
நீதியை நோக்கில், உனது சமூகத்தில்
நிற்பவர் ஆர், துய்யனே?

4. தன் புண்ணி யத்தால் எவனும் மன்னிப்புறத்
தக்கவன் இல்லை மெய்யாய்;-எந்தை!
உன் தயையால் உன் திருச்சுதன் மூலமாய்
உண்டு பொறுப் பெனக்கே.

5. மண்ணையே நோக்கி உழன்று தவிக்கும் என்
வஞ்சக நெஞ்சதனை-நேராய்
விண்ணையே நோக்கிடப் பண், இறைவா; உனை
வேண்டி மன்றாடுகின்றேன்.

6. மாறுபாடான இவ் வேழைக்கிரங்கி நீ
மன்னிப்பருள் வதன்றி,-எனக்
காறுதலாக உனது நல் ஆவியை
அனுக்கிரகித்தாள், பரனே.

***- யோ. பால்மர்***

## ஆரும் துணை இல்லையே

**165. (184) முகாரி** **சாபு தாளம்**

***பல்லவி***

**ஆரும் துணை இல்லையே, எனக்**
காதியான்[1] திருப்பாலா;–உன்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், யேசுநாதா.

***அனுபல்லவி***

சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே,
சிலுவை மீதினில் உயிர்விடும்
தேவனே, என் சுவாமி. – ஆரும்

***சரணங்கள்***

1. முந்து மானிடர் தந்த தீவினை முழுவதும் அறவேண்டியே,
முள்முடியுடன் குருசில் ஏறிய முன்னவா, கிருபை கூர்வையே;
சிந்தும் உன் உதிரத்தில் என் வினை தீர்த்திரட்சியும், ஐயனே;
தீயபாவி எனக்கு வேறொரு செயலிடம் துணை இல்லையே!
– ஆரும்

2. தந்தை தாயரும், மைந்தர் மாதரும் சகலரும் உதவார்களே;
சாகும்நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும்
உண்டுமோ?
சொந்தம் நீ எனக்கன்றி, வேறொரு சொந்தமானவர்
இல்லையே,
சுற்றமும், பொருள் அத்தமும்[2] முழபத்தமே,[3] என் தத்தனே!
– ஆரும்

3. கள்ளனாயினும் வெள்ளனாயினும்[4] பிள்ளை நான் உனக்
கல்லவோ?
கர்த்தனே, வலப் பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்தையே;
தள்ளி என்னைவிடாமல் உன்னடி தந்து காத்தருள், அப்பனே.
தயவாய் ஒரு குருசில் ஏறிய சருவ ஜீவ தயா பரா. – ஆரும்

---

1 முன்னவன்
2 செல்வமும்
3 முழு அபத்தமே
4 வெண்ணிறத்தவன்

4. நன்றி அற்றவனாகிலும் எனைக் கொன்று போடுவதாகுமோ?
நட்டமே படும் கெட்ட மைந்தனின் கிட்ட ஓடினதில்லையோ?
கொன்றவர்க் கருள் செய்யும் என்று பிதாவை நோக்கிய
கொற்றவா,[1]
குற்றம் ஏது செய்தாலும் நீ, எனைப் பெற்றவா,
பொறுத்தாள்வையே. – ஆரும்

5. பத்தியேதும் இலாது மாய சுகத்தை நாடிய பித்தனாய்ப்
பாழிலே என்றன் நாள் எலாங் கெடுத் தேழையாகினேன்,
என்செய்வேன்?
சத்ருவான பிசாசினால் வரும் தந்திரம் கொடிதல்லவோ?
தஞ்சம் அற்றவன் ஆகினேன், உன தஞ்சல்[2] கூறும்
அனாதியே. – ஆரும்

***– வே. சாஸ்திரியார்***

**என்னை ஆளும் தயாபரனே**

**166. (185) முகாரி** **சாபுதாளம்**

***பல்லவி***

**ஐயையா, நான் பாவி,–என்னை**
ஆளும் தயாபரனே!

***சரணங்கள்***

1. பொய்யாம் உலக உல்லாசாத்தினால் மனம்
போனவழி நடந்தேன்;–ஏ
சையா, அபயம்! அபயம்! இரங்கும், மே
சையா, என் தாதாவே. – ஐயையா

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்;
எத்தனை தீதுகளோ?–என–து
அத்தனே! என் பிழை அத்தனையும் பொறுத்
தாண்டருளும், கோவே. – ஐயையா

---

1 அரசனே 2 அஞ்சாதே என்று

3. வஞ்சகமோ, கரவோ, கபடோ, மாய்
மாலமோ, ரண்டகமோ?—மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும்,
சமஸ்த நன்மைக் கடலே. — ஐயையா

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும்,
பொறாமையும், ஆணவமும்—விட்
டுய்யும்படி அருள் செய்யும், அனாதி ஓர்
ஏகதிரித்துவனே. — ஐயையா

5. உன்னை யாவற்றிலும் பார்க்கச் சிநேகித்
துனதடியார்களையும்,—நான்
என்னைச் சிநேகிக்கிறாற்போல் சிநேகிக்க
ஏவும் பராபரனே — ஐயையா

***— வே. சாஸ்திரியார்***

## இரங்கும் இரங்கும் கருணைவாரி

**167. (186) மணிரங்கு** **ஏகதாளம்**

***பல்லவி***

**இரங்கும் இரங்கும், கருணைவாரி,**
ஏசு ராசனே,—பவ—நாசநேசனே!

***சரணங்கள்***

1. திரங்கொண்டாவி வரங்கொண்டுய்யச்
சிறுமை பார், ஐயா;—ஏழை—வறுமை தீர், ஐயா. — இரங்கும்

2. அடியன் பாவக் கடி விஷத்தால்
அயர்ந்து போகின்றேன்;—மிகப்—பயந்து சாகின்றேன். — இரங்கும்

3. தீமை அன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன், ஐயா,—தெரிவைப்[1]—புரிகிலேன், ஐயா. — இரங்கும்

4. பாவி ஏற்றும் கவி மன்றாட்டைப்
பரிந்து கேள், ஐயா;—தயை—புரிந்து மீள், ஐயா. — இரங்கும்

***— அ. வேதக்கண்***

---

1 தெரிந்தவை

## சேர் ஐயா

**168. (189) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**சேர், ஐயா; எளியேன் செய் பவ வினை**
தீர், ஐயா.

***சரணங்கள்***

1. பார், ஐயா, உன் பதமே கதி;-ஏழைப்
பாவிமேல் கண் பார்த்திரங்கி,-எனைச் - சேர்

2. தீதினை உணர்ந்த சோரனைப்-பர
தீசிலே அன்று சேர்க்கலையோ?-எனைச் - சேர்

3. மாசிலா கிறிஸ் தேசுபரா,-உனை
வந்தடைந்தனன்; தஞ்சம், என்றே-எனைச் - சேர்

4. தஞ்சம் என்றுனைத் தான் அடைந்தோர்-தமைத்
தள்ளிடேன் என்று சாற்றினையே;-எனைச் - சேர்

5. பாவம் மா சிவப்பாயினும்,-அதை
பஞ்செனச் செய்வேன், என்றனையே;-எனைச் - சேர்

6. தீயர்க்காய்ப் பிணையாய் மரித்த-யேசு
தேவனே, கருணாகரனே,-எனைச் - சேர்

***- யோ. பால்மர்***

## ஐயா உனதருள்புரி

**169. (77) மாஞ்சி** **ஏகதாளம்**

**பல்லவி**

**ஐயா, உனதருள் புரி, அருமை மேசையா!**

### அனுபல்லவி

பொய்யா மருள்வினை, செய்யா துலகதில்
நையா தடிமைகொள், துய்யா, மெய்யா. – ஐயா

### சரணங்கள்

1. ஆதா ரமும் நீ யலதார் திருப் பாதா,
சாதா ரண வேத வினோத சங்கீதா,
காதா ர வினவு,[1] நீ தா எனின் குறை,
தாதா, பர குரு நாதா, போதா! – ஐயா

2. அந்தா தி, அனாதி, பிதா ஒரு மைந்தா;
சிந்தா குலமே[2] தவிர், நீடு சுகந்தா;
உந்தா பரம்[3] அருள் எந்தா,[4] ஞானப்ர
பந்தா,[5] வருசதா னந்தா நந்தா! – ஐயா

3. ஈசா, நசராபுரி மேவிய வாசா,
பூசா[6] விதி மாமறை புகழுபதேசா,
மாசா மிகு பவ நாசா, எருசலை
ராசா, ஒரு சரு வேசா, நேசா. – ஐயா

*– வே. சாஸ்திரியார்*

### ஆண்டவனே கிருபைகூராய்

**170. (60 L) மோகனம்** **சாபு தாளம்**

### பல்லவி

**ஆண்டவனே கிருபை கூராய்–எனக்**
காதாரம் உன்றனின் பாதாரவிந்தம்

### அனுபல்லவி

மீண்டெனின்மேல் தயை பூண்டருள் நாதா
ஈண்டுனின் தாள்பணிந்தேன் திருப்பாதா! –ஆண்

---

1 கேளு
2 மிகு வியாகுலம்
3 உதவி
4 எந்தை
5 வேத முதல்வன்
6 பூசைக்குரியவன்

**சரணங்கள்**

1. துர்க்குணத்தி லுருவானேன்,–பொல்லாத்
தோஷியாய்ப் பேயவன் தோழனாய்ப் போனேன்,
நற்குண மென்னில்நான் காணேன்,–நித்ய
நாச மரண நரகுக்குள்ளானேன்,
சற்குண மன்பு தயைமிகு தேவா!
தாவிப் பிடித்தேனான் மேவிநீ காவா! – ஆண்

2. பாவ ஊற்றெனதுள்ளம் மெய்யே,–பாவம்
பாய்வழி யென்செவி வாய் கண் கால் கையே,
நோவென்னைப் பிசித்ததென் ஐயே!–எனை
நோக்கி யுலகுசொல்லும் ஆறுதல் பொய்யே,
ஏவை புத்திரனழு தேங்கல் நோக்காயோ?
என்பாவச் சேற்றை விட்டென்னை தூக்காயோ? – ஆண்

3. சாபத்துக்காளாய்ப் போனேன்,–சீனாய்த்
தன்னிடி குமுறலின் சத்தங்கேட்டேனே,
கோபத்தின் தீயைக்கண்டேனே,–தேவ
கோஷ்ட முணர்ந்தே கலக்கமுற்றேனே,
ஆபத்தில் நீ என் அடைக்கலம் தஞ்சம்,
ஐயையோ எங்கோடும் என் ஏழைநெஞ்சம் – ஆண்

4. பாடெனக்காய்ப் பட்டாயன்றோ?–என்றன்
பத்தாநின்சாவு நான் சாவதற்கென்றோ?
கேடென்னில் நிற்பதும் நன்றோ?–என்னைக்
கேளாதிருக்க உன்றன் மனங்குன்றோ?
நாடறியப் பாடு பட்டுயிர் தந்தாய்,
நம்பினபேர்க்கா யுயிர்தங்கு சென்றாய். – ஆண்

***– ஞா. சாமுவேல்***

## என்பேரில் தயவாய் இரும்

**171. (190) மோகனம்** **சாபுதாளம்**

***பல்லவி***

**சருவேசுரா, ஏழைப்பாவி–என் பேரிலே**
தயவாய் இரும், சுவாமி

## *அனுபல்லவி*

திரியேக பரதேவா, நெறி மேவும் ஒரு யோவா,
சித்தம் இரங்கிக் காத்துக் கிறிஸ்தின் முகத்தைப் பார்த்து. – சரு

**சரணங்கள்**

1. தந்தை நின் ஒன்றான மைந்தன் தனைக் கொடுத் தித் தகைமை[1]
உலகை நேசித்தாய்;–நின்
சொந்தக் கிருபை தனைச் சிந்தித்துணர மறை தொகுத்தெனக்
குபதேசித்தாய்;
இந்தப் பெரிய நேசம் புந்திக்[2] கொளியதாக்கும்;
எந்தப் படியும் என் நிர் பந்தம் அனைத்தும் போக்கும்! – சரு

2. தேவரீர்க் கேற்காத தீவினைகளைச் செய்தும் தண்டியாமல்
பொறுத்தீர், – நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென் நன்றி
கேட்டை மறுத்தீர்,
ஜீவனே, உமக்குப் பாவி பதில் என்செய்வேன்?
மேவி அடி தொழாமல் ஆவி எங்ஙனம் உய்வேன்? – சரு

3. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமேனும் இல்லாமல் நீதி
வழியைக் கடந்தேன்;–கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடிப், பேயின் மனதுக்கேற்க
நடந்தேன்,
பஞ்ச பாவி கூவிக் கெஞ்சும் ஜெபத்தைக் கேளும்,
தஞ்சம் என்றேன்; உனக்கே அஞ்சல் என்றெனை ஆளும்.–சரு

***– வே. சாஸ்திரியார்***

## தருணம் இதில் அருள் செய்

**172. (191) ஆனந்தபைரவி ரூபகதாளம்**

### *பல்லவி*

**தருணம் இதில் அருள் செய், யேசுபரனே, பாவச் சுமையானது**
தாங்க ஏழையாலே அரி தேங்கல் உற லானேன்

---

1 இவ்விதமாய் 2 புத்தி

***அனுபல்லவி***

மரண மதின் உரமே ஒழித்தலகைத் திறம் அறவே செய்து,
வதையே விளைத்திடு தீவினை சிதைய வகை புரி, பரனே.
– தருணம்

***சரணங்கள்***

1. உலகர் உறு பவமானதைத் தலைமேல் சுமந்த ததனை அற
ஒழிக்க, நண்பர் செழிக்க, வனம் தெளிக்க வந்த பரம்
பொருளே,
பல காலம் இத் தலமே ஒரு நிலையே எனப் புலமீ துன்னிப்[1]
பாழில் அழி ஏழை தனை ஆளவே இவ்வேளை வர. – தருணம்

2. வருத்த முடன் அகப் பாரமே தரித்தோர் தமை, விருப்போடு நீர்
வாரும், எனைச்சேரும், என்ற சீரை அறிந்தே ஏழையேன்;
திருத்தமுடன் எனைக்காத்து, நற்கருத்தை அளித்திருத்த
அருள்
செய்ய, நானும் உய்யக் கருணை பெய்யக் கெஞ்சினேன்,
ஐயனே. – தருணம்

***– யோ. பால்மர்***

## கிருபைகூரும் ஐயனே

**173. (214) மோகனம் ஆதிதாளம்**

**பல்லவி**

**கிருபை கூரும் ஐயனே;–பாவி என்**
சிறுமை தீரும், மெய்யனே.

**அனுபல்லவி**

பொறுமையே மிகுந்த அருமை தேவனே, நீர். – கிருபை

**சரணங்கள்**

1. ஆறு லட்சண தேவா,–அடியார்க்குத்
தேறுதல் அருள்தா, வா;–திருமறை

---

1 நினைத்து

கூறும் கருணை நாவா,-குறை அறப்
பேறு பெறச் செய் ஜீவா,-பெரியவா,
ஈறிலா துயர்ந்த மாறிலா வஸ்துவே, நீர் - கிருபை

2. பத்தர் தொழும் சருவேசா,-பரிந்தருள்
வைத்த சத்திய வாசா,-மகா பரி
சுத்தக் கிருபையின் நேசா,-சுயாதிப
முத்தொழில் தரும் ஈசா, முழுதும் என்
மத்தியஸ்தனான நித்ய கிறிஸ்துவே, நீர் - கிருபை

3. பாவத்தின் வழி நடந்தேன்,-பசாசுடன்
சாபத்திலே கிடந்தேன்,-சதா நித்ய
கோபத்தையே அடைந்தேன்,-கொடுமையின்
ஆபத்தால் மனம் உடைந்தேன்,-அடிமையை
மாபத்திரத் தோடென் பரிதாபத்தைப் பார்த் திரங்கி. - கிருபை

4. சரணம், சரணம், நாதா!-தவிக்கிற
தருணம், தருணம், வேதா!-தயாபர
கிரணம் இலங்கும் பாதா!-கிலேசங்கள்
திரணம்[1] உறாத நீதா!-திடுக்கிடும்
மரண வேளையிலும் கரணம்[2] மயங்கும் போதும். - கிருபை

***- வே. சாஸ்திரியார்***

### எந்தன் முகம் பார்த்திரங்குவாயே

**174. (216) உசேனி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**தந்தை சருவேஸ்பரனே, உந்தன் மகன் யேசுவுக்காய்**
எந்தன் முகம் பார்த்திரங்குவாயே-இம்மாத்ரம் நீயே,

***சரணங்கள்***

1. அந்தமதிலா அகாரி[3] சந்ததமுமே விசாரி,
விந்தை அருள் மேவும் அசரீரி, மெய்ஞ்ஞான வாரி! - தந்தை

---

1 அற்பம் 2 புத்தி 3 கடவுள்

2. ஞானபரனே, ஒருத்வ மானமுதலே, திரித்வ
மேன்மை வடிவான மகத்வ மேலான தத்வ! - தந்தை

3. விற்பன விவேக நூலா, அற்புதமான சீலா,
நற்பரம லோக அனுகூலா, நன்மை க்ருபாலா! [1] - தந்தை

4. ஆதிமுதலான நேசா, வேதமறை மீதுலாசா,
பேதகம் இலாத சத்ய வாசா, ஞான ப்ரகாசா! - தந்தை

5. வந்த வினை யாவும் தீரும், நிந்தை அணுகாமல் காரும்;
சிந்தை மகிழ்ந்தே, கண்ணாலே பாரும்; சீர்பாதம் தாரும்!
- தந்தை

***- வே. சாஸ்திரியார்***

### எளியனுக்கிரங்குவாயே

**175. (217) கல்யாணி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**இறைவன் நீயே;-எளியனுக்**
கிரங்குவாயே.

**அனுபல்லவி**

மறை விளக்கி இந்நரரை மீட்க,-இம்
மானுவேல் எனும் நாமம் மேவியே,
தரையில் வந்தவ தரித்த ஏழைகள்
தாதா, ஏசுநாதா, என். - இறை

**சரணங்கள்**

1. அண்டர்கள்[2] போற்றும் விண்ணோனே-எங்கள்
ஆதரவாய் உற்ற கோனே,-நல்ல
தொண்டர்களுக் கருள் புரியும் நன் மனத்
தூயா, அன்பர் நேயா, என். - இறை

---

1 கிருபையளிப்பவனே 2 தேவதூதர்கள்

2. நன்று திகழ்[1] பெரியோனே-திவ்ய
ஞானம் எனும் பெயரோனே,-இயல்
அன்றும் இன்றும் ஒன்றுபோல உறும்
ஐயா, ஒளிர் மெய்யா, என். - இறை

3. எங்கும் நிறைந்த வல்லோனே,-அன்பர்க்
கின்பு செய்கின்ற நல்லோனே,-மிக
இங்கிதமாய்[2] உனை ஏத்தித்[3] தொழ அருள்
ஈவாய்; க்ருபை ஆவாய்; என். - இறை

***- யோ. பால்மர்***

**தேவா, இரக்கம் இல்லையோ?**

**176. (218) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தேவா, இரக்கம் இல்லையோ?-இயேசு**
தேவா, இரக்கம் இல்லையோ?

***அனுபல்லவி***

ஜீவா, பரப்ரம[4] ஏ கோவா, திரித்துவத்தின்
மூவாள் ஒன்றாக வந்த தாவீதின் மைந்தன், ஒரே -தேவா

***சரணங்கள்***

1. எல்லாம் அறிந்த பொருளே,-எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே,-கொடும்
பொல்லா மனதுடைய கல்லான பாவிகளைக்
கொல்லா தருள் புரியும் நல்லாயன் யேசு நாதா! - தேவா

2. எங்கும் நிறைந்த ஜோதியே,-ஏழைப்
பங்கில் உறைந்த நீதியே,-எங்கள்
சங்கடமான பாவ சங்கதங்களை[5] நீக்கும்
துங்க இஸ்ரவேலின் வங்கிஷ க்ரீடாபதி! - தேவா

---

1 ஒளிவீசும்
2 இனிமையாய்
3 துதித்து
4 பரம்பொருள்
5 நட்புகளை

3. வேதாந்த வேத முடிவே,–ஜெக
ஆதாரம் ஆன வடிவே,–ஐயா,
தாதாவும் எமைப் பெற்ற மாதாவும் நீயே; யேசு
நாதா, ரட்சியும், வேறே ஆதாரம் எமக்கில்லை. – தேவா

***– வே. சாஸ்திரியார்***

**பரனே, திருக்கடைக்கண் பாராயோ?**

**177. (219) ஹரிகாம்போதி ஆதி தாளம்**

***பல்லவி***

**பரனே, திருக்கடைக்கண் பாராயோ?–என்றன்**
பாவத்துயர் அனைத்தும் தீராயோ?

***சரணங்கள்***

1. திறம் இலாத எனை முனியாமல்,[1]–யான்
செய்த குற்றம் ஒன்றும் நினையாமல். – பரனே

2. மாய வலையில் பட்டுச் சிக்காமல்,–லோக
வாழ்வில் மயங்கி மனம் புக்காமல். – பரனே

3. அடியேனுக் கருள் செய் இப்போது,–உன
தடிமைக் குன்னை அன்றிக் கதி ஏது? – பரனே

4. வஞ்சகக் கவலை கெடுத் தோட்டாயோ?–என்றன்
மனது களிக்க வர மாட்டாயோ? – பரனே

5. ஏசுவின் முகத்துக் காய் மாத்ரம்–எனக்
கிரக்கம் செய்யும்; உமக்கே தோத்ரம்! – பரனே

***– வே. சாஸ்திரியார்***

1 கோபிக்காமல்

## என் கலி நீங்கும்படி நல்பாங்கு பரியாயோ?

**178. (220) முகாரி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**என் ஐயா, தினம் உனை நம்பி நான்**
இருப்ப தறியாயோ?–மன
தேங்கும் என் கலி நீங்கும் படி நல்
பாங்கு புரியாயோ?

***அனுபல்லவி***

அன்னை யிடத்தில் என்னை உருவதாய்
வகுத்தவா, கிறிஸ்தையா எனதையா,
அருள் செய்யாதது மெய்யா இது? – என்

***சரணங்கள்***

1. குற்றத்தால் உனைக்கிட்ட என் மனம்
கூசி நாணுதே;–என்தன்
கோதும்[1] நான் செய்த தீதும் மனதில்
கூடத் தோணுதே;
சுற்றும் உலகச் சத்துருப் பகை
சூழக் காணுதே;
சுருதி மொழி உறுதி தனைக்
கருதி வந்தேன்; பொறுதி அருள்! – என்

2. உன்னை அல்லாமல் பின்னை வேறெனக்
குதவி இல்லையே;–என
துற்ற ஜனமும் சுற்றத் தோர்களும்
உரிமை இல்லையே;
பின் எவரிடம் போவேன், சொல்? அது
பெரிய தொல்லையே;
பேசும் விசு வாசம் வளர்
நேசக் கதிர் வீச அருள்! – என்

---

1 குற்றமும்

3. அத்தனே, உன்றன் ரத்தத்தால் எனை
ஆற்றித் தேற்றையா,-தேவ
ஆவியாகிய ஈவெனும் உன
தருளை ஊற்றையா,
நித்தனே, என்றன் குற்றத்தை எல்லாம்
நீக்கி ஆற்றையா,
நேசா, பவ நாசா, மறை
வாசா, ஏசு, ராசா அருள்! - என்

***- மரியான் உபதேசியார்***

**எனைத் தாங்கி அருள், கருணைவாரி**

**179. (222) சைந்தவி ஆதி தாளம்**

***பல்லவி***

**தருணமே, பரம சரீரி; எனைத்**
தாங்கி அருள், கருணைவாரி.

***அனுபல்லவி***

உரிமை அடியர் அனுசாரி,-உயர்
எருசலை நகர் அதி காரி, அதி - தரு

**சரணங்கள்**

1. வரர்[1] அடி தொழும் வெகு மானி,[2]-பரன்-மகிமை ஒளிர்
தேவ சமானி,
நரர் பிணை ஒரு பிரதானி,-யேசு-நாயகன் என தெஜமானி,
அதி. - தரு

2. ஆதாரம் உனை அன்றி யாரே?-எனை-அன்பாய்த் திருக்கண்
கொண்டு பாரே;
பாதாரவிந்தம்[3] கதி சேரே,-இஸ்ரேல்-பார்த்திபன் தவிது
வங்கிஷ வேரே, அதி. - தரு

---

1 வானோர் 2 பெரியோர் 3 பாதமாகிய தாமரை

3. நித்த நித்த மாக என்றன் மேலே–வருவ–தெத்தனை துன்
பங்கள் ஒருக்காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே–எனக்–குத்தம துணைதான்,
மனு வேலே, அதி. – தரு

4. கங்குல்[1] பகலும் துயரம், கோவே;–வரும்–கலக்கம் ஒழித்
தெனைத் தற் காவே!
பங் கெனக்குத் தந்த மெய் மன்னாவே,–ஏழைப்–பாவியை
ரட்சியும், ஏசு தேவே! அதி. – தரு

***– வே. சாஸ்திரியார்***

## எனின் சிறுமை தீர்த்தருள்

**180. (224) கமாஸ்** **சாபு தாளம்**

***பல்லவி***

**ஜீவனேசு கிருபாசன்னா, எனின்**
சிறுமை தீர்த்தருள் ஓசன்னா!

***சரணங்கள்***

1. காவில்[2] ஆதஞ் செய் பாவமுடவே,
கடிய பேய் நரகோடவே,
பூவுள்ளோருமைப் பாடவே, பரி
பூரண க்ருபை நீடவே. – ஜீவ

2. தொண்டர் பாதக ரண்டகங் கெட,
துயரமேபடும் அத்தனே,
தொண்டன் நின் சரணண்டினேன்; எனின்
நோயைத் தீர், பரிசுத்தனே! – ஜீவ

3. அடியர் அடி பெற, அலகை அழல் விழ,
அரிய பொன்முடி கொடுபட,
படியில் நான் படுங் கொடிய விடர் கெட,
பலது தீமையு முறிபட. – ஜீவ

***– தேவசிகாமணி சாஸ்திரியார்***

---

1 தோட்டத்தில் 2 இரவு

## இழிஞன் எனை மீட்டருள்

**181. (225) காம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**யேசுவே, கிரு பாசனப்பதியே, கெட்ட**
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, கிரு பாசனப்பதியே.

***சரணங்கள்***

1. காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,
– யேசுவே

2. பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி[1] ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி.
– யேசுவே

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள[2] எங்கள் உப கார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து,
– யேசுவே

4. பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை,
புண்ணியனே, உன் சரணம் நண்ணி[3] அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து, – யேசுவே

***– யோ. பால்மர்***

---

1 செய்கையுள்ளோன் 2 வல்லமையுள்ள 3 விரும்பி

## தேவா, திருக்கடைக்கண் பார்

**182. (228) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தேவா, திருக்கடைக்கண் பார், ஐயா!**
வினைதீர், ஐயா, வினைதீர், ஐயா.

***அனுபல்லவி***

கோவாய் உலகில் வந்த யோவா, சச்சிதானந்தா! – தேவா

**சரணங்கள்**

1. மேவிய தயை நிரம்பி, ஆவலுடனே விரும்பி,
பாவி எனையே திரும்பிப் பார், ஐயா, ஸ்வாமி! – தேவா

2. பொல்லா உலகம் பகை, எல்லாச் செல்வமும் புகை;
வல்லா, உனின் கிருபை கூர், ஐயா, ஸ்வாமி. – தேவா

3. அந்தி சந்தியும் விடாமல், தந்திரப் பசாசடாமல்,
எந்த விதமும் கெடாமல் ஆளுமே, ஸ்வாமி! – தேவா

4. சர்ப்பனை[1] யதாய் உலகம் இப்படித் துரோகம் செய்தால்,
எப்படி அடிமை கரை யேறுவேன், ஸ்வாமி! – தேவா

5. எத்தனை துயர் அடைந்தேன்! மெத்தவும் மன துடைந்தேன்;
சித்தம் இரங்காய், என் மணவாளனே, ஸ்வாமி! – தேவா

6. இந்தத் தினத்தில் எனக்குத் தந்த சுகத்துக்குனக்கு
வந்தனம்! அனந்தனந்தம் ஸ்தோத்திரமே, ஸ்வாமி! – தேவா

***– வே. சாஸ்திரியார்***

1 வஞ்சகம்

## கிருபை புரிந்தெனை ஆள்

**183. (120 L.) சதுருலகாம்போதி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**கிருபை புரிந்தெனை ஆள்;−நீ பரனே!**
கிருபை புரிந்தெனை ஆள்;−நிதம்

*சரணங்கள்*

1. திரு அருள் நீடுமெய்ஞ்ஞான திரித்து,
வரில்நரனாகிய மா துவின் வித்து! − கிருபை

2. பண்ணின பாவமெலாம் அகல்வித்து,
நிண்ணயமாய் மிகவுந் தயைவைத்து, − கிருபை

3. தந்திரவான் கடியின் சிறைமீட்டு,
எந்தை, மகிழ்ந்துன்றன் அன்புபாராட்டு. − கிருபை

4. தீமை உறும் பல ஆசையை நீக்கிச்
சாமி! என்னை உமக்காலயம் ஆக்கி. − கிருபை

5. தொல்வினையால் வரும் சாபம் ஒழித்து,
நல் வினையே செய் திராணி அளித்து. − கிருபை

6. அம்பரமீதுறை வானவர் போற்ற
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த. − கிருபை

***− மதுரநாயகம்***

## பாவியாகவே வாறேன்

**184. (182) மோகனம்** **சாபு தாளம்**

*பல்லவி*

**பாவியாகவே வாறேன்;[1] பாவம் போக்கும்**
பலியாம் என் யேசுவே, வாறேன்.

---

1 வருகின்றேன்

### *சரணங்கள்*

1. பாவக்கறை போமோ என் பாடால்? உன் பாடாலன்றிப்
போவதில்லை என்றே பொல்லாத பாவியே நான் –பாவி

2. நீ வா, உன் பாவம் என்னால் நீங்கும் என்று சொன்னீரே;
தேவா, உன் வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும் நான் –பாவி

3. பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான் –பாவி

4. ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்,
தாவென்று வேண்டிய சாவில் சஞ்சரித்த நான் –பாவி

5. துன்பங்கள் நீக்கி உன்னைத் தூக்கி அணைப்பேன் என்றீர்;
இன்ப வாக்குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே நான் –பாவி

6. உன்னைச் சேர ஒட்டாமல் ஊன்றிய தடை யாவும்
உன்னன்பால் நீங்கி நல் உயிர் அடைந்தோங்கவே நான் –பாவி

***– ஏ. வெப்.***

## ஐயையா, நான் வந்தேன்

**185. (202) முகாரி** **சாபு தாளம்**

### *பல்லவி*

**ஐயையா, நான் வந்தேன்;–தேவ**
ஆட்டுக்குட்டி, வந்தேன்.

### *சரணங்கள்*

1. துய்யன் நீர் சோரி[1] பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர்,–தயை
செய்வோம் என்றே; இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

---

1 இரத்தம்

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன், என்று–நில்லேன்;
தெள் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை, எத்தனையோ! – இவை
திண்ணம் அகற்றி எளியனை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும்;–மனம்
தேற்றிக்கொண்டேன் உந்தம் வாக்குத்தத்தங்களால்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

5. மட்டற்ற உம் அன்பினால் தடை எதும்
மாறி அகன்றதுவே,–இனி
திட்டமே உந்தம் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி, வந்தேன் – ஐயையா

***– ஆ. வேதக்கண்***

### ஏற்றுக் காத்திடும் யேசுவே

**186. (198) கல்யாணி** **சாபு தாளம்**

**பல்லவி**

**என்னையும் உம தாட்டின் மந்தையோ**
டேற்றுக் காத்திடும், யேசுவே.

**சரணங்கள்**

1. வன்னியான[1] தோர் அலகைப் பேய் தனை
வதைத்திட ஞானப் பெலத்துடன் சிறந்–து
இந்நிலத்தினில் வந்துதித்த நல்
ஏசுவே, எனைச் சேர்த்திடும். – என்னையும்

1 நெருப்பான

2. ஐயிருபது ஆட்டினில் ஒன்று
அகன்றிட, மனம் உகந்து கோன்,–அதை
மெய்யதாகவே தேடுவான் என்ற
மேய்ப்பரே, எனைச் சேர்ந்திடும். – என்னையும்

3. வாசலாகவே இருக்கிறேன், எனால்
வந்தவன் மனம் நொந்திடான்,–வெகு
நேசமாகவே வாழ்வான், என்ற நல்
நிமலனே, எனைச் சேர்ந்திடும். – என்னையும்

4. நல்ல மேய்ப்பன் நான் என மொழிந்த என்
நாதனே, ஞான போதனே,–ஜீவ
புல்லுள்ள ஸ்தலந் தன்னில் கொண்டெனைப்
போஷித்து முசிப்பாற்றிடும். – என்னையும்

5. மேய்ப்பராகவே இருக்கிறீர், எந்தம்
மேய்ச்சலும் நீர் தாமலோ,–ஞான
வாய்ப்புள்ள சத்ய மறையில் மேய்ந்து நான்
வளர்ந்திட அருள் புரிந்திடும். – என்னையும்

***– மரியான் உபாத்தியாயர்***

**சித்தம் கலங்காதே**

**187. (145 L.) கமாஸ்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**சித்தம் கலங்காதே, பிள்ளையே,**
செய்வதெ னென்று.

**சரணங்கள்**

1. சுத்தனுக்குன் நிலை காட்டு,
குவலையெல்லாம் நீ யோட்டு,
அத்தனே உந்தனை மீட்டு
அரவணைப்பார் நீ சாட்டு. – சித்தம்

2. மெய்யானுக்குன் குறை சொல்லு,
வேண்டியதடைந்து கொள்ளு,
துய்யனிடம் நீ செல்லு,
துர் ஆசாபாசங்கள் வெல்லு. – சித்தம்

3. எங்கே நானேகுவே னென்று
ஏங்கித் தவிக்காதே நின்று,
துங்க னெல்லாத்தையும் வென்று
சுகமளிப் பாரோ வென்று. – சித்தம்

4. பரலோக வாழ்வை நாடு,
பரன் தயவை நீ தேடு,
தரை யின்பம் விட்டுப் போடு,
தகாக் கவலை விட் டோடு. – சித்தம்

*– ஞா. சாமுவேல்*

## யேசு ராசா எனை ஆளும்

**188. (76) தேரடி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**யேசு ராசா,–எனை–ஆளும் நேசா!**

***சரணங்கள்***

1. மாசிலா மணி ஆன முச்சுடர்
மேசியா அரசே,–மனு
வேலே, மாமறை நூலே, தேவ செங்
கோலே, இங்கெனின் மேலே அன்பு செய். – யேசு

2. தாவீ தரசன் மைந்தா,–நின்
சரணம், சரணம், எந்தா!–சதா
னந்தா வா னந்தா, உ
வந்தாள்[1] மிக வந்தனம், வந்தனம்! – யேசு

---

1 உவப்புடன் ஆள்

3. ஐயா, என் மனம் ஆற்றி,–உன
தடிமை என்றெனைத் தேற்றிக்,–குண
மாக்கி, வினை நீக்கிக், கை
தூக்கி, மெய்ப் பாக்கியம் கொடு. – யேசு

4. சுத்த திரித்துவ வஸ்துவே,–சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே,–பரி
சுத்தனே, கரி சித்தெனை இ
ரட்சித் தடிமைகொள்; நித்தியம் தோத்திரம்! – யேசு

5. மங்களம் ஈசாவே,–வளம் மிகும்
சங்கையின் ராசாவே,–நரர்
வாழ்வே, மன் னாவே, மெய்த்
தேவே, உமக் கோசன்னாவே. – யேசு

***– வே. சாஸ்திரியார்***

## ஆரிடத்தினில் ஏகுவோம்?

**189. (200) சாவேரி** **சாபு தாளம்**

***பல்லவி***

**ஆரிடத்தில் ஏகுவோம்?–எம் ஆண்டவனே,**
ஆரிடத்தில் ஏகுவோம்?

***அனுபல்லவி***

ஆரிடத்தில் ஏகுவோம்? சோராநித்திய ஜீவ
நேரார்[1] வசனங்கள் உம்சாரில் இருக்க, இனி. – ஆரி

***சரணங்கள்***

1. பாவிகளாம் எங்களுக்கு–உமையல்லாது
தாவரமில்லை; நீரே
ஜீவன் தனையுடைய தேவ குமாரனாக
மேவு கிறிஸ்தென்றுமையே–ஆவலுடன் நம்பினோம். – ஆரி

1 நன்னெறி

2. போனவர்போல நாங்களும்–உமை நெகிழ்ந்து
போவதில்லை, பரமனே,
ஞானோபதேச குருவான உம்மை அண்டின
ஈனர் இனிதுற்ற உமது–தானமதைப் பிரிந்து. – ஆரி

3. உற்றார் சிநேகர் யாரையும்–எம் வீடுவாசல்
உள்ள பொருளனைத்தையும்
முற்றாய் வெறுத் தும்மையே பற்றியிருக்க நாங்கள்
தெற்றாய்,[1] இனியும்மைநன்றி–யற்றோர்போலே நெகிழ்ந்து.
– ஆரி

4. பொன் னுலகத் திருந்தெம்மைப்–புரக்க வந்த
புண்ய நாதன் நீரல்லவோ?
பின்ன பேதகமற்ற மன்னவனே, உமது
நன்னய முகப்பிர–சன்ன மதனை விட்டு. – ஆரி

***– யோ. பால்மர்***

**வேறொரு துணை இல்லை**

**190. (226) காம்போதி** **சாபு தாளம்**

***பல்லவி***

**நின் பாதம் துணை அல்லால், வேறொரு துணை**
இல்லை,–
நித்ய பரம போதா.

***அனுபல்லவி***

என் பாவம் போக்கியே கிருபை புரியும், சுவாமீ,
ஏக வஸ்துவான ஏசுக் கிறிஸ்து நாதா! – நின்

**சரணங்கள்**

1. ஆதி மனிதருக்கன் றோதியபடி மனு அவதாரமாய்ப் பிறந்தீர்;
ஜாதி அனைத்தும் உய்ய,[2] நீதிக்கென்று தலைசாய்த்துக்
குருசில் இறந்தீர்;
வேதம் முழுதும் நிறைவேற்றிக் கடைசியிலே வெற்றி முடியும்
சிறந்தீர்;

---

1 நிச்சயமாய் 2 பிழைக்க

ஏதம்[1] இல்லாத அ னாதி திருமகனே.
எங்கும் நிறைந்திலங்கும் ஏசுகிறிஸ்தென் தேவா! – நின்

2. தேவரீருக் கேற்காத குற்றம் செய்திருந்தாலும், சித்தம் இரங்கி வாரும்;
மேவி எனது வினை யாவும் அகல இந்த வேளை எனையும் காரும்;
பாவிக்குதவியாக, மனுவேலே, நீர் பட்ட பாடனைத்தையும் பாரும்;
ஆவலாக உனை அடைந்து சரண் புகுந்தேன்;
ஆபத்தை நீக்கும், ஐயா, இப்போ மெய்யாய்! – நின்

***– வே. சாஸ்திரியார்***

### சிலுவைமிசைக் கண்டேனே

**191. ஆரபி** **ஆதி தாளம்**

**கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை**
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை,[2]
உள்ளமுவப் புறுதேனை, உயிர்க்குயிரை, உலவாத[3]
தெள்ளமுகைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

2. படிசாய்த்த[4] பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர் திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்திழி[5] செங் குருதியுக,[6]
முடிசாய்ந்த பெருமானை மூதலகை[7] தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே.

3. மூவினைக்கு மும்முதலாய், மும்முதலு மொருமுதலாந்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய[8] நல்லறத்தின் தனித்தாயைத்
தீவினைக்கோர் அருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே.

---

1 குற்றம்
2 பரிசுத்த கண்ணின் செல்வப் பெருக்கை
3 ஒழியாத
4 பூமி சாயச் செய்த
5 வருத்தப்பட்டு
6 சிந்த
7 பழைய பிசாசின்
8 துதிக்கமுடியாத

4. மூவாத முதல்வனை, முதுசுருதி மொழிப்பொருளை,
ஓவாத பெருங்குணத்த உத்தமனை, உலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத்[1] துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே.

5. மறம் வளர்க்குங் களருளத்தை[2] வளமலிதண்[3] பணையாக்கி
அறம் வளர்க்கும் அருண்முகிலின் அன்புமழை மாரிபெய்து
புறம் வளர்க்கும் இரக்ஷிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்
திறம் வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

6. காயொளியில்[4] கதிர்பரப்புங் களங்கமில் நீதியின் சுடரைப்
பாயொளிகொள்[5] பசும்பொன்னை, பணிக்கருஞ்[6] சிந்தா
மணியைத்
தூயொளிகொள் நித்திலத்தைத்[7] தூண்டாத சுடர் விளக்கைச்
சேயொளிகொள்[8] செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

*– ஹெ.ஆ. கிருட்டிணன்*

## உன்தன் சிலுவை என் மேன்மை

**192. பைரவி** **ரூபக தாளம்**

*பல்லவி*

**விந்தை கிறிஸ்தேசு ராசா!**
உந்தஞ் சிலுவை என் மேன்மை.

**அனுபல்லவி**

சுந்தர மிகும் இந்த பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் – விந்தை

**சரணங்கள்**

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிக விருப்பினும்,
குருசை நோக்கி பார்க்க எனக்
குரிய பெருமை யாவும் அற்பமே. – விந்தை

---

1 சரீரமடைந்து
2 உவர் நிலமாகிய மனதை
3 செழிப்பு மிகுந்த
4 எரியுமொளிபோன்ற
5 பரவுமொளிகொண்ட
6 சொல்லுதற்கரிய
7 முத்தை
8 மிக்க ஒளியைக்கொண்ட

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம், வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்தே மேன்மையாகினேன் - விந்தை

3. சென்னி, விலா, கை, கானின்று
சிந்துதோ! துயரோடன்பு;
மன்னா, இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன். - விந்தை

4. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன். - விந்தை

***- வே. சந்தியாகு***

## ஆசையாகினேன் கோவே

**193. (208) யமுனாகல்யாணி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**ஆசையாகினேன், கோவே-உனக்**
கனந்த ஸ்தோத்திரம், தேவே!

***அனுபல்லவி***

யேசுகிறிஸ்து மாசத்துவத்து ரட்சகா, ஒரே தட்சகா![1] - ஆசை

***சரணங்கள்***

1. வேதா, ஞானப் பர்த்தா,[2]-என்-தாதா, நீயே கர்த்தா;
மா தாரகம் நீ என்றே, பரமானந்தா, சச்சிதானந்தா. - ஆசை

2. கானான் நாட்டுக் கரசே,-உயர்-வான் நாட்டார் தொழும் சிரசே,
நானாட்ட முடன் தேடித், தேடி நாடிப், பதம் பாடி. - ஆசை

---

1 தாங்குவோனே 2 கணவன்

3. வீணாய் காலம் கழித்தேன்;-சற்றும்-தோணாமல் நின்று விழித்தேன்
காணா தாட்டைத் தேடிச் சுமந்த கருத்தே, எனைத் திருத்தே.
- ஆசை

4. வந்தனம், வந்தனம், யோவா!-நீ-சந்ததம் சந்ததம் கா, வா,
விந்தையாய் உனைப் பணிந்தேன், சத்ய வேதா, யேசு நாதா!
- ஆசை

***- வே. சாஸ்திரியார்***

**ஈசனே, கிறிஸ்தேசு நாயகனே**

**194. காம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஈசனே! கிறிஸ்தேசு நாயகனே! உன்றன்**
இராஜ்யம் வருவதாக!
ஈசனே! கிறிஸ்தேசு நாயகனே!

**சரணங்கள்**

1. பாசமுறும் எழில் பரலோக ராஜியம் வருக!
பாரில் நரர் உயர்தர வாழ்வு பெறுக!
நேச அன்பின் அருட்பிரகாச நெறிநேர் பெருக!
நீச அநியாய இருள் தேசத்தில் நில்லாதொழிக! - ஈச

2. நல்லறிவு என்னும் கலம் நாடும் சமத்துவ பலம்,
வல்லமைக்குன்றாய்த் திகழும் வாய்மையாம் நலம்,
எல்லோருமே யாம் ஓர்குலம் ஏகதாயின் சேயர் எனும்
பல்லவியைப் பாடும் உளம் கொள்ளுவதாக இந்நிலம். - ஈச

3. அஞ்ஞானம் வேரோடழிய அலகையின் பேரொழிய,
அத்தன் உனைப் பார் அறிய, ஆவிக்குரிய
மெய்ஞ்ஞான அனலெரிய, விண்ணவா! நீயே பெரிய
வேந்தனாய் ஆட்சி புரிய வேண்டும் அருள்தா, நிறைய. - ஈச

***- தே.அ. ஞானபாணம்***

## நித்திய கன்மலை எனக்காய் பிளந்தது

**195. (256) முகாரி** **சாபுதாளம்**

**பல்லவி**

**நித்திய கன்மலை எனக்காய்ப்-பிளந்தது**
நேயமாய் மறைந்துய்குவேன்

**சரணங்கள்**

1. சுத்த உதிரமும் நீரும் வடிந்தது,
தூயன் விலாவினின்று;-அதால்
சுத்தமடைந்து பாவக்குற்றம் நீங்கிச்
சுகமாக வாழ்வேனே. - நித்திய

2. என்றன் கிரியைகளால் தேவ நீதிக்கு
ஈடு நான் செய்வதில்லை;-தினம்
சிந்துகினிங் கண்ணீர், ஏதேது செய்கினும்,
தீங்கு செய்வதில்லை - நித்திய

3. கொண்டுவரக் கையிலொன்று மில்லை, உன்
குருசுடன்தான் ஒன்றினேன்;-குருதி
கொண்டு கழுவி உடுத்திப் பெலனருள்,
கோவே; அல்லாது துய்ந்திடேன் - நித்திய

4. ஜீவனிருக்கையில், சாவில் கண் மூடுகையில்,
தெரியாவுலகிற் செல்கையில்,-ஒளி
மேவு பத்ராசன் மீதுனைக் காண்கையில்
விரைந்துனில் மறைந்துய்குவேன் - நித்திய

***- த. பலவேந்திரம்***

## நம்பி வந்தேன்

**196. (247) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**நம்பிவந்தேன் மேசியா, நான் நம்பிவந்தேனே,−திவ்ய**
சரணம்! சரணம்! சரணம் ஐயா, நான் நம்பிவந்தேனே.

***சரணங்கள்***

1. தம்பிரான் ஒருவனே, தம்பமே[1] தருவனே;−வரு
தவிது குமர குரு பரமனுவேலே, நம்பிவந்தேனே. − நான்

2. நின்பாத தரிசனம் அன்பான தரிசனம்;−நித
நிதசரி தொழுவ திதம் எனவும் உறுதியில் நம்பிவந்தேனே.
−நான்

3. நாதனே, கிருபைகூர்; வேதனே, சிறுமைதீர்;−அதி
நலம் மிகும் உனதிரு திருவடி அருளே நம்பிவந்தேனே − நான்

4. பாவியில் பாவியே, கோவியில் கோவியே,[2]−கன
பரிவுடன் அருள்புரி, அகல விடாதே; நம்பிவந்தேனே − நான்

5. ஆதி ஒலோலமே,[3] பாதுகா காலமே−உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த; நம்பிவந்தேனே − நான்

***− வே. சாஸ்திரியார்***

## ஏசுநாதா உன் அடைக்கலமே

**197. சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**அடைக்கலம் அடைக்கலமே, இயேசுநாதா, உன்**
அடைக்கலம் அடைக்கலமே!

---

1 பற்றுக்கோடு 2 கோபம் உள்ளவன் 3 ஒலி (திருவார்த்தை)

***அனுபல்லவி***

திடனற்றுப் பெலனற்றுன் அடியுற்றழும் ஏழைக்-கு. – அடை

***சரணங்கள்***

1. ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே,
அன்புள்ள பிதா உனை விட்டகன்று பிரிந்தேனே;
மோசமதை யேயலால் மற்றொன்றையும் காணாமலே
தோஷமொடு சேர்ந்தனன் துரத்திடாது சேர்த்தருள்! – அடை

2. கட்டுப்படாக் காயமதின் கெட்ட ரணம் போலவே
மட்டுப்படாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்;
கெட்டவனே போவெனக் கிளத்தினும்[1] நியாயமே,
கிட்டிவந்தலறும் ஏழைக் கெஞ்சுதல் கேளய்யனே! – அடை

3. சிந்திய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
நொந்துரு கெனதுமனச் சஞ்சல மகற்றிடும்;
பந்தமிகும் பாவி என்றன் கெஞ்சிடுங் கரத்தினை
எந்தவிதமுந் தள்ளாமல் இரங்கிடு மையனே! – அடை

4. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதினில் எனக்கும் பங்கில்லையோ?
அன்றுனது பக்கமதில் ஆயிருந்த கள்ளனுக்கு
இன்றுபர தீசிலிருப்பா யென்றுரைத்தா யல்லவோ? – அடை

***– தேவசகாயம் உபாத்தியாயர்***

## தேவனே நான் உமதண்டையில் சேர்வதே

**198. ஆனந்தபைரவி** **ஏகதாளம்**

***பல்லவி***

**தேவனே, நான் உமதண்டையில்–இன்னும் நெருங்கிச்**
சேர்வதே என் ஆவல் பூமியில்.

---

1 கூறினும்

### *அனுபல்லவி*

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே,[1] தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை
சேர்வேன். –தேவனே

### *சரணங்கள்*

1. யாக்கோபைப்போல், போகும் பாதையில்–பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என்
கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!
– தேவனே

2. பரத்துக்கேறும் படிகள் போலவே–என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதனாகச் செய்யும்
– தேவனே

3. நித்திரையினின்று விழித்துக்–காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க் கல் நாட்டுவேனே,
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச்
சேர்வேன். – தேவனே

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப்–பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்,
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்,
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்.
– தேவனே

***– வே. சந்தியாகு***

1 அரசனே

## என் உள்ளங் கவரும்

**199. உசேனி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**என் உள்ளங் கவரும்,–நீர் மரித்த**
இன்பக் குருசண்டை இன்னும் நெருங்கிட.

***அனுபல்லவி***

என் பாவம் போக்கவே ஈட்டியால் குத்துண்டு
இரத்தம், தண்ணீர் வழிந்தோடும் விலாவண்டை. – என்

***சரணங்கள்***

1. உந்தன் மகா இன்ப சத்தம் நான் கேட்டவன்,
உமதாச்சரிய அன்பை உணர்ந்தவன்,
எந்தையே, நானும்மைச் சேர்ந்தவனாயினும்,
இன்னும் நெருங்கி நான் உம்மண்டை சேர்ந்திட. – என்

2. சுத்தக் கிருபையின் வல்லமையால் என்னை
முத்திரியும் உமக்கூழியம் செய்திட,
அத்தனே, உம்மில் நல் நம்பிக்கையாய் உந்தன்
சித்தமே என் சித்தமாகப் பிழைத்திட. – என்

3. உந்தனடிதனில் உறைந்து தனித்து
ஓர் மணி நேரம் கழிப்பதே பாக்கியம்;
என் தேவனே, அதி நேசமாய் உம்முடன்
இன்ப சம்பாஷணை செய்வதே ஆனந்தம். – என்

4. அம்பரா, மரண ஆழி[1] தாண்டும் வரை
அறிய முடியா அன்பின் ஆழம் உண்டு;
என் பரனே, உந்தன் அன்பின் ஆழத்தை நான்
இம்மையில் கூடியமட்டும் அறிந்திட. – என்

***– வே. சந்தியாகு***

---

1 கடல்

**நடத்திக் காப்பதுன் கடமை**

**200. (232) ஆனந்தபைரவி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**நம்பினேன், உன தடிமை நான், ஐயா;-**
திடப்படுத்தி என்றனை-
நடத்திக் காப்ப துன் கடமை தான், ஐயா

***சரணங்கள்***

உம்பரும்[1] புவி நண்பரும் மற்ற
உயிர்களும் பல பொருள்களும் தொழும்
தம்பிரானே, மெய் யம்பராபரா,
தாசன் மீது நன் னேசு அருள் செய். - நம்பி

***சரணங்கள்***

1. தீதாம் என் பாவம் யாவையும் பொறுத்து,-திருக் கருணையின் அருள்
செய்து பின்வரும் இடர்களை அறுத்து,
வேதாந்தப்படி என்னைத் தான் வெறுத்து-நான் உனைப்பின் செல்ல, உன்
மெய் அருளை என் உள்ளத்தில் நிறுத்து;
ஆதாரம் எனக்கார், உனை அன்றி?
அம்புவியில் யான் நம்ப வேறுண்டோ?-உன்
பாதா தாரத்தில் ஒதுங்கினேன்; எனைப்
பாரும், கிருபையைத் தாரும், ஐயனே! - நம்பி

2. சுத்த இருதயத்தினைத் தருவாய்-பரிபூரணானந்த
ஜோதி ஆவியின் நல்துணை அருள்வாய்,
நித்தமும் பய பக்தியைத் தருவாய்;-நான் ஊழியம்செய்ய,
நீதனே, எந்தன்முன்எழுந்தருள்வாய்;
அத்தனும் அனு கூலனுமான
பத்தனே; பரிசித்தனே, உனைப்
பாடினேன்; கிருபை சூடி ஆள், ஐயா! - நம்பி

---

1 வானவரும்

3. ஊக்கமும் மனத்தீர்க்கமும் வேணும்,–சுவிசேஷ உரையை
உற்றுப் பார்த்ததில் தேறவும் வேணும்;
ஆக்கமும் அன்பர்ச் சேர்க்கையும் வேணும்;–உனக்கூழியம் செய்ய
ஆவியும் அதின் ஈவதும் வேணும்?
ஏக்கமும் மனக்கவலையும் நித்ய
இன்பமுள்ள உன் அன்பின் நல்திரு
வாக்கையே நோக்கி இருப்பதால் என்முன்
வாரும், கிருபை தாரும், ஐயனே! – நம்பி

***– மரியான் உபதேசியார்***

## உன் பாதம் ஒன்றே வேண்டும்

**201. (261) உசேனி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**பாதம் ஒன்றே வேண்டும்;–இந்தப்**
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் – உன்

**சரணங்கள்**

1. நாதனே, துங்க மெய்–வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய–தூதர் தொழுஞ் செய்ய – பாதம்

2. சீறும் புயலினால்–வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல்–நீர்மேல் நடந்த உன் – பாதம்

3. வீசும் கமழ் கொண்ட–வாசனைத் தைலத்தை
ஆசையுடன்–மரி–பூசிப் பணிந்த பொற் – பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந்–தூக்கி நடந்த நற் – பாதம்

5. நானிலத்தோர் உயர்–வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத்–தானே கொடுத்த உன் – பாதம்

6. பாதம் அடைந்தவர்க்–காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு–நாதனே, என்றும் உன் – பாதம்

***– சு.ச. ஏரேமியா***

**வாரும் ஐயா**

**202. சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**வாரும் ஐயா, போதகரே,**
வந்தெம்மிடம் தங்கியிரும்;
சேரும் ஐயா பந்தியினில்,
சிறியவராம் எங்களிடம்.

2. ஒளிமங்கி இருளாச்சே,
உத்தமனே, வாரும் ஐயா!
கழித்திரவு காத்திருப்போம்,
காதலனே, கருணை செய்வாய்.

3. நான் இருப்பேன், நடுவில் என்றாய்,
நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க,
தாமதமேன் தயை புரிய
தற்பரனே, நலம் தருவாய்.

4. உன்றன் மனை திருச்சபையை
உலக மெங்கும் வளர்த்திடுவாய்.
பந்தமறப் பரிகரித்தே
பாக்யம் அளித் தாண்டருள்வாய்.

***– வேதநாயகம் பாகவதர்***

**பாவப்பாரில் உன்னத சமாதானம்**

**203. (241) மோகனம்** **சாபு தாளம்**

**பல்லவி**

**பாவப்பாரில் உன்னத–சமாதானம்;**
தேவ வாக்கிதுவல்லோ?

**சரணங்கள்**

1. பாவீ, உன்தனுக் கிந்த ஓவிய வாக்கை யீந்த
பாவநாசர் யேசுரத்தம் ஆறுதலைப் பேசுஞ் சத்தம். – பாவப்

2. கடுத்தவேலை கூடவே, வருத்தந்தொல்லை நீடவே,
கர்த்தரின் சித்தந்தனைக் கருத்தாய்ச்செய்வ தாறுதல். – பாவப்

3. உறவர், நம் முற்றநேசர் புறமொதுங்கினும் யேசு
உறங்காது யாவரையும் உரமாய் அரவணைப்பார். - பாவப்

4. வருங்காலான வைகளும் மரணகாலவிருளும்
அறவே நம் யேசுவேந்தர் அருளுவர் சமாதானம் - பாவப்

5. பரமானந்தமே ஓங்கும், தரணித்துன்பமும் நீங்கும்,
பரலோகச் சமாதானப் பரவசம் ஆகுவோம் நாம். - பாவப்

***– ஜா.ச. சாண்ட்லர்***

## நல்வழி, மெய், ஜீவன்

**204. (248) புன்னாகவராளி** **சாபு தாளம்**

**பல்லவி**

**நல்வழி, மெய், ஜீவன் எனும் நாம தேயனே,–உனை**
நம்பினேன், ஏழைக்கிரங்கி ஆள், என் நாயனே.

**அனுபல்லவி**

செல்வழி விலகு தீயர் ஜீவனில் சேர–நர
ஜென்மமாம் மரித்துயிர்த்தாரே, வினைதீர;
திருமறை வேதா, அருள் நிறை போதா,
கருணை மெய்த் தாதா, உரிமையுள்ளெம் யேசுநாதா! - நல்

**சரணங்கள்**

1. சத்தியத்தையே போதிக்கும் சத்தியம் நீயே;–அந்த
சத்தியத்தில் நான் நடக்கச் சக்தி ஈவாயே;
சுத்தமறையாம் சுவிசே ஷத்தை ஈந்தாயே;–அதின்
சுத்தாங்க மெய்ம்மை உணர்த்து வித்தருள்வாயே;
தொழுதகம் நேர்ந்தேன், அழுதகம் ஓர்ந்தேன்,[1]
எளியனுள் சோர்ந்தேன், முழுதுமே சார்ந்தேன் உனதடி - நல்

2. செத்த பிரேதம்போல் செயல் அற்றவன் நானே–நல்ல
ஜீவனைக் கொடுக்கும் நித்ய ஜீவன் நீ தானே;
முத்தி நெறி காட்டும் மார்க்கம், சுத்த நல் தேனே,–அதின்

---

1 ஆராய்ந்தேன்

மூலம் நான் உயிர்க்க உனதாவி ஈ, கோனே;
முடவியல் மாற, நடையது தேற,
அடமது மாற,[1] திடமனதாய்க் கரையேற. – நல்

*– யோ. பால்மர்*

**உமது சித்தம் ஆகிடவே வேணும்**

**205. (244) காம்போதி** **சாபு தாளம்**

***பல்லவி***

**ஐயா, உமது சித்தம் ஆகிடவே வேணும்,**

***அனுபல்லவி***

மெய்யாய் எனது சித்தம் வெகுமோசமே காணும்.– ஐயா

***சரணங்கள்***

1. ஆடுபோல் வழிதப்பி அவனவன் வழியொப்பிக்
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தினீர். – ஐயா

2. ஜீவனோ, மரணமோ, செல்வமோ, வறுமையோ,
யாவிலெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும். – ஐயா

3. வசை, இசை,[2] பகை, நேசம், வாழ்வுயர் வதிமோசம்,
பசி, நிருவாணம், நாசம், பாடு, நோயடைகினும் – ஐயா

4. என்னிஷ்டம் வாயாததால் எத்தனை துயர்கொண்டேன்,
பொன்னடிக் கீழடங்கிப் புகழுமக்கென்று வாழ்வேன். – ஐயா

5. குயவன்கைக் களிமண்ணாய்க், குருவே உமக்கமைவேன்,
நயமிது வென்றறிந்த ஞானமுள்ள பிதாவே! – ஐயா

*– ஜி.சே. வேதநாயகம்*

**நினையேன் மனம்**

**206. (209) நாதநாமக்ரியை** **ரூபக தாளம்**

***பல்லவி***

**நினையேன், மனம், நினையேன் தினம்**
உனை மீட்ட யேசுவையே.

---

1 ஓட 2 புகழ்

***அனுபல்லவி***

கன மேவிய மனு வேலனைக் கன காசன சுதனை. – நினை

***சரணங்கள்***

1. கவன முடன் நீடி, உனக் காக அருள் தேடிப்,
புவன மதில் பிறந்து திவ்ய புதுமை மிகச் சிறந்து,
தவன மறு ஆத்மா ஜீவத் தண்ணீர் உண, சும்மா
பவம் நீக்கிய வானாசனப் பதியை, சுரர்[1] கதியை. – நினை

2. நரக அழலாலே[2] கெடு நாசம் வந்த காலே
உருகி, மனம் இரங்கித், தொலைத் துண்மையுடன் இணங்கி,
பரமனோடு உறவாக்கி, மெய்ப்பலனும் பெறத் தாக்கி,
பெருக நலம்புரிந்தோன், மறை பேதம் இன்றி அறைந் தோன்.
– நினை

3. ஜெயமும், புத்ர சுவிகாரமும், சிறந்த நீதியும், மகா
நயந்த பரிசுத்தம் தேவ ஞானமுடன் மீட்பும்
சுயமாக்கியும் அளித்தும் தனதுயிரைப் பலிகொடுத்தும்
பயன் ஏலவே, தூய ஆவியைப் பரிந்தோனையே கனிந்தே.
– நினை

***– ஆ. அல்லின்***

**வாரீரோ வினை திரீரோ**

**207. (210) பியாக்** **தாளம்: ஆதி தாளம்.**

**பல்லவி**

**வாரீரோ? வினை தீரீரோ? எனைக்**
காரீரோ? ஜீவன் தாரீரோ, யேசு

**அனுபல்லவி**

வாரேனென்றீர், வரந் தாரேனென்றீர், சுவாமீ;
பாரினிலே யெனக்கு யாருமில்லை, துணைக்கு. – வாரீரோ

---

1 தேவர் 2 நெருப்பு

### சரணங்கள்

1. தேனே, மரிமகனே, தேடி மறுகுங்[1] கோனே,
சேனைகளின் சீமோனே, சிந்தை கலங்கி நானே
கானகமே மேவும் மானது போலானேன்;
வானகம் போன தேவா, ஏனோ வரத் தாமதம்? – வாரீரோ

2. அட்ட திக்கெங்கு மென்னைத் துட்டப் பாசாசுக் கூட்டம்
இட்டப் படுத்தவல்லோ கிட்ட வளையது, பார்
அடுத்தாலோ, அம்பைத் தொடுத்தாலோ என்ன!
அடுபடையாக நின்று தடு படை[2] செய்வீர், யேசு, – வாரீரோ

3. காணாத ஆட்டைத் தேடிக் காடெங்கும் சென்ற கோன் நீர்
கண்டு பிடித்த ஆட்டைக் கொண்டு தொழுவஞ் சேர்க்கக்
கருத்துடனே மிக உரித்துடனே இரு
கரத்திலேந்தி வலப் புறத்தில் வைப்பீர் திண்ணம். – வாரீரோ

4. வீடு எனக்குச் செய்ய மேலோகம் போன தேவா,
கூட இருத்தி வைக்கக் கூப்பிட வாறேனென்றீர்;
கொண்டு வருவீர் முடி, நின்று வருவீர் நொடி;
கண்டு மகிழ்வேன், கூடி நின்று புகழ்வேன் கெடி. – வாரீரோ

***– மு. தேவசகாயம்***

### எனக்கென்ன குறைவுண்டு?

**208. (246) பியாக்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்**
கென்ன குறைவுண்டு? நீ சொல், மனமே.

***சரணங்கள்***

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே, சுகபத்திர மருளும். – என்

1 மயங்கும் 2 மறுக்கிற ஆயுதம்

2. பாபமோ, மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்;
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய். – என்

3. ஆசிசெய்திடுவார், அருள்மிக அளிப்பார்,
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும். – என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசிமட்டுங் கைவிடா திருப்பார்;
பவமனிப்பளிப்பார், பாக்கியங் கொடுப்பார்,
பரம பதவியினுள் என்றனை எடுப்பார் – என்

5. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்,
பொல்லான் அம்புக ளெய்திடட்டும்,
ஆனது ஆகட்டும், அருள்மழை பெய்திடும்,
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள் – என்

***– ஞா. சாமுவேல்***

**தினமே நான் உன்னைத் தேடிப் பணிய**

**209. சுத்தபங்களா** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தினமே நானுனைத் தேடிப்பணியச்**
செயும்துணையே நித்ய ஏக தெய்வமே.

**அனுபல்லவி**

மனநிலை தவறி மருகினேன்[1] நானே.
மாசிலானே அனுகூலநற் கோனே. – தின

1 வந்தேன்

**சரணங்கள்**

1. அருள் நாயகனே, அம்பரத் தீசா,
ஆதியாய் நின்றபேர் அருள்நிறை பாசா,
மருள்பவ நாசா, மனுக்குல ராசா,
மகிமை யடைந்தமா மகத்துவ நேசா! – தின

2. செத்தேன், எனக்குன் ஜீவன் அளித்தாய்,
தீயனென் மேல் திருத் தீர்த்தம் தெளித்தாய்,
முத்தேயென் நன்மைக் காக மரித்தாய்,
மோதிய தீவினை யாவும் அழித்தாய். – தின

3. திரளென் பாவங்கள் தீர்த்திட வாராய்,
தீமை மறந்துநான் சீர்பெறக்கூராய்,
கரள் குணமாற்றிக் கனிந்தெனைச் சேராய்,
களிப்புடன் பாடிடக் கறுணைக்கண் பாராய். – தின

***– சா. பரமானந்தம்***

## ஆதாரம் நீதான் ஐயா

**210. (118 L.) சஹானா** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஆதாரம் நீ தான் ஐயா, என்துரையே,**
ஆதாரம் நீ தான் ஐயா.

***அனுபல்லவி***

சூதாம் உலகில்நான் தீதால் மயங்கையில். – ஆதாரம்

***சரணங்கள்***

1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியன்மேல்,
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியனுக்கு – ஆதாரம்

2. நாம், நாம் துணையென நயந்துரை சொன்னவர்
நட்டாற்றில் விட்டாரையா; தனியனை
நட்டாற்றில் விட்டாரையா; தனியனுக்கு – ஆதாரம்

3. கற்றோர் பெருமையே, மற்றோர் அருமையே,
வற்றாக் கிருபை நதியே, என்பதியே,
வற்றாக் கிருபை நதியே, என்பதியே - ஆதாரம்

4. சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே
துக்கம் மிகுவேளையில், உன் தாசனுக்கு - ஆதாரம்

***- ஆ. தேவதாசன்***

## எமை ஆண்டருள்

**211. (234) பியாகடை** **ரூபக தாளம்**

***பல்லவி***

**ஆரணத் திரித்துவமே,-எமை**
ஆண்டருள், மகத்துவமே.

***அனுபல்லவி***

பூரண தேவ பிதா, சுதன், ஆவியே,
பொன்னுலகத்தெழும் உன்னதமான
போத க்ருபையா பத்ததி[1] நீதிச் சுடரே, நித்திய -ஆரண

***சரணங்கள்***

1. அன்றன்றை அப்பத்தைத் தாரும்;-எங்கள்
ஆபத் தனைத்தையும் தீரும்;
இன்றும் என்றெங்களைச் சேரும்;-திரு
இரக்கத்தால் முகம் பாரும்;
நன்றி கெட்டோர்களைக் கொன்று போடாதேயும்;
நம்பரா, கருணாம்பரா,
ஞானத் தனு மானத்தொளிர்
மேன்மை திவ்விய பானத்தருள். - ஆரண

---

1 ஒழுங்கு

2. மூவர் ஒன்றான யெகோவா,–உயர்
முக்ய கிருபையின் தேவா,
மேவி அடியாரைத் தேவா,–பல
வெவ்வினையினின்றும் கா, வா;
பாவிகள் நாங்கள் ஏவையின் மக்களே,
பக்ஷமே, பரம பொக்ஷமே,
பாடும்புகழ் நாடும்பரி
வோடும் தயை நீடும்பரா! – ஆரண

***– வே. சாஸ்திரியார்***

**எந்த வேளையும் அடியனோடிரும்**

**212. (235) புன்னாகவராளி** **சாபுதாளம்**

***பல்லவி***

**ஆதி யாம் மகா ராசனே,–எந்த வேளையும்**
அடிய னோடிரும், ஈசனே

***அனுபல்லவி***

தீதில்லா சருவேசா, தேசுறும் பிரகாசா,
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால், – ஆதியாம்

**சரணங்கள்**

1. பாவி பெலனால், ஐயனே,–நின்றால் என்னைப்
பகைவர் ஜெயிப்பார், மெய்யனே;
தேவா, துணை நீர் ஐயனே;–சிறியனிடம்
சேர்ந்தே வசியும், துய்யனே,
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும், காவலன் நீரே;
சாவுவரையும் என்னைத் தாங்கி அரவணையும். – ஆதியாம்

2. இரக்கம் பொழிய வாருமே,–கிருபையாக,
இறைவா, என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே;–அனவரதம்
உந்தம் அருளைத் தாருமே;
செருக்காய் எம்மீ திகலோர் சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி என்னில் தினமும் அருள்புரியும். – ஆதியாம்

***– ச. யோசேப்பு***

## கவலை வைக்காதே

**213. (146 L.) உசேனி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**கவலை வைக்காதே, மகனே, நீ**
கவலை வைக்காதே.

**அனுபல்லவி**

கவலைவைத்திந்த உலகை - நாடி
அபலமான வரனந்தங் - கோடி - கவலை

**சரணங்கள்**

1. பெற்ற பிதா நமக்கொன்று,-அவர்க்
குற்ற செல்வம் நமக்குண்டு,
உத்தம வேலை கைக்கொண்டு-செய்ய
உனக்கென்ன குறையுண்டு? - கவலை

2. என்ன நான் புசிப்பேனின்று-நாளை
என்ன நான் குடிப்பேனென்று
இன்னும் வீண்கவலைகொண்டு-தினம்
ஏங்கிறாய் எப்பலனுண்டு? - கவலை

3. காகங்களை நோக்கிப்பாரு-நல்ல
களஞ்சியமுண்டோ? வேறு
தாகம் பசிக்கவைக்காரு-இரை
தருகிறாரென்று கூறு. - கவலை

4. புல்லும் பூண்டும் காட்டில் வளரும்-பிழைப்
பூட்டுவ ராரென்று கழறும்,
பொல்லாக் கவலையாற்றழலும்-மனம்
பொறுமையில்லாமல் அலறும். - கவலை

5. உடையின் கவலையாலே–மனம்
உடையுமே பல வேளை,
முடியுமோ உந்தனாலே–அல்ல
முற்றுமது பிதாவேலை. – கவலை

6. கானகலீலிப் பூப்போலே–கன
ஞானி சாலமோன் தன் மேலே
பூணவில்லையாகையாலே–பிதா
புல்லுக்குடுத்து மாப்போலே. – கவலை

7. கவலைப்பட்டோர் முழம் கூட்டும்–நரன்
காசினியிலுண்டோ? காட்டும்
குவலயமெல்லாம் போற்றும்–இயேசு
கோமான் திருமொழிகேட்டும். – கவலை

***– ச. முத்துசாமி உபாத்தியாயர்***

### ஆவியால் சீர்படுத்தும்

**214. (237) ஆனந்தபைரவி** **ஆதி தாளம்**

**அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தையுமே**
ஆவியால் சீர்படுத்தும், ஸ்வாமீ!

2. உமக்கே யான் சொந்தம்; தீயோர் தமக் கந்நியனாய்ப்போக
உதவும் எளியேனுக்கென ஸ்வாமீ!

3. அன்பின் வடிவே! பாவத் துன்பம் இல்லாமல், வாழ
அடைந்தேன் உமை யான், சேரும், ஸ்வாமீ!

4. நீரே எனக்கு வேண்டும், தாரணி முற்றும் வேண்டாம்
நீசனை ஆட் கொள்ளும், என் ஸ்வாமீ!

5. பூமியில் வசித்தும், நீர் தாமே எனது வாஞ்சை
புகலிடம் அளியும், என் ஸ்வாமீ!

6. சஞ்சல மேதெனக்கு? பஞ்சம் படைகளேது?
தஞ்சம் நீர் தாம் எனக்கென் ஸ்வாமீ!

7. விண்ணி லோரிடமும், யான் மண்ணுலகை வெறுக்க
மெய்த் தவமும் தாரும். என் ஸ்வாமீ!

***– தேவவரம்***

**இயேசு நான் நிற்குங் கன்மலையே**

**215. நாதநாமக்ரியை** **சாபு தாளம்**

***பல்லவி***

**இயேசு நான் நிற்குங் கன்மலையே!–மற்ற**
எந்த ஆதாரமும் வெறும் மணல் தரையே.

***சரணங்கள்***

1. இயேசுவின் நாமத்தின் மேலே–என்றன்
எல்லா நம்பிக்கையும் வைத்தேன் அன்பாலே;
நேசனையுங் கூட நம்பேன்,–நான்
இயேசு நாமத்தின் மேல் முழுதுமே சார்வேன். – இயேசு

2. இருள் அவர் அருள் முகம் மறைக்க,–நான்
உறுதியாய் அவர் மாறாக் கிருபையில் நிலைப்பேன்;
உரமாகக் கடும்புயல் வீச,–சற்றும்
உலையாத[1] எனது நங்கூரமாம் அவரே. – இயேசு

3. பெரு வெள்ளம், பிரவாகம் வரினும்–அவர்
பிரிதிக்னை, ஆணை, இரத்தம் என் காவல்;
இருதயத்தின் நிலை அசைய–அப்போ
தேசுவே என் முழு நம்பிக்கையாமே. – இயேசு

4. சோதியாய் அவர் வரும்போது–நான்
சுத்தனாய்த் தரிசித்தே அவரைப் போலாவேன்;
நீதியாம் ஆடை தரிப்பேன்,–சதா
நித்திய காலமாய் ஆளுகை செய்வேன். – இயேசு

***– வே. சந்தியாகு***

---

1 அழியாத

## தேவ பிதா என்றன் மேய்ப்பன்

**216. (245) ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ,**
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

*அனுபல்லவி*

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார். – தேவ

*சரணங்கள்*

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார். – தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்குக் கண்டஞ்சேனே;
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும். – தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்,
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார். – தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன். – தேவ

***– த. யோசேப்பு***

## இயேசு நேசிக்கிறார்

**217. (211) சரமா** **சாபு தாளம்**

*பல்லவி*

**இயேசு நேசிக்கிறார்,–இயேசு நேசிக்கிறார்;**
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மா தவமோ!

*சரணங்கள்*

1. நீசனாமெனைத்தான் இயேசு நேசிக்கிறார்,
மாசில்லாத பரன் சுதன்றன் முழு
மனதால் நேசிக்கிறார். – இயேசு

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிறாரென
நவிலல்[1] ஆச்சரியம். – இயேசு

3. நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்,
நீதன், இயேசெனை நேசிக்கிறாரெனல்
நித்தம் ஆச்சரியம். – இயேசு

4. ஆசை இயேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்;
அதை நினைந்தவர் அன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன் – இயேசு

5. ராசன் இயேசுவின் மேல் இன்ப கீதஞ் சொலில்,
ஈசன் யேசெனைத் தானேசித்தாரென்ற
இணையில்[2] கீதஞ் சொல்வேன். – இயேசு

*– பிரெக்கன் ரிஜ்*

## நல்சித்தம் ஈந்திடும் இயேசுவே

**218. தேசிகதோடி** **சாபு தாளம்**

**பக்தியாய் ஜெபம் பண்ணவே**
சுத்தமாய்த் தெரியாதய்யா!
புத்தியோடுமைப் போற்ற, நல்
சித்தம் ஈந்திடும், யேசுவே!

---

1 சொல்லுதல் 2 ஒப்பில்லாத

2. பாவ பாதையைவிட்டு நான்
ஜீவ பாதையில் சேர, நல்
ஆவி தந்தெனை ஆட்கொளும்,
தேவ தேவ குமாரனே!

3. பொய்யும் வஞ்சமும் போக்கியே
மெய்யும் அன்பும் விடாமல், யான்
தெய்வமே, உனைச் சேவித்திங்
குய்யும்[1] நல்வரம் உதவுவாய்.

4. அப்பனே! உனதன்பினுக்
கெப்படிப் பதில் ஈட்டுவேன்?
செப்பும் என்னிதயத்தையே
ஒப்படைத்தனன் உன்னதே.

5. சிறுவன் நானுனைச் செவ்வையாம்
அறியவும், முழு அன்பினால்
நிறையுமுள்ள நிலைக்கவும்
இறைவனே! வரம் ஈகுவாய்.

6. அண்ணலே! உனதாலயம்
நண்ணி, நல்லுணர்வோடுனை
எண்ணி யெண்ணி இறைஞ்ச, உன்
கண்ணில் இன்னருள் காட்டுவாய்.

*– ஹெ.ஆ. கிருஷ்ணன்*

## தந்தேன் என்னை இயேசுவே

**219. தேவகாந்தாரி** **ரூபக தாளம்**

*பல்லவி*

**தந்தேன் என்னை இயேசுவே,**
இந்த நேரமே உமக்கே.

*அனுபல்லவி*

உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்! – தந்தேன்

1 பிழைக்கும்

*சரணங்கள்*

1. ஜீவ காலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்,
பூவில் கடும் போர் புரிகையில்
காவும்! உந்தன் கரத்தினில் வைத்து. – தந்தேன்

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்,
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா, வெல்லுவேன். – தந்தேன்

3. உந்தஞ் சித்தமே செய்வேன்,
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்,
எந்த இடம் எனக்குக் காட்டினும்,
இயேசுவே, அங்கே இதோ! போகிறேன். – தந்தேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்,
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்,
அஷ்டதிக்கும்[1] ஆளும் தேவனே,
அடியேன் உம்மில் அமரச்செய்திடும்! – தந்தேன்

5. ஒன்றுமில்லை நான் ஐயா!
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்;
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்! – தந்தேன்

***– வே. சந்தியாகு***

**என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்**

**220. (203) சங்கராபரணம்** **சாபு தாளம்**

*பல்லவி*

**என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,**
ஏற்றுக் கொள்ளும், யேசுவே.

---

1 எட்டுத் திசைகள்

***அனுபல்லவி***

அன்னை தந்தை உந்தம் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது, இப்போது — என்னை

***சரணங்கள்***

1. அந்தகாரத்தி னின்றும், பவப் பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன். — என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்;
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன்; கருணைசெய், தேவா. — என்னை

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு;
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை. — என்னை

***— சா. சீமோன்***

**உயர்பரனில் உதித்ததெல்லாம்**

**221. (56 L.) ஆரமி** **ஆதி தாளம்**

**சரணங்கள்**

**உயர்பரனில் உதித்ததெல்லாம் உலகதனை ஜெயிக்கு மன்றோ?**
உயிருள மெய்விசுவாசமே, உலகை ஜெயிக்கும் ஜெயமே.

2. ஏசுதெய்வ சுதனென்றே ஏற்க விஸ்வாசிப்பவனே,
மாசு நிறை உலகதனை மறுத்தவர்போல் ஜெயிப்பவனே.

3. தற்பரனார் தருஞ்சாட்சி தஞ்சுதனைக் குறிக்குமன்றோ?
பொற்புறுமிக் சாட்சியமே புவிதனக்கு மேலாமே.

4. நித்தியனார் நமக்கீந்த நித்தியமாஞ் சீவனது
நித்தியராந் தஞ் சுதனுள் நிலைத்துளதாம் அச்சாட்சி.

5. திருச்சுதனார் தமையுடையோன் பெருக்கமுறும் ஜீவனுளோன்,
கருணையுளார் தமையற்றோன் சிறிதளவுஞ் ஜீவனற்றோன்.

6. நீடூழி பிழைப்பவரே, நீசரும்மில் பிழைத்தென்றும்
பாடற்றெம் அகமகிழ பரிவொடெமைப் பாருமையா.

***– வ. யோசுவா***

**என் இயேசுவை விடமாட்டேன்**

**222. காபி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**நான் விடமாட்டேன் என் இயேசுவை.**

**அனுபல்லவி**

வான் புவியாவும் போனாலும்,–அத்தால்
மயங்கியே ஒருக்காலும் மெய்யாய். – நான்

**சரணங்கள்**

1. முந்தியென் மேலன்பு கூர்ந்தார்; இங்கே
முக்யநன்மைதரச் சேர்ந்தார்; தீய
எந்தனுக்காய்த்தம்மை யீந்தார்; எனக்
கெண்ணருநன்மைகள் நேர்ந்தார்; மெய்யாய். – நான்

2. வானலோகந்தனைத் துறந்தார்; ஏழை
மானிடனாகவே பிறந்தார்; மிக்க
ஈனனெனக்காக இறந்தார்; பேய் மேல்
என்றனுக்காய் ஜெயஞ்சிறந்தார்; மெய்யாய். – நான்

3. மேசியாவுக் கிணையுண்டோ? அவர்
வேதத்துக்கொப்பு கற்கண்டோ? எனின்
நேசாசமுகம் பூச்செண்டோ? இந்த
நீசனத்தில் மொய்க்கும் வண்டோ? மெய்யாய். – நான்

4. லோகமெனை உதைத்தாலும், பொல்லா
லோபிகள் துஷ்டர் மொய்த்தாலும், பசி
தாகநோயும் வதைத்தாலும், இந்தத்
தாரணியோர் சிதைத்தாலும், மெய்யாய். – நான்

***– ஞா. சாமுவேல்***

**என் சிலுவை எடுத்துப் பின்னே வாறேன்**

**223. முகாரி** **சாபு தாளம்**

***பல்லவி***

**என் சிலுவை எடுத்து, என் இயேசுவே,**
இச்சணம் பின்னே வாறேன்.

***அனுபல்லவி***

இந்நில மீதினில் எனக்காயுயிர் விட்டீர்;
இரட்சகரே! எனக்குள்ள யாவும் விட்டு. – என்

***சரணங்கள்***

1. உலகும்மை விட்டிடினும்–உம் தயையால்
உம்மை நான் பின் செல்லுவேன்,
அலகை என்மேல் பாய்ந்து அதிகமாய் எதிர்த்தாலும்,
அஞ்சாமல் போர்செய்து அவனை மேற்கொண்டு நான். – என்

2. என்றன் சுதந்தரத்தை–இழக்கினும்
சொந்தம் நீரே எனக்கு;
பந்து சனங்களும் பற்றுறு நேசரும்
பகைத்துப் பழிப்பின் என் பங்கு நீரல்லவோ! – என்

3. பாடுகள் பட்டிடுவேன்,–உம்மோடு நான்
பாரநுகஞ் சுமப்பேன்;
ஆடுகளுக்காக அரிய சீவன் தந்த
அன்பான மேய்ப்பரே, ஆடுகளை மேய்ப்பேன். – என்

4. ஆசை மேற்கொள்ள விடேன்,–கெட்டலோக
பாசம் அணுகவிடேன்;
ஈசன் லோகத்திலென்றும் நேசமுடனே தங்கி
மாசுகளற உந்தன் தாசனாய் விளங்கிட. – என்

***– வே. சந்தியாகு***

## உதவு நதியாக வந்த பெருமானே

**224. கேதாரகௌளம்** **கண்டசாபு தாளம்**

### திருப்புகழ்

**அருமையுற நீ இறங்கி அடியனுள மீது தங்க,**
அணுவளவிலாது பங்கம்–அகன்றோடும்;
அருளொளி அன்பே யுறைந்து அதிகவுயர்வாய் வளர்ந்த
அகமுழுதுமே நிறைந்து–வழிந்தோடும்.

2. திருவரசுன் சீர்குணங்கள் இனிய திருவாசகங்கள்
திவிய வரமாக வந்து–எனதாகும்;
தினமுமெழிலாயிலங்கி எனதகமுமே கனிந்து
சிறுமை செயும் 'நான்' மறைந்து–பறந்தோடி.

3. மருவு கிறிஸ்தேசுன் அன்பும் அமருமழகான இன்பும்
மலர் முக சந்தோஷ பண்பும்–சுடரா
மகிமையும் நின்னோடுவந்த எனதிதயமே நிரந்து,[1]
வளமை வரவே விளைந்து–நிலையாக.

4. உரிமையுடனே உவந்து மனமதியெலாங் கவர்ந்து,
உனதடிமையாய்ப் பரிந்து–எனையாளாய்!
உனதசுனையாய்ச்[2] சுரந்து அடியருளமே விரிந்து,
உதவு நதியாக வந்த–பெருமானே!

***– நாராயண வாம திலகர் சந்தியாகு***

## எல்லாம் யேசுவே

**225. (212) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**எல்லாம் யேசுவே,–எனக்கெல்லா மேசுவே.**

***அனுபல்லவி***

தொல்லைமிகு மிவ்வுலகில்–துணை யேசுவே. – எல்

---

1 நிறைந்து 2 உயர்ந்த மலையூற்றாய்

*சரணங்கள்*

1. ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்,
நாயனும் எனக்கன்பான ஞானமண வாளனும், - எல்

2. தந்தைதாய் இனம்ஜனம் பந்துளோர் சிநேகிதர்,
சந்தோட சகலயோக, சம்பூரண பாக்யமும், - எல்

3. கவலையில் ஆறுதலும், கங்குலிலென் ஜோதியும்,
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட அவிழ்தமும், - எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளிமென் தோழனும், - எல்

5. அணியும் ஆபரணமும் ஆஸ்தியும்-சம்பாத்யமும்
பிணையாளியும்[1] மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும், - எல்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்,
ஞானகீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும், - எல்

*- யே. ஞானமணி*

**விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்**

**226. (195) பங்காளா** **ஆதி தாளம்**

*பல்லவி*

**விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்;-மெய்**
விசுவாசமுள்ளவன் தான் தழைப்பான்.

*சரணங்கள்*

1. நிசமாக நாம் பாவத்தினில் பிறந்தோர்;-முழு
விஷமான பாவத்தினால் இறந்தோர். - விசு

1 பொறுப்பாளி

2. உய்யும் வகையறியோம்; பெலனேயில்லை;–நரர்
செய்யும் கிரியைகளில் நலனேயில்லை. – விசு

3. பாவக் கடனொழிக்கப் பலமே யற்றோம்;–எச்
சாபம் அழிவினுக்கும் தகைமை யுற்றோம். – விசு

4. தேவன் கிருபையொன்றே நமைப் பார்க்கும்;–அவர்
மாவன்பே பாவிகளின் கடன் தீர்க்கும். – விசு

5. நீதிமானைக் குற்றஞ்சாட்ட யாராலேயாகும்?–அவன்
பாதகம் பழிமரணம், யாவுமே போகும். – விசு

6. தேவனின் பிள்ளை நானென்றே அவன் துள்ளுவான்;–தீய
பாவ வழிதனைப் பகைத்தே தள்ளுவான். – விசு

***– ஞா. சாமுவேல்***

**நல் உயர் பருவதம் இதோ**

**227. (253) பிலஹரி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம்,–இதோ!**

***அனுபல்லவி***

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவோனே. – உன

***சரணங்கள்***

1. வானம் புவி திரையும்[1] வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ? – உன

2. காலைத் தள்ளாடவொட்டார், கரத்தைத் தளரவொட்டார்;
மாலை உறங்கமாட்டார், மறதியாய்ப் போக மாட்டார். – உன

3. கர்த்தருனைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்;
நித்தியம் உன்றனுக்கு நிழலாயிருப்பவராம். – உன

1 கடல்

4. பகலில் வெயிலெனிலும், இரவில் நிலவெனிலும்,
இகல் தருவதுமில்லை, இன்னல் செய்வதுமில்லை. – உன

5. தீங்கு தொடராதுன்னை, தீமை படராதுன்மேல்;
தாங்குவார் தூதர் கோடி, தாளிடறாதபடி. – உன

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே. – உன

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்,
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே. – உன

**பங்கமின்றித் தங்குவான்**

**228. (257) சங்கராபரணம் ஆதி தாளம்**

***பல்லவி***

**துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான்**

***அனுபல்லவி***

கங்குல் பக லும்பரனார் காவல் அர ணாதலால். – துங்

***சரணங்கள்***

1. வேடன் கண்ணி குத்துங்கால், விக்கினங்கள் சுற்றுங்கால்,
மூடி உனைக் காப்பரே, ஓர் மோசமின்றிச் சேர்ப்பரே. – துங்

2. பக்கத்திலே ஆயிரம், பாலே பதினாயிரம்
சிக்கென வீழ்ந்தாலுமே, தீங்குனை அண்டாதுகாண். – துங்

3. கண்ணினாலே பார்க்குவாய், கடவுள் செயல் நோக்குவாய்;
அண்ணலே உன் அடைக்கலம், ஆண்டவர் உன் தாபரம்.– துங்

4. தீங்குனை அண்டாமலும், தீனங்கள் தீண்டாமலும்,
பாங்கு தூதர் காபந்தில் பத்திரமாய் வாழ்வையே. – துங்

5. பாதம் கல்லிட றாமல், பகைவர் உக்ரம் மீறாமல்,
தூதர் உனைக் கைகளில் தூக்கி ஏந்திக் கொள்வரே. – துங்

6. நீடுநாட்களாகவே கேடு துன்பம் போகவே,
வீடுபரதீசினில் சூடுவான் மா மகிமைகள். – துங்

*– த. யோசேப்பு*

**விசுவாசக் கேடகத்தைப் பிடி**

**229. (196) பியாகு** **ரூபக தாளம்**

*பல்லவி*

**கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே;–நல்ல**
கேடகத்தைப் பிடி நீ;–விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ.

**அனுபல்லவி**

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக்[1] கணைதொடுத் தெய்கின்ற வேளையில்,
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ. – கிஞ்சிதமும்

**சரணங்கள்**

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க,
பத்தியில் தெளிக்கவும்,–நித்ய
ஜீவனைப் பிடிக்க, லோகத்தை ஜெயிக்க,
திறமை அளிக்கவும்,
சாவே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன்
ஜெயம் எங்கே? என்று நீ கூவிக் களிக்கவும்,
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்க,
செய்யவுமே அது திவ்ய நல் ஆயுதம். – கிஞ்சிதமும்

2. பண்டையர்[2] அந்தப் பரிசையினால்[3] அல்லோ,
கண்டடைந்தார் பேறு?[4] –நல்ல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து வெவ்வேறு
விண்டுரைக்கில் பெருகும்; தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங்களையும் பார்; இது மா ஜெயம். – கிஞ்சிதமும்

---

1 அக்கினி
2 முன்னோர்
3 கேடகம்
4 முத்திப்பேறு

3. ஊற்றமுடன்[1] இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம்;–அதின்
தோற்றமும் முடிவும் ஏசுபரன் செயல்,
துணை அவர் பாதம்;
ஏற்றர வணைக்கவே பணிவாக
இரந்து மன்றாடி அவர் மூலமாகவே,
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து நீ. – கிஞ்சிதமும்

*– யோ. பால்மர்*

## சிந்தனைப்படாதே நெஞ்சமே

**230. (249) துஜாவந்தி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**சிந்தனைப் படாதே, நெஞ்சமே,–உனை ரட்சித்த**
தேவ சுதன் இருக்கிறார்.

**அனுபல்லவி**

அந்தியும் சந்தியுமாக ஆர் பகை செய்தாலும் என்ன?
எந்த வினை வந்தும், மயிர் எண்ணப் பட்டிருக்கையிலே. – சிந்

**சரணங்கள்**

1. ஐந்து சிட்டு ரண்டு காச தாக விற்றும் அங்கதில் ஒன்
றும் தரையி லேவிழாதென் றுத்தமன் உரைத்திருக்க,
புந்தியில் விசாரமுடன் போக்கிடம் அற்றவர் போல,
சந்தேகத்தினால் உழன்று, தவித்துத் தவித்து நின்று. – சிந்

2. சோங்கில்[2] அயர் சீடரின்முன் பாங்குடன் தயவளித்துத்
தூங்கினோர் உனையும் வந்து தாங்குவார், என வந்தாலும்;
ஓங்கும் இஸ்றாவேல் ராசன் தூங்கவும் இலையே; சும்மா
ஏங்கி ஏங்கிச் சஞ்சலம் கொண்டேமாந் தேமாந்து நின்று – சிந்

1 வல்லமையுடன் 2 படகில்

3. எத்திசையினும் அடர்ந்த சத்துரு எல்லாம் ஜெயம்கொண்டு
அத்தனின் வலத்தில் நித்திய துத்தியத் திருந் தரசாள்
கர்த்தனாம் கிறிஸ்து நாதர் சித்தம தல்லாமல் வீணில்
தத்தி[1] விழுந் தென்ன வரும்? பித்தது பித்தது கொண்டு. – சிந்

***– வே. சாஸ்திரியார்***

### இயேசு ரட்சகர் ஆத்துமத் துயர் நீக்க வல்லவர்

**231. (250) கரஹரப்பிரியை** **ரூபகதாளம்**

***பல்லவி***

**அஞ்சாதே யேசு ரட்சகர்**
ஆத்மத்துயர் நீக்க வல்லவர்.

***அனுபல்லவி***

வஞ்சமே மிஞ்சுமா பஞ்சபாதகன் நானென்று. – அஞ்

***சரணங்கள்***

1. திருடன் ஒருவன் மரிக்கும் வேளையில்
திருச்சுதன் பதம் தழுவிக் கதிக்–கு
அருள் பெற்றான், என் வேதஞ் சொல்வதை
ஆய்ந்து மனஞ் சாய்ந்து நீ செல். –அஞ்

2. வெள்ளிக் காசொன்றை இழந்து விட்டவள்
வீட்டைப் பெருக்கிப் பார்த் தெடுத்தபின்,
துள்ளிப் பூரிக்கும் போல் உன்மேலே,
தூதர் சங்கமும் களிப்பதாலே. –அஞ்

3. மேய்ப்பன் மந்தையை விலகின ஆட்டை
வெகு கவலையாய்த் தேடிக் கண்டபின்,
வாய்ப்புடன் மனம் மகிழும் போலே,
மானுவேலுனைத் தழுவலாலே. –அஞ்

4. தொண்ணூற் றொன்பது நீதியரிலுந்
துயரடை பாவி யொருவன் மீதினில்
எண்ணருந் தூதர் மகிழ்வதாலே
இரட்சிப் புனக்குப் பலித்ததாலே. –அஞ்

---

1 குதித்து

5. மரணத்தின் கூரை ஒடித்த வல்லவன்
வருந்தி அழைத்த விருந்துக்கு வரத்
தருணம் ஈதெனத் தாசர்கூடிச்,
சாற்றும் மொழியை ஏற்று நீவர. – அஞ்

***– ச.ஐ. பாளையங்கோட்டை.***

## நெஞ்சே நீ கலங்காதே

**232. (251) புன்னாகவராளி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**நெஞ்சே நீ கலங்காதே;–சீயோன் மலையின்**
ரட்சகனை மறவாதே;–நான் என் செய்வேனென்று.

***அநுபல்லவி***

வஞ்சர் பகை செய்தாலும், வாரா வினை பெய்தாலும் –நெஞ்சே

***சரணங்கள்***

1. வினைமேல் வினை வந்தாலும்,–பெண்சாதி பிள்ளை,
மித்ரு[1] சத்ருவானாலும்,
மனையொடு கொள்ளை போனாலும், வானம் இடிந்து
வீழ்ந்தாலும். – நெஞ்சே

2. பட்டயம், பஞ்சம் வந்தாலும்,–அதிகமான
பாடு நோவு மிகுந்தாலும்,
மட்டிலா வறுமைப் பட்டாலும், மனுஷர் எல்லாம்
கைவிட்டாலும் – நெஞ்சே

3. சின்னத்தனம் எண்ணினாலும்,–நீ நன்மை செய்யத்
தீமை பிறர் பண்ணினாலும்,
பின்னபேதகம்[2] சொன்னாலும், பிசாசு வந்தணாப்பினாலும்[3]
– நெஞ்சே

4. கள்ளன் என்று பிடித்தாலும்,–விலங்கு போட்டுக்
காவலில் வைத் தடித்தாலும்,
வெள்ளம் புரண்டு தலை மீதில் அலைமோதினாலும்.– நெஞ்சே

***– வே. சாஸ்திரியார்***

---

1 நேசன் 2 தவறான குற்றச்சாட்டு 3 வந்து ஏய்த்தாலும்

## என்னோ நீ உன்னை அலைக்கழிப்பாய்

**233. (252) செஞ்சுருட்டி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**என்னோ பல நினைவாலும் நீ உன்னை அலைக்கழிப்பாய்.**

**அனுபல்லவி**

மன்னர்கள் மன்னவன் ஆகிய யேசு உன்
மன்னவராய் இருக்கையிலே. - என்

**சரணங்கள்**

1. அன்னை யிடத்துருவாய், உன்னை அமைத்த தந்தை
அல்லவோ?-பின்னும்,
ஆகாரமும் உடையும் ஜீவனும் அளிப்பதவர் அல்லவோ? -என்

2. மாதானவள் சேயை[1] ஒரு வேளை மறந்தாலும்,-உன்னை
மறவோம் ஒருகாலும், என வார்த்தை கொடுத்தாரே - என்

3. இஸரேலரைக் காப்போர் உறங்கிடுவோர் என நினையேல்;-
அவர்
நிசமாக உன் வலப்பாகத்தில் நிழல் ஆவர் என்றறிவாய். - என்

4. சிங்கங்கள் பட்டினியாய் இருக்கக் கண்டேன் தேசம் எங்கும்
சுற்றிப் பார்த்தும்,-தேவ
சேயர்கள் பட்டினியாகக் காணேன், என்ற திவ்ய உரையும்
பொய் யாமோ? - என்

5. தேகமும் கெட்ட உலகமும் பேயும் திரண்டு உனைப்
பொருதாலும்[2] - அதை
ஜெயித்தயேசு உன் மன்னவ ராகையில் சிந்தனை வேறென்ன
உனக்கு? - என்

6. தேவ பிதா நின் பிதாவும் இயேசு நின் சிநேகிதரும் சுத்த ஆவி
-உன்றன்
தேற்றர வாளனும் ஆவதைப் பார்க்கிலும், தேவை நினக்
கொன்றும் இல்லையே. - என்

***- சவரிமுத்து உபாத்தியார்***

---

1 பிள்ளையை 2 சண்டை செய்தாலும்

### நல்லாயன் ஆட்டுக்காய் உயிர் தாறார்

**234. (254) பியாகடை** **ஏகதாளம்**

*பல்லவி*

**நல்லாயன் யேசு சாமி, ராஜன்தாவீதுடை மகவு,–**
ஒரே மகவு, ஆட்டுக்காய் உயிர் தாறார்.

*சரணங்கள்*

1. எல்லார்க்கும் பெரியான், எம்பிரான் தம்பிரான்,
ஏகவஸ்தோரே ஏகோவா,–மா
தேவ கிறிஸ்து நீ கா, வா, வா. – நல்

2. மன்னர் மன்னர் கொண்டாடிய நீடிய
வானப் பரமகு மாரா வோ,–அதி
ஞானத் திறம் மிகும் வீராவோ. – நல்

3. விண்ணாடர் முழங்க, மண்ணாடர் விளங்க,
மேவி வந்தமே சையாவே,–படு
பாவி சொந்தம் ஏ சையாவே. – நல்

4. சீராட்டுக் காட்டி எந்தையார், தந்தையார்
திருக்கடைக் கண்ணால் பார்த்தாரே;–வந்து,
திரும்பத் திரும்ப எனைச் சேர்த்தாரே. – நல்

5. ஆட்டைக் கூட்டி ஓர் தொழுவத்தில் அடைப்பார்,
அரிய நல்ல மேய்ச்சல் கொடுப்பார்,–அன்
பாகத் தோளினிலே எடுப்பார். – நல்

*– வே. சாஸ்திரியார்*

### வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே

**235. (259) நாதநாமக்ரியை** **சாபுதாளம்**

*பல்லவி*

**வாரா வினை வந்தாலும் சோராதே மனமே;**
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

*சரணங்கள்*

1. சூரன் சதித்துன் மீது வலை வீசினாலும்,
சோராதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே. - வாரா

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவுசெய்தாலும்,
உறுதிவிட்டயராதே, நெறி தவறாதே. - வாரா

3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே. - வாரா

4. தன் உயிர் ஈந்திட்ட உன் யேசுநாதர்
தள்ளுவரோ? அன்பு கொள்ளவர் மீதே. - வாரா

5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே. - வாரா

6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ?
வானவனை முற்றும் தான் அடைவாயே! - வாரா

***- யோ. பால்மர்***

## கிறிஸ்தேசுவே உனக்கு நேச துணையே

**236. (260) சஹானா** **ஆதி தாளம்**

*பல்லவி*

**நெஞ்சமே, தள்ளாடி நொந்து,**
நீ கலங்காதே;-கிறிஸ்
தேசுவே உனக்கு நல்ல
நேச துணையே.

*சரணங்கள்*

1. தஞ்சமான தோழர்களும் வஞ்சகமாக-உன்னை
தாக்கியே பகைஞராக நின்றபோதிலும். - நெஞ்சமே

2. அன்னை தந்தை ஆனவரும் பின்ன பேதமாய்-உனை
அங்கலாய்க்க விட்டெளிஞன் ஆன போதிலும். - நெஞ்சமே

3. ஜீவனம் இழந்து துன்பம் மேவினாலும்,-மா
சிறுமையாய்ச் சகிக்கொணா வறுமை கொண்டாலும்.
– நெஞ்சமே

4. பஞ்சமும் பசியும் வந்து கெஞ்ச வைத்தாலும்,-மிகு
பாரமாய்ச் சுமை உன் மேலே பற்றி நின்றாலும். – நெஞ்சமே

5. கெட்ட நோயிலும் நீ அகப் பட்டுழன்றாலும்,-எந்தக்
கேடுகள் உன்மேலே வந்து மூடினாலும். – நெஞ்சமே

6. ஆன வீடு தானும் கொள்ளை ஆன போதிலும்,-கிறிஸ்
தண்ணலே, உனக் கெல்லாம் என் றெண்ணி நிறைவாய்
– நெஞ்சமே

***– யோ. பால்மர்***

**ஆத்தும அடைக்கலம்**

**237. (262) நாதநாமக்ரியை. ஆதிதாளம்.**

**கண்ணிகள்**

**ஆத்தும அடைக்கலம் அன்புள்ள யேசுவே,**
அய்யா, புகலிடம் தாரும்;
காற்றுப் பெருவெள்ளம்போல் சீற்றங் கொள்ளுது துன்பம்,
கைகொடுத் தெனை ஆற்ற வாரும்.

2. நீரே என் நம்பிக்கை, நீரே என் தஞ்சம்;
நீசன் எனக்கு வேறார் அய்யா?
சாரும் நிராயுதன் யான் போரில் விழாப்படித்
தாங்கும் உன் மறைவினில், அய்யா.

3. நீதம் கெட்ட பாவியான், நீதி பரி சுத்தமும்
நிறைந்த நீர் எனக்குத்ர வாதி;
பாதகத்தால் நிறைந்த பேதையான்; கிருபை சத்தியம்
பரிபூரணம் உள்ளோன் நீர் ஜோதி.

4. எந்தப் பாவமும் மூடும் விந்தைக் கிருபை உண்டும்மில்,
என் பாவம் தீர்த்தருளும், கோவே!
நொந்த எனை நீர் ஆற்றிச் சிந்தையைப் புதுப்பித்து
நோக்கும் அதைத் துய்யதாய், தேவே.

5. சீவ ஊற்றே, உம்மில் யான் தெளிந்து குடிப்பேனாக;
தீராத தாகங்கள் தீரும்;
ஓவா[1] நித்தியமட்டாகப் பாவி என் நெஞ்சில் ஊறும்
உன்னத அன்பன் யேசு, வாரும்.

*– அ. வேதக்கண்*

**மாற்றீர் என் கவலை**

**238. (263) சங்கராபரணம் ஆதிதாளம்**

*பல்லவி*

**மாற்றீர் என் கவலை அருள்பெற**
மாற்றீர் என் கவலை;–மிக
மாற்றியே கலி தீர்த்தீர் உமது
மகிமையை நிறைவேற்றி.

*சரணங்கள்*

1. சமனவரசே,[2] நீர் தந்தை
சமனவரசே, நீர்–ஒரு
சந்திர பதம் போல் சுடரே விடுத்தீர்,
தாசனுரு வெடுத்தீர். – மாற்றீர்

2. சூதலகையை நீக்கி, அழலின்
சூதலகையை நீக்கி,–என் கை
தூக்கி, உலகிடர் போக்கி, எமையே
துதிக்கவும் மயலாக்கி.[3] – மாற்றீர்

3. சடலமுலகம் சூது, பொல்லாச்
சடலமுலகம் சூது;–இது
தகாததின் மடவாது கொடியது;
சஞ்சலம் இனி யேது? – மாற்றீர்

---

1 ஓயாத 2 வானவர் அரசே 3 ஆசையாக்கி

4. நலங்கடமை[1] வழுவி, சுகிர்தன்
நலங்கடனை[2] வழுவி,–வழி
நழுவி விழுமெனைக் கழுவி அழகாய்
நலமாக்கவே வருவீர். – மாற்றீர்

***– வே. சாஸ்திரியார்***

## ஜெப சிந்தை எனில் தாரும்

**239. (213) நாதநாமக்ரியை** **சாபுதாளம்**

***பல்லவி***

**ஜெப சிந்தை எனில் தாரும், தேவா,–என்னை**

***அனுபல்லவி***

அபயமென் றுனக்குக்கை
அளித்தேன் பொற்பாதா. –ஜெப

***சரணங்கள்***

1. உண்மை மனதோ டுன்னைக் கெஞ்ச,–உல
கெண்ண மெல்லாம் அகற்றி உரிமையே மிஞ்ச,
தொன்மை ஆயக்காரன் போலஞ்ச,–பவ
தோஷமகலத் திருரத்தம் உள்ளிஞ்ச.[3] –ஜெப

2. இடைவிடாமல் செய்யும் எண்ணம்–என்
இதயத்தில் உதயமாய் இலங்கிடப் பண்ணும்;
சடமுலகப் பேயை வெல்லும்–நற்
சாதக முண்டாகத் தயைசெய் என்னுள்ளம். –ஜெப

3. ஊக்கமுடன் ஜெபம் செய்ய,–தகா
நோக்க மெல்லாம் கெட்டு நொறுங்கியே நைய,
பேய்க்கண மோடுபோர் செய்ய,–நல்
ஆக்கம் எனில் தந்து ஏக்கம் தீர்ந்துய்ய. –ஜெப

***– சா. சீமோன்***

---

1 நலன்கள் தமை 2 நல்ல கட்டளையை 3 உள் சுவற

## ஜெபம் மறவாதே நேசனே

**240. கமாஸ்** **ஆதி தாளம்**

*பல்லவி*

**ஜெபம் மறவாதே நேசனே–எக்காலமும் நீ!**

*சரணங்கள்*

1. ஜெபம் பரமனுடன் பேச்சு;
தேவை யெல்லாம் அத்தா லாச்சு;
தப விசுவாசி மூச்சு;
தகாதெலாம் அத்தால் போச்சு. –ஜெப

2. அம்பரன் கற்பனை நோக்கு;
அவரதருமை வாக்கு;
நம்பிச் சந்தேகம் போக்கு;
நலம் வரத் தீமை நீக்கு. –ஜெப

3. பேயை ஜெபத்தோடு வென்ற,
பிரிய நாமமுங் கொண்ட,
நேய சுதன்தனைத் தந்த,
நின் மலனுக்கே யுகந்த. –ஜெப

4. விசுவாச நேசத்தோடு
மிகும் பக்தியோடு நாடு;
நிச்சயமாய் பரனைத் தேடு;
நேர்மையுடனே ஓடு. –ஜெப

5. பகலுடன் இரவிலும்,
பணிவுடன் குறைவிலும்,
திகிலிலும் மகிழ்விலும்,
செல்வம் வறுமையிலும். –ஜெப

6. தேவ அரசாட்சிக்காக
ஜெபி, உன்றன் குறைபோக,
ஆவலுடன் பிறர்க்காக
அன்புடன் ஜெபிப்பா யாக. –ஜெப

*– ஞா. சாமுவேல்*

## ஜெபத்தை ஏற்றுக்கொண்டருளும்

**241. (238) காபி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஏற்றுக்கொண்டருளுமே, தேவா!–இப்போ**
தேழையேன் ஜெபத்தை இயேசுவின் மூலம்.

***சரணங்கள்***

1. சாற்றின ஆதி ஆயத்த ஜெபமும்,
சாந்தமாய் ஜெபித்த பாவ அறிக்கையும்,
தேற்றிக்கொண்டருளும் மன்னிப்பின் மருவும்[1]
திவ்விய பாதத்தில் வைக்கிறேன், ஸ்வாமி –ஏற்று

2. குறைவுண்டு இதிலே, அருமைப் பிதாவே,
குற்றம் மன்னித்திடும் யேசுவின் மூலம்;
முறைப்படி கேட்க நான் தெரியாத பாவி;
முழுதும் மேசையாமேல் வைக்கிறேன், ஸ்வாமி. –ஏற்று

3. மறுரூப ஆவி வேண்டுமென் ஸ்வாமி;
மனமெல்லாம் புதிதாக்கிடும் ஸ்வாமி,
சிறுமைப்பட் டடியேன், கேட்கிறேன் ஸ்வாமி;
தேற்றிடும், புது பெலன் ஊற்றிடும், ஸ்வாமி. –ஏற்று

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்;
வெளிப்படும் மறைபொருள் பலப்படச் செய்யும்;
சிசுவைப்போல் மறுபடி பிறந்திடச் செய்யும்;
தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும். –ஏற்று

***– அருளாந்தம்***

## இன்ப காலமல்லோ ஜெபவேளை?

**242. (239) பைரவி** **சாபுதாளம்**

***பல்லவி***

**ஆ! இன்ப கால மல்லோ–ஜெபவேளை**
ஆனந்த காலமல்லோ?

---

1 வாசனை

### *அனுபல்லவி*

பூவின் கவலைகள் போக்கி என் ஆசையைப்
பொன்னுல காதிபன் முன்னே கொண்டேகிடும். – ஆ!

### *சரணங்கள்*

1. துன்பம் துயர் நீக்கி,–பொல்லாங்கன்–சோதனைகள் போக்கி,
அம்பர வாசிகளோ–டிதயத்தை–இன்ப உறவாக்கி,
கெம்பீரமாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டி மகிழ்வுடனுற்று வரச் செய்யும். – ஆ!

2. ஜீவ ஆறுதல் பெற்று,–பிஸ்காவின்–சிகரமதனில் உற்று,
தேவ நகர் கண்ணுற்றுச்–சடலத்தை–ஜெகத்தில் எறிந்துவிட்டு,
ஆவி களிப்புடன் ஆகாயஞ் செல்லவே,
அன்போடு பார்த்து நல் வந்தனஞ் சொல்லுவேன்.– ஆ!

***– ம. வேதமாணிக்கம்***

## சத்திய வேதத்தைத் தினம் தியானி

**243. (141) ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

### *பல்லவி*

**சத்திய வேதத்தைத் தினம் தியானி,**
சகல பேர்க்கும் அதபிமானி.[1]

### *அனுபல்லவி*

உத்தமஜீவிய வழி காட்டும், உயர்வானுலகில் உனைக்கூட்டும் – சத்திய

### *சரணங்கள்*

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும்; வயோதியர்க்கும் அதுண வாகும்
பாலகர்க்கினிய பாலும் அதாம்; படிமீ தாத்மபசி தணிக்கும்.
– சத்திய

---

1 அது பெருமைக்குரியது

2. சத்துருப் பேயுடன் அமர்புரியும் தருணம் அது நல் ஆயுதமாம்;
புத்திரர் மித்திரரோடு மகிழும் பொழுதும் அதுநல் உறவாகும்.
– சத்திய

3. புலைமேவிய[1] மானிட ரிதயம் புனிதம் பெறுதற்கதுமருந்தாம்;
நிலையா நரர்வாணாள் நிலைக்க நேயகாய கற்பம்[2] அதாம்
– சத்திய

4. கதியின் வழிகாணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம் அது;
புதிய எருசாலேம்பதிக்குப் போகும் பயணத்துணையும் அது.
– சத்திய

5. மாந்தர் ரக்ஷிப்படையும் வழி வழுத்தும் வேதவார்த்தை அது;
வேந்தர் அமைச்சர் முதலெவர்க்கும் விதித்த பிரமாணமும்
அதுவே. – சத்திய

***– மு. சாமுவேல்***

**சத்திய வேதம் திவ்யமான மதுரம்**

**244. (142) சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**தேன் இனிமை யதிலும் சத்திய வேதம்**
திவ்யமான மதுரம்.

**அனுபல்லவி**

ஞானமது நிறையும் வேதமதில் எனக்கு,
நாதனே, அருள்ஆசை அனுதினம் ருசித்திட. –தேன்

**சரணங்கள்**

1. ஆரணம் அதி புனிதம் களங்கம் இல்
லாத சுகிர்த அமுதம்;
பூரணமாய் அதைத் தான்உட்கொண்டே வரில்,
பொன்னுல கதற் கேற்ற தன்மை உண்டாக்குமே. –தேன்

---

1 தீமை சேர்ந்த 2 மருந்து

2. பாதைக்குரிய தீபம்; மெய் வேதம்
பற்றிடில் மிகு லாபம்;
வாதை செய்திடும் பல சோதனைகளும் எதிர்
வரில் அனைத்தும் வெல்லத்தகும் படைக்கல[1] மதே. -தேன்

3. விண்ண தழிந்தாலும், அதோ டிந்த
மேதினி ஒழிந்தாலும்,
திண்ண மதாய் என்றும் சிறந்திலகும் ஜீவ
திருமறை எனில் தங்கிப் பலன் தர அனுக்ரதி -தேன்

4. எத்திசையிலுமுள்ள நரர் யாவரும்
ஏகன் நின் அறிவு கொள்ள,
சுத்த சுவிசேஷம் துலங்கிப்ர காசிக்கத்
தூய நல் ஆவியை யாவர்க்கும் ஈந்தருள். -தேன்

***– யோ. பால்மர்***

## வேத புத்தகம் விலைபெற்ற செல்வம்

**245. (358) செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**வேத புத்தகமே, வேத புத்தகமே,**
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

***சரணங்கள்***

1. பேதைகளின் ஞானமே,-பெரிய திரவியமே,
பாதைக்கு நல்தீபமே,-பாக்யர் விரும்புந் தேனே! - வேத

2. என்னை எனக்குக் காட்டி-என் நிலைமையை மாற்றிப்,
பொன்னுலகத்தைக் காட்டிப்-போகும் வழி சொல்வாயே.- வேத

3. துன்பகாலம் ஆறுதல்-உன்னால்வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய்-என்றும்நம்பின பேர்க்கே. - வேத

4. பன்னிரு மாதங்களும்-பறித்துண்ணலாம் உன்கனி;
உன்னைத் தியானிப்பவர்-உயர்கதி சேர்ந்திடுவார். - வேத

***– அருளானந்தம்***

---

1 பேராயுதம்

**பாதைக்கு தீபம்**

**246. (143) மோகனம்** **ஏகதாளம்**

***பல்லவி***

**பாதைக்கு தீபமாமே**
பரிசுத்த ஆகமம்–மா நல்ல

***சரணங்கள்***

1. பாதைக்கு தீபமே, பாவிக்கு லாபமே,
பேதைக்குத் திரவியமே, பரிசுத்த ஆகமம். – மா நல்ல

2. தேனின் மதுரமே, திவ்ய அமுதமே
வான பிதாவின் வாக்கே பரிசுத்த ஆகமம். – மா நல்ல

3. நீதியி னாதாரமே, நெறியுள்ளோர் செல்வமே,
ஜாதிகள் மேன்மையாமே பரிசுத்த ஆகமம். – மா நல்ல

4. ஞான சமுத்திரமே, நல்ல சுமுத்திரையே.[1]
ஈனர்க்கும் ஆதரவே பரிசுத்த ஆகமம். – மா நல்ல

5. உலகோர்க் குயிர்துணை, உண்டோ அதற்கிணை?
அலகையை வெல்லுங்கணை பரிசுத்த ஆகமம். – மா நல்ல

6. எல்லையில்லா விஸ்தாரம், எவர்க்கும் பர மாகரம்,
வல்ல பரனின் வேதம் ஆகமம். – மா நல்ல

***– யாழ்பாணம் அருளானந்தம்***

**ஞான சுவிசேஷமே**

**247. (144) பிலஹரி.** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஞான சுவிசேஷமே**
நன்மை தரும் நேசமே

---

1 சரியளவு

**அனுபல்லவி**

ஞான உபதேசமே, வளரும் விசுவாசமே, – ஞான

**சரணங்கள்**

1. சத்திய வாக்கியமே, சந்தோச பாக்கியமே,
புத்தியா ரோக்கியமே, புண்ணிய சிலாக்கியமே. – ஞான

2. நீதிப் பிரசங்கமே, நிமலன் அருள் தங்கமே,
சோதிமிகும் துங்கமே,[1] துதிபெருகும் பொங்கமே.[2] – ஞான

3. அஞ்ஞானத்தை அழிக்கும், அலகையிடர் ஒழிக்கும்,
மெய்ஞ்ஞானத்தை அளிக்கும், விளங்கி என்றும் செழிக்கும்.
– ஞான

4. யேசுஅண்டையில் சேர்க்கும், எல்லா இடரும் நீக்கும்,
பேசும் பவத்தைப் போக்கும், பேதைமையோரைக் காக்கும்.
– ஞான

***– யோ. பால்மர்***

**தேவ வசனத்தையே**

**248. (59 L.) உசேனி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**தேவ வசனத்தையே நீராவலுடன் கேட்டதனின்**
செய்கைக்காரருமாகுங்களேன் செவ்வையாவே. – தேவ

**சரணங்கள்**

1. செய்கையற்ற கேள்விக்காரன் மெய்யாய்த் தன்னிலை மறந்தான்
ஐயோ அவன் நிர்ப்பாக்கியனே, அருளில்லானே. – தேவ

2. பூரண விடுதலையின் ஆரணந்தன்னில் நிலைத்துத்
தாரணியில் நற்செய்கையுள்ளோன் தகுபாக்கியனே. – தேவ

3. தேவமகிமை நவிலும் நாவையடக்காமலே தான்
தீங்குற இதயம் எத்துவோன், தெய்வபத்தி யவம். – தேவ

1 தூய்மை 2 பொலிவு

4. அநாதர் விதவைகளை ஆதரித்துல காற்கறை
அணுகாது காப்பதே பத்தி அம்பர தந்தை முன். – தேவ

5. கிருபை விண்ணப்பங்களின் திரு ஆவியை யூற்றுவன்
பிதாவை யாவியுண்மையிலும் சதா பணிவீர். – தேவ

***– ல. யோசுவர்***

### வேதமே என்ன சொல்லுவேன்?

**249. கமாஸ்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வேதமே, என்ன சொல்லுவேன்?–நின் மாட்சியை.**

**அனுபல்லவி**

சேத மிலாது நன்னாதர் தம் அருள் திருப்
பாதமுறும் நெறி யோது மொரே சத்ய. – வேத

**சரணங்கள்**

1. கண்முன் நீ எழுந்தானால் கரையிலா ஞானம்;
காந்தி நற்பனி மழை கசிந்திடும் வானம்;
புண் மனமுடை யோர்க்குப் புகழருந் தானம்;
புசித்திடக் கசித்திட ருசித்திடும் பானம். – வேத

2. சிறியவர் பெரியவர் செல்வர்கள் வலியார்
தீரர்கள் வீரர்கள் சீரியர் எளியார்
அறிஞர்கள் அல்லவர் ஆடவர் மெலியார்
அனைவரும் அருந்திட அருந்திடச் சலியார். – வேத

3. கனபல மருளுவாய், தினந்தினங் காலை
களைப்பினைப் போக்குவாய், களைப்புறு மாலை
தினமென திதயமே திருத்தலுன் வேலை,
செப்பருங் கனிதருங் கற்பகச் சோலை. – வேத

4. அகமுறு மானைகள்[1] விழுந்து தள்ளாடும்;
அருள்நதி ஆடுகள் நடந்துனி லோடும்;
தகவுனின் கரைகளில் குருவிகள் கூடும்;
தருக்கள் செழித்திருக்கும் தாசர்கள் நாடும். – வேத

5. பொன் அபரஞ்சியிலும்[2] உன் விலை பெரிதே!
பூவுலகினிலுனக் குவமைக ளரிதே;
நின்னை யசட்டை செய்வோர் நிலைமிக வறிதே!
நின்படிப் பறியாதோர் கல்விமா சிறிதே! – வேத

6. இருபுறங் கருக்குவாள் தனிலும் நீ கூரே!
இகபரம் ரண்டிற்கும் உன்வழி நேரே!
கிருபை எத்தனமுனக் கேற்ற நற்பேரே!
கிறிஸ்துவின் அருள்தனை எனக்கு நீ வாரே![3] – வேத

***– ஞா. சாமுவேல்***

## வேத வசன விதைகளை

**250. செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வேத வசன விதைகளைப் புவியில்**
விதைப்பில் தெளிப்பில் வெகு பல பாடம்.

**அனுபல்லவி**

பாதைதனில் விதைக்கும் பக்தனருள்வேதம்
பக்தர்களைச் சேர்க்கும் சுத்தனருள் பாதம். – வேத

**சரணங்கள்**

1. அதிசய வசனம் இந்திய கரையில்
ஆழமாய் மரமாய் நடப்பட்டு வருதே,
நதிவெள்ளம் பெறுதே நலமிக்கத்தருதே,
நாளும்பாவியிடம் பேர் பெற்று வருதே. – வேத

---

1 யானைகள் 2 புடமிட்ட பொன்னிலும் 3 பொழிவாய்

2. தீயர்கள் துணையாய் துன்புறும் வேளையில்,
தேறுதலளித்துத் துலங்கிடும் வசனம்,
நேயமாய் மனதில் இறுகவே நின்று
நிமலன் கிருபை நிறைவுறச்செய்யும். - வேத

3. நால்வகைத் தாளமேளங்கள் கொட்ட
நடனமுடை சபைமிகக்கூடச்
சாலவே மக்கள் இன்னிசை பாடச்
சாமி வந்து சேர சந்தோஷங் கொண்டாட - வேத

## அன்பே பிரதானம்

**251. (205) கமாஸ்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**அன்பே பிரதானம்,-சகோதர**
அன்பே பிரதானம்.

***சரணங்கள்***

1. பண்புறு ஞானம்,-பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம்,-இவைகளி லெல்லாம். - அன்பே

2. பலபல பாஷை-படித்தறிந்தாலும்,
கலகல வென்னும்-கைமணியாமே. - அன்பே

3. என் பொருள் யாவும்-ஈந்தளித்தாலும்,
அன்பிலையானால்-அதிற்பயனில்லை. - அன்பே

4. துணிவுட னுடலைச்-சுடக்கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால்-பயனதிலில்லை. - அன்பே

5. சாந்தமும் தயவும்-சகல நற்குணமும்
போந்த சத்தியமும்-பொறுமையுமுள்ள. - அன்பே

6. புகழிறு மாப்பு,-பொழிவு[1] பொறாமை,
பகைய நியாயப்-பாவமுஞ் செய்யா. - அன்பே

7. சினமடையாது,-தீங்கு முன்னாது,
தினமழியாது,-தீமை செய்யாது. - அன்பே

8. சகலமுந் தாங்கும்,-சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும்-மேன்மை பெற்றோங்கும். - அன்பே

***- ச.பே. ஞானமணி***

**பாக்கியர் இன்னார்**

**252. (265) சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**பாக்கியர் இன்னார்-என்றிறைவன்**
பண்புடன் சொன்னார்.

**அனுபல்லவி**

ஆக்கியோன் யேசுவின் வாக்கியம் கேட்கவே
அனந்தமான ஜனம் வனந்தனில் நிற்கையில், - பாக்

**சரணங்கள்**

1. ஆவி பணிந்தோர்,-மனத்தாழ்மை-யான தணிந்தோர்,
பாவிகள் தாமென்று பயந்து நடப்போர்
தேவனின் ராஜ்யம் சேர்வதால் பாக்கியர். - பாக்

2. துக்கப்படுவோர்,-பவத்துக்காய்த்-துயரப்படுவோர்
விக்கினமின்றி எந் தேவன் அருளினால்
மிக்க மெய்யாறுதல் மீட்புறும் பாக்கியர். - பாக்

3. சாந்த குணத்தோர்,-சண்டைகோப-தாபம் வெறுத்தோர்,
வந்தனார் செய்கையுள் சாந்தனையும் கொள்வோர்
மேதினி வாழ்விலும் விண்ணிலும் பாக்கியர். - பாக்

---

1 தற்புகழ்ச்சி

4. நீதியின் பேரில்–பசி தாகம்–நித்தம் கொள்வோரில்
போத மெய்ப் புத்தியும் பூரண பத்தியும்,
காதலன் ஆவி கடாட்சிப்பர் பாக்கியர். – பாக்

5. இரக்க முடையோர்,–பிறர்மீது–உருக்கமுடையோர்,
நெருக்கப்படுவோர்க்கு நேயமுற்றுதவுவோர்
காதலன் ஆவி கடாட்சிப்பர் பாக்கியர். – பாக்

6. சுத்தநெஞ்சத்தார்,–தேவனருள்–சுகிர்த ஜென்மத்தார்
பத்தியில் வர்த்தித்து நித்தமும் தேவனின்
பரிசுத்த சமுகத்தைத் தரிசிக்கும் பாக்கியர். – பாக்

7. சமாதானத்தை–நடப்பித்துச்–சல்யம்[1] வாதத்தைத்
தமதுரை நடக்கையால் தள்ளி ஒழுகுவோர்
நமதேகன் சேயர்கள் என்னும் மெய்ப்பாக்கியர். – பாக்

8. நற்செய்கை யிட்டுப்–பகைஞரால்–நஷ்டங்கள் பட்டுத்
துர்செய்கை நீங்கியே துன்பப் படுவோர்
சுகலோகம் சேர்ந்தென்றும் முகியாத பாக்கியர். – பாக்

*– த. யோசேப்பு*

## நித்தம் முயல் மனமே

**253. உசேனி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**நித்தம் முயல்[2] மனமே! பரி**
சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ.

*சரணங்கள்*

1. அத்தன் யேசுவினில் பத்தியாய் அமர்ந்து
சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி! –நித்தம்

2. அல்பகல் யேசுவோ டதிக நேரத்தை
ஆசையாய்க் கழி நீ, அவரைப்போலாவாய். – நித்தம்

1 உபத்திரவம் 2 முயற்சி செய்

3. தேவன்றன் பிள்ளைகள் யாவரையும் நேசி,
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய். – நித்தம்

4. யேசுவே உன்றனை என்றும் நடத்துவார்;
இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின்செல்லு. – நித்தம்

5. எந்த எண்ணத்தையும் யேசுவின் கீழ் ஆக்கி,
உன்றன் உள்ளத்தில் அமர்ந்திரு சாந்தமாய். – நித்தம்

6. மேவும் அன்பினுக்குள் தேவாவி நடத்த
மேலான வாழ்வுக்குத் தக்கவனாகுவாய். – நித்தம்

*– வே. சந்தியாகு*

**ஏசுவைப்போல நட**

**254. மோகனம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஏசுவைப் போல நட–என் மகனே!**
ஏசுவைப் போல நட–இளமையில்.

**அனுபல்லவி**

நீசனுமனுடர் செய் தோஷமும் அகற்ற,
நேயமுடன் நர தேவனாய் வந்த–ஏசுவைப்

**சரணங்கள்**

1. பன்னிரு வயதில் அன்னை தந்தையுடன்
பண்டிகைக்கு எருசலேம் நகர் வர,
சின்ன வயதிலே தேசிகரைக் கேட்ட
சீர்மிகு ஞானத்தை உள்ளந்தனிலெண்ணி – ஏசுவைப்

2. சொந்தமாம் நாசரேத்தூரினில் வந்தபின்
சுத்தமாய் தந்தைக் குதவியாய் வளர்ந்து,
எந்த நாளுங் கோணி எதிர்த்துப் பேசாது
இருந்து மகிழ்ந்தவர் சொற்படி நடந்த – ஏசுவைப்

3. எனையிளைஞரோ டீனவழிசெல்லா,
எவருக்கும் சிறந்த மாதிரியாய் நின்று
ஞானம் தேவ கிருபை ஆவி பெலன் கொண்டு
நரரின் தயவிலும் நாளாய் வளர்ந்தவுன் – ஏசுவைப்

***– சா. பரமானந்தம்***

**இயேசுவை வாழ்த்திப் போற்றும்**

**255. (266) தோடி** **சாபுதாளம்**

**பல்லவி**

**மகிழ்ந்து, புகழ்ந்து, மிகப்பணிந்து, துதித்தேசுவை**
வாழ்த்திப் போற்றும், என் ஆத்துமாவே.

**அனுபல்லவி**

தகுந்த காலத்தில் க்றிஸ்துன் அகந்தைப்பவம் தீர்த்துனைத்
தமது கிருபைச் சமுகந்தனில் சேர்த்ததால் – மகிழ்ந்து

**சரணங்கள்**

1. சிந்தை மகிழ்ந்து சத்திய மார்க்கத்தில் ஓடு;
தினந் தினம் ஜெபத்தில் தேவாவியைக் கூடு;
விந்தையாய் மெய்ஞ்ஞான பதங்களைப் பாடு;
விண் உலகத்தின் நித்ய வாழ்வினைத் தேடு;
வீரமாய் மறை கூறும் சத்தியமே,
நயமே, ஜெயமே–திவ்விய
சாரமாய் வெகு தாரமாய்ப் பார்த்து,
தேறுவாய், களி கூருவாய் தினம் – மகிழ்ந்து

2. அவரைப் பின் சென்ற பின்பாசை ஆகாது;
அநித்திய உலகத்தின் பாசம் ஆகாது;
பவம் மிகும் மாமிச இச்சை ஆகாது;
பரிசுத்த நெறி விட்டுப் பிரிவ தாகாது;
பந்தயப் பொருளைச் சிந்தையில் எண்ணியே,
நண்ணியே,[1] உன்னியே,–மகா
விந்தைக் கிறிஸ்தரசன் உன்தன் சிரத்தின் மூடி,
சந்தோஷமாய்ச் சூட்ட முந்தியோடு, மிக – மகிழ்ந்து

***– மரியான் உபதேசியார்***

---

1 விரும்பியே

## ஆண்டவரின் நாமம் ஈண்டு போற்றுவேன்

**256. (267) சஹானா** **ஆதிதாளம்**

***கண்ணிகள்***

**ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன்;-அவர்**
ஆளுகையின் நீதி அன்பின் வாழி[1] சாற்றுவேன். - ஆண்ட

2. உத்தம வழியில் நிதம் புத்தி கொள்ளுவேன்;-மன
உண்மையுடன் வாழ்ந்து தீய கன்மம் தள்ளுவேன். - ஆண்ட

3. கெட்ட விஷயங்கள் எனை ஒட்டுவதில்லை-மதி
கேடரின் புரளிகளும் கிட்டுவதில்லை. - ஆண்ட

4. வஞ்சகங்களை உகக்கும் நெஞ்சை நீக்குவேன்;-பொல்லா
மார்க்கங்களிலே நடக்கும் தீர்க்கம் போக்குவேன். - ஆண்ட

5. மற்றவனை ஏசி வாயால் குற்றங்கள் செய்யும்-துஷ்ட
மாந்தர் மேலே பற்றாமலென் பாந்தவம் நையும். - ஆண்ட

6. பொய்யர்களை என்னுடனே உய்ய ஒட்டேனே;-மகா
புரளிசெய்யும் எத்தர்களின் திரளில் கிட்டேனே. - ஆண்ட

7. சீருடையோர் பேரில் அன்பு கூருவேனே;-நல்ல
சீரொழுகு சான்றோர் தயை சேருவேனே. - ஆண்

***- த. யோசேப்பு***

## புத்தியாய் நடந்து வாருங்கள்

**257. (268) துஜாவந்தி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**புத்தியாய் நடந்து வாருங்கள்;-திரு வசனப்**
பூட்டைத் திறந்து பாருங்கள்.

---

1 புகழ்

***அனுபல்லவி***

சத்தியத்தைப் பற்றிக்கொண்டு,
தன்னைச் சுத்தி பண்ணிக்கொண்டு,
நித்தமும் ஜெபம், தருமம்,
நீதி செய்து, பாடிக்கொண்டு – புத்தி

***சரணங்கள்***

1. ஆருடைய பிள்ளைகள் நீங்கள்?–திரு உரையில்
அறிந்து உணர்ந்து பாருங்கள்;
சீருடைய தெய்வப் பிள்ளைகள்–நீங்கள்; ஏதிந்த
தித்தரிப்பு[1] செய்யும் வகைகள்?
கூருடன் மெய்த் திருமறை குறித்துச் சொல்வதைத் தினம்
நேருடன் ஆராய்ந்து பார்த்து நித்திய ஒளியில் தானே – புத்தி

2. ஆவியை அடக்காதிருங்கள்;–மறை சொல்லுவதை
அசட்டை செய்யாமல் பாருங்கள்;
ஜீவனை அடையத் தேடுங்கள்;–யேசுக் கிறிஸ்தின்
சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள்;
மேவியே ஜெபம், மன்றாட்டு, விண்ணப்பம் வேண்டுதலோடு
தாவி, யேசுவைப் பிடித்துத், தளரா நடையோடுன்னிப் – புத்தி

3. ஏசுக் கிறிஸ்தையன் பதத்தைத்–துதித்துப் போற்றி,
இன்பமாய்ச் சத்திய வேதத்தை
வாசித்து ஆராய்ந்து, நலத்தைப்–பிடித்துளத்தில்
வைத்துக்கொண்டு, இவ்வுலகத்தை
நேசியாமல் பகைத்துங்கள் நித்திய ரட்சிப்பைத் தினம்
ஆசையோடு தேடி, நீங்கள் அடையும்படி முற்றிலும் – புத்தி

4. பரிசுத்த கூட்டம் அல்லவோ?–நீங்கள் எல்லாரும்
பரன் மகன் தேட்டம் அல்லவோ?
தரிசிக்க நாட்டம் அல்லவோ?–கிறிஸ்தின் உள்ளம்
தன்னிலே கொண்டாட்டம் அல்லவோ?
பரிசனை செய்தவர்பொற் பாதத்தை மனதில் உன்னிக்,
கரிசனை யோடு தேடிக், காணத் தீயோன் நாணப் படிப் – புத்தி

***– மரியான் உபதேசியார்***

---

1 உபாயம்

## சகோதரர்கள் ஒருமித்துச் சஞ்சரிப்பது

**258. (250) குரஞ்சி** **திஸ்ர ஏகதாளம்**

**சகோதரர்க ளொருமித்துச்**
சஞ்சரிப்பதோ எத்தனை
மகா நலமும் இன்பமும்
வாய்த்த செயலாயிருக்குமே.

2. ஆரோன் சிரசில் வார்த்த நல்
அபிஷேகத்தின் தைலந்தான்
ஊறித் தாடியில் அங்கியில்
ஒழுகுமானந்தம் போலவே.

3. எர்மோன் மலையின் பேரிலும்
இசைந்த சீயோன் மலையிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற
திவலைப் பனியைப் போலவே.

4. தேசம் மார்க்கம் இரண்டிற்கும்
சேனை எகோவா தருகிற
ஆசீர்வாதம் சீவனும்
அங்கே என்றுமுள்ளதே.

***– ஆ. சட்டம்பிள்ளை***

## தரி தாழ்மையே

**259. (368) முகாரி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தரி–தாழ்மையே தெரிந்து,–வெறு**
தாட்டிகமதை[1] உரிந்து.

**சரணங்கள்**

1. திரித்துவத் தொருவராம் கிறிஸ்தேசு
செயலதை நீ குறி மனமே;–அவர்
தரித்திர னிகராய் இகத்தில் உற்பவமாய்த்
தாழ்ந்திருந்தார் அனுதினமே – தரி

---

1 அகந்தை

2. மனத்தரித்திரர் தாம் பாக்கியர் எனவே
வாகுடன் அவர் உரைத்தாரே;–நெஞ்சே
உனக்குள் இத்தகையான நற்குணமே
உண்டோ என் றாய்ந்து நீ பாரே. – தரி

3. மேட்டிமை யுடையோர் மீது தற்பரனார்
வெறுப்படைந் தகற்றுவார் உடனே;–நல்ல
தாட்டிகமதிலாத் தாழ்ந்த சிந்தையினோர்
தமக்கருள் புரிகுவர் திடனே. – தரி

4. ஆதியில் தூதர்களில் சிலர் கெர்வம்
அடைந்து நல் வாசமற்றாரே;–உடன்
தீதறு பேய்களால் எரிநகரில்
சேர்ந்ததி சாபமுற்றாரே. – தரி

*– யோ. பால்மர்*

**திரும்பிப் பாராதே**

**260. (336) உசேனி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**திரும்பிப் பாராதே,–சோதோமைத்**
திரும்பிப் பாராதே.

**அனுபல்லவி**

விரும்பிப் பார்த்து, லோத்தின் பெண்டு
வெறுமுப்புத் தூண் ஆனதைக் கண்டு. – திரு

**சரணங்கள்**

1. சந்தைக் கூட்டும் பொம்மலாட்டு,–மாதர்
சந்தடி செய்யும் சீராட்டு,
விந்தையான போரோட்டு,–மந்தை
வேடிக்கை என்று விட்டோட்டு. – திரு

2. செல்வத்திலே மெத்தச் செருக்கு;–நீ
செய்வதெல்லாம் முழுத்–திருக்கு,
பல் வழி நீரோட்டப் பெருக்கு;–ஏன்
பண்ணுகிறாய் இந்த முறுக்கு? – திரு

3. அங்கும் இங்கும் சுற்றித் தயங்கிறாய்;–உல
காசையினால் மெத்த தியங்கிறாய்;
சங்கடத்துள்பட்டு மயங்கிறாய்,–வீண்
சண்டாளரோடு ஏன் முயங்கிறாய்? – திரு

4. ஆண்டவர் யேசு சகாயமே,–உனக்
கடைக்கலம் ஐந்து காயம்;
வேண்டிக் கொள்வது நேயம்;–கை
விடாதே இந்த உபாயம். – திரு

***– வே. சாஸ்திரியார்***

## செய்யவேண்டியதைச் செய்

**261. (337) கமாஸ்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**செய்ய வேண்டியதைச் சீக்கிரம்**
செய், செய், செய், செய், செய்.

***சரணங்கள்***

1. வையகமும் அதன் வாழ்வுகளும் மிக
மகிமை பெருமை பொருளானதுவும்
வெய்யவன்[1] கண்ட பனிபோலாம்; இது
மெய், மெய், மெய், மெய், மெய். – செய்

2. ஆவியும் கூடுவிட் டேகாமுன்,
ஆபத்து நாட்கள் வந்துணுகாமுன்,
தேவ சுதன் ஜெக ரட்சகரண்டை
சேர், சேர், சேர், சேர், சேர். – செய்

3. அவ்வியம்[2] பெருமை அகந்தையும் அசுத்தமும்
அகற்றி நீ அனுதினமும்
திவ்விய வேதத் தீவர்த்தி ஒளியினில்
செல், செல், செல், செல், செல். – செய்

1 சூரியன் 2 பொறாமை

4. துர்ச்சன ரோடுற வாகாமல், ஐயன்
துய்ய விதி பத்து மீறாமல்,
உச்சிதப் பதமருள் யேசுவைப் பணிந்-து
உய், உய், உய், உய், உய். - செய்

***- ஈ. பாக்கியநாதன்***

**சுத்த ஜலம் வேண்டுமோ?**

**262. (371) முகாரி** **சாபுதாளம்**

**பல்லவி**

**எது வேண்டும், சொல், நேசனே,-உனக்**
கெதுவேண்டாம், என் நேசனே?

**சரணங்கள்**

1. மதிவாட, மனம்வாட, மயக்கங் கண் ணிறைந்தாட
மதுபான முண வேண்டுமோ?-அன்றித்
துதிபாடும் உலகோருன் புகழ்பாடி மகிழ்ந்தாடச்
சுத்த ஜலம் வேண்டுமோ? - எது

2. வாதாடி நகையாடி, வழிகளில் விழுந்தாடி
மதுவுண்டு கெடவேண்டுமோ?-அன்றித்
தாதாவே, கனவானே, தனவானே யெனச் சாற்றத்
தண்ணீ ருண்ண வேண்டுமோ - எது

3. பகைதந்து, பழிதந்து, பரியாசந் தரு மது
பான முண வேண்டுமோ?-அன்றித்,
தகை கொண்ட கதியேற, அருளொடு புகழ்பெறத்
தண்ணீ ருண்ண வேண்டுமோ? - எது

4. சண்டை, காயம், கந்தை, அமளி, வேதனையாதி
தருங் குடி வெறி வேண்டுமோ?-அன்றிப்
பண்டை வேதஞ் சொன்னபடி மோட்சம் பெற ஜல
பானமது வேண்டுமோ? - எது

5. இரத்தக்கண், பெருந்துக்கம், ஏக்கம், நடுக்கம், வெட்கம்,
இவைதருங் குடி வேண்டுமோ?-அன்றித்,
திரத்துக்கும் அறிவுக்குஞ் சுகத்துக்கு மிடமான
தெளிந்த தண்ணீர் வேண்டுமோ? - எது

***- ஐ.ர. ஆர்னால்டு***

**பரத்திலே பொக்கிஷம் சேர்த்திடுங்கள்**

**263. (274) பைரவி** **சாபுதாளம்**

***பல்லவி***

**பொக்கிஷம் சேர்த்திடுங்கள்–பரத்திலே**

***அனுபல்லவி***

பக்கிஷமாகப் பரத்திலே பொக்கிஷம்
மிக்கவே சேர்ப்பது மேலான பாக்கியம். – பொக்

**சரணங்கள்**

1. பொட்டும் அரிக்காதே,–அங்கே புழுப்
பூச்சி கெடுக்காதே;
துட்டரங்கே கன்னமிட்டுத் திருடாரே;
துருவும் பிடியாது, குறையாது, அழியாது. – பொக்

2. விண்ணுலகந் தன்னிலே–பொக்கிஷத்தை
விரும்பியே சேர்த்திடுவோர்
மண்ணிலும் விண்ணிலும் வாழ்வது திண்ணமே;
மாயப் ப்ரபஞ்சத்தின் வாழ்வெல்லாங் குப்பையே – பொக்

3. உங்கள் பொக்கிஷம் எங்கேயோ,–அங்கே உங்கள்
உள்ளமுமே யிருக்கும்,
இங்கித மோட்சத்தை என்றும் நினைக்கவே,
என்றும் வைக்கப்பாரும் உங்கள் பொக்கிஷத்தை. – பொக்

4. ஜீவன் சுகத்துடனே–இருக்கையில்
ஆவலா யிப்பொழுதே,
தேவலோகத்திலே ஜீவ பொக்கிஷத்தைச்
சேர்த்திடுவோர் மெத்தப் பாக்கியவான்களே. – பொக்

***– ஏ. ஞானமணி***

**ஜீவாமிர்தம் தருவீரே**

**264. (272) ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**தேவாதி தேவே, நீரே–சேவிக்கில் உமை,**
ஜீவார்தம் தரு வீரே

**அநுபல்லவி**

ஈவாகிய தயவை நாவாலும் நயம்பெறப்
பாவாலும் எவர்முனும் ஓவா[1] தறிக்கைசெய்து – தேவாதி

**சரணங்கள்**

1. நன்றே, அருள் என்றே கொலைக்குச் சென்றாய்;–மரித்
தன்றே நீ பேயை முற்றும் வென்றாய்;
நின்றே இவ்வுலகினில் அன்றாடகவே நம்பி,
நேசா, விஸ்வேசா, இராசா, சருவ ஜீவ – தேவாதி

2. பொல்லா உலகம் அல்லோ? இதனில் செல்லா,–துணை
நல்லாயனே, என்பேன்; வல்லாய்,
சல்லாப[2] நூலில் அதி உல்லாச மேவி நிதம்
தாயா,[3] மாதுூயா, நன்னேயா, சுரர்கள் பதி – தேவாதி

3. பண்டே[4] மறைகை கொண்டே, இதயந் தொண்டே–புரிந்
தண்டே[5] வரும் உதவி உண்டே;
விண்டே[6] குறைகளும் தண்டை சுகிர்தமாகும்;
வேதா, என் தாதா,[7] அதீதா, மகத்வமான – தேவாதி

***– ஆ. அல்வின்***

## உதவி செய்தருளே

**265. காம்போதி** **சாபுதாளம்**

**பல்லவி**

**உதவி செய்தருளே!–ஒருவர்க்கொருவர் யாம்**
உதவி செய்திடவே.

---

1 ஓயாது
2 சரசம்
3 தாய் போன்றவனே
4 முற்காலம்
5 அருகில்
6 பிரிந்து
7 உபகாரா

### அனுபல்லவி

உதவி செய்தருள் மோட்ச
உசிதக் கோனே! நீ பூவில்
பதவி தந்திட வந்த போதினில்
பலருக்குதவின பான்மை போலவே. – உதவி

### சரணங்கள்

1. ஒருவரொருவர்க்காய்–சிலுவை தூக்க
ஒத்தாசை தருவாய்!
தருண நேச சகாயம் சகலர்க்கும் புரிய
சகோதரன் படும் கஷ்டங் கவலையில்
சன்மனத்தொடு பங்கு பெற்றிட. – உதவி

2. உன்னன்பு தொடவே–எம்முள்ளங்கள்
ஒன்றாய்ப் பொருந்தவே,
எந்நாளும் பிறன்பால் யாம் ஏகியே கிட்டிட,
எந்தையே! உனையருகி நெருங்கிட,
உன்தயை செயல் தந்து மேற்பட. – உதவி

3. பிரியாமல் உனையே–பற்ற எமக்குப்
பெலன் தா! நீ துணையே!
நிறைவாய் உனிலிருந்த பரிவான அன்பின் சிந்தை
நினது சீடர்கள் பெறவே கிருபைசெய்!
நிதமு மதிலே மிக வுய்திடவே – உதவி

4. மாசற்ற பளிங்காய்–ஒளிருமுன்
மாணன்பு மிகவாய்,
ஆசற்ற குணமனி கோர்க்கும் பொற் சரடதே!
அழிவிலாததை எமக்குள் அணிந்திட,
ஆர்ந்துன் சிந்தையை நேர்ந்து செய்திட. – உதவி

***– வே. மாசிலாமணி***

### புறப்படுங்கள்

**266. (273) சாவேரி.** **ஆதிதாளம்**

### பல்லவி

**புறப்படுங்கள், தேவ புதல்வரின் ஊழியரே,**

**சரணங்கள்**

1. கறைப்படா யேசுநாமம் கதித்து[1] மகிமைபெற,
பிறப்பினிலே உங்களைப் பிரித்த தயைநினைந்து, – புறப்

2. மாமிச இரத்தத்தோடு மயங்கி யோசிப்பதாலே
தாமசம் செய்ய வேண்டாம்; தரித்தெங்கும் நிற்கவேண்டாம்
– புறப்

3. அழிவின் பாதையில் செல்லும் அநேகரைக் கண்டிருந்தும்
பழி சுமராதபடி பரனுரையைப் பகரப் – புறப்

4. சிலுவை மரத்தில் தொங்கி ஜீவனை விட்ட கர்த்தர்
வலுவான அன்பை உங்கள் மனதினிலே அணிந்து. – புறப்

***– சா. சீமோன்***

**தாரணியை யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்**

**267. சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**தாசரே, இத்தரணியை அன்பாய்**
யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.

**அனுபல்லவி**

நேசமாய் இயேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,
வெளிச்சம் வீசுவோம். – தாச

**சரணங்கள்**

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை,
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,
உரித்தாய் யேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே. –தாசரே

1 சிறந்து

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,
யேசு கனிந்து, திரிந்தனரே. –தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை;
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே. – தாசரே

4. இந்தியதேச மாது சிரோமணிகள்
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;
சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,
நிர்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட. – தாசரே

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்;
ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம். – தாசரே

***– வே. சந்தியாகு***

**அறுப்போ மிகுதி**

**268. (80 L.) மணிரங்கு ஏகதாளம்**

**பல்லவி**

**அறுப்போ மிகுதி, ஆட்கள் தேவை,**
அருளும் நாதனே திவ்ய அருமைப்போதகனே.

**சரணங்கள்**

1. இந்திய தேசம் எங்கும் இருள்
எட்டி ஓடவே, எங்கள் சபைகள் நீடவே. – அறு

2. எமைப்புரந்த[1] யேசுநாமம்
எவருங்காணவே, இருள் அடங்கி நாணவே. – அறு

---

1 காத்த

3. வசன அமுதை வார்க்கும் நல்ல
வலவர் ஓங்கவே, மதிகேடு நீங்கவே. - அறு

4. நாடு நகரம் காடுமேடு
நாடுமிடமெலாம் சபைபரவு மிடமெல்லாம். - அறு

5. போதகன்மார் ஆவியோடுன்
புகழைஓதவே, மிகுப்பொய்யை மோதவே. - அறு

6. எண்ணில்லாத ஆத்துமாக்கள்
ஏங்கிநையுதே, மிகவும் இளைத்துத்தொய்யுதே. - அறு

7. ஏழையடியார் மனுக்கிரங்கும்
எமையாட்கொண்டவா, நல்லவாக்கு விண்டவா. - அறு

***- ம.ப. அருளப்பன்***

## ஆத்தும ஆதாயம் செய்குவோமே

**269. (275) பியாகு** **ரூபகதாளம்**

***பல்லவி***

**ஆத்தும ஆதாயம் செய்குவோமே,-இது**
ஆண்டவர்க்குப் பிரியம்;-நாமதினால்
ஆசீர்வாதம் பெறுவோம்,

***அனுபல்லவி***

சாத்திரம் யாவும் தெரிந்த கிறிஸ்தையன்
தஞ்சத்தைப் பெற்று நாமிந்த மாவேலையில்
ஆத்திரமாக முயற்சி செய்வோமாகில்
அற்புதமான பலனை அடையலாம். - ஆத்தும

***சரணங்கள்***

1. பாழுலக முழுவதையும் ஒருவன் சம்
பாதித்துக் கொண்டாலும்,-ஒரு
நாளுமழியாத ஆத்துமத்தை அவன்
நஷ்டப்படுத்தி விட்டால்,
ஆளுந்துரையவ னாயிருந்தாலுமே,
அத்தால் அவனுக்கு லாபமில்லை யென்று,
ஏழை ரூபங்கொண்டு ஞாலமதில் வந்த
எம்பெருமான் கிறிஸ்தேசன்று சொன்னாரே. - ஆத்தும

2. கெட்டுப்போன ஆத்துமாக்களை ரட்சிக்க
மட்டில்லா தேவசுதன்–வானை
விட்டுலகில் கனபாடு பட்டு ஜீவன்
விட்டதும் விந்தைதானே;
துட்டை யொருத்தியி னாத்துமத்தை மீட்க
தூயபரன் முன்னோர் கிணற்றருகிலே
இட்டமுடன் செய்த இரட்சண்ய வேலையை
இந்த நிமிஷமே சிந்தையி லெண்ணியே. – ஆத்தும

***– யே. ஞானமணி***

**ஜீவ வசனம் கூறுவோம்**

**270. (304) மோகனம்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஜீவ வசனங் கூறுவோம்,–சகோதரரே;**
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்.

***அனுபல்லவி***

பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி யேசு சிந்தை மகிழ்ந்திடவே. – ஜீவ

***சரணங்கள்***

1. பாதகப் பேயின் வலையில்,–ஐயோ! திரள்பேர்
பட்டு மடியும் வேளையில்;
பேதமை யோடு பிடிவாத மருள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதி பெறவே. – ஜீவ

2. காடுதனிலே அலைந்தே,–கிறிஸ்தேசு
கர்த்தன் சேவையில் அமர்ந்தே;
நாடு, நகர், கிராமந் தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய. – ஜீவ

3. பூலோகம் எங்கும் நமையே,–கிறிஸ்து நமை
போகச் சொல்லி விதித்தாரே;
காலமெல்லாம் உம்மோடு கூடயிருப்பேன் என்ற
கர்த்தன் வாக்கை நினைத்து எத்தேசமுந் திரிந்து. – ஜீவ

4. விண்ணின் மகிமை துறந்தார்,–கிறிஸ்து நமை
மீட்கக் குருசில் இறந்தார்;
மண்ணின் புகழ், பெருமை எல்லாம் தூசுகுப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியோடு. – ஜீவ

***– மா. வேதமாணிக்கம்***

### உன்றன் திருப்பணி

**271. மோகனம்** **சாபுதாளம்**

***பல்லவி***

**உன்றன் திருப்பணியை உறுதியுடன் புரிய**
உதவாத பாவி நானே.

***அனுபல்லவி***

அந்தகாரமே நின்றுன் அருணோதயமே கண்டு
வந்த நாள் முதற்கொண்டு வைத்தாய் எனக்குன் தொண்டு
– உன்றன்

***சரணங்கள்***

1. வேதனத்தின்[1] பொருட்டோ, மேலவர் நிமித்தமே
வெளியிட் டறிக்கை செய்யவோ?–உல
காதாயம் சுயநயம் அகிலத்துரிய புகழ்
அடைந்து ப்ரகாசிக்கவோ?
ஓதிக்காலங் கழிக்க உலகாவி அடைந்தவன்
நீதிக்கெனைப் பலியாய் நேர்ந்துகொண் டுழைக்கேனோ?
– உன்றன்

2. வேனல் குளிரைக் கண்டு மேனி மிகவெருண்டு
வெளியேறா தகம் துஞ்சினேன்,–வேளைப்
பான முணவுபிந்த பலபிணி வருமென்ற
பயத்தாலே நித மஞ்சினேன்;
கானகம்[2] மலைசென்று கடும்பணி குளிர் வென்று
போனகம் நீரகன்று புவியி லுழைத்த யேசு. – உன்றன்

1 சம்பளத்தின் 2 காடு

3. காடோ, மலை நதியோ, கடலோ, கடந்தலுத்துக்
கஸ்தி மிகவே அடைந்து,–உடல்
பாடுங் கவலை நோயும் பசியும் நிருவாணமும்,
பகைவர் திருடர் மோசமும்,
சாடக் கிறிஸ்துவுக்குத் தகுந்த பானபலியாய்
ஓடத்தனை யொப்பித்தோன் உறுதி யெனக்கில்லையே.
–உன்றன்

4. வண்டி வகைகளோடு வாழ்ந்தும் எனது கூடு
மயங்கி அயர்ந்து வாடுதே,–இனி
என்று மிருப்பிடத்திலிருந்து பணி புரிய
இசைந்தென் மனது நாடுதே;
ஒன்றும் உதவியின்று ஊரே அலைந்து சென்று,
நன்றே நிதம்புரிந்த நரனே பரனே யேசு. – உன்றன்

***– ஜி.சே. வேதநாயகம்***

**யேசு சேனை நாங்கள்**

**272. (356) பியாகு** **ஆதிதாளம்**

**வீராதி வீரர் யேசு சேனை நாங்கள்,**
சேனை நாங்கள்; யேசுவின் சேனை நாங்கள்.

2. திரு வசனத்தை எங்கும் திரிந்து சொல்வோம்,
திரிந்து சொல்வோம்; அதை அறிந்து சொல்வோம்.

3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்,
அதமாக்குவோம்; ஞானமதால் தாக்குவோம்.

4. சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப் பிடிப்போம்,
தேடிப் பிடிப்போம், அன்பு கூர்ந்து பிடிப்போம்.

5. ரட்சண்ய சீராவுடன் நீதிக் கவசம்,
நீதிக் கவசம்; கையாடுவோம் வாசம்.

6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்,
மேலுயர்த்துவோம்; அதை மேலுயர்த்துவோம்.

7. பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்,
பாசம் நீக்குவோம்; ஆசாபாசம் போக்குவோம்.

***– சா. சீமோன்***

## **தசம பாகம் தாரும்**

**273. (300) பியாகு** **ரூபகதாளம்**

### *பல்லவி*

**ஆண்டவர் பங்காகவே, தசம பாகம்,**
அன்பர்களே, தாரும்;–அதால் வரும்
இன்பந்தனைப் பாரும்.

### *அனுபல்லவி*

வான்பல கணிகளைத் திறந்தாசீர்
வாதங்கள் இடங்கொள்ளாமற் போகுமட்டும்
நான் தருவேன், பரிசோதியுங்களென்று
ராஜாதிராஜ சம்பூரணர் சொல்வதால். – ஆண்டவர்

### *சரணங்கள்*

1. வேதாளராஜன் அருஞ்சிறை மீட்டாளும்
விண்ணவர் கோமானே–அந்த
மேதகத்தை[1] நன்றி ஞாபகஞ் செய்திட
விதித்தது தானே,
வேதனம்[2] வியாபாரம், காலி, பறவையில்,
வேளாண்மை, கைத்தொழில், வேறு வழிகளில்,
ஊதியமாகும் எதிலும் அவர் பாகம்
உத்தமமாகப் பிரதிஷ்டை பண்ணியே. – ஆண்டவர்

2. ஆலயங் கட்ட, அருச்சனை செய்ய,
அதற்குளதைப் பேண,–தேவ
ஊழியரைத் தாங்கி உன்னத போதனை
ஓதும் நன்மை காண,
ஏழைகள், கைம்பெண்கள், அனாதைப் பாலகர்கள்,
ஏதுகரமற்ற ஊனர், பிணியாளர்,
சாலவறிவு நாகரீக மற்றவர்
தக்க துணைபெற்றுத் துக்கமகன்றிட – ஆண்டவர்

---

1 மேன்மை 2 சம்பளம்

3. நம்மைப் படைத்துச் சுகம் பெலன் செல்வங்கள்
யாவும் நமக்கீந்து,–நல்ல
இம்மானுவே லென்றொரு மகனைத் தந்து
இவ்வா றன்புகூர்ந்து,
நன்மை புரிந்த பிதாவைக் கனம்பண்ண
நம்மையும் நம்முட யாவைய மீந்தாலும்
சம்மதத்தே அதிலும் தசம பாகம்
தாவென்று கேட்கிறார்; மாவிந்தை யல்லவோ? – ஆண்டவர்

***– ஜி.சே. வேதநாயகம்***

## ஆதுலர்க்கீவதே பாக்கியம்

**274. (298) பியாகு** **ஆதி தாளம்**

***பல்லவி***

**நீதியாமோ? நீ சொல்லும்,–ஓய்!**
நெறியுளோரே, அறம் செய்யாதிருந்திடில். – நீதி

***சரணங்கள்***

1. ஆதுலர்க்[1] கீவதே பாக்கியம்;–பிறரை
ஆதரித்திடுவதே யோக்கியம்;–ஓகோ!
பாதகம் செய்யில் நிர்பாக்கியம்;–மோட்ச
பாதை நடக்கில் சிலாக்கியம். – நீதி

2. தரித்திரர்க் கிரங்குவோன் உடனே–இடுவான்
தற்பரனுக் கவன் கடனே,–என்று
கருத்துடன் சுருதியில் திடனே–உரைத்தார்
கடுநெஞ் சகல் மானிடனே. – நீதி

3. அன்புடன் விதவையும் போட்ட–காசை
அதி வியப்பாய் யேசு காட்டப்,–புகழ்
இன்புடன் அவள் மிசை சூட்ட,–அதை
எவர்களும் அகத்தினில் நாட்ட. – நீதி

---

1 வறியவர்

4. பிறர் புகழும்படி இன்றே–செய்தால்,
பிரயோசனமில்லை என்றே,–பரன்
மறையதில் விளம்பினார் நன்றே;–அம்
மாதிரி விலகாது நின்றே. – நீதி

5. பரிதானம் வாங்குதல் தீது;–அதைப்
பறித்தறம் செய்தல் தகாது;–உமக்
குரியதில் ஈவது போதம்,–இதில்
ஊன்றி இருப்பதே நீதம். – நீதி

6. ஏழைகளுக் கீயாது ஆஸ்தி–ஐயே!
ஈண்டு சேர்த்திடில் என்ன கீர்த்தி–இதோ?
வாழுல கடைந்திடில் நேர்த்தி;–என்றும்
வாழலாம், அதுவே மா பூர்த்தி. – நீதி

***– ச. யோசேப்பு***

**கர்த்தருக்குக் காணிக்கை இதோ!**

**275. துஜாவந்தி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**கர்த்தருக்குக் காணிக்கையிதோ! தம்மையே தந்த**
கர்த்தருக்குக் காணிக்கை! இதோ!

***அனுபல்லவி***

கர்த்தருக்குக் காணிக்கையாய்ப்
பத்திலொன்று நான் கொடுப்பேன்,
சத்தியக் கிறிஸ்து நாதர்
சபையை வர்த்திக்கவேணும். – கர்த்தருக்கு

***சரணங்கள்***

1. அநியாயம் நீங்க வேணும்,–உலகிலே மெய்
அறிவு வளர வேணும்,
தனியேக மெய்த்தேவனை–நற்தேசத்தில்
சகலரும் போற்ற வேணும்,

கனிவாய்ப் போதகர் வேதம்
கற்றறிந்து சொல்லவேணும்,
கணக்காய் இதன் செலவு
கட்டி வரவேணும், அய்யா! – கர்த்தருக்கு

2. ஆபிரகாம் பத்திலொன்றையே–மெல்கிசே தேக்குக்–கு
அனைத்திலும் தந்ததையே!
மா பிரியமாக வாசித்தேன்,–இஸ்ரயேல் பெத்தேல்
வள்ளற்குச் செய்பொருத்தனையே,

ஆண்டவர் பரன் அவர்கட்
கனைத்தும் ஆசீர்வதித்துத்
தாபரம்த மதடி கீழ்த்
தத்தளித்த தெல்லாங் கேட்டேன். – கர்த்தருக்கு

3. கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்தேன்–இதோ! இத்தனை
கூடினதைக் கொண்டிதோ வந்தேன்,
நஞ்சைவிளைவினி லோர்பாகம்–சேர்த்து வைத்தேனான்,
நாலாவகை வரத்திற் கொஞ்சம்,

புஞ்சை பல போகத்திலும்
போட்டு வைத்தே னான்குறுணி
புத்தகக் கணக்கில் கண்ட
தித்தனைத் தொகையுமாச்சு. – கர்த்தருக்கு

***– ம.ப. அருளப்பன்***

**காணிக்கை தருவாயே**

**276. முகாரி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**காணிக்கை தருவாயே–கர்த்தருக்குனது**
காணிக்கை தருவாயே

***அனுபல்லவி***

காணிக்கை தா உனக்காய் ஆணிக் குரிசி லேசு
வேணும் ரட்சிப்பினை நீ காணும்படி செய்ததால். – காணிக்கை

*சரணங்கள்*

1. பத்தில் ஒரு பங்குதானோ?–பத்தினில் கட்டுப்
பட்ட யூதருக் கல்லவோ?
அத்தன் உனக்களித்த அளவை உட்கார்ந்து பார்த்தால்,
பத்தில் ஒரு பங்கல்ல, பல மடங்காகிடாதோ? – காணிக்கை

2. உன்றன் உடல் உன் சொந்தமோ?–அதைவிடினும்
உன் மனம் ஆவி பந்தமோ?
அன்னவன் உடைய தென்றறிந்து உணர்வாயானால்
உன்னையும் உன்னுடைய உடைமையுமல்லோ ஈவாய்?
– காணிக்கை

3. தேவ வசனம் பரப்ப,–அதனுக்கென்று
செல்லும் செலவை நிரப்ப,
ஆவலாய் யேசுவுக்கே ஆராதனை நடத்தும்
தேவ ஊழியத்துக்கும் திறந்த மனதுடனே – காணிக்கை

4. பயிர் பலன் மூலமாகவும்,–இன்றும் பலர்க்குப்
பணம் முதலானதாகவும்,
உயிர்ப் பிராணியாகவும் உதவும் கடவுளுக்கே
உயிரைப் படைப்பாயோ, உடைமையைக் கொடாவிடில்?
– காணிக்கை

***– ல. பொன்னுசுவாமி***

## மரித்தோர் உயிர்த்தெழுவார்

**277. (343) குரஞ்சி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்,**
வானெக்காளத் தொனி முழங்க.

*அனுபல்லவி*

எரி புகை மேக ரத மேறி
ஏசு மகா ராஜன் வருங்கால். – மரித்தோர்

***சரணங்கள்***

1. தூதர் மின் னாற்றிசை துலங்க,[1]
ஜோதி வான் பறை இடி முழங்க,
பாதகர் நெஞ்சம் நடுநடுங்க,
பரிசுத் தோர் திரள் மனதிலங்க. – மரித்தோர்

2. வானம் புவியும் வையகமும்
மட மட வென்று நிலை பெயர,
ஆன பொருளெல்லாம் அகன் றோட,
அவரவர் தம் தம் வரிசையிலே. – மரித்தோர்

3. அழிவுள் ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியா மேனியை அணிந்திடுவார்;
எளிய ரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் ஜோதிகளாய். – மரித்தோர்

***– சு.ச. ஏசடியான்***

**தேட்டமாகினேன் இயேசுவே**

**278. (160 L.) முகாரி** **சாபுதாளம்**

**கண்ணிகள்**

**வெகு பேர்களுக் கின்பமான**
மேதினியே நீ என்றனுக்கு
மிகவும் திகில் கசப்பாம்பர
தேசம் இது மெய்யலோ?
ஜெகந்தன்னைமா ஆசையாய்ப் பற்றும்
ஜெகத்தோரத்தால் வாழட்டும்,
தேவரீருட பேரிலே மெத்தத்
தேட்டமாகினேன் யேசுவே.

---

1 தூதர் ஒளி நான்கு
திசைகளிலும் விளங்க

2. யேசு நீர் தரிசினை தந்தெனை
யேற்கும் நன்மைக்காய் யாவையும்
எளியேன்வெறுத் திந்தலோகத்தின்
இன்பவாழ்வினைக் குப்பையாய்
மோசமென்றுநா னெண்ணுவேன், நீரென்
மோட்சமும் கதி ஆஸ்தியும்,
முன்னவா, அடியே னும்மோடென்றும்
முற்றுங்கூடினால் பாக்கியன்.

3. இந்த ஏழைச் சரீரமாமண்ணை
இளைப்பாறிட மண்ணினில்
ஏற்கவேகொண்டு போய்ப்புதைத்திடும்
காலம் எய்திடில் நல்லதே;
அந்தநாளினி லெந்தன் பாடுகள்
அத்தனைக்கும் முடிவுண்டாய்,
ஆவி உம்மிடம் தங்கப்போகுமே
ஐந்து காயத்தில் ஏசுவே.

4. வாராய் நித்திரையின் தோழனே
சாவே என்னைக்கொண்டுபோ,
வாகாய்கப்பல் தாவில்ஓட
வழியே திருப்பாயோ?
பாரோர்திகி லானாயிந்த
பக்தன்மகிழ் வானாய்
பரன்யேசுவின் பரஞ்சேரநற்
பாதை யெனக்கானாய்.

*– ஞா. சாமுவேல்*

**யேசுவின் ஒதுக்கில் நான்**

**279. (342) சஹானா** **ஆதிதாளம்**

**பல்லவி**

**யேசுவின் ஒதுக்கில் நான் இறக்க அருள்புரியும்.**

**அனுபல்லவி**

நேசபரனே இந்த நீசன் கெஞ்சிக் கேட்கிறேன். – யேசு

**சரணங்கள்**

1. நாள் ஓடும், சாவி சேரும், நாதா, எந்த நேரமோ?
பாழுடல் விட்டு ஜீவன் பறக்கும் வேளையறியேன். – யேசு

2. யேசுவை விட்டென் சாவு என்னைப் பிரித்திடாது;
நீசன் அவரில் நின்றென் நேசரேயென்று சொல்வேன். – யேசு

3. என் ஜீவன் இன்றுபோயும் என் மீட்பரால் நான் பாக்யன்;
என் சாவு நாளை வந்தும் யேசுவுக்குள் நான் நிற்பேன். – யேசு

4. நீர் என்னை இங்கே வைக்கும் நேரமட்டும் உமக்கே
சீராக நான் பிழைக்கத், தேவா, எனை நடத்தும். – யேசு

5. சீர்ப்படத் தாமதமேன்? ஜீவவழி பிடிப்பேன்;
ஈறந்தத்தை நினைப்பேன், என் தீபமே சோடிப்பேன். – யேசு

6. யேசுவின் நீதியால்நான் என்பாவத்தை மூடுவேன்;
மாசற்றுச் சுத்தமாவேன் மனதில் விசுவாசித்து. – யேசு

7. ஆண்டவரைங் காயங்கள் அடியேனின் அடைக்கலம்;
மாண்டோர் அவர், நான் மாளேன், மரணம் எனதுபாக்யம்–யேசு

***– ஞா. சாமுவேல்***

**பரத்திலே நன்மை வருகுமே**

**280. (346) துஜாவந்தி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**பரத்திலே நன்மை வருகுமே,–நமக்கு நித்திய**
பாக்கியம் மிகப் பெருகுமே.

**அனுபல்லவி**

பரத்திலே சிறந்த ஜீவ பதி வளர் கிரீடம் அதைச்
சிரத்திலே அணிய, யேசு
தேவனைப் பணிந்து போற்றுவோம். – பரத்

**சரணங்கள்**

1. வருத்தம், பசி, தாகம், சாவில்லை;–அலறுதலும்
மனத்துயர், இரவு சாபம் இல்லை;
அருணன், மதி வேண்டியதில்லை;–துன்மார்க்கர் எனும்
அசுத்தர் வந்து சேர்வதும் இல்லை;
சருவ மகிமை யுடைய தந்தை
பரனொடு கிறிஸ்தின் திரு
அருள் மிகச் சிறந்த ஒளி
தெளிவுற ப்ரகாசம் ஆக்குமே – பரத்

2. ஆட்டுக் குட்டியின் ரத்தத்தில் தோய்த்து,–வஸ்திரங்கள் தமை
அழுக்கறப் பிரகாசமாய் வெளுத்து,
வாட்டங்கள் அனைத்தையும் தீர்த்து,–கண்ணீர் அறவே
மகிமையின் கரத்தினால் துடைத்து,
கூட்டி ஜீவ புனலிடத்தில்
கொண்டு மேய்த் தருள் முடியைச்
சூட்டியே அனந்த பாக்கிய
சுகத்தில் வாழ்ந்திருக்கச் செய்குவார். – பரத்

3. பங்கம் இன்றி மகிழ்ந்து வாழலாம்;–பேர் ஒளி துலங்கும்
பரம கிருபாசனத்தைச் சூழலாம்;
சங்கை யோ டரசிருந்தே ஆளலாம்;–பராபரன் தன்
சமூக ப்ரபைதனிலே வாழலாம்;
மங்கை சீயோன் மகளின் பிரிய
மன்னவன் தேவாட்டுக் குட்டியின்
இங்கிதக் கல்யாணப் பந்தியின்
இருந்து நித்ய விருந்தால் மகிழலாம். – பரத்

***– மரியான் உபதேசியார்***

**வான நகரத்தின் மேன்மையென சொல்லுவோம்**

**281. (348) காம்போதி ஆதிதாளம்**

***பல்லவி***

**வான நகரத்தின் மேன்மையென சொலுவோம், கன**
வலன் நலவருக்கருள்.

***சரணங்கள்***

1. பானொளிரத்னங்கள் அஸ்திபாரமாந் திருவாசல்கள்
பன்னிரு முத்துக்கள் தெரு பொன்னின்மயமே;
தேனிலும் மதுரம் தெளிவிற் பளிங்கதான ஆறும்
ஜீவதருவும் இருக்கும் செப்பரும் அழகதான. −வான

2. அங்குநோய், துன்பம், விசாரம், அக்ரமம், கண்ணீர், தரித்திரம்
அற்பமு மிருப்பதில்லை, சொற்பமாகிலும்
பொங்கியே முச்சத்துருக்கள் போரினுக் கிழுப்பதில்லை,
புண்ணியனார் சொன்னதிரு உன்னத எருசலையாம். −வான

3. அந்நகர்க் குடிகள் வெண்மையான அலங்காரமான
அர்ச்சய உடுப்பு, சிரமானதிற் கிரீடம்
மன்னவர் போலே அணிந்து மகிமையி னாசனத்தில்
வாய்மையாக வீற்றிருப்பர்; தூய்மையான அந்த நல் −வான

4. நேயமுற்பிதாக்கள், தீர்க்கர், நின்மலன் அப்போஸ்தலர்கள்,
நீதிமான்கள், எல்லவரும் தூதர் நல்லோரும்
ஓய்வின்றித் தோத்ர கீத உச்சிதத் தொனிமுழக்கி
உன்னதனைப் போற்றுவார்கள்; பன்னரும் சிறப்பதுள்ள −வான

***− ஞா. சாமுவேல்***

**எப்போது காண்பேனோ?**

**282. (349) முகாரி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**எப்போ காண்பேனோ? எப்போ சேர்வேனோ?**
எது என் சீயோனோ? அதின்னம் எத்தனை தொலையோ?

**சரணங்கள்**

1. என் யேசுநாதர்,−என் ஆத்தும மீட்பர்,
என் ரட்சகராகிய யேசுகிறிஸ்து இருக்கிற இடத்தை, − எப்

2. தூதர்கள் கூடிச்−சோபனம் பாடி,
நாதன் கிறிஸ்துவைப் போற்றும் பரமநல் வாழ்வை. − எப்

3. ஜீவ கிரீடம்,–திவ்விய வாழ்வு,
பாவி எனக்குப் பரிசுத்தவான்களின் பங்குண்டாமே. – எப்

4. துன்பங்கள் மாறும்,–சுகம் வந்து சேரும்;
இன்பக் கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்தால் என் மனம் ஆறும்.
– எப்

5. உலகத்தின் கவலை–ஒன்றும் செய்யாதே;
பலவிதத்தொல்லை இராது, அங்கே பாக்கியம் கொள்வேன்.
– எப்

6. கைகளில் எடுத்தேன்–கண்ணீரைத் துடைப்பார்;
ஐயன் கிறிஸ்துமேல் கவிபாடி நான் ஆனந்தம் கொள்வேன்.
– எப்

***– பாக்கியநாதன் தாவீது***

## உச்சித பட்டணம் செல்லுவோம்

**283. (344) சங்கராபரணம் ரூபகதாளம்**

**பல்லவி**

**உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்;–**
விரைந்தோடி நடவடி, உத்தம புத்திரி,–
உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்.

**அனுபல்லவி**

நிச்சயமாதவே ரட்சகர் செப்புரை
நீணிலம் தோன்றும் முனாடி,–நம்
நித்திய பிதாவே ஆயத்தமாய் நாட்டிய
நீதியின் பட்டணம், ஆதிபன்[1] கட்டடம்,
நிண்ணய மா நகரம்–திடத்திடு
உன்னதமே சிகரம்;–நமின் பிரிய
நேசர் கிறிஸ்து மேல் பாசம் மிகுத் தவர்
நேரே செலும் நவ சாலேம் நகர் என்ற. –உச்சி

1 அரசன்

**சரணங்கள்**

1. சித்தமாய் உச்சித பட்டணம் பற்றியே,
செப்புகிறாய் எனின் தாயே;–அதில்
சேர்ந்திடு பிள்ளைகள் வாழ்ந்துறும் பாக்கியம்,
திட்ட அரிதாம், என் தாயே;–புது
வித்தக மா நகர் ரத்னப் பளிங்கு
விளக்கொளி மேவும், நன்றாயே;–அந்த
விஞ்சையர் பட்டணம் எங்கே இருக்கும்?
விளிம்பி விரி, என் பேராயே;
இத்தரை மீதிலோ அத்திரி[1] வானிலோ?
இட்டமாய் யாம் அதற் கெட்டி நடவமோ?
எங்கே இருக்கு தம்மா?–கவலை அற்
றங் கிருப்போமே, சும்மா,–சரி சரி,
இன்பக் கண்ணாட்டியே, அன்புப் புதல்வியே,
எங்கிருக்கு தென்றன் தங்கமே, சொல்கிறேன். –உச்சி

2. உன்னத வானிலிருந் திறங்கும் அவ்வெ
ருசலேம் பட்டணம் கண்டு,–வெகு
ஊக்கமுடன் அதைப் பார்க்கப் புறப்பட்டு,
ஓசன்னாவும் பாடிக் கொண்டு,–அங்கே
பன்னிரு வாசலும் கண்ணாடி வீதியும்
பானொளிக் கற்களும் உண்டு,–அந்தப்
பட்டணம் தேவாட்டுக் குட்டியின் ஆசனம்
பண்பாக மத்தியில் கொண்டு,
மின்னும் விளக்குகள், தீவட்டிகள் இல்லை;
விண்ணில் சூரிய சந்திரரும் இல்லை;
மெய்ப்பொழு தானவரே–அதன் விளக்
கெப்பொழுதும் அவரே;–அலங்க்ருத
மேன்மைப்பிரகாசப் பான்மையின் நீதியர்
மேனி மினுங்கிடத் தோணி இலங்கிடு. –உச்சி

***– ஏசடியான் உபாத்தியாயர்***

1 ஆகாயம்

## உச்சித மோட்ச பட்டணம் போக

**284. (361) சங்கராபரணம்** **ஆதிதாளம்**

*பல்லவி*

**உச்சித மோட்ச பட்டணம் போக**
ஓடி நடப்போமே;–அங்கே
உன்னத யேசு மன்னவருண்டு, ஓயா இன்பமுண்டு.

*சரணங்கள்*

1. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய்,–எங்கள்
ஜீவனினதிபர் யேசு நம்மகிபர்
சீயோன் பதி மனுவேல். – உச்சித

2. அன்பினால் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி யேசையர்–அங்கே
இன்பங்களுண்டு; யேசுவின் சமுகம்
என்றென்றும் ஆறுதலே. – உச்சித

3. கீதங்களோடு யேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம்;–அங்கே
கிளர்[1] ஒளியுள்ள பட்டன ராசன்
கீதங்கள் நாம் அறைவோம். – உச்சித

***– சா.ஈ. கிறிஸ்மஸ்***

## திருச்சபை வளரத் தயைபுரியே

**285. ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**திருமா மறையே–அருள்பதியே! நின்**
திருச்சபை வளர நின்தயை புரியே.

*சரணங்கள்*

1. கருணை வாசகக் கதிர்பலத் தொளிர,
கனகார்[2] புவிநின்றே அகல,
மருள்ஜன மொளிபுற அவனரு ளுணர, – திருமா

---

1 இலங்கும் 2 பொன் நிறைந்த

2. யேசு நாமமெங் கணுமொளி வீச,
இறையே நினை மெய் விசுவாச
நேச மோடேயுனின் தாசர்கள் பேச. – திருமா

3. ஞாலம் அந்தமட் டெம்முடனிருக்க,
நயவாக் களித்தாய் எமக்குருக்கச்,
சீலமதாயுனின் வசனமதுரைக்க. – திருமா

4. ஆறிரண்டு பேரான வருடனே
அமலா இருந்தாய் வெகுதிடனே,
போரற அருளிய நேயமே போலே. – திருமா

5. நின்னையன்றிக் கட்டிட எமக்காகா,
நேயா, தூயா நினை வாகா,
உன்னி உழைத்திடப் பலமளி யேகா. – திருமா

6. சத்ய போதம் இத்தரைதனில் செழிக்க,
தமியோர் நின் புகழே உரைக்க,
நித்திய பாக்கியமே புவிக் களிக்க. – திருமா

***– ஞா. சாமுவேல்***

## தந்தானைத் துதிப்போமே

**286. (284) உசேனி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**தந்தானைத் துதிப்போமே;–திருச்**
சபையாரே, கவி–பாடிப்பாடி.

***அனுபல்லவி***

விந்தையாய் நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர்[1] நன்மை மிக மிகத் – தந்தானைத்

1 உரைக்கமுடியாத

***சரணங்கள்***

1. ஒய்யாரத்துச்[1] சீயோனே,—நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும் – தந்தானைத்

2. கண்ணாரக் களித்தாயே,—நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து;
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே. – தந்தானைத்

3. சுத்தாங்கத்து நற்சபையே,—உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம். – தந்தானைத்

4. தூரம்திரிந்த சீயோனே—உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை! – தந்தானைத்

5. சிங்காரக் கன்னிமாரே,—உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து,
மங்காத உம் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும். – தந்தானைத்

***– வே. மாசிலாமணி***

**எம்மைக் கண் பாராயோ?**

**287. (281) சயிந்தலி.** **சாபுதாளம்**

**பல்லவி**

**ஓ! ஸ்திரீ வித்தேசையா,**
அன்புகூராய்? துன்பம் தீராயோ?

---

1 அலங்கார

### அனுபல்லவி

வஸ்தோரே, கிறிஸ்துவேதா, மானுவேலே, யேசுநாதா,
வந்தெமை க்ருபைக் கண் பாராயோ? – ஓ!

### சரணங்கள்

1. ஆதி மானிடர் புரிந்த பாதகம் தொலைக்க வந்த
அண்ணலே, உமக் கபயமே!
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
ஆதரித் திரங்க வேண்டுமே. – ஓ!

2. எத்தனை மனக் கிலேசம்? நித்தமும் சத்துருக்கள் மோசம்;
எந்தையே கைவிட்டுவிடாதேயும்,
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
எப்படியும் காத்தருள் மெய்யா. – ஓ!

3. ஆடுகள் சிதறிப்போச்சோ? அன்னியருக் கிஷ்டம் ஆச்சோ?
பாடுபட்ட பட்சக் கோனாரே,
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
காடுகளில் தேடிப் பாருமேன். – ஓ!

4. மந்தையை க்ருபை கண் பாரும்; சிந்தையில் துயரம் தீரும்,
சந்ததம் தொழுவம் சேருமேன்,
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
வந்தனம், உமக்குத் தோத்திரமே! – ஓ!

***– வே. சாஸ்திரியார்***

## நின் திருவிலம் அளவற இனிதே

**288. பிலஹரி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**சேனைகளின் கர்த்தரே! நின்**
திருவிலம்[1] அளவற[2] இனிதினிதே!

1 திருவில்லம் (ஆலயம்)    2 அளவில்லா

### *அனுபல்லவி*

வானவானங்கள் கொள்ளாத
ஈன ஆன்மாவைத் தள்ளாத - சேனை

### *சரணங்கள்*

1. திருவருளிலமே, கணுறும்[1] உணரும்
தெருளம்பகமே,[2] இனிதுறும் நிசமிது - சேனை

2. ஈண்டடியார் கேட்டிடும், நின்வசனமினிதே, இனிதே!
இகபர நலமொளிர் இதமிகு பெயருள
எமதரசெனும் நய. - சேனை

3. புவியோர் பதிவான்[3] புகநிதியே![4]
புனருவி ருறுமுழுக் கருளினிதே!
புதுவிடமே, புகுமனமே, புதுமதியே!
பரிவொடு இனிதருள்! - சேனை

4. பேயோட புவி பேதை மாமிசம்
பேணிடாதடியாருனைப்
பேறு தந்தவனே, யெனச்சொலி
பேணிடத்துணை ஈவையே!
பேசருமுன்னந்தம், பேதைகளின் சொந்தம் பேதமிலானந்தம்
பிசகொழியே, திடமளியே!
பெருமலையினிலரு முயிர்தரும் - சேனை

5. ஆலய மது நிறைவாக,
அவைக் குறை வொழிந்தேக,
அவரவருனதில மெனமன விடர்சாக,
அருளும் பொருளுந் தெருளும் செறிந்திடும்,
ஆலய பர னேச,
ஆசுக மது வீச,
ஆரண மொழி பேச,
ஆ! புது எருசலையாம்
ஆலய மொரு நிலையாம்
அது நிக ரெது? - சேனை

***- ஞா. சாமுவேல்***

---

1 கண்ணுறும்
2 கண்
3 கடவுளின் வானலோகம்
4 ஏற்பாடே

## ஆலயம் போய்த் தொழ வாரும்

**289. ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆலயம்போய்த் தொழவா ருமென்ற தொனி**
ஆனந்தப்பரவசம் அருளுதாத்துமந்தனில்,

***அனுபல்லவி***

ஆலயந்தொழுவது சாலவும்[1] நன்றென
ஆன்றோருரை[2] நெறி சான்ற வர்க்கானதே,
ஆவலாயதிகாலையும் பகல் மாலையுந் திருநாளிலும்பரன்
– ஆலயம்

**சரணங்கள்**

1. பரம சன்னதியென்றும் பரிசுத்த தூதர்கள்
பணிந்து புகழ்ந்து கீதம் பாடியஞ்சலி செய்யும்;
முறையோதுந் திருமறை கரமேந்தி தக்ஷணை
முழுமனதோடு கொண்டு உளம் இதழ் துதிவிண்டு[3]
மோட்ச மாநகர் காட்சியால் இக சாட்சியாம் பரன்
மாட்சி காணவே. – ஆலயம்

2. பூர்வமுதல் தொழும்பர் போந்தாலயந்[4] தொழுதார்
புனித சுதனும் நமக்கினு முன் மாதிரி தந்தார்;
ஆர்வமுளாரவரே ஆராருடனுஞ் சென்றார்;
ஐயனின் மகிமையே அங்கும் விளங்க நின்றார்;
ஆதலாலினி யாரிலுங்குறை யோதிடாதென துள்ளமே இனி.
– ஆலயம்

3. தனித்தியா னத்துடன் சமுசார ஜெபம் நன்று;
சபையாரோ டர்ச்சனை தருதல் மிகவும் நன்று;
இனிதே சத்தியவேதம் பொருளறவே உணர்ந்து
இலகு சுடர்கள்போல உலகுக்கொளியே தந்து
எந்தையார்சுதன் சிந்தையில்வளர்ந் தென்றுமன்பதில்
ஒன்றவே திரு. – ஆலயம்

***– ஜி.சே. வேதநாயகம்***

---

1 மிகவும்
2 ஞானிகள் உரைத்த வழி
3 சொல்லி
4 போந்த=வந்து

## சிந்தனையுடன் தேவாலயந்தனில் சேர்வோம்

**290. சஹானா** **ஆதிதாளம்**

**பல்லவி**

**சிந்தையுடன் தெய்வாலயந்தனில் சேர்வோம்,–திரி**
யேகரின் திருத்தாள்[1] போற்றியே களிகூர்வோம்.

**அனுபல்லவி**

1. தெய்வநிறையுள்ள யேசு சீர்தெய்வாலயம்;–அவர்
செற்றலர்[2] இடித்துமே சிறந்தவாலயம்;–தமின்
மெய்ப்பல னளித்து நம்மை மீட்குமாலயம் – சிந்

2. கர்த்தனைப்பிடித்தோன் ஜீவ கற்றெய்வாலயம்;–எந்தக்
காலமும் துதிமுழங்கும் கான[3] வாலயம்;–பரி
சுத்தமாய்த்தனையே காக்கும் துங்க[4] வாலயம் – சிந்

3. திவ்யபக்தர் கூட்டமே சிங்காரவாலயம்;–அது
தெய்வ ஆவி சிற்பி வேலை செய்யுமலாயம்;–தீட்
டவ்வியம் பகைவிலக்கும் அன்பினாலயம். – சிந்

4. வானமே தேவாட்டுக்குட்டி வாழுமாலயம்;–பக்தர்
மகிமை ஜோதிமய மாகுமாலயம்;–மெய்ஞ்
ஞானபாக்கியங்கள் பெய்யும் நாதராலாயம். – சிந்

***– ஞா. சாமுவேல்***

## கிறிஸ்துவண்டைக்கு ஓடிவா

**291. (18) புன்னாகவராளி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஓடிவா, ஜனமே;–கிறிஸ்து வண்டைக்**
கோடிவா, ஜனமே;–பண்டிகை கொண்
டாடிவா, ஜனமே;–அவர் பாதத்தைத்
தேடிவா, ஜனமே.

---

1 திருப்பாதங்கள்
2 பகைவர்
3 சங்கீதம்
4 உயர்ந்த

**அனுபல்லவி**

நீடு சமர்[1] புரி கோடி அலகையை
நிக்ரகித்து[2] வாள் பிடித்த உக்ர மனுவேலனைக் கண்–டு–ஓடி

**சரணங்கள்**

1. நேர்ந்தடிகள் துதித்து,–நித்ய ஜெபத்தில்
நீதித் தவங்கள் கதித்து,
சேர்ந்தருளை மதித்து,–சோதிக்கச் செய்த
தீய சர்ப்பத்தை மிதித்து,–அநித்தியமான
ஜெக ஜாலத்தைப் பணித்து, அகத் தாக்ரமத்தை விட்டு,
திட்டமாக நின்று, பத்துக் கற்பனைப் படியே சென்று,
தேவ துந்துமி முழங்க,–சங் கீதங்களும்,
பா வினங்களும் விளங்க,–அதன் ஒலியால்
அண்டமும் குலுங்க, பர மண்டலங்களும் இலங்க,
ஆராதனைகள் செய்து, சீராய் நடந்துகொண்டு,
அரிய பரம் பொருள் ஒருவனை நெஞ்சகம்
உருகி நடம் செய்து, பெருகிய அன்புடன். – ஓடி

2. ஞானஸ்நானம் பெற்றுச்–சுருதி நூலின்
மேன்மைச் சாஸ்திரம் கற்று,
ஈனப் பாவிகள் கற்று,–மாயங்கள், அக்கி
யானக் கிரயைகள் அற்று,–மாங்கிஷத்தின்
இருளாந்த காரம் நீங்கி, அருளானந்தங்கள் ஓங்கி,
இஷ்டமாய் நடந் தெலார்க்கும் துஷ்டத்தனப் பொல்லார்க்கும்
யேசு நேசத்தைச் சூட்டி,–மனோகரத்தால்
பாசத் தன்பு பாராட்டிக்,–கவனமாக
அந்தி சந்தியும் ஜெபங்கள், மந்திரங்களைப் படித்து,
ஆண்டாண்டெமைக் கரிசித்து, மீண்டாண்டானுக்கிரகித்த
அறிவுகள் இங்கித கிருபை விளங்கிய
திரிமுதலின் சரண் உறுதியுடன் தொழ. – ஓடி

***– வே. சாஸ்திரியார்***

---

1 சங்கீதம் 2 உயர்ந்த

**எனக்குன் தயை புரியும்**

**292. (2) செஞ்சுருட்டி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**சரணம், சரணம், சரணம் எனக்குன்**
தயைபுரியும், என்பரனே.

***அனுபல்லவி***

மரணத்தின் பெலன் அழித்துயிர்த்த என்
மன்னா, ஓ சன்னா! – சரணம்

***சரணங்கள்***

1. தரணிதனில் வந் தவதரித்த தற்
பரனே, எனக்காக–வலு
மரணம் அடைந்தும், உயிர்த்தெழுந்த தென்
மகிமை, நித்திய பெருமை. – சரணம்

2. சுரர்கள் போற்றும் பரனே, உனக்குத்
துரோகியான எனக்கு–நீயே
இரவு பகல் என் குறைவு நீக்க, உண்
டேது நலம் என்மீது – சரணம்

3. தப்பின ஆடதற் கொத்த அடியேனைத்
தானே வந்து தேட;–உனக்
கெப்படிச் சித்தம் உண்டானதிவ் வற்பனுக்
கற்புதமாம் முடி சூட. – சரணம்

4. எவ்வித நன்மைக்குங் காரணனே, உனை
ஏழை அடியேனே–பற்றி
இவ் வுலகத்தில் எவ்வேளையும் போற்றவே
இரங்காய், எனக் கிரங்காய் – சரணம்

***– யோ. பால்மர்***

**நாம் கூடி மகிழ் கொண்டாடுவோம்**

**293. (4) சங்கராபரணம்** **ஏகதாளம்**

***பல்லவி***

**வாரும் நாம் எல்லோரும் கூடி,**
மகிழ் கொண்டாடுவோம்;-சற்றும்
மாசிலா நம் யேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம். ஆ!

***சரணங்கள்***

1. தாரகம்[1] அற்ற ஏழைகள் தழைக்க நாயனா,-இந்தத்
தாரணி யிலே[2] மனுடவ தாரம் ஆயினார். - வாரும்

2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம்,-அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார். - வாரும்

3. ஞாலமதில்[3] அவர்க்கிணை[4] நண்பர் யாருளர்,-பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார். - வாரும்

4. மா கொடிய சாவதின் வலிமை நீக்கியே,-இந்த
மண்டலத்தி னின்றுயிர்த் தவர் விண்டலஞ்[5] சென்றார். - வாரும்

5. பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே,-அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை[6] ரட்சை செய்கிறார். - வாரும்

***- யோ. பால்மர்***

**தருணம் ஈது**

**294. (5) மணிரங்கு** **திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**தருணம் ஈதுன் காட்சி சால[7]**
அருள்; அனாதியே,-திவ்ய-சருவ நீதியே.

---

1 ஆதரவு
2 பூமியிலே
3 உலகத்தில்
4 ஒப்பு
5 விண்தலம்
6 அடியாரை
7 மிக்க

***சரணங்கள்***

1. கருணை ஆசன ப்ரதாப
சமுக சன்னிதா,−மெய்ப்−பரம உன்னதா! − தருணம்

2. பரர் சுரநரர் பணிந்து போற்றும்
பரம நாயகா,−நின்−பக்தர் தாயகா! − தருணம்

3. உன்னதத்திருந் தென்னை ஆளும்
ஒரு பரம்பரா,−நற்−கருணை அம்பரா![1] − தருணம்

4. அரிய வல்வினை தீப்பதற்குற
வான தட்சகா,[2]−ஓர்−அனாதி ரட்சகா! − தருணம்

5. அலகைநரகை அகற்றி, முழுதும்
அடிமை கொண்டவா,−என்−தருமை கண்டவா! − தருணம்

6. தினந்தினம் நரர்க் கிரங்கும், இரங்கும்,
தேவ பாலனே,−இம்−மானுவேலனே. − தருணம்

***− வே. சாஸ்திரியார்***

## தருணம் இதுவே

**295. (6) மோகனம்** **சாபுதாளம்**

**பல்லவி**

**தருணம் இதுவே, கிருபை கூரும்,**
வழிபாரும், பதம் தாரும், தாரும்.

**சரணங்கள்**

1. கருணை தெய்வ குமாரா, கன மனுடவதாரா;
அருமை ரட்சக யேசு நாதா,−உல
கனைத்தும் வணங்கும் சத்ய வேதா,−உன்றன்
அடியர்க் கருளும் திருப் பாதா,−சத்ப்ர
சாதா, நீதா![3] − தருணம்

---

1 கடவுளே 2 படைப்பாளி 3 நீதி உடையவனே

2. வானத்திலிருந்து வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப் பிரதாவின் திருப் பாலா,–ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா,–கன
விந்தைக் கருணை மனுவேலா,–மெய்ந்
நூலா, சீலா! – தருணம்

3. அற்ப உலக வாழ்வில் அலைந்து, நிலை குலைந்து,
அலகைப்படு குழியில் வீழ்ந்து,–தாழ்ந்து,
அஞ்சி அஞ்சி நலிந் தேனே;–அடிமைக்
கஞ்சல் என்றுசொல்லும் கோனே,–சீ
மானே, தானே! – தருணம்

4. இந்த உலகத் தெமைச் சந்தித் தனுக்கிரகித்த
சொந்தக் கிருபைகள் மா காத்ரம்,[1]–அவை
சிந்தித்து மடியாவிச் சேத்ரம்,[2]–நிர்ப்
பந்த அடியர்கள் எம் மாத்ரம்!–பத
தோத்ரம்! தோத்ரம்! – தருணம்

***– வே. சாஸ்திரியார்***

**சரணம் நம்பினேன்**

**296. (9) நாதநாமக்கிரியை** **சாபுதாளம்**

***பல்லவி***

**சரணம் நம்பினேன் யேசு நாதா–இது**

***அனுபல்லவி***

தருணம், தருணம், உன்றன் கருணை கூர், வேதா. – சரணம்

**சரணங்கள்**

1. நின் அருளால் இங்கே வந்து,–என்றும்
நின் அடைக்கலமாக என்னையே தந்து,
முன் னாள் வினையைத் துறந்து,–ஆதி
மூலமே, உனக் கோலம், ரட்சியும் என்று. – சரணம்

---

1 முக்கியம் 2 அதிசயம்

2. சன்னதி முன் தொண்டன் நின்றே,–என்றும்
தாயான கருணை உனக்கு உண்டென்றே,
சென்னிமேல் கரம் தூக்கி நின்றே, உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே. – சரணம்

3. அலைவாய்த்[1] துரும்புபோல் ஆடி,–உன
ததி கருணை வரச் செம்பாதந் தேடித்,
தொலையாத வாழ்வை மன்றாடி,–அன்பின்
தோத்ர சங்கீர்த்தன கீதங்கள் பாடி. – சரணம்

4. இனிய கருணை பொழிவேதா,–எனை
இரு கரத்தால் அணை என் கிறிஸ்து நாதா,
கனி வினை நீக்கிய நீதா,–நசரைக்
கர்த்தாதி கர்த்தா, உன் கருணையைத் தா, தா. – சரணம்

***– தஞ்சை சத்தியநாதன்***

## வந்தருள் இவ்வாலயத்தில்

**297. (10) புன்னாகவராளி ரூபகதாளம்**

***கண்ணிகள்***

**வந்தருள், இவ்வாலயத்தில்; மகிமை ஏகோவாவே,–உனை**
வாழ்த்தும் அடியார்க்கு நிதம் வாய்த்த பெரு வாழ்வே!
அந்தி பகல் இங்குனை வந்தடையும் அடியார்க் கிரங்கி,
ஆதரவாய் ஆண்டு கொள்வாய், ஆதி பராபரன் குமாரா!

2. திருக் கருணை மொழியால் மனத் திருக்கறுக்கும்,
பொருட்டெழுந்து,
தீய வினை மதித் தழிப்பாய், தேவர் பெருமானே!
பெருக்கமுள உன் வசனம் பேதையருக்கே பலிக்க
உருக்கமுடன் இரங்கும், ஐயா, உன் பதமே தஞ்சம் என்றும்.

3. சஞ்சலம் மிஞ்சும் மனதால் சரணம் உனக்கென்று வரும்
தமியர் தமக் காறுதலாய்த் தயை செய், ஆதிசேயா!

---

1 அலையில் அகப்பட்ட

செஞ் சொல் மலிந்த புலவர், செப்பு தமிழ்க் குகந்த உன்றன்
சீரடிக்கண் சேர்பவர்க்கே, ஆருயிர் உண்டாவதற்கே.

4. பூவுலகை ஆளும் மன்னர், போதம் உணர் வேதியர் உன்
பொற் பதத்தை அர்ச்சிக்கவே நற் பதம் தா, தேவே!
மூவுலகிலும் துதியும், முக்யம் மகத்துவம் கனமும்,
மா பலமுமே உமக்கே, மங்களம் உண்டாவதாக.

***– காபிரியேல் உபதேசியார்***

## ஆ யேசுவே காரும்

**298. (1 L.) சங்கராபரணம்** **ரூபகதாளம்**

**கண்ணிகள்**

**ஆ யேசுவே நீர் எங்களை**
அன்பாகச் சேர்ந்துமதாவியை
நேயா அருள் அனுக்ரகத்தையும்
நிமலா தந்து காரும்.

2. பரந் தன்னில் நீர் பரிசுத்தர், மா
பரிசுத்தர், மா பரிசுத்தரே,
பரனே சேனைப்பரனே என்று
பகர்ந்தே பார்க்குமளவும்.

3. வாயும் மையே போற்றி எங்கள்
மனம் நின் அன்பை ருசிக்க நற்ச
காயா விசுவாசந் தந்து
காரும் எம்மைப் பாரும்.

4. மூவாட் களாய் ஒரு வஸ்துவாய்
மூலோகமும் ஆளும்பரா
தேவா தந்தை சுதனாவியே
தினமுந்துதி உமக்கே.

***– ஞா. சாமுவேல்***

## நல்வரந் தந்தனுப்பையா

**299. (13) ஆனந்தபைரவி** **ரூபகதாளம்**

**கண்ணிகள்**

**வந்து நல்வரம் தந்தனுப்பையா,–ஆதிநாதா, ஜோதீ,**
வல்ல ஆவியை நல்கியாளையா.

2. பண்ணின ஜெபம் எண்ணிக்கேள், இன்னும்–ஆதிநாதா, ஜோதீ
பண்பாய் உள்ளினில் பதிந்தே ஆளென்றும்.

3. காதில் கேட்ட உன் வேத வாக்கியம்,–ஆதிநாதா, ஜோதீ,
கருத்தில் இருத் தப்போதே பாக்கியம்.

4. புறத்தில் சென்று அறத்தைச் செய்யவே–ஆதிநாதா, ஜோதீ,
புத்தி தா நான் புதிதாய் உய்யவே.

5. இந்தப் பலியின் இனிய கந்தமே,–ஆதிநாதா, ஜோதீ,
என்னில் கமழ ஈவாய் அந்தமே.

***– ச. அருமைநாயகம்***

## இந்தக் குழந்தையை ஏற்றுக்கொள்ளும்

**300. (290) பிலஹரி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே.**

***அனுபல்லவி***

உந்தம் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த –இந்த

***சரணங்கள்***

1. பிள்ளைகள் எனக் கதிகப் பிரியம், வரலாம், என்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே. –இந்த

2. பாலரைக் கையில் ஏந்தி பண்பாய் ஆசீர்வதித்த
சீலமாயின்றும் வந்தாசீர்வாதம் செய்யும், ஐயா. –இந்த

3. உமக் கூழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்,
உமது ஆவியைத் தந்து உம்முட மந்தை சேர்த்து. –இந்த

4. உலகமும் பேய்ப் பசாசும் ஒன்றும் தீது செய்யாமல்,
நலமாய் இதைக் காத்தாளும், நன்மைப் பராபரனே! –இந்த

5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கும் உள்ளடங்கிப்,
பசிய மரம்போல் தெய்வ பத்தியிலே வளர. –இந்த

***– பாக்கியநாதன் தாவீது***

**பாலர் நேசனே**

**301. (108) மோகனம் ஏகதாளம்**

***பல்லவி***

**பாலர் நேசனே,–மிகப்–பரிவுகூர்ந்திந்தப்**
பாலரை யேந்தி–ஆசீர்–வதியும், யேசுவே;

***சரணங்கள்***

1. பாலர் வந்திடத்–தடை–பண்ணொணாதென்றீர்;
சாலவந்தருள்–தந்து–தலைமேற் கைவைப்பீர். – பாலர்

2. வான ராச்சியம்–இவர்–வசத்த தென்றீரே;
ஞானஸ்நானத்தால்–உந்தம்–நாமஞ்சூட்டுவீர். – பாலர்

3. கானம் பாடியே–பாலர்,–கர்த்தரே உமைத்
தானே, ஓசன்னா!–எனச்–சத்தமிட்டாரே. – பாலர்

4. தேவ பாலனே,–நீருஞ்–சிறிய பிள்ளையாய்
மேவினீ ரதால்–உமை–வேண்டினோ மையா – பாலர்

5. ஆவியா லிவர்–ஞான–அபிஷேகம் பெற,
ஜீவ நேசரே,–அருள்–சிறியர்க் கீவீரே – பாலர்

6. தாசர் நாங்கள் செய்–வாக்குத்–தத்தம் மீறாமல்,
நேச யேசுவே,–யெமை–நிலைநிறுத்துவீர். – பாலர்

***– யாழ்ப்பாணம் எரேமியா***

### ஞானஸ்நான மா ஞானதிரவியமே

**302. (301) காம்போதி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஞானஸ்நான மா ஞானத்திரவியமே; திரு**
நாமம் ஜலமோடு சேர்.

***சரணங்கள்***

1. வானபரன் யேசுலக மானிடர்க்காய்ப் பாடுபட்டு
வாய்த்தநலம் இலவசமாய்க் கொடுத்திட,
ஞானமுட னேசகல மானிடரைச் சீடராக்க,
நல்ல தேவ நாமமதைச் சொல்லிஜலம் வாருமென்ற – ஞான

2. தண்ணீராவியால் பிறக்கார் விண்டலம் பெறாரெனவே
சத்தியன் உரைத்தமொழி சுத்தமுணர்ந்து
சின்னவர் பெரியவர்கள் சீரியர்கள்[1] பூரியர்கள்[2]
செம்மைபெற மூழ்குவர்கள் இம்முழுக்கில்[3] வேதமுறை – ஞான

3. கண்ணினாலே காண்பதென்ன? தண்ணீர்தானேயென்று சொல்லிக்
கர்த்தனி னுரைமறப்ப தெத்தனை மோசம்!
அண்ணலார் பரிசுத்தாவி தன்னையுமிணைக்கு நேர்மை
அறிந்தவரே யிருகண் தெரிந்தவர் திருவருள் – ஞான

***– ஞா. சாமுவேல்***

### ஐயனே! இவர்க்கு ஆசி ஈகுவாய்

**303. (302) செஞ்சுருட்டி** **ருபகதாளம்**

**பல்லவி**

**ஐயனே! இவர்க் காசி ஈகுவாய்,**
மெய்யாய் உன்னைச் சார–என்றும்

1 சிறந்தவர்கள் 2 கீழ் மக்கள் 3 ஸ்நானத்தில்

**அனுபல்லவி**

பொய்யா மிவ்வுல காசை யைவிட்டு,
மெய்யாய் உன்னைச் சார–என்றும் – ஐயனே!

**சரணங்கள்**

1. பாவ முஞ்செக சால மும்விட்டுப்
பனுவ லிரைப்[1] படியே,–வெகு
ஆவ லாயுன தருளி னாலுயிர்
அடையக் கதி யடைய–என்றும் – ஐயனே!

2. நற்று தி[2] செயும் பத்த ராயுன்றன்
பொற்றா ளிணை[3] போற்றி!–ஓங்கு
சற்கு ணமுமெய் வாழ்வு மேபெற்றுச்
சான்றோர் நெறிசார–என்றும் – ஐயனே!

3. இன்று தொட்டிவர் என்று மேயுனைச்
சென்றே எங்குங் கூறிப்,–பயன்
நன்றி பெற்றுயர் வென்றி யுற்றினி
ஒன்றி யுயர்ந்த தோங்க–என்றும் – ஐயனே!

4. அன்று சீடராய்ப் பன்னி ருவரை
அழைத்தாய், தயை விழைத்தாய்;–இவர்
என்றுஞ் சபையில் ஒன்றி வைகிட[4]
நின்றுன் கிருபை ஈவாய்–என்றும் – ஐயனே!

**திடப்படுத்தல் பெறுவோர்க்கு அருள்தாரும்**

**304. (303) யமுனாகல்யாணி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**பரிசுத்தாவி நீர் வாரும்!–திடப்**
படுத்தல் பெறுவோர்க் கருள் தாரும்! – இன்று

***அனுபல்லவி***

அருளினைப் பெருக்கும் அக்கினி மயமே
ஆவியின் நற்கனி நல்குமா தூயமே. – பரி

---

1 வேதவுரை
2 நல்துதி
3 அழகிய இரு பாதங்கள்
4 இருக்க

*சரணங்கள்*

1. செயல்குண வசனத் தீதுகள் போக,
திருச்சபை யதிலிவர் பூரணராக,
ஜெயமொடு பேயை எதிர்த்துக் கொண்டேக,
ஜெபதப தியானஞ் செய்வதற்காக. – பரி

2. நற்கருணைதனை நலமுடன் வாங்க,
நாளொரு மேனியாய் ஆவியி லோங்க,
சற்குணராய் இவர் சபையைக் கை தாங்க,
சகல தீதான பேதங்களும் நீங்க. – பரி

3. அஞ்ஞானங்க ளோடிவர் சமர்[1] புரிய,
அருண்மறை யதினாழங் களையறிய,
நெஞ்சினில் அன்பு கொழுந்துவிட் டெரிய,
நின்னடியாரிவ ரென்பது தெரிய. – பரி

4. பக்தியுந் தாழ்மையுமா யிவர் உய்ய,[2]
பரிசுத்தமான ஜீவியஞ் செய்ய,
நித்தமுங் கிருபையின் கனி கொய்ய,
நிலைவரமாய் இவராவியில் துய்ய. – பரி

5. தினமறை யோதி ஜெபித்து மன்றாட,
திருச்சபை யதின்ஐக் கியத்தினிற் கூட,
உணர்வோடு தொழுது கீதங்கள் பாட,
உள்ளந் திருந்து ஜீவாறுகளோட. – பரி

***– ச.பே. ஞானமணி***

**என்னில் நிரம்புவீர்**

**305. (96L) ஆனந்தபைரவி** **ருபகதாளம்**

*பல்லவி*

**சிந்தைசெய்யும் எனில் நிரம்புவீர், தேவாவி உமைச்**
சிந்தைசெய்யும் என்னை நிரப்புவீர்.

---

1 போர் 2 பிழைக்க

***அனுபல்லவி***

தந்தைப் பரனாரினின்றும் மைந்தனார் கிறிஸ்தினின்றும்
விந்தையாய்ப் புறப்பட்டேகும் வித்தகத்தின் ஆவியேநீர்
–சிந்தை

***சரணங்கள்***

1. பாலனாய்ப் பரமதந்தைக்கும்–அவரின்நேய
சீலனாம் கிறிஸ்தியேசுக்கும்
சாலவே என்றென்னைச் சேர்த்திட்டீர்–அத்தாலே தேவ
கோலம் என்றன் பங்கதாயிற்று.
தந்தைதாயர் தந்த வாக்கைச் சொந்தவாயால் நான் கொடுக்க
வந்திருக்கும் வேளைதனில் தந்தைசுதன் ஆவியே நீர். –சிந்தை

2. திரியேக தேவனே என்றே–அவரைவிட்டுப்
பிரியேன் என் பிராணன்போனாலும்.
அரிய அவரின்தயையே–எனக்கு என்றும்
உரிய ஒன்றான பொருளே.
பொய், லோகம், மாம்சம் என்னைப் பிடித்திழுத்தாலும்
ஒய்[1] பரிசுத்த ஆவி உதவுவீர் எனக்கென்றும். –சிந்தை

3. பக்தியுள்ள ஜீவியம்செய்து–பகலின் சேயாய்
எத்திசையிலும் விளங்கிடச்,
சுத்தமனம் செய்கையைத்தரும்–எனைநான் என்றும்
தத்தம்செய்யக் கற்பித்தருளும்,
உன்னதத்தில் வாழ் தந்தைக்கும் உயர்சுதன் ஆவியர்க்கும்
என்னகத்தினின்றும் துதிஏறுவதாக, ஆமென். – சிந்தை

***– வே. தேவசகாயம்***

**கர்த்தரின் பந்தியில் வா**

**306. (304) சங்கராபரணம்** **ரூபகதாளம்**

***பல்லவி***

**கர்த்தரின் பந்தியில் வா,–சகோதரா**
கர்த்தரின் பந்தியில் வா.

1 ஓய்

***அனுபல்லவி***

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி, – கர்த்தரின்

***சரணங்கள்***

1. ஜீவ அப்பம் அல்லோ?–கிறிஸ்துவின்
திருச் சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ?–உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட. – கர்த்தரின்

2. தேவ அன்பைப் பாரு;–கிறிஸ்துவின்
சீஷர் குறை தீரு;
பாவக் கேட்டைக் கூறு;–ராப்போசன
பந்திதனில் சேரு;
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே. – கர்த்தரின்

3. அன்பின் விருந்தாமே;–கர்த்தருடன்
ஐக்யப் பந்தி யாமே;
துன்பம் துயர் போமே;–இருதயம்
சுத்த திடனாமே;
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா. – கர்த்தரின்

***– மரியான் உபதேசியார்***

**போசனம் உண்டோ திருராப்போசனம்போல**

**307. (305) உசேனி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**போசனந்தா னுமுண்டோ–திருராப்**
போசனம் போலுலகில்?

## *அனுபல்லவி*

ராசரும் வையக நீசரும் அம்பரன்[1]
நேசரும் யேசுவின் தாசரும் உண்டிடப் – போசனம்

1. கர்த்தன் மரணத்தின் சாசன[2] போசனம்;
கன்மி[3]கட் கானமெய் நேசத்தின் போசனம்;
பக்தரை யொன்றாய் இணைத்திடும் போசனம்;
பஞ்சகாலத்தும் கிடைத்திடும் போசனம். – போசனம்

2. பூர்வ ஏற்பாட்டோர்கள் காணாத போசனம்;
பொன் வானதூதரும் உண்ணாத போசனம்;
ஓர் காலமும் குறைவாகாத போசனம்;
ஒப்பில்லான் மாமிசம் ரத்தமாம் போசனம். – போசனம்

3. பஸ்காப் பலியின்பொருள் என்னும் போசனம்;
பாவி புசிக்கும் சமாதான போசனம்;
நிஷ்கார[4] நிந்தைப் பவம்போக்கும் போசனம்;
நின்மலன் தந்திடும் அற்புதப் போசனம். – போசனம்

4. மாமலைப் பீடப் பலியான போசனம்;
மானிட ஞானத்துக் கெட்டாத போசனம்;
ஆமென்று நாங்கள் போதித்திடும் போசனம்;
அத்தனார் மெய்மொழியாலான போசனம். – போசனம்

5. மாமிசம் அப்பத்தோடே வரும் போசனம்;
வல்லன் ரத்தன் ரசத்தோடுறும் போசனம்;
பூமியில் மோட்சம் கொணர்ந்திடும் போசனம்;
பொய்க் கிறிஸ்தோர்களுக் காக்கினைப் போசனம். – போசனம்

6. ஒப்பனை யென்னக் கூடாதமெய்ப் போசனம்;
ஒன்று மற்றொன்றாக மாறாத போசனம்;
தப்பற நாங்கள் புசித்திடும் போசனம்;
சந்தோஷப் பாவப் பொறுப்பீயும் போசனம். – போசனம்

---

1 கடவுள்
2 கட்டளை
3 பாவி
4 காரணமில்லாத

7. செத்தும் உயிரோ டெழும்பிடும் போசனம்;
சீவனோ டென்றென்றும் வாழ்விக்கும் போசனம்;
நித்தமுண்டாலும் சலிக்காத போசனம்;
நேச சஞ்சீவி யெனுந்திருப் போசனம். – போசனம்

***– ஞா. சாமுவேல்***

**மாசற்ற தேவாட்டுக்குட்டி**

**308. (306) புன்னாகவராளி ரூபகதாளம்**

**மாசற்ற தெய்வாட்டுக்குட்டி மனுவேல் மேசியாவே!**
வாரும், எனைப் பாரும், பவந்தீரு மேசையாவே!

2. தீரும் வகை காணாதிந்த ஜெக மீதலைந் தயர்ந்தேன்,
தேவா, வினைதீர், வா வென்றுன் திருப்பாதத்தைத்
துயர்ந்தேன்.

3. திருப்பாத மென் கதியே, பவத் திரளோ பெருமலையே;
தீயேனுடல் சிரசும் அதைச் சுமக்கப் பெலனிலையே.

4. சுமந்தோன் இங்கே வா வா, வை உன் சுமையை என் தோள்
மேலே;
சுக ஆறுதல் தருவேனென்று சொன்னீர், மனுவேலே!

5. சொன்னீர் ஐயா! ரத்தாம்பரச் சிவப்பாம் பவக் கறையும்
சொன்னீர் படப் பறந்தொடி என்தேகம் வெண்மை நிறையும்.

6. நிறைவா கரக்கடலே! மறை நிறை யாகமத்திடலே!
குறையா வரம்தயை பூரணம் குடிகொண்டதுன் னுடலே.

7. உடலே திருவிருந்து, சுவாமி உதிரம் திருமருந்து,
உலகாசையைத் துறந்து, எனதுளமே, அதை அருந்து.

8. அருந்தப் பவச்சுமை நோவிடர்[1] ஆறாத்துயர் சாபம்
அகலும், அவர் பதச் சேவையால் ஆறுந் தேவ கோபம்.

9. ஆறும் மனந்தேறும் அவரருட்கண் என்மேல் சாரும்,
ஆத்மா கரையேற அவர் அன்பை ருசி பாரும்.

10. அன்பால் எனைத்தழுவி என்றன் ஆத்மக் களை யாற்றி,
அவர் மார்பினில் அணைத்தார் ஏழை யடியேன் மனந்தேற்றி.

11. மனமோ யேசு சாந்தம் அன்பு மனத்தாழ்மையைப் பூண்டு
மனுவேல் யேசு நாமம் உன்னில் மகிமைப்பட வேண்டு.

***– ஆ.த. தானியேல்***

## பசி, தாகத்துடன் வாறேன்

**309. (307) தேவகாந்தாரி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தாரகமே,–பசிதாகத்துடன் உம்மிடம்**
வேகத்துடனே வாரேன்.

***அனுபல்லவி***

சீருஞ் செல்வமும் பெற்றுத் தேறும்படிக் கென்னிடம்
சேரும் யாரையும் ஒருபோதுந் தள்ளிடே னென்றீர். – தாரகமே

***சரணங்கள்***

1. பாவமகலத் தேவ கோபமது ஒழியப்
பாடுபட்டுயிர் விடுத்தீர்;–பின்னும்
ஜீவ போசன மெனக்கீய உமையே அந்தச்
சிலுவைதனிலே பகுத்தீர்;
மேவியெனை நெருக்கித் தாவும் பவத்தைக் கொன்று,
சேவித் துயிர்பிழைக்க, தேவே, உமையுட் கொள்ள. – தாரகமே

---

1 நோவு இடர்

2. காணாதொழிந்த ஆடு வீணாய்ப் போகாமல் அதை
கண்டுபிடித்தி ரட்சித்தீர்;–அது
பேணுதலுடன் பரி பூரண மடைந்திடப்
பேருல குதித்தேனென்றீர்;
வேணுமுமது நீதி பூண, நிறைவா யுன்றன்
மாணருளுந் திருப்தியானே பெற உம்மிடம். – தாரகமே

3. தந்த திருவசனம் உந்தம் இராப்போசனம்
தகமை எத்தனமாமே;–யான்
சிந்தை பணிந்தவற்றை என்றன் மனதுட்கொள்ளத்
தேவசுத்தாவி தாமே;
உந்தம் தசையுதிர விந்தை விருந்தினை யான்
சந்ததமுண்டு துதி சாற்ற அருள் செய்வீரே! – தாரகமே

***– வே. மாசிலாமணி***

**அருமை ரட்சகா, கூடி வந்தோம்**

**310. (308) பிலஹரி** **ரூபகதாளம்**

***பல்லவி***

**அருமை ரட்சகா, கூடிவந்தோம்;–உம**
தன்பின் விருந்தருந்த வந்தோம்.

***அனுபல்லவி***

அறிவுக் கெட்டாத ஆச்சரியமான
அன்பை நினைக்க – அருமை

***சரணங்கள்***

1. ஆராயும் எமதுள்ளங்களை,–பல
வாறான நோக்கம் எண்ணங்களைச்
சீராய்ச் சுத்தமனதாய் உட்கொள்ள நீர்
திருவருள் கூரும். – அருமை

2. ஜீவ அப்பமும் பானமும் நீர்,–எங்கள்
தேவையாவும் திருப்தி செய்வீர்;
கோவே! மா பயபக்தியாய் விருந்து
கொண்டாட இப்போ. – அருமை

3. உமதன்பின் பிரசன்னம் பெற்றோம்;–உம–து
ஒளி முகதரிசன முற்றோம்;
சமாதானம், அன்பு சந்தோஷமும் எமில்
தங்கச் செய்திடும். – அருமை

4. கிருபை விருந்தின் இந்த ஐக்யம்–பூவில்
கிடைத் தற்கரிய பெரும் பாக்கியம்;
அரும் பிரியத்தோ டெங்களை நேசிக்கும்
குருவே, வந்தனம்! – அருமை

5. எங்கட்காய் உமை ஒப்புவித்தீர்;–கொடும்
ஈனச் சிலுவையில் மரித்தீர்;
பொங்கும் பேரன்பை எங்கும் தெரிவிப்போம்,
புண்ணிய நாதரே! – அருமை

6. பந்திக் கெசமான் நீர் யேசுவே!–எமைச்
சொந்தமாய் வரவழைத்தீரே;
உந்தம் கிருபை வல்லமை பெற்றுமக்
கூழியஞ் செய்ய. – அருமை

***– வே. சந்தியாகு***

### அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்?

**311. (309) தேவகாந்தாரி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்?–அதிசய**
அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்?

***அனுபல்லவி***

துன்ப அகோரம்[1] தொடர்ந்திடும் நேரம். – அதிசய

**சரணங்கள்**

1. இதுவென் சரீரம், இதுவென்றன் ரத்தம்,
எனை நினைத்திடும்படி அருந்துமென்றாரே. – அதிசய

---

1 பயங்கரம்

2. பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சீஷர்க்காய் மறுகி நின்றாரே. - அதிசய

3. வியாழனிரவினில் வியாகுலத்தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ? - அதிசய

4. செடியும் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீரென்றாரே - அதிசய

5. பக்தர்கட்காகப் பரமனை நோக்கி
மொத்தவும் ஊக்கமாய் வேண்டிக்கொண்டாரே. - அதிசய

***– சா. பரமானந்தம்***

**வரம் இவர்க்கு அருள்வாய்**

**312. (311) பரசு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அப்பா, அருட்கடலே, வரம்**
துப்பாய்[1] இவர்க்கருள்வாய்!

**அனுபல்லவி**

செப்பரிதாகிய மெய்ப்பொருளை எங்கும்
சென்றறிவித்திட நிறைவாய். - அப்பா

**சரணங்கள்**

1. பண்டு புறாவுருகொண்டு இறங்கிய
பான்மை இவர் சிரமீதே,-திருத்
தொண்டு செய்யும்படி வல்லாவியால் முடி
சூட்ட இரங்கும் இப்போதே. - அப்பா

2. நன்னயமாகவே பன்னிரு வேதியர்
நாவில் எழுந்துரை யாடிப்,-பேயின்
சன்னதம்[2] ஓய்ந்திடப் பண்ணியவாறிவர்
தம்மிலும் வந்தசை வாடி. - அப்பா

---

1 வலிமையாக 2 இருப்பு

3. இன்பாய் உலகை இமைக்குள் அமைத்தவர்
ஏவைக் குலங்கள் ஈடேறப்,-பெருந்
துன்பாய் இறந்த பேரன்பைத் தெளிவுறச்
சொல்லு முந்நூலினில் தேற. - அப்பா

4. தேகமும் ஆவியும் ஜீவியம் யாவையும்
தீயவை அப்புறம் ஏகத்,-திரி
யேகருக் கர்ப்பிகமாக[1] ஒப்பிக்கும் நல்
எண்ணம் இவர்க்குள் உண்டாக. - அப்பா

5. முந்து நடுவு முடிவுமிலா ஒரு
மூவரில் அக்கினிக் கொழுந்தே,-தேவ
சிந்தை இவரில் சிறந்தொளி வீசிடச்
செய்வதற் கிங்கனம் எழுந்தே. - அப்பா

***- எ.ஐ. குளோரியா***

## வரந் தர இது சமயமே

**313. (312) தன்யாசி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அருட்கடலே, வரந் தர இது சமயமே;**
ஐயனே, அருள் தாரும்.

**சரணங்கள்**

1. சிரந்தனில் இறங்கிடும் புறாவுரு ஆவியே,
கரங்களில் தாசனைக் காத்திடும், தேவா. - அருட்

2. பன்னிரு சீஷரைப் பண்பாகத் தெரிந்தீரே,
உன்னத ஆவியால் உண்மையாய்ப் பிழைக்க. - அருட்

3. அன்போடு யேசுவை ஆவியோடு பேச,
இன்புறு வரங்களை இவர்க்கின்றே ஈய. - அருட்

1 அர்ப்பணமாக

4. திரியேக தேவா, திருச்சபை பெருக,
அறிவுட னாளும் அன்பர் கோனாக. - அருட்

5. அந்தம் ஆதியில்லா அல்பா ஒமேகாநமா,
சந்ததம் வாழ, சபைகளுஞ் செழிக்க. - அருட்

***- யே.சா. டெய்லர்***

### உமது ஆவி தரவேணுமே

**314. (313) மோகனம்** **சாபு தாளம்**

***பல்லவி***

**தருணம் இதில் யேசுபரனே!-உமதாவி**
தரவேணும் சுவாமீ!

***அனுபல்லவி***

அருள்தரும் சத்ய வல்ல, அன்பின் ஜெபத்தின் ஆவி
அபிஷேகம் பெறுமுன்றன் அடியர்மேல் அமர்ந்திட. - தருணம்

***சரணங்கள்***

1. விந்தை ஞானம் அறிவு வேத சத்தியங்களில்
மிக்க உயர்ந்து தேர்ந்து விண்ணொளி இவர் வீசச்,
சத்யம் சகலத் துள்ளும் தாசர்களை நடத்தும்
சத்ய ஆவி இவர்மேல் சம்பூரணமாய்ப் பெய்ய. - தருணம்

2. பாவத்தை வேரறுக்கும் ஆவியின் வாள்பிடித்துப்
பலமாகவே இவர் உலகினில் போர் செய்யச்,
சாவுற்றோர்களை நித்ய ஜீவனைப் பெறச் செய்யும்
மா வீரராய் விளங்க வல்லாவியே இறங்க. - தருணம்

3. ஆவியின் கனியென்னும் அன்பாதி குணங்களை
அனுதினமும் இவர் அணிகல மாயணிந்து,
மேவும் திருமந்தையை மேய்த்து வளர்க்க நல்ல
மேய்ப்பரே, அன்பின் ஆவி வாய்ப்பாய் இவரில் தங்க.-தருணம்

4. ஏக்கம் ஆத்தும தாகம் இடைவிடாமல் அடைந்து
ஊக்கத்துடனே இவர் ஓயாமல் ஜெபித்திட,
வாக்குக் கடங்காப் பெருமூச்சோடே எமக்காக
மன்றாடும் ஜெப ஆவி என்றென்றும் நிரம்பிட. - தருணம்

5. மாசுகளற உம்மில் வாசமாக நிலைத்து
மாபணிவாய் உந்தம் மகிமையை நிதம் தேடத்,
தேசுறு அருள்நாதா, தாசர் உள்ளத்தினின்று
ஜீவநதிகள் ஓடிச் செல்வம் பொழியச் செய்ய. - தருணம்

***– வே. சத்தியாகு***

## யேசுவே திருச்சபை ஆலயத்தின் மூலைக்கல்

**315. (314) யமுனாகல்யாணி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**யேசுவே திருச்சபை ஆலயத்தின்**
என்றும் நிலைக்கும் மூலைக்கல்.

**அனுபல்லவி**

பேசற் கரிய மூலைக்ககல் அவர்
பெரும் மாளிகையைத் தாங்கும் கல். - யேசுவே

**சரணங்கள்**

1. ஆகாதிதென்று வீடு கட்டுவோர்
அவமதித்திட்ட இந்த கல்;
வாகாய் ஆலய மூலைக் கமைந்து
வடிவாய்த் தலைக்கல்லான கல். - யேசுவே

2. ஆலயமெல்லாம் இசைவாய் இணைக்கும்
அதிசயமான அன்பின் கல்;
ஞாலத்துப்[1] பல ஜாதிகள் தமை
நட்புற[2] ஒன்றாய்ச் சேர்க்கும் கல். - யேசுவே

---

1 பூமியின் 2 சினேகமுண்டாக

3. ஒப்பில்லா அரும் மாட்சிமை யுறும்
உன்னத விலைபெற்ற கல்;
எப்போதும் பரஞ்சோதியாய் நீதி
இலங்கும்[1] சூரியனான கல். – யேசுவே

4. காற்றுக்கும் கன மழைக்கும் அசையா
கடிய மாபலமான கல்;
மாற்றிக் கலியை ஆற்றுத் துயரைத்
தேற்றி சபையைக் காக்குங் கல். – யேசுவே

5. என்றும் கட்டுவோம் இந்த ஆலயத்தை,
எழிலுறவே[2] இக் கல்லின்மேல்;
நன்றாய் இக்கல்லில் நம்பிக்கை வைப்போன்
நாணம் அடையாள மெய்தானே. – யேசுவே

***– வே. சந்தியாகு***

**இவ்வாலயம் வந்தருள் கூரும்**

**316. (315) சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**மாமனோகரா! இவ்வாலயம்–வந்தருள் கூரும்,**
மாமனோகரா! பராபரா!

**சரணங்கள்**

1. பூமியாளும் நாதனே, நரர்
போகம் நாடும் நீதனே!
நாமே வாழ்த்தும் தாசர் நடுவில்
தாமதம் இல்லாமல் எழுந்தருள்! – மா

2. நாதனே, இவ்வாலயத்தை
நலமாய்த் தந்தாய் தாசர்க்கே;
பாதம் போற்றி வாழ்த்துவோம்; குரு
பரனே, பராபரா, தினம். – மா

---

1 ஒளிவீசும் 2 அழகாய்

3. நின் திருத்தயை பொறுமை
நின் திரு மகிமையும்
சந்தமாய்[1] நிறைந்திட இதில்
சந்ததம் ஈவாய் நின் ஆசியை. – மா

4. தோத்திரம் ஜெபம் தியானம்,
தூய்மையாம் பிரசங்கமும்,
பார்த்திபா[2] இவ்வாலயத்தில்
பக்தியாகவே நடந்திட. – மா

5. நீதி ஞாயம் தெய்வபக்தி,
நேர்மைபேதத் தியானமும்
நாதனில் விசுவா சமும் மிஞ்சி
நன்கு போற்ற தாசர்க்கருள் புரி. – மா

***– ச.ஜெ. சிய்***

## தேவனே ஆலயம் வந்திடும்

**317. (316) கமாஸ்** **சாபு தாளம்**

***பல்லவி***

**தேவனே, யேசு நாதனே, இத்**
தேவ ஆலயம் வந்திடும்;
தேவ ஆலயம் வந்தவர்க் கருள்
திவ்ய ஆவியை ஈந்திடும்.

***சரணங்கள்***

1. பாவிகள் உமக்காலயஞ் செய்யப்
பாத்திரர்களோ? அல்லவே;
பாவநாசராம் யேசுவே உம்மால்
பாத்திரராய் இதைச் செய்தனர். – தேவனே

2. கூடிவந் தும்மையே பணிந்திடக்
குறித்த இச்சிறு ஆலயம்
நாடி வந்தவர் யாவருக்குமுன்
நல்வசன முளதாகவும். – தேவனே

---

1 அழகாய் 2 அரசனே

3. தேவனே, உமக்கான ஆலயம்
பாவியின் சிறு நெஞ்சமே;
பாவம் யாவையும் நீக்கியே சிறு
தேவ ஆலய மாக்கிடும். - தேவனே

***- ச. தாவீது***

**சங்கீதம் 128**

**318. இந்துஸ்தான்** **ஏகதாளம்**

**பல்லவி**

**பயந்து கர்த்தரின் பாதை யதனில்**
பணிந்து நடப்போன் பாக்கியவான்.

**அனுபல்லவி**

முயன்று உழைத்தே பலனை உண்பான்
முடிவில் பாக்யம் மேன்மை காண்பான்.

**சரணங்கள்**

1. உண்ணுதற்கினிய கனிகளைத் தரும்,
தண்ணிழல் திராட்சைக் கொடிபோல் வளரும்
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள்
எண்ணரும் நலங்கள் இல்லத்தில் புரிவாள்.

2. ஒலிவமரத்தை சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போலே
மெலிவிலா நல்ல பாலருன் பாலே
மிகவும் களித்து வாழ்வர் அன்பாலே.

3. கர்த்தருன் வீட்டை கட்டாவிடில் அதைக்
கட்டுவோர் முயற்சி வீணாம் அறி இதை
கர்த்தரால் வரும் சுதந்திரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியும் கர்த்தரின் கிருபை

***- வீ.ப.கா. சுந்தரம்***

## கன்னிமரியாளின் கீதம்

**319. உசேனி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே,-என்றன்**
ஆவியும் அவரில் களிக்கின்றதே,-இதோ!

**அனுபல்லவி**

நேர்த்தியாய்ப் பாடுவேன், நிதங்கனிந்தே எந்தன்
பார்த்திப னுட[1] பதந் தினம்பணிந்தே.-இதோ! - ஆத்துமா

**சரணங்கள்**

1. அடிமையின் தாழ்மையைப் பார்த்தாரே,-என்னை
அனைவரும் பாக்கிய ளென்பாரே,
முடிவில்லா மகிமை செய்தாரே,-பல
முடையவர் பரிசுத்தர் என்பாரே.-இதோ! - ஆத்துமா

2. பயப்படும் பத்தருக் கிரங்குகிறார்,-நரர்
பார்த்திடப் பெருஞ்செயல் புரிகின்றார்;
உயர்த்திடு நரர்களைச் சிதறடிப்பார்,-தன்னை
உகந்தவர் தாழ்ந்திடில் உயர்த்துகின்றார்.-இதோ! - ஆத்துமா

3. முற்பிதாக் களுக்கவர் சொன்னதுபோல்-அந்த
முனியாபி ராமுட ஜனமதன்பால்,
நட்புடன் நினைவொடு நல்லிசரேல்-அவன்
நலம்பெற ஆதரித் தார்மறவேல்.-இதோ! - ஆத்துமா

**- ச.த. ஞானமணி**

## தேவ சுதனை மறவாதே

**320. (319) காம்போதி** **சாபுதாளம்**

***பல்லவி***

**மறவாதே, மனமே,-தேவ சுதனை**
மறவாதே, மனமே,-ஒருபொழுதும்

---

1 அரசனுடைய

**_சரணங்கள்_**

1. திறமதாக உனைத் தேடிப் புவியில் வந்து,
அறமதாகச் செய்த ஆதி சுதன் தயவை – மறவாதே

2. விண்ணின் வாழ்வும் அதன் மேன்மை அனைத்தும் விட்டு
மண்ணில் ஏழையாக வந்த மானு வேலை – மறவாதே

3. கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ,
மட்டில்லாத பரன் மானிடனான தயவை – மறவாதே

4. நீண்ட தீமை யாவும் நீக்கிச் சுகம் அளித்திவ்
வாண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும் – மறவாதே

5. நித்தம் நித்தம் செய்த நிந்தனை பாவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை ரட்சகனை – மறவாதே

6. வருடம், வருடம் தோறும் மாறாத் தமதிரக்கம்
பெருகப் பெருகச் செய்யும் பிதாவின் அனுக்ரகத்தை– மறவாதே

**_– வே. சாஸ்திரியார்_**

**பாலர் ஞாயிறிது**

**321. சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும்,**
பாடி யேசு நாமம் பணிந்து போற்றும்.

**அனுபல்லவி**

தாலந்தை புதைத்திடாமல் தாமதமே பண்ணிடாமல்
ஞாலமீதிறங்கி வந்த சுவாமி யேசு அன்பை எண்ணிப் – பாலர்

**சரணங்கள்**

1. பாலர் சங்கத்தாலே மாட்சிமை பெற்றோம்,
பாலர் நேசர் பதம் பணியக்கற்றோம்,
பாரில் ஜோதி வீசுகின்ற பரிசுத்த வேதம் கற்றோம்,
ஊரில் எங்கும் கார்ட் பஞ்சாங்கம் ஓதும் பாலியர் நேசன்
கண்டோம். – பாலர்

2. தேடி வந்தலையும் தேசிகருண்டு,
பாடி ஆர்ப்பரிக்க பாலர் பாட்டுண்டு,
கூடி வந்து ஆனந்திக்கக் கூட்டப்பண்டிகையுமுண்டு,
நாடி மீட்பர் பாதம் பாலர் தேட எல்லா ஏதுமுண்டு. – பாலர்

3. இன்று மட்டும் நம்மை ஏந்தி வந்தாரே,
இன்னும் நித்யமும் பாதுகாப்பாரே,
அன்பின் சங்கம் இதைக்கொண்டு ஆத்மநேசர் செய்து வரும்
எண்ணி முடியா நன்மையை ஏகமாக எண்ணிக் கொண்டு.
–பாலர்

***– சா. பரமானந்தம்***

**பாலரே நடந்து வாருங்கள்**

**322. பலஹம்சா** **ஏக தாளம்**

**பல்லவி**

**பாலரே, நடந்து வாருங்கள்,**
காலையில் எழுந்து கூடுங்கள்,
சாலவே சீவன் சுகமும்

**அனுபல்லவி**

தந்த தேவனை, மைந்தன் யேசுவைச்
சந்தோஷத்துடன் போற்றிப் பாடுங்கள்.

**சரணங்கள்**

1. சிறு கண்கள் இரண்டு தந்தனர்
தேவன் செய்தவை நோக்கிப் பார்க்கவே!
சிறு செவி இரண்டு தந்தனர்
தேவன் சொல்லைக் கேட்பதற்குமே!
சிறப்புடன் அவர் பதத்தை நோக்கியே
திவ்ய வார்த்தையைக் கேட்டு வாருங்கள். – பாலரே

2. சிறிய கால் இரண்டு தந்தனர்
செல்லவே மோட்சப் பாதையில்;
சிறு கைகள் இரண்டு தந்தனர்
செய்யவே தேவ ஊழியம்;
சீக்கிரம் அந்தப் பாதை சென்று மெய்த்
தேவனைத் தினம் சேவித் தேத்துங்கள். – பாலரே

***– ஈ. பாக்கியநாதன்***

**மன்னிப்பீர் என் பிதாவே**

**323. நவரோஜ்** **ஏக தாளம்**

**தேவாரம்**

**இன்னிய முகமலர்ந்து இருதயத் துருகுமன்பால்**
உன்னத தேவ மைந்தன் உலகின்பாற் கருணை கூர்ந்து,
'மன்னிப்பீர் என்பிதாவே! மதலைகளிவர்கள்[1] குற்றம்
மன்னிப்பீர்' என்றுருகு மனுவுக்கே ஆமென் என்பீர்.

2. பதிலுக்குப் பதில் செயென்ற பழைய ப்ரமாண மாற்றிப்
புதியதங் கற்பனையைப் புவியதில் நாட்ட வந்த
கதி தருங் கருணை மூர்த்தி கருணையுற் றுருகித் தம்மை
வதைத்திடும் யூதர்கட்காய் வருந்தியே ஜெபித்து நின்றார்.

3. விற்றதும் வீணன் நானே, வெறுத்ததும் வீணன் நானே,
செற்றதும்[2] சேவகன் நானே, அறைந்ததும் அடிமை நானே,
குத்தின கோரன்[3] நானே, கொலைபுரிந்த வனும் நானே,
இத்தனை பாவஞ்செய்தேன்; இரங்கியாட் கொள்ளுமையா.

4. மன்னிப்பீர் எந்தன் பாவம், மைந்தர்தம் சிலுவைநோக்கி;
மன்னிப்பீர் எந்தன் பாவம், மைந்தர் ஐங் காயநோக்கி,
மன்னிப்பீர் எந்தன் பாவம், மரிக்கும் தம்மைந்தர் நோக்கி,
மன்னிப்பீர் எந்தன் பாவம், மன்னிப்பீர்; ஆமென் ஆமென்.

***– ஆ.ஐ. பிச்சைமுத்து***

**அருள் தாராய் உரிமை நாதா**

**324. நீலாம்புரி** **ஏக தாளம்**

**தேவாரம்**

**தந்தையே இவர்க்கு மன்னி, தாம் செய்வ தின்னதென்று**
சிந்தையிலுணர்ந்திடாதே செய்கிறார்; எனக்கிவ்வாதை!
எந்தையே எளியேன் பாவம் இரங்கியே பொறுதியென்றே
உந்தையின் வலமே நின்றே உரைத்திடாய் உரிமைநாதா.

---

1 மக்கள் 2 பகைத்ததும் 3 கொடியோன்

2. அன்று மெய் மனஸ்தாபத்தோ டடியனை நினையுமென்றே
மன்றாடு சோரன்தேற மலர்த் திருவாய் திறந்தே,
இன்றைக் கென்னோடே கூட ஏகமாய்ப் பரதீசின்கண்
சென்று நீ வாழ்வாயென்றீர், தீயனுக்கிரங்காய் நாதா!

3. அன்பின் சீடனையே நோக்கி, அதோ உனின் தாய்
என்றோதிப்,
பின்புநின் தாயை நோக்கி பிள்ளையதோ வென்றோதிக்
குன்றிடா தன்பின் கட்டைக் குவலயத்[1] தமைத்தீரையா!
இன்றென தேங்கல் தீர்ப்பாய், இறைவனே, உரிமை நாதா!

4. என்தேவா, என்தேவா, நீர் ஏனெனைக் கையிகந்தீர்
என்றுமா தொனியாக் கூறி இடர்கொடு[2] துயரமானீர்;
என்றுமுன சமூகம் நீங்கி எரிநரகாளா மென்னைப்
பொன்றிடா துயிர்தந் தேற்பாய், பொன்னடிக் கபயம் நாதா!

5. உதிர மூற்றுண்டேபோக, உஷ்ணமே சட லந்தாவ,
நதிகடல் முதிரஞ்செய்தோய் நாவறண்டகமே சோர்ந்து,
முதுமறைப்படியே தாக முற்றானானென்றாய் அப்பா!
ததியிலென்[3] தாகந்தீர்ப்பாய், தற்பரா,[4] உரிமை நாதா!

6. திருமறை யடையாளங்கள் தீர்க்கர் முன்னுரைகள் தேவ
நிருணயமெல்லாந்தீர்ந்து நிறைவுனி லடைதல் கண்டு,
முருகொளிர் வாய்திறந்தே முடிந்ததென் றுரைத்தீரையா!
இருமையென் பங்கேதாராய், என்னையாள், உரிமை நாதா!

7. அப்பனே, உமதுகையேன் ஆவி ஒப்படைத்தேனேன்று
செப்பியுள் சிரமே சாய்த்து ஜீவனை விடுத்தீரையா!
ஒப்பிலா உரை சொல்லாயா! உலகமே புரக்குந் தூயா!
அற்பனென் ஆத்மநேயா, அருள்தாராய், உரிமை நாதா!

***– ஜி.சே. வேதநாயகம்***

---

1 பூலோகம்
2 துன்பம்கொண்டு
3 சமயத்தில்
4 கடவுளே

## ராசாதி ராசன் யேசு மகாராசன்

**325. சங்கராபரணம்** **திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**ராசாதி ராசன் யேசு, யேசு மகா ராசன்!–அவர்**
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க,
அவர் திரு நாமமே விளங்க,–அவர் திருநாமமே விளங்க,
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலுயாவே!
அல்பா, ஒமேகா, அவர்க்கே அல்லேலுயாவே!

***சரணங்கள்***

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்,
மன்னன் யேசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

2. நாலாதேசத் திலுள்ளோரே, நடந்து வாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3. நல்மனதோடு சொல்கிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையொடு நிற்பானேன்? பூமுடி சூட்டுங்கள்!

4. இந்தநல் தேசத்தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்,
சிந்தனையை வைத்துக்கொண்டு பூமுடி சூட்டுங்கள்!

5. சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்,
பொன்னகராம் சாலேமுக்குப் போய் முடி சூட்டுங்கள்!

6. குற்றமில்லாப் பாலகரே, கூடிப் குலாவுங்கள்,
வெற்றி வேந்த ரேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்!

7. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்,
ராசாதிராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

8. சகல கூட்டத்தார்களே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராசரிவரே, மாமுடி சூட்டுங்கள்!

***– அ.ஐ. பிச்சைமுத்து***

## தேவ லோகமதில்

**326. கமாஸ்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தேவ லோகமதில்**
சேவிப்பார் தூயவர்கள்.

***அனுபல்லவி***

மாவலராகிய தேவன்றன் பலத்தால்–ரீ
பூவினில் ஜீவித்துப் புகழுறும் ஜெயம் பெற்றார். – தேவ

***சரணங்கள்***

1. வானமண்டலப் பொல்லா ஆவியின் சேனையோடும்–பல
மான துரைத்தனம், அதிகாரம், பிரபஞ்ச
அதிபதியிவர்களோடும்
ஞானமாய்த் தேவ சர்வாயுதம் தரித்து,–ரீ–
நலமுடன் போராடி உலகினில் ஜெயங் கொண்டார். – தேவ

2. பட்டயம், நிர்வாணம், பசி, நாச மோசங்களும்,–மா
பாடு, வியாகுலத்தோடு, உபத்ரவம், பஞ்சமும் மிஞ்சி வந்தும்,
துட்டர்கள் கிட்டினும் மட்டில்லா அன்பரால்–ரீ–
துணிவுடன் முற்றிலும் ஜெயித்த விசுவாசிகள். – தேவ

3. பாரத்தையும், தமை நெஞ்கிய பாவத்தையும்,–தள்ளிப்
பட்சமுறும் யேசுரட்சகர்மீது தம் பார்வையை வைத்து என்றும்
வீரமாய் ஓடியே வெற்றி சிறந்தவர்,–ரீ–
வேகும் அக்கினியின் உக்கிரம் அவித்தவர். – தேவ

4. ஜெயங் கொள்ளுவோர் பரதீசினில் வீற்றிருப்பார்,–வாடா
ஜீவகிரீடம் அணிந்தாளுகை செய்வார், ஜீவகனி புசிப்பார்,
வியப்புறு புது நாமம், வெள்ளுடை பெற்றுமே–ரீ–
விடிவெள்ளியாய் நித்யம் விளங்கி ஜொலித்திடுவார். – தேவ

***– வே. சந்தியாகு***

## விமல முத்தர் இவர் யார்?

**327. கன்னடா** **ஆதி தாளம்**

*பல்லவி*

**வெள்ளை அங்கிகள் தரித்த**
விமல முத்தர்[1] இவர் யார்?

*அனுபல்லவி*

கள்ள மில்லா ஆட்டுக்குட்டிக்
கருணைவள்ளல்[2] முன்நிற்கும். - வெள்ளை

*சரணங்கள்*

1. நானாதிக்கிலுமிருந்து
நயந்து வந்தவர் இவர்;
கோணாது துன்பக் கடலில்
குளித்துவந்தவர் இவர். - வெள்ளை

2. குருத் தோலைகள் பிடித்துக்
கொற்றவனைச்[3] சூழநிற்கும்
பெருத்த கூட்டத்தார் இவர்;
பேரன்பின் அடியார்களாம். - வெள்ளை

3. ஆட்டுக் குட்டியாலே மீட்பை
அடைந்த உத்தமர் இவர்;
தேட்டமுடனே[4] நாயனைச்
சேவித்து நிற்கின்றார் நித்தம். - வெள்ளை

4. பசிதாகம் யாவுமற்றார்;
பாக்கிய நிலைமை பெற்றார்;
உச்சித மோட்சத்தின் கண்ணீர்
உருக்கா[5] வாழ்வினை யுற்றார். - வெள்ளை

***- ல.ஈ. ஸ்தேவான்***

---

1 முக்தர்
2 கடவுள்
3 அரசனை
4 விருப்பத்துடன்
5 விடாத

## பக்தருடன் பாடுவேன்

**328. கேதாரகௌளம்** **சாபுதாளம்**

***பல்லவி***

**பக்தருடன் பாடுவேன்–பரம சபை**
முக்தர் குழாம் கூடுவேன்.

***அனுபல்லவி***

அன்பால் அணைக்கும் அருள்நாதன் மார்பினில்
இன்பம் நுகர்ந்திளைப்பாறுவோர் கூட நான். – பக்த

***சரணங்கள்***

1. அன்பு அழியாதல்லோ அவ்வண்ணமே
அன்பர் என் இன்பர்களும்,?
பொன்னடிப் பூமானின் புத்துயிர் பெற்றதால்
என்னுடன் தங்குவார் எண்ணூழி காலமாய். – பக்த

2. இகமும் பரமும் ஒன்றே இவ்வடியார்க்–கு
அகமும் ஆண்டவன் அடியே,
சுகமும் நற்செல்வமும் சுற்றமும் உற்றமும்,
இகலில்லா ரட்சகன் இன்பப் பொற்பாதமே – பக்த

3. தாயின் தயவுடையதாய்த் தமியன்[1] நின்
சேயன் கண் மூடுகையில்,
பாயொளிப் பசும் பொன்னே, பக்தர் சிந்தாமணி,
தூயா, திருப்பாதத் தரிசனம் தந்தருள். – பக்த

***– சவரிராயன் ஏசுதாசன்***

## காலமே தேவனைத் தேடு

**329. (15) மோகனம்** **சாபு தாளம்**

***பல்லவி***

**காலமே தேவனைத் தேடு;–ஜீவ**
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு.

---

1 தனித்தவன்

***அனுபல்லவி***

சீலமுடன் பதம் பாடிக்கொண்டாடு;
சீரான நித்திய ஜீவனை நாடு. – காலமே

***சரணங்கள்***

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே,–மனு
மைந்தனென நாமம் வைத்திருந்தாரே;
உன் சிருட்டிகரை நீ உதயத்திலெண்ணு!
உள்ளங்கனிந்து தனிஜெபம் பண்ணு. – காலமே

2. பாவச் சோதனைகளை வெல்லு;–கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு,
ஜீவ கிரீடஞ் சிரத்திலணியச்
சிந்தனை செய்; மனுவேலனைப் பணிய. – காலமே

3. சிறுவர்கள் என்னிடஞ் சேரத்–தடை
செய்யா திருங்களென்றார் மனதார;
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்;
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும். – காலமே

4. வேலையுனக்குக் கைகூட,–சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட,
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே,
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே. – காலமே

***– ச.பே. ஞானமணி***

**உமது திருவடிகளுக்கே தோத்திரம்**

**330. சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**கண்ணிகள்**

**ஐயனே! உமது திருவடி களுக்கே**
ஆயிரந்தரந் தோத்திரம்!
மெய்யனே! உமது தயைகளை அடியேன்
விவரிக்க எம்மாத்திரம்?

2. சென்றதாம் இரவில் தேவரீரென்னைச்
சேர்த்தரவணைத்தீரே;
அந்தடைவாயிப் பகலிலுங் கிருபை
யாகவா தரிப்பீரே.

3. இருதயந் தனை நீர் புதியதே யாக்கும்
ஏழையைக் குணமாக்கும்.
கருணையாய் என்னை உமதகமாக்கிக்
கன்மமெல்லாம் போக்கும்.

4. நாவிழி செவியை, நாதனே, இந்த
நாளெல்லாம் நீர் காரும்.
தீவினை விலகிநான் திருமுகம் நோக்க,
தெய்வமே, அருள்கூரும்.

5. கைகாலால் நான் பவம்புரி யாமல்
சுத்தனே துணை நில்லும்.
துய்யனே, உம்மால் தான் எனதிதயம்
தூய்வழியே செல்லும்.

6. ஊழியந் தனைநான் உண்மையாச் செய்ய
உதவி நீர் செய்வீரே.
ஏழைநான் உமக்கே இசையநல் ஆவி
இன்பமாய்ப் பெய்வீரே.

7. அத்தனே! உமது மகிமையை நோக்க,
அயலான் நலம் பார்க்கச்
சித்தமாய் அருளும், மெய்விசுவாசம்,
தேவனே உமக்கேற்க.

8. இன்றும் என்மீட்பைப் பயம் நடுக்கத்தோ
டேயடியேன் நடத்தப்,
பொன்றிடா[1] பலமே தாரும், என் நாளைப்
பூவுலகில் கடத்த.

---

1 அழியாத

9. இந்த நாளிலுமே திருச்சபை வளர
ஏகா தயைகூரும்.
தந்தையே, நானதற் குதவியாயிருக்கத்
தற்பரா வரந்தாரும்.

*– ஞா. சாமுவேல்*

## இன்றைத் தினம் உன் அருள் ஈகுவாய்

**331. (16) சுருட்டி** **சாபு தாளம்**

*பல்லவி*

**இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், இயேசுநாதையா;**
இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்

*அனுபல்லவி*

அன்றுன் உதிரம் நரர்க் கென்று சிந்தி மீட்டெனை
வென்றியுடன் ரட்சித்த நன்றி போலே எனக்கு. – இன்

*சரணங்கள்*

1. போன ராவில் என்னைக் கண் பார்த்தாய்,–பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி,
ஊனம் எனக்குச் செய்யா துருக்கமுடன் புரந்தாய்.[1] – இன்

2. கையிட்டுக் கொள்ளும் என்றன் வேலை–யாவிலுமுன்றன்
கடைக்கண் ணோக்கி, அவற்றின் மேலே,
ஐயா நின் ஆசீர்வாதம் அருளி, என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக. – இன்

3. எத்தனையோ விபத்தோர் நாளே;–தஞ்சம் நீ என
எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே;
பத்தர் பாலனா, எனைப் பண்பாய் ஒப்புவித்தேன், உன்
சித்தம் எனது பாக்கியம், தேவ திருக்குமாரா. – இன்

4. பாவ சோதனைகளை வென்று, பேயுலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று,
ஜீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச் செல்ல
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனக் களித்து. – இன்

---

1 காப்பாற்றினாய்

## இறைவனைத் துதி செய்ய எழுந்திராய்

**332. (341) பூபாளம்** **சாபு தாளம்**

**கண்ணிகள்**

**கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்**
துதி செய்ய மனமே–எழுந்திராய்.

2. வறண்டு தண்ணீர் அற்ற வனம் இந்தப் புவிதனில்
திரண்ட தயை தேவை–நாடுவேன்.

3. கடவுளின் வல்லமை, கன மகிமை காணும்
இடமதில் செல்வதே–என் இஷ்டம்.

4. ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான்–போற்றுவேன்.

5. ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய் பாடி நான்–உயர்த்துவேன்.

6. மெத்தையில் ராச்சாமம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களைச்–சிந்திப்பேன்.

7. அல்லும் பகலும் நான் அவர் செட்டைகளின்கீழ்த்
தொல்லைக்கு நீங்கியே–ஒதுங்குவேன்.

8. ஆத்துமம் தேவனை அண்டிக் கொள்ள அவர்
நேத்திரம் போல் என்னைக் காக்கிறார்.

*– த. யோசேப்பு*

## கிருபைகூர் ஐயா

**333. (20) கல்யாணி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தோத்திரம்! க்ருபை கூர், ஐயா!**
விழி பார், ஐயா; விழி பார், ஐயா!

**சரணங்கள்**

1. பாத்திரம் இலா எனை நேத்திரம் என உச்சிதமாய்க்
காத்து வந்திடும், எனது கர்த்தாதி கர்த்தனே! – தோத்திரம்

2. இந்த நாள் அளவிலும் வந்த துன்பம் யாவுமே
என்றனை விட்டகலவே இரங்கிய தேவனே! – தோத்திரம்

3. மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்;
எனது தீதகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே! – தோத்திரம்

4. போதனே, நீதனே, புனித சத்ய வேதனே,
கீதனே, தாசர் துதி கேளும், யேசு நாதனே! – தோத்திரம்

***– ஏ. அண்ணாவியார்***

**அதிகாலையில் உமைத் தேடுவேன்**

**334. நவரோஜ் ஏகதாளம்**

**பல்லவி**

**அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே;–தே**
வாசீர் வாதம் பெற நாடுவேன் ஜெப தபத்தாலே.

**அனுபல்லவி**

இதுகாறும் காத்த தந்தை நீரே;
இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே,
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும், தேவே! – அதி

**சரணங்கள்**

1. போனராமுழுவதும் பாதுகாத்தருளின போதா! – எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல் நாதா!
ஈனப்பாவிக் கேதுதுணை லோகிலுண்டு பொற்பாதா?
எனக்கான ஈசனே! வான ராசனே!
இந்த நாளிலும் ஒரு பந்தமில்லாமல் காரும் நீதா! – அதி

2. பலசோதனைகளால் சூழ்ந்துநான் கலங்கிடும்போது,–தப்
பாது நின்கிருபை தாங்கிட வேணும் அப்போது,
விலகாது என்சமூகம் என்ற வாக்கில் தவறேது?
விசுவாசங்கொண்டு மெய்ப் பாசமூண்டிட,
விக்கினம்[1] யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது? – அதி

---

1 இடையூறு

3. நரர் யாவர்க்கு முற்ற நண்பனாய் நடந்திடவையே! – தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே!
பரலோக ஆவியை நல் மாரிபோலெனிலே பெய்யே!
புகழான நாதனே! வேத போதனே!
பூரணமாய் உனைப் போற்றுவேன், தினந் தினம் மெய்யே! –அதி

*– சா. பரமானந்தம்*

**வாழ்த்திப் போற்றுவேன்**

**335. மோகனம்** **திஸ்ர ஏகதாளம்**

***கண்ணிகள்***

**நல்ல தேவனே, ஞான ஜீவனே;**
வல்ல உமது கருணை தன்னை
வாழ்த்திப் போற்றுவேன்.

2. போன ராவிலே பொல்லாங்கின்றியே,
ஆன நல்ல அருளினாலே
அன்பாய்க் காத்தீரே.

3. காலையைக் கண்டேன், கர்த்தா உம்மையே
சாலவும் துதித்துப் போற்றிச்
சார்ந்து கொள்ளுவேன்.

4. சென்ற ராவதின் இருளைப்போலவே,
என்றன் பாவ இருளைப் போக்கி,
இலங்கப் பண்ணுமே!

5. இன்று நானுமே இன்பமாகவே,
உன்றன் வழியில் நடக்கக் கருணை
உதவவேணுமே!

6. ஒளியின் பிள்ளையாய் ஊக்கமாகவே,
எளியன் இன்றும் நடக்க ஆவி
ஈந்தருளுமே!

7. கையைக் காவுமே, கண்ணைக் காவுமே!
மெய்யைக் காத்து என்றன் மனதை
மிகவும் காவுமே!

*– ச. அருமைநாயகம்*

## தோத்திரந் துதி உமக்கே

**336. (16) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

*பல்லவி*

**தோத்திர பாத்திரனே, தேவா,**
தோத்திரந் துதியுமக்கே!
நேத்திரம்போல் முழு ராத்ரியுங்காத்தோய்;
நித்தியம் துதியுமக்கே!

*சரணங்கள்*

1. சத்துரு பயங்களின்றி,-நல்ல
நித்திரை செய்ய எமை
பத்திரமாய்ச்சீ ராட்டி உறக்கியே[1]
சுற்றிலுங் கோட்டையானாய். - தோத்திர

2. விடிந்திருள் ஏகும்வரை-கண்ணின்
விழிகளை மூடாமல்,
துடி[2] கொள் தாய்போல் படிமிசை[3] எமது
துணை எனக் காத்தவனே. - தோத்திர

3. காரிருள் அகன்றிடவே,-நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே,
பாரிதைப் புரட்டி உருளச்செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய். - தோத்திர

4. இன்றைத் தினமிதிலும்-தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக்கொள்வாய். - தோத்திர

*- ப.ஈ. யோவான்*

## ஐயரே நீர் தங்கும்

**337. சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**ஐயரே, நீர் தங்கும் என்னிடம்,**
ஐயரே, நீர் தங்கும்!-இப்போது
அந்திநேரம் பொழு தஸ்தமித்தாச்சே,
ஐயா, நீர் இரங்கும்.

---

1 உறங்கவைத்து 2 பதைக்கிற 3 பூமியின்மேல்

2. பகல்முழுவதும் காத்தீர், சென்ற
பகல் முழுவதும் காத்தீர்;–தோத்திரம்!
பரமனே, இந்த இரவிலும் வாரும்,
பாவியை நீர் காரும்!

3. தங்கா தொருபொருளும் என்னிடம்,
தங்கா தொருபொருளும்;–யேசு
தற்பரனே, நீர் ஒருவரே யென்னில்
தங்கித் தயைபுரியும்.

4. உயிரே துமையன்றிப் பாவிக்
குயிரே துமையன்றி?–என்றன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா,
உத்தமனே, தங்கும்.

5. நீர் தங்கிடும் வீட்டில், யேசுவே,
நீர் தங்கிடும் வீட்டில்,–எல்லாம்
நிறைவே குறைவுண்டாமோ, கர்த்தா?
நின்னை விடமாட்டேன்.

6. என்பாவம் மனியும், இறையே,
என்பாவம் மனியும்;–அப்போ
எளியேன் உம்மோ டயர்வேன், இரவில்
எனக்கோர் திகிலேது?

7. எனக்கு நீர்காவல், என்றும்
எனக்கு நீர்காவல்;– என்றன்
இனத்தார் ஜனத்தார் எளியோர் வலியோர்
எல்லாவர்க்குங் காவல்.

8. உம்மோடே படுப்பேன், ஐயா,
உம்மோடே படுப்பேன்;–இரவில்
உம்மோ டயர்வேன், சேதமில்லாமல்
உம்மோ டெழுந்திருப்பேன்.

*– ஞா. சாமுவேல்*

**இந்தக் கங்குலில் எனைக் கா வா**

**338. (21) காம்போதி** **சாபு தாளம்**

***பல்லவி***

**கருணாகர தேவா, இரங்கி இந்தக்**
கங்குலில் எனைக் கா வா.

***அனுபல்லவி***

இருளேதும் அணுகாமல் இரவிலும் பகல்போல
என்றும் ப்ரகாசமாக இலங்கும் மா திரியேக. – கரு

***சரணங்கள்***

1. சென்ற பகலில் காத்துச், சேர் விபத்துகள் நீத்துச்
சேர்த்தையே வழி பார்த்துத், திகில் தீர்த்து;
நன்றி யதற்குத் துதி நவில்வன்,[1] நீ என் கதி
நாடும் என் அதிபதி; நமஸ்காரம் உனக்கதி. – கரு

2. நித்திரையில் உட்புகுந்து, சத்துருப் பசாசு வந்து
நெருங்காமல் நீ எழுந்து, நிலை புரிந்து,
சுத்தநெஞ்சோ டமைந்து தூங்க நல் துயில் தந்து,
தூதர் காவல் நிறைந்து, துணையாய் என்னோடிருந்து. – கரு

3. தாதா, அண்டினேன் உன்னைத் தஞ்சம் நீயே, என்னைத்
தாங்குவதார் பின்னை, சார்வன் நின்னை;
வேதா, நான் உன் தொண்டு வினைஞன் என் நிலை கண்டு,
மீண்டும் செட்டைகள் விண்டு[2] விலகா தணைத்துக்கொண்டு.
– கரு

4. தீய எண்ணங்கள் பாற,[3] திகில் கனவுகள் மாறத்,
திவ்ய சிந்தை உள் ஊற, ஸ்திரம் ஏறக்,
காயம் உயிரும் கூடக், கருத்துன்னோ டுறவாடக்,
காலை நல்லறம் நாடக், கரிசித்துன் துதி பாட. – கரு

***– யோ. பால்மர்***

---

1 சொல்லுவேன் 2 விரிந்து 3 ஓட

## இந்த இரவினில் எனைக் காத்தாள்

**339. (22) தன்யாசி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**வினை சூழா திந்த இரவினில் காத்தாள்,**
விமலா, கிறிஸ்து நாதா.

***அனுபல்லவி***

கனகாபி ஷேகனே,[1] அவனியர்க் கொளிர், பிர
காசனே, பவ நாசனே, ஸ்வாமி! – வினை

***சரணங்கள்***

1. சென்ற பகல் முழுதும் என்னைக் கண் பார்த்தாய்;
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்;
பொன்றா[2] தாத்ம சரீரம் பிழைக்க ஊண் பார்த்தாய்;
பொல்லாப் பேயின் மோசம் நின்றெனைக் காத்தாய். – வினை

2. சூரியன் அஸ்தமித் தோடிச் சென்றானே;
ஜோதிநட் சத்திரம் எழுந்தன வானே;
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன; அடியேனும் பள்ளி கொள்வேனே. – வினை

3. ஜீவன் தந்தெனை மீட்டோய் சிறியேன் உன் சொந்தம்;
ஜெகத் தின்பங்கள் விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்;
பாவியேன் தொழுதேன் நின் பாதார விந்தம்;
பட்சம் வைத்தாள்வையேல், அதுவே ஆனந்தம். – வினை

4. இன்றைப் பொழுதில் நான் செய் பாவங்கள் தீராய்;
இடர்கள் துன்பங்கள் நீங்க என்னைக் கை சேராய்;
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்;
உயிரை எடுப்பையேல், உன் முத்தி தாராய். – வினை

---

1 பொன்போன்ற அபிஷேகமுள்ளவனே

2 சாகாமல்

## ஓய்வுநாள் இது மனமே

**340. (23) மோகனகல்யாணி** **சாபுதாளம்**

*பல்லவி*

**ஓய்வுநாள் இது, மனமே,-தேவனின்**
உரையைத் தியா னஞ் செய் கவனமே.

*அனுபல்லவி*

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேஷ வசனமே. -ஓய்வு

**சரணங்கள்**

1. ஜீவ சுக புத்ர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே;
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக்கொள், இது சமயமே. -ஓய்வு

2. ஆறு நாளுனக் களித்தவர், இளைப்
பாறி எழினில் களித்தவர்;
கூறும் பூரண ஆசீர்வாதத்தைக்
குறித்துணை இதற் கழைக்கிறார். -ஓய்வு

3. கர்த்தர் ஆசனம் குறுகிக் கேள் இன்று
காலை நண் பகல் மாலையும்;
சுத்தம் நாடுவோர் யாவரும் வந்து
துதி செய்யும் இத் தேவாலயம். -ஓய்வு

## உனக்கென்ன குறை மகனே?

**341. (33 L.) புன்னாகவராளி** **சாபு தாளம்**

*பல்லவி*

**ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க,**
உனக்கென்ன குறை மகனே?

***அனுபல்லவி***

சிறுவந்தொட்டுனை யொரு
செல்லப் பிள்ளைபோற் காத்த
உரிமைத் தந்தை யென்றென்றும்
உயிரோடிப்பாருன்னை. - ஒரு

***சரணங்கள்***

1. கப்பலினடித் தட்டில்-களைப்புடன் தூங்குவார்,
கதறுமுன் சத்தங்கேட்டால்-கடல் புசலமர்த்துவார்,
எப்பெரிய போரிலும்-ஏற்ற ஆயுதமீவார்,
ஏழைப்பிள்ளை உனக்கு-ஏற்ற தந்தை நானென்பார். - ஒரு

2. கடல் தனக் கதிகாரி-கர்த்தரென் றறிவாயே,
கடவாதிருக்க வெல்லை-கற்பித்தாரவர்சேயே.
விடுவாளோ பிள்ளையத் தாய்-மேதினியிற்றனியே?
மெய்ப் பரனை நீ தினம்-விசுவாசித்திருப்பாயே. - ஒரு

3. உன்னாசை விசுவாசம்-ஜெபமும் வீணாகுமா?
உறக்க மில்லாதவர் கண்-உன்னைவிட் டொழியுமா?
இந்நில மீதிலுனக்-கென்னவந்தாலும் சும்மா
இருக்குமா அவர்மனம்? - உருக்கமில்லாதே போமா? - ஒரு

4. உலகப் பேயுடலாசை-உன்னை மோசம் செய்யாது,
ஊக்கம் விடாதே திரு-வுளமுனை மறவாது,
இலகும் பரிசுத்தாவி-எழில் வரம் ஒழியாது,
என்றும் மாறாத நண்பன்-இரட்சகருடன் சேர்ந்து. - ஒரு

***- ச. முத்துசாமி***

**ஓய்வுநாளை ஸ்தாபித்த உன்னதா**

**342. (343) ஆனந்தபைரவி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஓய்வு நாளதை ஸ்தாபித் தருளிய**
உன்னதா, உமக்கே ஸ்தோத்திரம்!

*அனுபல்லவி*

மாய்விலா மறையை யாம் மனதில் உட்கொண்டு
வாழ்த்தி, உம்மைப் புகழ்ந்து போற்ற வாய் விண்டு[1] – ஒய்வு

*சரணங்கள்*

1. தேகக் கவலை, தொழில், யாவையும் ஒழிக்கத்,
திவ்ய சிந்தையால் எங்கள் இதயமே செழிக்க,
ஏகன் நின் அருள் பெற்றிங் கிகல்[2] அறத் தழைக்க,
எவரும் திருநாளாய்க் கொண்டாடி எக்களிக்க. – ஒய்வு

2. விண்ணோ ருடன் யாவரும் ஆவியில் கூட,
வேதா, உம்மைப் புகழ்ந்து மங்களம் பாட,
மண் உலகில் போராட்டச் சாலையில் ஓட,
வரம் அளித்திட உம்மைக் கெஞ்சி மன்றாட, – ஒய்வு

3. முத்தி வழி விலக்கும் துர்க் குணம் மாற்றி,
முன் நின் றெம்மை நடத்தியே கரை ஏற்றி,
எத்தேசத்தாரும் உம்மை ஏகமாய்ப் போற்றி
இறைஞ்ச அருளும் உமதாவியை ஊற்றி. – ஒய்வு

***– யோ. பால்மர்***

## நிச்சயம் செய்குவோம்

**343. கமாஸ்** **அடதாளம்**

*பல்லவி*

**நிச்சயம் செய்குவோம் வாரீர்,–வதுவரர்க்கு**
நிச்சயம் செய்குவோம் வாரீர்.

*சரணங்கள்*

1. மெச்சும் கல்யாண குண விமலன் துணையை நம்பி
இச்சிறு தம்பதிகள் இருவர் மணம் விரும்பி. – நிச்சயம்

---

1 மலர்ந்து 2 பகை

2. வாழ்க்கை வனத்தினிலே மலரும் மணமும் போலே
மனையறம் நடத்திட மனம் இவர் கொண்டதாலே. – நிச்சயம்

3. செடியும் கொடியும் போலே உடலும் உயிரும் போலே,
கூடி மணவாழ்வினில் வரக் கருத்திவர் கொண்டதாலே.
–நிச்சயம்

4. இரவியும் கதிரும்போல் பாவுடன் ஊடும் போலே
இருவரும் நீடூழி இனிது வாழப் பூ மேலே. – நிச்சயம்

***– வீ. ஜயராஜ்***

## நிறைவுற வரந் தா

**344. மோகனம்** **ரூபகதாளம்**

**பல்லவி**

**நிறைவுற வரந்தா,–நியமகம்**
நிறைவுற வரந்தா.

**அனுபல்லவி**

நித்திய திரித்துவ சத்தியபரா என்றும், –நிறை

**சரணங்கள்**

1. உரிய தொண்டருக்கில்லமே,–இங்கு
உண்டமைக்கும் எங்கள் தெய்வமே!
உன் திருத்தாளரண்[1] எங்களுக்குகே சரண் –நிறை

2. ஆதம் தனித்த நிலையது–நல்ல
தல்லவென்று கண்டவனது
அங்கமே நின்றொரு மங்கையே தந்தனை. –நிறை

3. ஆபிரகாம் எலியே சரும்–மன்
றாடிய வேண்டுதல் கேட்டொரு
அங்கனை[2] நெஞ்ச மிணங்க வகை செய்தாய். –நிறை

---

1 திருப்பாதமாகிய கோட்டை 2 மகன்

4. உலகம் பேயுடல் முப்பகை–இவர்
ஒப்பந்தத் தீண்டா துனது கை
ஓங்கியே தாங்கி யுறுதுணை தந்துமே. –நிறை

5. ஒப்பந்தத் தாலிரு சார்பினர்–தமை
உற்றவர் மற்றவர் நற்றவர்
உன்னதா சீரடைந்துன் மகிமை தர. –நிறை

***– ஜி.சே. வேதநாயகம்***

## யேசு நாயகா வந்தாளும்

**345. (312) கேதாரகௌளம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**யேசுநாயகா, வந்தாளும்;–எந்நாளும், திவ்ய**
யேசுநாயகா, வந்தாளும்.

***அனுபல்லவி***

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக. – யேசு

***சரணங்கள்***

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மணவீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போல, அன்பாலே – யேசு

2. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்,
நித்திய சமாதானம் உற்று, வாழ, மிக வாழ. – யேசு

3. துங்கம் மிகு நன் கனம் விளங்கி, வளமாக
மங்களம தோங்க, நலம் தாங்க, நலம் தாங்க. – யேசு

4. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகப்
புத்திர சந்தானமே செழிக்கத், தழைக்க. – யேசு

***– வே. சாஸ்திரியார்***

**346. (307) சூரியகாந்தம்** **ரூபகதாளம்**

*பல்லவி*

**குணம் இங்கித வடிவாய் உயர் கோவே, யேசு தேவே,**
மணம் இங்கதி வளமாய் உற வருவீர், மேசியாவே.

*சரணங்கள்*

1. மன்றல்[1] செய்து மனை புது மண
வாளனோ டவ னேரும்[2]
தன் துணையான மங்கையும் இங்கே
தழைக்க அருள் தாரும். – குணம்

2. ஆதி மானிடற் கான ஓர் துணை
அன்றமைத்த நற் போதனை,
தீதற இணையாம் இவர்க் கருள்
செய்குவீர், எங்கள் நாதனே. – குணம்

3. தொன்று கானாவின் மன்றல் ஓங்கிடத்
தோன்றிய தயாபரனே,
இன்று மன்றல் சிறந்திட அருள்
ஈந்திடும், க்ருபா கரனே. – குணம்

4. பண்பதில் அவ லேசமும்[3] குறை
பாடில்லாத தெய்வீகனே,
நண்பதில் இரு பேரும் வாழ்ந்திட
நண்ணும், மா திரி யேகனே. – குணம்

5. உற்ற நல் உற வோடும் எங்கள்
உரிமை ஆனவர் யாரும்
பற்றதாய் உறு பக்தியோடும்மைப்
பாட நல் மனம் தாரும். – குணம்

***– யோ. பால்மர்***

---

1 விவாகம் 2 நியமிக்கும் 3 மிகச் சிறிது

## உன் ஆசிடை சாற்றும்

**347. (310) கேதாருகௌளம்** **ரூபகதாளம்**

**பல்லவி**

**சந்தத மங்களம், மங்களமே!**
சந்தத மங்களம், மங்களமே!

**அனுபல்லவி**

அந்தம் ஆதி இலான் அருள் சேயா,
எந்தை யேசு கிறிஸ்து சகாயா. – சந்தத

**சரணங்கள்**

1. அந்தரம், பரம் பூமி அடங்கலும் விந்தை மேவி நிறைந்த
விசாலா,
இந்த நாள் மணம் செய்யும் இவர்க் கருள் தந்துன் ஆசிடைய
சாற்றும், தயாபரா. – சந்தத

2. வையமுற்ற மணவறைப் பந்தலில், ஐயனே, உன் அருட்கொடி
வந்திருந்–து
உய்ய ஐங் குறியாலும் உவந்தருள் செய்யும், ஏக திரித்துவ
தேவா – சந்தத

3. கர்த்தனே, கருணைக் கடலே, உயர் பெத்தலைப் பிரதாப
விசேடா!
புத்திரர் பெறவும் புகழ் ஓங்கவும் சித்தம் வைத்தே இவர்க் கருள்
செய்திடும். – சந்தத

***– வே. சாஸ்திரியார்***

## இணைத்தருள்வீரே

**348. சங்கராபரணம் (இராகம்: "என்ன என் ஆனந்தம்!") ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**ஆதியில் ஏதேனில் ஆதாமுக் கேவாளை**
அருளிச் செய்தீரே,
அவ்விதமாகவே இவ்விருபேரையும்
இணைத் தருள்வீரே.

2. மங்களமாய் திருமறையைத் தொடங்கி
மங்களமாய் முடித்தீர்,
மங்கள மா மணவாளனாய் மைந்தனை
மாநிலத்தில் விடுத்தீர்.

3. ஆபிரகாம் எலியேசர் தம் மன்றாட்டுக்
கருள் புரிந்தீரே,
அங்ஙனமே இந்த மங்களம் செழிக்க
ஆசியருள்வீரே.

4. கானாவூர் கல்யாணம் கண்டு களித்தளம்
கர்த்தரே வந்திடுவீர்,
காசினி மீதிவர் நேசமாய் வாழ்ந்திடக்
கருணை செய்திடுவீர்.

5. இன்பத்தும் துன்பத்தும் இம்மணமக்கள் தாம்
இசைந்து வாழ்ந்திடவே,
அன்பர் உம் பாதமே ஆதாரம் என்றும்மை
அணுகச் செய்திடுவீர்.

***– வி. ஜயராஜ்***

**மங்களம் செழிக்கவே கிருபை செய்யும்**

**349. (313) துஜாவந்தி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**இந்த மங்களம் செழிக்கவே–கிருபை செயும்,**
எங்கள் திரித்துவ தேவனே!

***அனுபல்லவி***

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில் சென் றம்பணத்தைக்[1]
கந்தரசமாகச் செய்த விந்தைபோல், இங்கேயும் வந்து. – இந்த

1 நீர்

*சரணங்கள்*

1. ஆதி தொடுத் தன்பை எடுத்தாய்;–மானிடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்;
நீதி வரம் நாலுங் கொடுத்தாய்;–பெற்றுப் பெறுகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்;
மாதவர் பணியும் வேத போதனே, அந்தப்படி உன்
ஆதரவைக்கொண்டு சுதன் நீதியை நம்பிப் புரிந்த – இந்த

2. தக்க ஆபிராமும் விண்டனன்;–அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்;
முக்கிய ஆரன் நிலத்தண்டினன்;–நினைத்தபடி
சக்கிமதாகக்[1] கண்டனன்
பக்குவம் உரைத்திடாரே பக்காளும் ஈசாக்குவுக்குத்
தக்க மண வாளியாகத் தந்து தயை செய்தாற்போல. – இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே,–அருளு பரி
சுத்த சுவிசேட நேசனே,
பக்தர்கள் பவ வி மோசனே,–பழுதணுவும்
அற்ற கிறிஸ் தேசு ராசனே,
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுப சோபனமாய். – இந்த

***– வே. சாஸ்திரியார்***

## இம்மணர்க்கு உம்மருள் ஈயும்

**350. (314) நாதநாமக்ரியை** **சாபு தாளம்**

*பல்லவி*

**இம்மணர்க் கும்மருள் ஈயும், பர வாசா!**
ஏசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

*சரணங்கள்*

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்,
தேவரீர் இவ்விரு பேரையும் காரும். – இம்

1 சினேகமாக

2. ஆதாமோ டேவையை அன்றமைத்தீரே,
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே. – இம்

3. அன்பன் ஈசாக்கு ரெபேக்காட் கிரங்கி,
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர். – இம்

4. உந் தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவர்க் கொருவர் நல்லன்பில் நிலைக்கவும். – இம்

5. தாழ்மை பொறுமைகள், சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன். – இம்

6. இயேசுகிறிஸ்துவை நேசித்து வாழவும்,
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும். – இம்

***– பா. தாவீது***

## துயர் தீர வேண்டினரே

**351. சகானா** **சாபு தாளம்**

***பல்லவி***

**சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்**
சூழ்ந்தனர் பிணியாளிகள்–உனை நெருங்கித்
துயர் தீர வேண்டினரே.

***அனுபல்லவி***

இன்னேரம் உன்தயை தேடும் இவ்வடியாரின்
இன்னலெல்லாம் ஓட அன்பே உன்னருள் ஈவாய். – சூரி

**சரணங்கள்**

1. பேயின் அகோரத்வம் உனைக்கண்டு பறந்தது,
நோயும் நிர்ப்பந்தமும் நீ தொட ஒழிந்தன,
வாய்க்கும் சுகானந்தம் உனை நம்பினோர்க்கெல்லாம்,
தாய்க் கருணையுடையோய், இன்றும் உன் தயை கூர்வாய்.
– சூரி

2. இஷ்டரின் துரோகத்தால் இடர் அடைந்துழல்வோரும்,
துஷ்டர் செய்துன்பத்தால் தயங்கித் தவிப்போரும்,
கஷ்டமெல்லாம் தீர்ந்து களிக்கக் கருணை கூர்வாய்!
அஷ்டதிக்கும் ஆள்வோய், அபயம் அபயம் என்றோம். – சூரி

3. எளியோர் வறுமையில் இன்னருள் ஊற்றுவாய்,
விழிப்போடிரவிற் கண்ணீர் விடுவோரைத் தேற்றுவாய்,
வழி தப்பி அலைவோரை வழி காட்டி ஆற்றுவாய்,
பழி பாவம் துணிவோரைத் தடுத்தாண்டு மாற்றுவாய். – சூரி

4. சருவ சக்தி சதா காலமும் உனதல்லோ?
வருத்த மெல்லாம் ஓடும் வார்த்தை ஒன்று சொல்ல,
உரித்தாய்க் கரத்தினால் உன்னடியாரைத் தொடுவாயே,
கருகுங் கங்குலிலும் யாம் களிப்பாய்ச் சுகிப்போமே. – சூரி

***– சவரிராயன் ஏசுதாசன்***

**வைத்தியப் பணியினை ஆசீர்வதியும்**

**352. உசேனி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**பரம வைத்தியா! அருமை ரட்சகனே! பிணிதீர்க்கும்**
வைத்தியப் பிணியினை ஆசிர்வதியும் ஐயனே!

**சரணங்கள்**

1. பிணியாளிக்கு நம்பிக்கை தாருமே–மருந்தோடே உமது
பேரதிசய கிருபை கூருமே. – பரம

2. உள்ளக் கனிவோடுழைக்கும் வைத்தியர்க்கும்–அவருடன்
துணை நின்று
உதவும் தொண்டர்கள் யாவர்க்கும் இரங்கும். – பரம

3. சயமும் சுரமும் பயமுறுத்துமே,–இதைத் தடுத்திடக் கொடை
தரும் பெரியோரைப் பெருகச் செய்யுமே. – பரம

4. அரிய நூதன முறைகள் காணவே–ஆராய்ச்சிகள் செய்யும்
அறிஞரால் புதுவழிகள் தோன்றவே. – பரம

5. ஜெபத்தைக் கேட்கிற தேவன் நீரல்லவா? எங்கள் ஜெபத்தினால் சுகம்
ஜெகத்தில் பரம்பச் செய்யும் வல்லவா! – பரம

***– ல. பொன்னுசுவாமி***

**ஆறுதல் அடை மனமே**

**353. (339) துஜாவந்தி** **ஆதி தாம்**

***பல்லவி***

**ஆறுதல் அடை, மனமே;–கிறிஸ்துவுக்குள்**
ஆறுதல் அடை, மனமே.

***அனுபல்லவி***

பாருள் பாவத்தால் வந்த பலனாம் மரண மதின்
கூரை அழித்த யேசு கொற்றவன் றனை நோக்கி. –ஆறு

1. நம்பிக்கை யற்றோரைப் போலே,–மரித்தோர்க்காக
நலிவதேன் ஒருக்காலே;
உம்பர் கோன் மேகத்தின் மேலே–தோன்றிடும் போ
துயிர்த்தெழும்புவ தாலே,
வெம்பிப் புலம்பி அழ வேண்டாம்; கிறிஸ்து வெனும்
தம்பிரான் திருமொழிச் சாரத்தை ருசிபார்த்து. –ஆறு

2. ஜீவ நதிகள் ஓடுமே;–எருசலேமில்
திரளாய் ஜனங்கள் கூடுமே;
தேவ துதியைப் பாடுமே;–யேசுகிறிஸ்தின்
ஜெயத்தைச் சொல்லிக் கொண்டாடுமே;
ஆவலுடனே நாமும் அதையே அடைவதற்கு
ஜீவ வசனந் தன்னைத் திடனாய்ப் பிடிப்போமாக. –ஆறு

3. எண்ணம் கவலைகள் உண்டாம்;–மரித்தோர்க்காக
ஏக்கம் பெருமூச்சும் உண்டாம்;
கண்ணீர் சொரிவதும் உண்டாம்;–துயரம் மிஞ்சிக்
கலங்கி அழுவதும் உண்டாம்;
அண்ணல் கிறிஸ்துவும் முன் எண்ணிக் கண்ணீர் விட்டார்,
நண்ணி அவரை ஜெபம் பண்ணித் துயரைவிட்டு. –ஆறு

4. யேசுவைப் பற்றின பேர்கள்–மரித்தும் உயிர்த்
தெழுந்து புறப்படுவார்கள்;
மாசற்ற தேவன் அவர்கள்–உடனிருக்க
மகிமை பெற்றிருப்பார்கள்;
பேச வேண்டுமோ? யேசு ராசன் சமுகமதில்
நேசமுடன் என்றைக்கும் வாசம் செய்வார்கள் அல்லோ?–ஆறு

***– மரியான் உபதேசியார்***

**உலக வாழ்வை விரும்பாதே**

**354. (357) காம்போதி** **சாபு தாளம்**

**பல்லவி**

**விரும்பாதே, மனமே,–உலக வாழ்வை**
விரும்பாதே, மனமே;–பதவி என.

**சரணங்கள்**

1. தரம் பெரும் சுகம் எனத்தரையின் செல்வமதைக்
கரும்ப தாக எண்ணிக் காதல் மிஞ்சி அதை – விரும்பாதே

2. அகிலம் யாவுக்கும் நீ அரசன் ஆனாலும், மா
மகிமை நிறைந்த ஒரு மாளிகையில் வாழ்ந்தாலும் –விரும்பாதே

3. பெலத்தால் வீரனெனப் பேர் கீர்த்தி அடைந்தாலும்,
ஜலத்தின் ஓட்டம்போலே க்ஷணத்தில் ஒழிந்துபோவார்.
– விரும்பாதே

4. திட்டமாய் நூல் கற்றுத் தேர்ந்த ஞானி, என்றே
அட்டதிக்கிலும் உன் பேர் இஷ்டம் புரிந்தாலும். – விரும்பாதே

5. பொன்னும் பொருளும் உன்றன் பொக்கிஷமானாலும்,
என்ன புகழ்ச்சி என்று இப்போதே வெறுத்து நீ – விரும்பாதே

6. லோக ஆஸ்தி எல்லாம் குப்பை எனவே தள்ளு,
ஏக பரன் உனக்கு ஏற்ற பொக்கிஷம் தானே. – விரும்பாதே

7. நிழலைப் போலே ஏகும் நிலையாச் செல்வமதில்
களிகூராமல் யேசு கர்த்தன் பதத்தைத் தேடு. – விரும்பாதே

*– ச. யோசேப்பு*

## கல்லும் அல்லவே காயம்

**355. (331) காபி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**கல்லும் அல்லவே, காயம்–வல்லும்[1] அல்லவே–இது**

***அனுபல்லவி***

வெள்ளி, பொன் விலைமதியா மேரும் அல்லவே. – கல்

***சரணங்கள்***

1. வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய்,–அதால்
நல்ல வழி தேடி, தேவ நாமத்தைத் தியானி. – கல்

2. சூரியன் கீழ்க் கண்டதெல்லாம் மாயை அல்லவோ?–சாலமோன்
பார்[2] அறிய சொன்னதை நீ பார்த்தறியாயோ? – கல்

3. காற்றடித்த மேகம் புகைக்கொப்பதாகவே,–இங்கே
போற்றிய மனுடர் ஜீவன் போய் ஒழியுமே. – கல்

4. வேகமாய் வடியும் ஆற்றுக் கொப்பதாகவே,–மாய
தேக நரர் நாட்களும் சீக் கிரம் கழியுமே. – கல்

5. இராப் பகல், இருள், வெளிச்சம் மாறும் வண்ணமே,–ஐயோ!
நராட்களின் மகிழ்ச்சிக்கு மா மாறுதல் உண்டே. – கல்

6. பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும்.–அது
போலவே நரர் உருவம் மாறி வதங்கும். – கல்

---

1 வலிமை 2 உலகம்

7. மேலது கீழ், கீழதுமேல் ஆம் உருளைபோல்,-நரர்
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே. - கல்

8. நுண்ணிமை ஞானி என்றாலும் கீர்த்திபெற்றாலும்,-ஐயோ!
அன்னவன் மலையும்[1] நேரம் யாவும் கலையும். - கல்

9. ஆசனம், துரைத்தனம், தத்துவங்கள் ஒழியும்,-அர
சாண்ட மன்னரும் ஒரு நாள் மாண்டொழிவாரே. - கல்

10. யாவும் ஓட்டமாகப் பாயும், யாவும் அழியும்,-மெய்த்
தேவபக்தி யே கெலிக்கும்;[2] ஜீவன் நிலைக்கும். - கல்

***– வே. சாஸ்திரியார்***

**பொன்னகர் போகும் புண்ணியர்களே**

**356. (338) காபி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**பொன்னகர்ப் பயணம் போகும் புண்ணியர்களே,-மகிமை**
என்னவென் றுரைக்க வல்லோர் யாருமில்லையே.

***சரணங்கள்***

1. உன்னத சுதனுக் கேதும் ஒப்புமை யுண்டோ?-அவர்
தன்னுதிரந் தந்து கொண்ட தன்மை யருமை. - பொன்

2. லாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே;-அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே. - பொன்

3. வந்தழைத்துப் போயென்னோடு வைப்பே னென்றவர்-இன்று
வந்தழைத்துப் போகுமேன்மை மாந்தருக் குண்டோ? - பொன்

4. மண்ணினா லுண்டான வுடல் மண்ணேயாயினும்,-யேசு
தன்னுரு வோடே எழும்பும் சத்தியம் இதே. - பொன்

---

1 மறையும் 2 வெல்லும்

5. கண்ணீர் துடைத்தெம்மை யாற்றும் கர்த்தரருகில்–சென்றோர்
நண்ணியே ஜீவகனி யுண் டின்னல் நீங்குவார். – பொன்

6. ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனங் கண்டு–புதுப்
பாட்டுக்கள் பாடும் சுத்தர் கூட்டமடைந்தார். – பொன்

7. கர்த்தருக் குள்ளே மரிப்போர் பாக்கியரென்று–சொல்லும்
உத்தம வேதத்தின் உண்மை உன்னத மல்லோ? – பொன்

***– ஜி.சே. வேதநாயகம்***

## பண்டிகை ஆசரிப்போமே

**357. யமுனாகல்யாணி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தோத்திரப் பண்டிகை ஆசரிப்போமே,**
தூயகம் ஊறிய பக்தியால் நாமே. – தோத்திர

***சரணங்கள்***

1. பாத்திரம் இதுவெனப் பகர்உடல் பொருளாவி
பரமனுக் கர்ப்பணஞ்செய் பரிவு நிறைய மேவித். – தோத்திர

2. பனித்துளி நிலத்தினைப் பண்படுத்தினதன்றே
பகருமுகில் கொழுமைப் படுத்திய தெண்ணிநன்றே. – தோத்திர

3. கடவுளே பயிருக்குக் கனமழை பெய்வித்தாரே,
காங்கையால் கதிர்வளம் கதிக்கவும் உய்வித்தாரே. – தோத்திர

4. நெஞ்சத்தில் தெய்வஅன்பாம் நிதிநிகர் விதைபெய்து
நித்திய சமாதானம் நிறுவ விண்ணப்பம் செய்து. – தோத்திர

5. இறைவன் இரத்தக் கையால் இரட்சண்யம் அருள்வித்தை
இதயத்தில் விதைத்ததற் கின்குணப் பலன்வைத்துத் – தோத்திர

***– சா. மாசிலாமணி***

## ஆண்டவரே தோத்திரம்

**358. சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**வானமும் பூமியும் வகித்திடுந்தேவே!**
வளம்நிறை ஆண்டவரே!-தேவரீர்,
ஈனராம் எம்மேல் இரங்கி இவ்வறுப்பை
ஈந்ததற்தாய்த் தோத்ரம்!

2. பாவம்நிறைந்தோர், பாத்திரமற்றோர்,
கோவத்துக்கேயுரியர்,-வறியர்
ஆயினர் எமக்கிவ்வுறுப்பை யளித்த
ஆண்டவரே, தோத்ரம்!

3. வான மன்னாவை வருஷித் திஸ்ரேலை
வருடநாற்பது காத்தீர்!-அந்த
வல்லமை எமக்கிவ் வருடமுங்காட்டிய
வானவரே, தோத்ரம்!

4. ஐந்தப்பங்கொண்டை யாயிரம்பேரை
அமர்த்திப் போஷித்தீர்;-ஐயா!
போந்த எம் பசியும் புறமுறச்செய்தீர்;
புண்ணியரே, தோத்ரம்!

5. பெரிய உம்நாமம் பேருலகோங்க,
வறியவர் மிடியகல,-இவ்வீவை
அறிவுடன்காத்தே அருமையாய் ஆளும்
நெறியெமக் கீத்தருள்வீர்!

6. திருச்சபைப்பண்ணை திகழ்பயிர் நாங்கள்
தேவரீர் பயிர்க்காரர்,-திருவே,
ஆவியின் மழையால் ஆக்கிடும், எம்மை
அழகிய கதிர்மணியாய்!

*– வே. தேவசகாயம்*

## அனைவரும் பாடிடுவோம்

**359. (322) பிலகரி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**ஆனந்தமே! ஜெயா! ஜெயா!**
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்.

***அனுபல்லவி***

ஞானரட்சகர் நாதர் நமை–இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் – புகழ்

***சரணங்கள்***

1. சங்கு[1] கனம், வளர் செங்கோலரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்,
எங்கள் ரட்சகரேசு நமை–வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் –புகழ்

2. முந்து வருட மதனில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல,
தந்து நமக்குயிருடையுணவும்–வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால் – புகழ்

3. பஞ்சம்பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளைநோய் விஷதோஷத்திற்கும்,
தஞ்சரட்சகர் தவிர்த்து நமை–இத்
தரைதனில் குறைதணித் தாற்றியதால். – புகழ்

***–வே. தேவசகாயம்***

## எந்நாளுமே துதிப்பாய்

**360. பியாகு.** **சாபு தாளம்**

***பல்லவி***

**எந்நாளு மேதுதிப்பாய்–என்னாத்துமாவே, நீ**
எந்நாளு மேதுதிப்பாய்!

---

1 மாண்பு

***அனுபல்லவி***

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது. – எந்நாளுமே

***சரணங்கள்***

1. பாவங்கள் எத்தனையோ,–நினையா திருத்தாருன்
பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகா தய வைஎண்ணி – எந்நாளுமே

2. எத்தனையோ கிருபை,–உன்னுயிர்க்குச் செய்தாரே,
எத்தனையோ கிருபை?
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி,
நேயமதாக ஜீவனை மீட்டதால். – எந்நாளுமே

3. நன்மையாலுன் வாயை–நிறைத்தாரே, பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை;
உன்வயது கழுகைப்போல் பலங்கொண்டு,
ஓங்கு இளமைபோ லாகவே செய்ததால், – எந்நாளுமே

4. பூமிக்கும் வானத்துக்கும்–உள்ள தூரம் போலவே,
பூமிக்கும் வானத்துக்கும்,
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது. – எந்நாளுமே

5. மன்னிப்பு மாட்சிமையாம்–மாதேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்;
எண்ணுவாயோ கிழக்கு மேற்கின் தூரமே?
எண்ணில் உன்பாவம் அகன்றதத்தூரமே. – எந்நாளுமே

6. தந்தைதன் பிள்ளைகட்கு–தயவோ டிரங்கானோ
தந்தை தன் பிள்ளைகட்கு?
எந்த வேளையும் அவரோடு தங்கினால்,
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே; – எந்நாளுமே

***– சா. பரமானந்தம்***

## எனை அன்பாகப் பாரும்

**361. (323) ஆனந்தபைரவி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**பாரும், பாரும், ஐயா,–எனை அன்பாகப்**
பாரும், பாரும், ஐயா,–திருக்கண்கொண்டு,

**அனுபல்லவி**

பாரில் மகிழ் வெல்லப் பதி மேவிய பரா,
பாவ விமோசனா, தீவினை நாசனா, மூ வுலகாசனா,
ஜீவனே ஓசனா – பாரும்

**சரணங்கள்**

1. பாவநாசர் பிணையே,–பரி பூரண–மேவும் உயர் துணையே,
வினையை எய்யும்
தேவ திருக் கணையே,[1]–உலகில் உள்ள–யாவர்
உனக்கிணையே!
பூவில் இவ்வாண்டெமைப் புனிதநெறியில் காவும்,
போதக நாயனே, மாதவ தூயனே,
கோதறும்[2] ஆயனே; ஆதியின் சேயனே! – பாரும்

2. ஞாலந்தனில்[3] இருளை–அகற்றிமிகச்–சீலந்தரும் அருளே,–
அடியர்கட்கனு
கூலம் நிறைதெருளே[4],–மனுடர்களின்–கோலம் உறும்
பொருளே,
காலத்தை எண்ண மெய்க் கருத்தை எனக்களியும்;
காரண நேசனே, ஆரண[5] வாசனே,
பூரண ராசனே, தாரணி, ஈசனே. – பாரும்

***– தேவசகாயம் எழுத்தர்***

---

1 அம்பு
2 குற்றமற்ற
3 பூமியில்
4 ஞானமே
5 வேதம்

## நித்தம் அருள்செய்

**362. செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**நித்தம் அருள்செய் தயாளனே!–எங்கள்**
நேசா யேசு மணாளனே!–ஸ்வாமி – நித்தம்.

***அனுபல்லவி***

உத்தம சற்குண தேவ குமாரா!–
உம்பர்கள்[1] சந்ததம் போற்றும் சிங்காரா!
சத்திய வேதவி னோதலங்காரா!–
சதிசெய்யும் பேய் தலை சிதைத்த சிங்காரா! – நித்தம்

***சரணங்கள்***

1. பட்சப் பரம குமாரனே, எங்கள் பாவந்தீரும்
மாவீரனே ஸ்வாமி!
அட்சய[2] சவுந்தர ஆத்துமநாதா, அடியவர் துதிசெய்யும்
ஆரணபோதா,
ரட்சண்யச் சுப சுவி சேடப்பிரஸ்தாபா, ராசகெம்பீர,
சங்கீத பொற்பாதா. – நித்தம்

2. சென்றாண்டெமை முகம் பார்த்தவா, ஒரு சேதம் விக்கின[3]
மறக் காத்தவா,–ஸ்வாமி!
இன்றோர் புதுவரு டாரம்பங் கண்டோம், ஏக சந்தோஷ
மாய்ச் சந்தித்துக் கொண்டோம்.
குன்றா[4] உமதுநல் லாவியை ஈந்து கூடவே இருந்தடியார்
ஜெபங்கேட்டு. – நித்தம்

***– ஆ.ஜா. பிச்சைமுத்து***

## இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தா

**363. (320) ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த**
எண்ணமாய் ஸ்தோத்தரிப்போமாக.

---

1 தேவதூதர்
2 அழியாத
3 இடையூறு
4 குறையாத

### *அனுபல்லவி*

நம்மை ரட்சிக்க வந்து தம்மைப் பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும். – இம்

### *சரணங்கள்*

1. காலம் சொல் போல் கழியும், தண்ணீரைப் போல் வடியும்,
கனாவைப் போலேயும் ஒழியும்;
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ் வொன்றும் நிற்க மாட்டாது;
கோலப் பதுமைக்கும், நீர்க் குமிழிக்கும், புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன். – இம்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம், நலியும்[1] ஆசையைக்
கொன்றோம்,
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்ற தெல்லாம் விண்டோம்,[2] கர்த்தாவின் மீட்பைக்
கண்டோம்;
காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும், ஆராய்ந்து நெறியுடன். – இம்

3. சன சேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து, நொறுக்கினதைக் கட்டிக்,
கன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்துக்,
கண் ணோக்கி எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ
சிந்தை யினோடதி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த வினோதமாய். – இம்

***– வே. சாஸ்திரியார்***

---

1 துன்புறுத்தும் 2 நீங்கினோம்

## என்றும் கர்த்தர் உன்னைக் காப்பாரே

**364. ஆனந்த பைரவி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**இன்னமும் நாம் யேசு பாதத்தில்–சந்திக்கும் வரை**
என்றும் கர்த்தருன்னைக் காப்பாரே.

***அனுபல்லவி***

தன்னுடைய காவலுன்மேல்–தப்பாமல் வைத்துத்தற்காத்துத்
தன்னிருகரத்தால் உன்னைத்–தாங்கியே காத்துக்கொண்டு.
– இன்ன

***சரணங்கள்***

1. தன்னிரு சிறகுகளின் கீழ்–உன்னை மறைத்துத்
தாங்கித் தயவோடு காப்பாரே!
இன்னமும் திருமன்னாவை–என்றும் உனக்களித்தே
இன்பமோடே உன்னைத் தாங்கி–எல்லாத் தீங்குக்குந் தற்காத்து.
– இன்ன

2. ஜீவியத்தின் பாரம் உன்னையே–வதைத்திடாமல்
சீருடனே கர்த்தர் காப்பாரே!
பாவ சோதனைகள் உன்மேல்–படர்ந்து பிடித்திடாமல்
பாலித்தணைத்தே உன்னையே–பட்சமோடே பாதுகாத்து.
– இன்ன

3. ஆண்டவரின் அன்பின் கொடிதான்–உன்மேல் பறந்து
ஆட, மகிழ்ந் தானந்தங்கொள்வாய்!
நீண்டிடும் ஆயுளளித்து நிதமும் சுகத்தைத் தந்து
நீண்ட காலமாக உன்னை–நேசித்துப் பரிபாலித்து. – இன்ன

***– ச.ஜெ. சிங்***

## நேச பரனைத் துதிப்பாய்

**365. கமாஸ்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**நேசபரனைத் துதிப்பாய், ஓ நெஞ்சமே!**

**அனுபல்லவி**

தாசன் புவியோரில் மா நீசனென்னைப்பிடித்த
மோசம் நிவிர்த்தி செய்த யேசுக்ருபாசமுத்ர – நேச

**சரணங்கள்**

1. மரணம் பிடித்துமென்னை வல்லவன் விடுத்தார்;
வலிய பாதாளம் நின்றே மகிமையா யெடுத்தார்,
சரணமென்றே புது உயிர்தனைக் கொடுத்தார்;
சத்ரு எனக்குச் சேதம் புரியாது தடுத்தார். – நேச

2. பாதக னெனக்குண்டோ கொஞ்சமும் பாத்திரம்?
பரனருள் நன்மைக் கிப்பாவி எம்மாத்திரம்?
தீதன் ருசித்த நலம் அன்பு மா காத்திரம்,
செப்புவேன் இங்குமங்கும் எனியனின் தோத்திரம். – நேச

3. அடியனுக்கவர் செய்த அன்புரைத்தாமோ?
ஆயிரம் நாவினால் சொல்வது போமோ?
இடிதனைத் தாங்கிட மனிதரா லாமோ?
இயேசெனைத் தாங்கையில் என்னுயிர் போமோ? – நேச

4. உள்ளும் புறம்புமான எந்த வில்லங்கம்
உலகிலெனக்கு வரும்? எவ்விதப் பங்கம்
தள்ளியே காத்திடும் தகும் யூதா சிங்கம்,
தாரணியினில் தனக்கிணையிலாத் தங்கம். – நேச

***– ஞா. சாமுவேல்***

## அல்லேலூயா ஜெயமே

**366. (53L) சதானா** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அல்லேலுயா ஜெயமே அமலன் எழுந்தார் அதிசயமே**

**அனுபல்லவி**

பொல்லாப் பேய் நடுங்கிவிழப்
பொற்பரனின் சேயர் மகிழ. – அல்

### சரணங்கள்

1. பாவம் பேயோடு மரணம்,
பாழன் பேயினது அரணம்,
சீவபரனால் திரணம்,
திடமாயடைவோம் அவர் சரணம். – அல்

2. வலுசிங்கம் சிறையாச்சு,
மாற்றானின் வல்லமை போச்சு,
அலகையுளதோ பேச்சு
அதுவிடலாமோ இனி முச்சு. – அல்

3. திருநாதர் பேயிருபேர்
செய்தார் கொடியதா மொருபோர்
அருணாதர் தாம் ஜெயம் நேர்
அடைந்தார் ஓ சபையே களிகூர். – அல்

***– ஞா. சாமுவேல்***

### வாரும் எமது வறுமை நீக்க

**367. (328) மணிரங்கு** **ரூபக தாளம்**

***பல்லவி***

**வாரும், எமது வறுமை நீக்க வாரும், தேவனே;**
மழை தாரும், ஜீவனே.

### *சரணங்கள்*

1. பாரில்[1] மிகுக்கும் வருத்தத்தாலே பாடும் நீண்டதே; வெகு
கேடும் நீண்டதே. – வாரும்

2. நட்ட பயிர்கள் மழை இல்லாமல் பட்டுப்போச்சுதே மிகக்
கஷ்டம் ஆச்சுதே. – வாரும்

3. பச்சை மரங்கள் கனிகள் இன்றிப் பாறிப்போச்சுதே; அன்னம்
பாறல்[2] ஆச்சுதே. – வாரும்

---

[1] பூமியில் [2] புலம்பல்

4. தரணி யாவும் வெம்மையாலே ததும்புதே, ஐயா; நரர்
தயங்கிறோம் மெய்யாய். - வாரும்

5. கருணையுள்ள நாதனே, இத் தருணம் வாருமே; எங்கள்
தயங்கல் தீருமே. - வாரும்

***- ச. யோசேப்பு***

**கடைக்கண் பாருமேன்**

**368. (330) சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**வந்தே கடைக்கண் பாருமேன்,-சர்வேசுரனே,**
வந்தே கடைக்கண் பாருமேன்.

**சரணங்கள்**

1. வந்தே கடைக்கண் பாரும் மானிடர் மீதிரங்கி,
எந்தா, துயரம் யாவும் எவ்விதமும் நீக்க. - வந்தே

2. கொள்ளை நோய் மிகுத்ததின் கொடுமை பெருக்கமாச்சே;
வள்ளலுன் சகாயத்தால் மாற்றும் கருணைத் தேவே! - வந்தே

3. எண்ணா வேளை வாலரும் இறந்துபோறார், ஐயோ!
கண்ணீர் சொரியும்மாந்தர் கலக்கம் அனைத்தும்போக்க,
- வந்தே

4. எங்கே விரைந் தோடுவோம், இறைவா? உமை அல்லாமல்
எங்கள் தஞ்சம் வேறாரும் இல்லை; சரணம், ஐயா! - வந்தே

5. மானிடர் துயரத்தால் மறுகியே திரிகின்றோம்;
ஏன் இந்தக் கஸ்தி யாவும் எந்தையே? கண்பாருமேன். - வந்தே

6. எந்த மட்டும் இந்நோயால் ஈனர் எமை வாதிப்பீர்?
அந்தி, சந்தி அலறும் ஆதுலர் மீதிரங்கி. - வந்தே

7. வாரும், கருணாகரா; வந்தே கொள்ளை நோயதைத்
தீரும் இவ்வேளை தானே தீனர் எம்மீதினின்றே. - வந்தே

***- ச. யோசேப்பு***

## தேவா எனை மறக்காதே

**369. (142L) அமிர்தகல்யாணி** **சாபு தாளம்**

***பல்லவி***

**தேவா எனைமறக்காதே,-இந்தச்**
சிறியன் படுந்துயரில் தூரநிற்காதே.

***அனுபல்லவி***

நேயா உனையன்றி நீசனுக்கார் கதி?
தூயா கிருபைகூர், நான் மகாதோஷி. - தேவா

***சரணங்கள்***

1. வானுலகோர்தொழும் நாதா!-இந்த
மானிடர்கரையேற வந்தசகாயா!
காலைமாலைகள்தோறும் கரைந்து உருகுகின்ற
கர்மசண்டாளனைக் கண்ணோக்க லாகாதா? - தேவா

2. பாவியின் மேலிரங்கையா!-பொல்லாப்
பாதகனைக்கைவிடாதே நலமெய்யா!
தாரணிதன்னில் தவிக்குமிவ்வேழையைத்
தாங்கியாதரித்துந்தன் தயைபுரி ஐயா! - தேவா

3. என்மீறுதல் நினையாதே, எந்தன்
இளமையின் பாவத்தை மனதில்வையாதே.
உன்பாதஞ்சேர்ந்தேன், உவந்தேனுனையடைந்தேன்,
நின்பாதந்தானே நிலையாகக்கண்டேன். - தேவா

4. நெருக்கப்படுகிறேன் தேவா,-என்னை
உருக்கமாய்ப் பாராய், கிறிஸ்தேசுநாதா!
இரக்கம் வைத்தென்றனின் குறைதனை நீக்கு,
என்னை ஆட்கொண்டவா, இயேசு சர்வேசா! - தேவா

5. சரணம், சரணம் சருவேசா!-இந்தத்
தருணம், தருணம் உன்றன் கருணை கூர் நேசா!
மரணவேளையிலும் நடுத்தீர்வை தினத்திலும்
மாபாதகன் எனை ரட்சியாய் நாதா! - தேவா

***- ஆ. தேவதாசன்***

## தேவா இவ்வீட்டில் எழுந்து வரவே

**370. (373) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

*பல்லவி*

**தேவா, இவ்வீட்டில் இன்றே மேவி எழுந்து வரவே;-தயை**
செய்வாய், எமது கோவே!

*சரணங்கள்*

1. மூவர் ஒருவரான தேவா;-கிறிஸ்துநாதா,-எங்கள்
முன்னவா, சத்ய வேதா!
பூவில் எமக்குதவி யாருமில்லை, எம் தாதா,-யேசு
புண்ணியனே, மா நீதா!-இங்கு
நண்ணுவாய், மெய்ப் போதா;-தயை
பண்ணுவாய், வினோதா!
மேவி உனதருளை ஈவாய் இவ்வீட்டின் மீது,
ஜீவனே, யேசு கோனே,-ஏழைப்
பாவிகள் மீட்பன் தானே. - தேவா

2. விந்தையுடன் களிப்பும் சந்தமுடன் உண்டாக,-அதி
மேன்மையுடன் சிநேகம்
அந்தமுடன் பெருகி எந்தப் பாவமும் ஏக.-என்றும்
அத்தனோ டுற வாக,-ஜெப
துந்துமிகள் முழங்க,-ஐக்யம்
பந்தமுடன் இலங்க,
தந்தைப் பரனே, இன்று உன்றன் அருள் நிறைவாய்ச்
சொந்தமுடன் ஈவாயே,-இவர்
சந்ததம் வாழ நீயே. - தேவா

3. இங்கு வசிக்கும் மட்டும் துங்கன் மொழிக் கிசைந்தே,-பரன்
இஷ்டப்படி நடந்தே,
அங்கம், மனது யாவும் பங்கம்இன்றித் தொடர்ந்தே,-இவர்
அனுதினமும் மகிழ்ந்தே,-உயர்
அம்பர வீட்டில் சேர்ந்து,-மிகு
கெம்பீரமாக வாழ்ந்து,
புங்கமுடன் நிதமும் தங்கி யேசு பரனில்
இங்கிதமாய்க் கொண்டாட,-நிதம்
மங்களக் கவி பாட. - தேவா

*- ச. யோசேப்பு*

## யேசுவுக்கு நமது தேசத்தைச் சொந்தமாக்க

**371. பரசு** **ஆதி தாளம்**

***பல்லவி***

**யேசுவுக்கு நமது தேசத்தைச் சொந்தமாக்கப்**
பாசமாய் முயல்வோம், தாசரே!

***அனுபல்லவி***

தேசொளி ஞாலமெங்கும் வீசும் யேசுவில் விசு
வாசம் வைத்தன்பின் சுவிசேஷத்தை ஏந்தி. – யேசு

***சரணங்கள்***

1. கங்காநதி துவக்கி கன்னியாகு மரிவரை
எங்குமே யேசுராஜா ஆளவே,–அவர்
சிங்காரக்கொடி மேலிலங்கக் குடிகளெல்லாம்
மங்காச் சந்தோஷ முற்று வாழவே, மன்னன். – யேசு

2. வித்தை பூர்வீக நூல்கள் தத்துவ ஞானத்துக்கு
மெத்தப் பேர்போன இந்து தேசமாம்;–இதில்
சத்தியமாக வந்த நித்யர் யேசுவின் பரி
சுத்த பரம ஞான ஜோதியாய்த் தோன்ற. – யேசு

3. தீய மாமூல் வழக்கம் ஓய, வீண்பக்தி நீங்க,
மாயக் கோட்பாடு முற்றும் மாறவே,–யேசு
தூயன் சத்தியவேத ஞாயவிதிகள் உள்ளம்
பாயநம் நாட்டார் குணமாகவே, வல்ல. – யேசு

4. நம்மை வெறுத்து யேசுநாதனுக் கொப்புவித்துச்
செம்மையுடன் உழைத்துச் சேவிப்போம்;–அவர்க்
குண்மை பாராட்டி நமக்குள்ள யாவும் படைத்து
நம்மாலியன்றளவு முயல்வோமே என்றும். – யேசு

***– வே. சந்தியாகு***

## சங்கீதம் பாடுவோம்

**372. (75L.) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**கெம்பீரமாகவே, சங்கீதம் பாடுவோம்.**

***அனுபல்லவி***

நம்பாரமே எந்நாளும் நீக்குவோனை நாடுவோம், – கெம்

***சரணங்கள்***

1. மங்காத தீபமாய் விளங்கும் மா வசனமே,
சிங்காரமா யித்தீபம் நாடிச் சேர்ந்ததினமே. – கெம்

2. படாமுடிக் கொடூரனைப் பதைக்கவே கொல,
குடாரமாக வெய்ததேவ வேதமே வெல. – கெம்

3. எக்காளமே தொனித்திடப் பொல்லாப் புரிவிழ,
முக்காலமும் திரியேகரை முதன்மையாய்த் தொழ. – கெம்

4. ஜீவாதிபற் கெலா மகத்வமே சிறந்திடத்
தேவாதி தேவன் யேசுவென் றெலாமறிந்திட. – கெம்

5. அகோரப்பேய் நடுங்கியோட யாமகிழ்ந்திட,
மகாமகத்வன் யேசுவென் றெலாம் புகழ்ந்திட. – கெம்

***– ஞா. சாமுவேல்***

**பூமியின் குடிகளே**

**373. (76L) சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**பூமியின் குடிகளே, நீர் தாமதமிலாதியேசு**
சாமியினன்னாமமதிலே மகிழுவீர்.

**அனுபல்லவி**

ஓமனாதி[1] யந்தபரனே மனுடரான நம்மை
உருக்கமாய்த் – தங்கருணைப்
பெருக்கமாய் – மீட்டரணாந்
துருக்கமாய் – இதுவரைக்கும்
நெருக்கமாய் – ஊக்கமாய்நின்றார் – பூமி

1 ஆதி ஒலி (திருவார்த்தை)

**சரணங்கள்**

1. தந்தையார் தமதுநேச மைந்தனைப் பாதகர்க்காகத்
தந்துமா நிர்பந்தமற விந்தையாகவே,
இந்த நீசமான பூலோகந்தனை மீட்ட நேசத்தைச்
சிந்தைல் நினைந்து முழு நன்றியாகவே,
சந்ததமுமே துதிப்ப தந்தமான வேலையல்லோ?
தாசரே – யேசுநாதர்
நேசரே, – எருசலேம்
வாசரே, – கர்த்தருக்குள்ளாம்
ராசரே, – ஆசாரிமாரே! – பூமி

2. கர்த்தனார் ஒருவரே நம் நித்திய பரமனென்ற
சத்தியத்தை எத்தினமும் உற்றுணர்வீர்;
அத்தனார் படைப்புகளைப் புத்தியற்றுத் தெய்வமெனச்
சொற்றவரே விக்கிரகப் பத்தியகல்வீர்;
இத்தரையில் நாங்களல்ல உத்தபரன்[1] எங்களைக் கண்
ணோக்கினார், – எங்கள்வம்
போக்கினார், – சகலதுன்பம்
நீக்கினார், – தமதுமந்தை
ஆக்கினார், – தூக்கினாரென்று – பூமி

3. ஜீவபரன் வாசல்களில் மேவி எய்துவோம் துதியோ
டாவியுடனே நமது நாவுமிசைந்து
தேவ பிரகாரங்களிலே வருவோமே, புகழ்ச்சி
மாவுரிமை யோடுரைத்துக் கூவி மகிழ்ந்து
பாவலர் மற்றோரேநல்ல நாவலரே கர்த்தர்வீட்டுக்
கோடுவோம், – அவர்நாமத்தில்
கூடுவோம், – அவர்பதத்தை
நாடுவோம், – அவர்மகிமை
தேடுவோம், – பாடுவோம் துதி – பூமி

4. வல்ல பரனானவர் மா நல்லவர் அவர் கிருபை
உள்ள தூழி ஊழிகாலம், தொல்லையுண்டுமோ?
சொல்லரும் அவரதுண்மை யுள்ளதே தலைமுறைகள்

---

1 எக்காளம்

எல்லாவற்றிலு மெங்களுக்கல்லலண்டுமோ?
புல்லனாம் பேயினரசே யில்லையெனுமட்டும் காளம்[1]
பிடிக்கிறோம், – சத்தியத்தைப்
படிக்கிறோம், – பேயரங்கம்
இடிக்கிறோம், – அவனையெங்கும்
அடிக்கிறோம், – சீக்கிரம் ஜெயம் – பூமி

***– ஞா. சாமுவேல்***

**மானுவேல் தொண்டரே**

**374. உசேனி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**மானுவேல் தொண்டரே!–ஆர்ப்பரித்து**
மகிழ்ந்து பூரிப்போம்.

**அனுபல்லவி**

மானிலமீது சமாதானமா மென்ற
வானவர் வாழ்த் துதவறா தென நம்பும்,
நானிலமெங்கும்[2] சகோதர ஐக்கியம்
நண்ணும் பகலருணோதயம் ஆகுதே:
நாடுவோம்,–அதைத் தேடுவோம்,–இனி
நாமுமுயற்சி கையாடுவோம், பாடுவோம். –மானு

**சரணங்கள்**

1. தீர்க்க ருரைப்படியே–உலகெங்கும்
தீங்கிலாக் காலம் வரும்:
தாக்கும் படைக்கலங்கல்–கிருஷிகச்
சாதனமாகி விடும்:
மாக்க ளெலாமொரே தந்தையின் மக்களாய்,
மன்னன் யேசுவுக்கு ளொன்றான தோழராய்,
வாக்குவாதங்கள், வழக்குகள், யுத்தங்கள்
நீக்கி யிணக்கம் பொறுமை நற்குணங்கள்
நிலைத்து,–அன்பு–வளர்த்துக்,–கரங்
கொடுத்து,–உற வடுத்துமதிப்பர். –மானு

---

1 எக்காளம் 2 பூமியெங்கும்

2. போன காலங்களிலே-நடந்திட்ட
பொல்லாங்கும் பாடுகளும்,
ஈனத் துரோகங்களும்,-விளைவித்த
ஈங்கிசைபோதும் இனி
வானபரனின் மலரடிக் கண்ணுற்று,
வல்ல பரிசுத்த அன்பினாவி பெற்று,
மற்றுமவர் செய்கை மாதிரி நாம் கற்று,
மாட்சியாய்,-அவர்-சாட்சியாய்,-இந்த
மண்ணிலத்தார் ஒத்து வாழச் செபித்துமே. -மானு

3. சர்வ ஜனநேசம்-நிறைவுறத்
தாமதமானாலும்,
கர்வம் பொறாமை பகை-தடை செய்யக்
காலம் நீடித்தாலும்,
அருள் நம்பிக்கை கொண்டற்பமெனு நம்மால்
ஆனதைச் செய்குவோம் முன்தூதர் போலவே
இருளகல விடிவெள்ளி தோணுது;
எங்கும் நடுப்பகல் மங்களநாள் வரும்
யேசுவே,-இக-மாசுடர்-அவர்
நேசமே,-புவித்-தோஷமகற்றிடும். -மானு

***– ஜி.சே. வேதநாயகம்***

**துதிதுதி பன்றனையே**

**375. (77L) உசேனி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**துதிதுதி பரன்றனையே-சுகிர்தமாக.**

**சரணங்கள்**

1. துதிதுதி பரனையே துல்லிய நிர்மலனையே,
கதிதரு கரனையே கர்த்தாதி கர்த்தனையே. – துதி

2. இருளின் ராஜாங்கம்வென்று இரவி யாரணங் கொண்டு,
மருள்வீண்பத்தியினின்று வல்லன் ஜெயித்தாரென்று. – துதி

3. சுவிசேட எக்காளம் தொனித்தவுடன் வேதாளம்
பவிசை யிழந்தகோலம் பார் இந்த நற்காலம். - துதி

4. இத்தனை யாண்டாக இயேசுவை நன்றாகப்
பக்தர்கள் பணிவாகப் பருவாய்ப் போதித்தற்காக. - துதி

5. நேயன் யேசுவைத்தேடி நிதமவர் பதம் நாடித்
தூயன்றனைக் கொண்டாடிச் சுபகீதங்களைப் பாடித். - துதி

***- ஞா. சாமுவேல்***

**அவிரொளி உதித்ததையா**

**376. (79L) ஆனந்த பைரவி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**அந்தகாரப் பூமிஇதையா,-இருளோ டிமெய்**
அவிரொளி உதித்ததையா,

**அனுபல்லவி**

சிந்தை இருள்மூடிக் கெட்டுச்
சந்ததமும் உன்னைவிட்டு,
நிந்தைகள் இலச்சைப்பட்டு,
நேசமுற்று மோசம் போன. - அந்த

**சரணங்கள்**

1. தேசங்கள் கடல்களெங்கும்-உந்தன்வேத
சேதியின் பலன்கள் தங்கும்,
காசினியோர்கட்குப் பொங்கும்-அளவில்லாத
களிப்புகளுண்டாயிலங்கும்,
என்றமொழி யிந்தக்காலம்
உண்மையாச்சு துந்தன்சீலம்
ஏழைகளுக் கனுகூலம்
இன்றுவந்த துமக்கோலம். - அந்த

2. கஷ்டநஷ்டங் கொண்டுவாடிக்-கணக்கில்லாத
கவலைக ளாலுமூடிக்
கர்த்தனே, உனைமன்றாடிக்-கண்ணீராறாய்க்

கதறியச் செபித்துத் தேடிச்
சத்திய சுவிசேட
வித்தினை யிங்குபோட,
வந்தவர்க் கன்பைநாட
வந்தனம் ஐயா காவும். - அந்த

***- ம.ப. அருளப்பன்***

**வந்தனம் உமக்காமென்**

**377. (375) சங்கராபரணம் ஆதி தாளம்**

**அனுக்ரக வார்த்தையோடே-இப்போ-து**
அடியாரை அனுப்புமையா!
மனமதில் தயவுறும் மகத்துவபரனே!
வந்தனம் உமக்காமென்.

2. நின்திரு நாமமதில்-கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிக பலனளித்திடச்
சாமி நின்னருள் புரிவாய்.

3. தோத்திரம், புகழ், மகிமை,-கீர்த்தி,
துதிகனம், தினமுமக்கே
பாத்திரமே; அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

***- ச.ஜெ. சிங்***

**மங்களம்**

**378. (376) சௌராஷ்டிரம் ஆதி தாளம்**

*பல்லவி*

**தேவாதி தேவன் தனக்குச்**
சீர்த்தி[1] மேவு மங்களம்

1 கீர்த்தி

***அனுபல்லவி***

ஜீவாதிபதி நித்யனுக்குத்
திவ்ய லோக ரட்சகனுக்குத் – தேவாதி

***சரணங்கள்***

1. ஞானவேத நாயகனுக்கு,
நரரை மீட்ட மகிபனுக்குத், – தேவாதி

2. பக்தர் மறவா பாதகனுக்குப்
பரம கருணா நீதனுக்குத், – தேவாதி

3. ஜெக சரணிய நாதனுக்குச்
சீஷர் புகழும் போதகனுக்குத், – தேவாதி

***– ல்.ஈ. ஸ்தேவான்***

**மங்கள ஜெய மங்களம்**

**379. (377) சௌராஷ்டிரம்** **சாபு தாளம்**

**பல்லவி**

**மங்களம்! ஜெயமங்களம்! மகத்துவற்கு**
மங்களம்! ஜெயமங்களம்!

**சரணங்கள்**

1. எங்கும் ஒன்றாகவே இருந்திக பரங்களும்
பங்கம் இலாமலே படைத்த பிதாவுக்கும். – மங்களம்

2. நல்ல கதியை மாந்தர் நலமதுடன் அடையத்
தொல் உலகை ரட்சிக்கும் சுதன் ஏசுநாதர்க்கும் – மங்களம்

3. சுத்தரித்து நரர் சுக உலகம் அடையப்
பக்தர்களாக்கும் பரிசுத்த ஆவிக்கும். – மங்களம்

4. இம்முறை முத்தொழில் இயற்றி உலகனைத்தும்
செம்மையுடன் நடத்தும் திரியேக தேவனுக்கு. – மங்களம்

***– யோ. பால்மர்***

### மங்களம் சதா ஜெய மங்களம்

**380. (128L) சங்கராபரணம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**மங்களம் சதா – ஜெய – மங்களம் வேதா!**
எங்கள் துங்கமங்களர்க்கு – மங்களம் சதா.

***சரணங்கள்***

1. அணைத்துக்காத்தவா, – உல – கனைத்தும் படைத்தவா;
இணையில்லாப் பிதாவுமக்கு மங்களம் சதா. – மங்களம்

2. யேசுநாயகா, – எம் – நேசநாயகா!
மாசில்லாத சுதனுமக்கு மங்களம் சதா. – மங்களம்

3. ஞானவாரியே, – திரு – வானமாரியே!
ஆனந்தசுத்தாவியுமக்கு மங்களம் சதா. – மங்களம்

***– ஞா. சாமுவேல்***

### "Te Deum"–திரியேகருக்குத் துதி

**381. (378) குரஞ்சி** **ஆதி தாளம்**

**தேவனே உம்மை யாந் துத்தியஞ் செய்கிறோம்;**
தேவரீர் கர்த்தனென் றெங்கும்பிரஸ் தாபிப்போம்.

2. நித்திய தந்தையாம் நிர்மல னும்மையே
நித்தம்பூ மண்டலம் நின்றுவ ணங்கிடும்.

3. சம்மன சோருட[1] சர்வசே னைகளும்
சாவிலா மண்டல சக்திகள் யாவரும்.

4. சேராபீன் கேருபீன் சேர்ந்தங்கோய் வில்லாமல்
சிந்தையாய் உந்தனின் சீர்புகழ் பாடுவார்.

---

1 தூதருடைய

5. சேனையின் தேவனே, கர்த்தரே, நீர் மிக்க
சுத்தரே, சுத்தரே, சுத்தரே என்கிறார்.

6. வானமும் பூமியும் உந்தனின் மாட்சியை
வாகுடன் காட்டுமே வள்ளலே யென்கிறார்.

7. மாட்சிமை பெற்றிடு மாவப்போஸ் தலரும்
மாய்விலா உம்மையே மன்றொடு[1] போற்றுவார்.

8. தீர்க்கரென் கின்றவச் சீர்பெற்ற சங்கமும்
தெய்வமே உம்மையே தீர்க்கமாய் போற்றுவார்.

9. வீரமாய் நின்றிட்ட உம்ரத்த சாட்சிகள்
வீவிலா உம்மையே விண்ணதில் போற்றுவார்.

10. மட்டிலா மாட்சிமை பெற்றுள தந்தையே
மாவணக் கம்பெறும் மைந்தனைப் போற்றுவார்.

11. தேற்றுதல் செய்திடுந் தூயமா ஆவியைத்
தெய்வலோ கத்திலும் பூவிலும் போற்றுவார்.

12. பூவெல்லாம் போயுள சுத்தமா சங்கமும்
புண்ணியன் உம்மையே போற்றிப்பிரஸ் தாபிக்கும்.

13. மாகிறிஸ்து நீரல்லோ மகிமையின் ராஜன்,
மாய்வில்லாத் தந்தைக்கு நித்திய மைந்தன்.

14. நரரைநீர் மீட்டிட முன்வந்த பொழுது
நற்கன்னி கர்ப்பத்தை வெறுத்தோட விலையே.

15. மரணத்தை வென்றிட்டு மாபக்தர் வசிக்க
மைந்தனே திறந்திட்டீர் மோட்சத்தைச் சிறக்க.

---

1 சபையோடு

16. திருத்தந்தை யென்போரின் திகழ்மாட்சி யதிலே
தினமும்நீ ரிருக்கின்றீர் வலப்பக்கந்தனிலே.

17. தரணியோர் எங்கட்குத் தகுந்தீர்ப்பு அளிக்கத்
தாண்டிநீர் வருவீரென் றென்றுநம் புவோம்.

18. மாவிலை கொண்ட உம் ரத்தத்தால் மீட்டிட
மாந்தருக் கேதயை செய்திட வேண்டுவோம்.

19. எங்களை நித்திய உம்மகி மையிலே
ஏகமாய்ச் சுத்தரோ டென்றும்நீர் சேர்த்திடும்.

20. அத்தனே ரட்சியும் ஐயன் உம்மாட்களை
ஆசீர்வ தியுஞ்சு தந்தரந் தன்னைநீர்.

21. என்றைக்கும் மாண்டிடும் இச்சனந் தன்னைநீர்
எங்கும் உயர்த்திடு மென்றுமை வேண்டுவோம்.

22. இத்தினம் முற்றிலும் எப்பவஞ் செய்திடா–து
எங்களைக் காத்திட ஏகனே வேண்டுவோம்.

23. எங்களுக் கேதயை செய்திடும் ஐயாநீர்
என்றைக்கும் உம்மையே நம்பியி ருக்கிறோம்.

24. உம்மையே நம்பினான் உய்கின்றே னாதலால்
ஒன்றிலுந் துன்பமே நேரவிடாதிரும்.

***– ச.த. ஞானமணி***

**பஜித்திடும் திருச்சபையோரே**

**382. (81L) பியாகு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**பஜித்திடும் சுவிசேட திருச்சபையாரே,**
பரனை நினைத்துத் தினம் மகிழ்வீரே.

**சரணங்கள்**

1. பஜித்திடும் சுவிசேஷசபைக்குள் வந்தோரே,
பரனருளால் ஜெயமடைந்தீரே,
துஜம்[1] பிடித்தே ஜெயமெனப் புகல்வீரே,
தோத்ரசங்கீர்த்தனம் துத்யம் செய்வீரே. – பஜி

2. நித்ய சுவிசேடமே நேர்வழியாமே,
நிமலனருள் வழிபோவேமே.
சத்ய மறைபிடிக்கில் வழிதவறோமே,
தத்வ குணாகரன் தனைத்துதிப்போமே. – பஜி

3. திருக்குருசில் மரித்தோரது நேசம்,
தினம் மறவாதே, வைவிசுவாசம்.
இரக்க புண்ணியங்களால் எழில் நகர்வாசம்,
இனிபெறலாமென வெண்ணுதல் மோசம். – பஜி

***– ஞா. சாமுவேல்***

## அல்லேலூயா துதி

**383. (83 L.) தன்யாசி** **சாபுதாளம்**

**பல்லவி**

**அல்லேலூயா துதி, அல்லேலுயா ஜெயம்,**
வல்லத் திரியேகமகத்வ தேவற்கென்றும்.

**அனுபல்லவி**

சொல்லரும் சுத்த சுவிசேடந்தந்தவர்
தூயன் சகாயனுபாயானாம் நேயற்கு. – அல்லே

**சரணங்கள்**

1. வானம் புவியும்படைத்த பிதாவுக்கும்
மைந்தரை மீட்ட சுதனென்ற தேவற்கும்
ஞானவிசேடம் வெளியிட்ட ஆவிக்கும்
நம்மாலிந்நாளு மெந்நாளும் நற்றோத்திரம் – அல்லே

---

1 கொடி

2. வேதோபதேச அப்போஸ்தலன்மார்களை
மேதினியெங்கும் அனுப்பித்திருமறை
தீதறப்போதகஞ் செய்யவழி செய்த
சிங்காரக்கர்த்தர்க்கு மங்காமகத்வர்க்கு. - அல்லே

3. வாதைகள் மெத்த வதைத்துந் திருச்சபை
வாடாது மிக்க செழிப்பாய் வளர்ந்திட,
ஏதுங்குறைவறவே செய்த தேவனை
ஏற்றித்துதிசெய்வம், போற்றிப் புகழ்செய்வம் - அல்லே

4. ஆகாதபேயின் அகோரத்தினாற் சபை
யானதுள்வந்து புகுந்த பிழைகளை
வாகாக நீக்கவழி செய்த கர்த்தனை
வந்தனை செய்வோம் நாம் சிந்தனையாகவே - அல்லே

5. வானாதி சேனைமகிழ்ந் திசைகள்பாட
மக்கட்குழாமும் களிப்புடனேசேர
ஈனப்பிசாசின் இடர்களெல்லாந்தீர,
ஏகன்தயைசெய்தார், வாகாய் அருள்பெய்தார். - அல்லே

***– ஞா. சாமுவேல்***

**சத்தியச் சுவிசேடம்**

**384. (78L) முகாரி** **ரூபக தாளம்**

**கண்ணிகள்**

**சத்தியச் சுவிசேடம் எத்திசையிலும் பரம்பத்,**
தற்பரன் அருள்புரிக சந்ததம்
இத்தரை யிருள்தொலைந்து நித்திய ஒளிதரிக்க,
ஏகனார் தயைபுரிகவே தினம்.

2. மிக்க அறுப்புண்டுலகில் தக்க ஊழியர்கள் சொற்பம்,
மேலவன் அறுப்பினுக்காள் தந்திடக்,
கட்டங்களெல்லாஞ் சகித்துப் பட்சத்துடனே யுழைக்கக்
கர்த்தனார் மிகப்பலங் கொடுத்திட.

3. பூமியின் குடிகள் யேசு நாமமதினா லிணைந்து
போற்றிட ஒருமையுடன் தேவனே;
தாமதமிலா தெல்லாரும் சாமி குடிலிற்புகுந்து,
தக்க துதியை அவர்க்குச் செய்யவே.

4. நாற்றிசையினுங் கிளைகள் ஏற்றபடியே விரிக்கும்,
நற்றரு ஆல்போல் சபை தழைக்கவே,
கூற்றேனும் பசாசின்கூட்டம் நாற்றக்குட்ட ரோகிபோலக்
குட்டை யாகியே நலிந்து மாயவே.

5. சுந்தரத் திருவசனம் இந்துதேசத்தும் நிலைக்கத்
தூயனார் எமக்கருள் சொரிந்திட;
தந்திரப் பிசாசின்மார்க்கம் நிந்தையுடனே பறக்கச்
சர்வ வல்லபன்சபை தழைக்கவே.

*– ஞா. சாமுவேல்*

### சூரியன் மறைந்து

**385. (131L) நாதநாமக்ரிகை** **ஆதி தாளம்**

**சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது.**
சோர்ந்த என் தேகம் அயர்ந்துமே இளைப்பாறப்போகுது,
தூயா கிருபை கூர்ந்து காருமையா!

2. பகல் முழுவதும் பட்சமாய் என்னைப் பாதுகாத்தீரே,
சகல தீமையுமகல வைத்தருள் நலமுந்தந்தீரே,
சுவாமி உந்தன் பாதம் பணிகிறேன்.

3. பாதகம் மிகப் புரிந்தேன் பரம நாயகா,
பாவி நானிந்த நாளிலும் பல தீவினைசெய்தேனையா,
கோபமின்றி என் பாவம் பொறுத்திடுவாய்.

4. ராவில் வரும் மோசமொன்றும் என்னைச் சேராமல்,
பேயின் சர்ப்பனை தீய சொப்பனம் மனதில் நேராமல்,
நேயா நின் நல்தூதர் காவல்தா.

5. ஆத்துமம் சரீரம் எனக்கான யாவையும்
அப்பனுன் கையிலொப்புவித்து நான் அமர்ந்து தூங்குவேன்,
ஐயனே உன் பொன்னடி சரணம்.

***– ஐ. சாமுவேல்***

**உயிர்த்த காட்சி**

**386. (383) பியாகு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வானோர் பூவோர் கொண்டாட**
மனுவேலுயிரோ டெழுந்தார் ஜெயமே.

**அனுபல்லவி**

தீயதயாளன் திருமறைநூலன்,
திரிபுவனங்களாள் செங்கோலன்,
ஞானசு சீலன் நரரனுகூலன்,
நடுவிடவே வருபூபாலன் – வானோர்

**சரணங்கள்**

1. அலகையை[1] ஜெயித்தார், அருள்மறை முடித்தார்,
அருமலர்க்கா காவலை யொழிந்தார்;
நிலைதிரை கிழித்தார், தடைச்சுவரித்தார்,
நேராய்த் தரிசனந்தர விடுத்தார். – வானோர்

2. செத்தோ ருயிர்த்தார், திருநகர் பூத்தார்,
தேடற் கரியதோர் காட்சிவைத்தார்,
மற்றோர் பார்த்தார், மலைவுகள் தீர்த்தார்,
மரித்தார் முதற்பலனாய்ச் செழித்தார். – வானோர்

3. அடியவர் கண்டார், ஆர்துயர் விண்டார்,
அருமறைக் கருத்தாய்ந்தே நின்றார்,
மடமையகன்றார், மயக்கமே கொன்றார்,
வானானந்தமே மனங்கொண்டார். – வானோர்

---

1 பிசாசை

4. மகதலானாளு மதி சூசன்னாளும்,
மயங்கியெழுதயோ வன்னாளும்,
மகவிருவர் தருசா லொமித்தாயும்
மரை மலரடிதொழு தேத்தினரே. – வானோர்

5. எம்மாவூர் சீடரி ருவர்க்குந் தோமா
இலதுபதின் மருக்குமே காட்சி
நன் மனதுடனே பதினொருவருக்கும்
நடுவகத்தே வருமாசூட்சி – வானோர்

6. மகதலனாட்கு மற்ற மங்கையர்க்கும்
மகத்துவத்தே தரிசன மளித்தார்;
பேதுரு தனித்தும் யாக்கோபு தனித்தும்
பிரத்தியேகத்தில் தரிசித்தனரே. – வானோர்

7. கலிலே யாக்கடலில் எழுவரும் பார்த்தார்;
காட்சி மலையஞ் ஞூறுபேர் பார்த்தார்;
உலை எருசலமில் சீடரைச் சேர்த்தார்;
ஒலிவ மலைமேல் திரள்பேர் பார்த்தார். – வானோர்

***– ஜி.எஸ். வேதநாயகம்***

**பண்டிகை கொண்டாடுவோம்**

**387. (384) தோடி** **சாபு தாளம்**

**பல்லவி**

**பண்டிகை கொண்டாடுவோம்,–ஆம், நாம்**
பண்டிகை கொண்டாடுவோம் .

**சரணங்கள்**

1. பண்டிகை கொண்டாடிப்,–பரமனைமன்றாடிப்
பஸ்கா கிறிஸ்தை நமஸ்காரஞ் செய்தாடி. – பண்டிகை

2. புன்மைகொடும் பொல்லாப்பு–புளிமா வைவிலக்கி
உண்மை பரி சுத்தமாம்–உயர்மா வைப்பலுக்கி – பண்டிகை

3. இன்றுயிர்த்தெ ழுந்தகோன்–இனிமரிப்ப தில்லையே
பொன்று[1]மர ணஞ்சிறை–பூண்டாள்வ தில்லையே. – பண்டிகை

4. தரைபவத்திற் கென்றொரு–தரமரித்த னர்சுதன்
பரனவர்க்கு மகிமையாய்ப்–படிபிழைத் திருக்கிறார். – பண்டிகை

5. நாதன்போற் பாவத்திற்கு–நாமுமரிப் போமாகாப்
பேதமின்று யேசுவுக்குப்–பிழைத்திருப் போமாக. – பண்டிகை

6. கிறிஸ்தடக்கப் பட்டுமா–கீர்த்தியோ டேயெழுந்து
முறைமரித்த வர்களில்–முதற்பல னானாரே – பண்டிகை

7. மனுஷனாலு லகினில்–மரணமுண் டானதால்
மனுஷனாலே யுயிரெழில்–மகிமையுண்டானதே – பண்டிகை

8. ஆதத்தா லெல்லாரும்–அறமரித்தல் போலவே
நாதனால் மெய்யாக–நாமுயி ரடைகுவோம். – பண்டிகை

9. ஆதிபி தாகுமாரன்–ஆவிதிரி யேகர்க்கே
மாதிரி காலங்களாய்–மாமகிமை யாகவே. – பண்டிகை

***– ச.த. ஞானமணி***

### யூத ராஜ சிங்கம்

**388. (385) கேதாரம்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்,**
உயிர்த்தெழுந்தார், நரகை ஜெயித்தெழுந்தார்.

***சரணங்கள்***

1. வேதாளக் கணங்கள்[2] ஓடிடவே,
ஓடிடவே உருகி வாடிடவே. – யூத

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே,
துதித்திடவே, பரனைத் துதித்திடவே. – யூத

1 அழியும் [2] நரகக் கூட்டங்கள்

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன,[1]
தெறிபட்டன நொடியில் முறிபட்டன. - யூத

4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே,
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே. - யூத

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்,
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார். - யூத

6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை,
மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை. - யூத

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்,
பாதம் பணிவோம், பதத்தைச் சிரமணிவோம். - யூத

## வாரும் பெத்லெகேம்

**389. (386) சங்கராபரணம் ஆதி தாளம்**

**வாரும், பெத்லகேம் வாரும்,-வாரும்,**
வரிசையுடனே வாரும்;
வாரும், எல்லோரும் போய் வாழ்த்துவோம் யேசுவை,
வாரும், விரைந்து வாரும்.

2. எட்டி நடந்து வாரும்,-அதோ
ஏறிட்டு நீர் பாரும்;
பட்டணம்போல் சிறு பெத்லகேம் தெரியுது,
பாரும் மகிழ்ந்து பாரும்.

3. ஆதியிலதமேவை-அந்நாள்
அருந்திய பாவவினை;
ஆ! திரித்துவ தே வன் மனிதத்துவ
மாயினர், இது புதுமை!

1 உடைந்தன

4. விண்ணுலகாதிபதி,–தீர்க்கர்
விளம்பின சொற்படிக்கு;
மண்ணுலகில் மரிகன்னி வயிற்றினில்
மானிடனா யுதித்தார்.

5. சொல்லுதற் கரிதாமே,–ஜோதி
சுந்தர சோபனமே;
புல்லணையிற் பசுமுன்னணையிற்பதி
பூபதிதான் பிறந்தார்.

6. மந்தை மாடடையில்–மாது
மரியவள் மடியதனில்,
கந்தைத் துணியதை விந்தைத் திருமகன்
காரணமாய் அணிந்தார்.

7. தூதர் பறந்துவந்து–தேவ
துந்துமி மகிழ்பாட,
மாதவ ஞானிகள் ஆயர்கள் பணிந்து
மங்களமொடு நாட.

*– ஐ.த. எலியேசர்*

**உன்னையன்றி வேறே கதியில்லையே**

**390. (387) முகாரி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**உன்னையன்றி வேறே கெதி**
ஒருவரில்லையெ ஸ்வாமீ!

*அனுபல்லவி*

அன்னை தந்தை உற்றார் கற்றார்–ஆருமுதவுவரோ?
அதிசய மனுவேலா!–ஆசை என் யேசு ஸ்வாமீ! – உன்

*சரணங்கள்*

1. பண்ணின துரோகமெல்லாம்–எண்ணினா லெத்தனைகோடி,
பாதகத்துக் குண்டோ எல்லை,–பரிதவித்தேனே தேடி,
கண்ணினாலுன் திருவடிக்–காண நான் தகுமோதான்?
கடையனுக்கருள்புரி–மடியுமுன் யேசு ஸ்வாமீ! – உன்

2. அஞ்சியஞ்சித் தூர நின்றெனை–சஞ்சலங்களை நான் சொல்லி,
அலைகடல் துரும்புபோல்–மலைவு கொண்டே னானையோ!
கெஞ்சிக் கெஞ்சிக் கூவுமிந்த–வஞ்சகன் முகம்பாராய்க்
கிட்டி என்னிடம் சேர்ந்து–க்ருபைவை யேசு ஸ்வாமீ! – உன்

3. எத்தனை கற்றாலும் தேவ–பக்தியேது மற்ற பாவி;
எவ்வளவு புத்திகேட்டும்–அவ்வளவுக்கதி தோஷி,
பித்தனைப் போல பிதற்றிக்–கத்தியே புலம்புமேழைப்
பேதையைக் கடைத்தேற்றிப்–பிழைக்கவை யேசு ஸ்வாமீ – உன்

4. கள்ளனாம் கபடனென்னைத்–தள்ளிவிட்டா லாவதென்ன,
கல்லைப்போல் கடினங்கொண்ட–கர்ம சண்டாளன் பாழும்
உள்ளமுங்கரைந்தே உன்னறன்–உயர் சிலுவையினன்பால்
உலையிலிட்ட[1] மெழுகாய்–உருகவை யேசு ஸ்வாமீ! – உன்

***– வே.ஜ. பென்யமீன்***

**என்னால் உரைக்க முடியாதே**

**391. (388) காபி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**என்னாலுரைக்க முடியாதே–என்றன்**
இருதய மகிழ்ச்சி இப்போதே.

**அனுபல்லவி**

முன்னாலே பாவத்துயரில் மூழ்கின பேதையை யேசு
மன்னவனார் தேடிக்கண்டு மாற்றினார் பவத்தினை, தேற்றினார்
அகத்தினை – என்

**சரணங்கள்**

1. காட்டினில் அலைந்த ஆடு நானே,–எனைக்
கண்டு பிடித்தவர் யேசு கோனே;
வீட்டினுள் மகிமையைக் கண்டேனே,–இனி
வியந்து விரைந்து பாடுவேனே.
நாட்டினில் எனைத்தொடர் ஓநாய் புலி யாவும் வெருண்டு
ஓட்டம்பிடித் தப்பாலே நின்றுற்றிதோ பார்த்தென வெற்றி
அடைந்தேனே – என்

1 நெருப்பிலிட்ட

2. பாவங்கள் அனைத்தும் மன்னித்தாரே,–பாவப்
பயங்கள் சந்தேகந் தொலைத்தாரே,
ஆவல் ஆசையும் அகற்றினாரே,–தேவ
அன்பினை அகத்துள் ஊற்றினாரே;
தேவ வசனஞ்செழிக்கச் செபத்தியானங்கள் சிறக்க,
ஆவி உள்ளிலேகளிக்க ஆடுதே கால்களும் பாடுதே நாவதும்.
– என்

3. சத்துருவினால் விளைந்த கேட்டை–எல்லாம்
தாண்டிவந்தேன், யேசு பெருங்கோட்டை.
பக்தருக் காயத்தம் செய்த வீட்டைப்–பெறப்
பார்த்திருக்கின்றேன் பரம நாட்டை;
இத்தரை வசிக்குங் காலம் அத்தனையும் யேசுக்கெனைத்
தத்தம் செய்துவிட்டேன், அவர் தஞ்சமே காவில் தான்
அஞ்சிடேன் இனி. – என்

4. ஆசைமிகும் யேசு பெருமானே!–பதி
னாயிரம் பேரில் சிறந்த கோனே!
வாச[1] லீலிப்பூவே சீவதேனே!–வான
மன்னாவே இலங்கு கதிரோனே!
மாசறக்கழுவி எந்தன் மனதுள் வசித்தெழும்பும்
நேசத்தால் மகிழ்ந்றென்தென்றும் நீடுவாய் கிருபைகள்
சூடுவாய் தோத்திரம் – என்

***– ம. வேதமாணிக்கம்***

**Benedictus–எந்நாளுந் துதித்திடுவீர்**

**392. (380) சுருட்டி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**எந்நாளுந் துதித்திடுவீர்,–அந்த**
இசர வேலின் ஏகோவா வைநீர்

1 நல்மணமுள்ள

*அனுபல்லவி*

இந்தநற் சாதியிற் சிந்தையாய்ச் சாலவே,
விந்தைபு ரிந்திடு மெந்தைப ரன்றனை. - எந்நாளுந்

*சரணங்கள்*

1. கர்த்தாவின் வழிசெய்யவும்,-தீமை
கட்டோடே நீக்கும் ரட்சிப்பை யார்க்கும்
கெம்பீர மாகச் சொல்லவும்,
சுத்தனே யானாய் கர்த்தர்முன் போவாய்,
கண்டுகொள் பாலா இந்தசொல் மாளா. - எந்நாளுந்

2. தன்னாடு தனைச் சந்தித்து-மீட்டுத்
தாட்டிகப் பகைவரை ஓட்டிட உலகினில்
தாசன்தா வீது வம்வசத்து
இன்பர க்ஷண்யக் கொம்பைத் தந்தான்,
இதோ நீர் கண்டு சிந்தையாய் நின்று. - எந்நாளுந்

3. அந்தகாரத்திலிருப்போர்-சாவின்
ஆழவி ருள்தனிற் காலங்கள் போக்குவோர்
அங்குபிர காசமடைந்து
அந்தச மாதான உந்தரங்[1] கண்டிட
ஆதித்தன் தோன்றிளார் ஜாதிக ளேநீர், - எந்நாளுந்

4. விந்தைப்பி தாவர்க்கும்-ஏக
வித்தான யேசு ரக்ஷக னார்க்கும்
வீவிலா[2] ஆவியவர்க்கும்
சந்ததம் மகிமை சந்ததமென்று
சற்றுநீர் சொல்லிப் பற்றுடன் அள்ளி. - எந்நாளுந்

***- ச.த. ஞானமணி***

### ஆண்டவா உன்றன் சேவைக்கடியேன்

**393. ஸ்ரீரஞ்சினி** **சாபு தாளம்**

*பல்லவி*

**ஆண்டவா, உன்றன் சேவைக்கடியேன் அர்ப்பணஞ் செய்யத்**
தூண்டும் உன் ஆவி அருள்வாய்.

---

1 வழி 2 சாவில்லாத

***அனுபல்லவி***

என்னைத் தியாகிக்க ஏவும்
உன் அனல் மூட்டிடுவாய்,
இந்நிலம் தன்னில் மாளும்
மனுமக்கள் மீட்பிற்காக. - ஆண்டவா

***சரணங்கள்***

1. புசிக்கக் பண்டமில்லாமல்
பூவில் இல்லமுமே அன்றி,
நசித்து நலிந்து நாட்டில்
கசிந்து கண்ணீர் சொரிந்து,
தேச மெல்லாம் தியங்கும்
நேசமக்கள் சேவைக்கே,
நிமலா, எனை ஏற்றுக்கொள். - ஆண்டவா

2. வறுமை வன் கடன் வியாதி,
குருட்டாட்டம் கட்டி கடும்
அறிவீனம் அந்தகாரம்
மருள் மூடி மக்கள் வாடும்,
தருணம் இக்காலமதால்,
குருநாதா, உனதன்பை
அருள்வாய், அடியேனுக்கே. - ஆண்டவா

3. அருமை ரட்சகா, உன்றன்
அரும்பாடு கண்ணீர் தியாகம்,
பேரன்பு பாரச் சிலுவை,
சருவமும் கண்ட என்றன்
இருதயம் நைந்துருகி,
வெறும் பேச்சாய் நின்றிடாமல்
தருணம் எனையே தந்தேன். - ஆண்டவா

4. உலகே உனதாயினும்
தலைசாய்க்கத் தாவில்லாமல்,
நலமே புரிந்து திரிந்தாய்;
எல்லாம் துறந்து யான் உன்
நல்லாவி கொண்டுழைக்க,
வல்லா, உனின் சிலுவை
அல்லால் வழி வேறுண்டோ? - ஆண்டவா

***– சவரிராயன் ஏசுதாசன்***

## துதியுனக் கொருகோடி

**394. (392) குரஞ்சி** **ஆதி தாளம்**

**அருளே! பொருளே! ஆரணமே[1] அல்லும்பகலுந்துணை நீயே;**
இருள் சேர்ந்திடுமிவ்வேளையிலே இன்னலொன்றுந்
தொடராமல்,
மருண்டு மனது பிறழாமல்,[2] வஞ்சத்தொழிலிற் செல்லாமல்,
கருணாகரனே! எனைக்காக்கக் கழறுந்[3] துதியுனக்
கொருகோடி. – சுவாமி ஒரு கோடி,

2. சென்றநாட்களனைத்திலும் சிறியேன் தனக்குச் செய்துவந்த
நன்றாம் நன்மைகளனைத்திற்கும் நவிலற்கரிய[4]
தயைகளுக்கும்,
என்றுமழியா வரங்களுக்கும் ஏழையடியேன் மிகத் தாழ்ந்து
கன்று நினைந்து கதறுதல்போல் கழறுந்துதியுனக் கொருகோடி.
– சுவாமி ஒரு கோடி,

3. பற்றொன்றில்லாப் பரம்பொருளே! பரமானந்த சற்குருவே!
வற்றாஞான சமுத்திரமே! வடுவொன்றில்லா[5] வான் பொருளே!
பெற்றோர், உற்றோருலகனைத்தும் பிரியமுடனே சுகித்திருக்கக்
கற்றில்லாத மிகச் சிறியேன் கழறுந்தியுனக் கொருகோடி.
– சுவாமி ஒரு கோடி,

4. பத்தியதனாலுனைப் பாடிப் பணிந்தேயென்றும் வாழ்ந்திருக்க,
நத்தும்[6] இரவு முழுதனைத்தும்நாதா என்னைக்காத்தருளி,
முத்தியென்னும் மோட்சநிலை முடிவிலடியேன்
தன்னைச்சேர்க்கக்
கத்தியலறிப் பரவசமாய்க் கழறுந்துதியுனக் கொருகோடி.
– சுவாமி ஒரு கோடி,

***– ஐ.த. எலியேசர்***

## தொண்டு செய்யத் தோழரே

**395. காபி** **ஆதி தாளம்**

**தொண்டு செய்யத் தோழரே, துடிப்புடன் செல்வோம்;**
மண்டல மானிடர் மாண்பை நாடித்தேடுவோம்.

---

1 வேதமே
2 பிசகாமல்
3 உரக்கக் கூறும்
4 சொல்லுதற்கரிய
5 குற்றமற்ற
6 விரும்பும்

2. ஈண்டு கூடி யேகமாய் எத்திசையும் செல்லுவோம்;
வேண்டும் தோழர் விரும்பிச்சேர விரைவுடன் சேர்ப்போம்.

3. கட்சி நீங்கக் கல்வி ஓங்கக், கிராமம் களிக்கப்,
பட்சிக்கும் கடன் கவலை பறந்தே ஓடிட.

4. சிறுமை தீரச் செல்வாக்குச் சுதந்திரம் சேரப்,
பொறுமை சேரணி வகுத்தும் ஐக்கியம் வளர.

5. தாழ்ச்சியுள்ளோர் வாழ்வடையும் தருமம் ஓங்கிட,
ஆட்சியாவும் அவர்கள் நன்மைக்கென்றே மாறிட.

6. சுத்த மனத் தூய்மையால் நம் சோர்வை ஓட்டுவோம்,
முத்தர் போல் சுயநலந்துறந்து துணிவோம்.

7. சத்திய விரதம் பூண்டு சாந்தமாய்ச் செல்வோம்,
அத்தனின் அருளைச் சார்ந்தும் ஆனந்தம் கொள்வோம்.

***– சவரிராயன் ஏசுதாசன்***

## கிறிஸ்தவ இல்லறமே

**396. காம்போதி** **சாபு தாளம்**

***பல்லவி***

**கிறிஸ்தவ இல்லறமே–சிறந்திடக்**
கிருபை செய்வீர், பரனே!

***அனுபல்லவி***

பரிசுத்த மரியன்னை, பாலன் யேசு, யோசேப்புப்
பண்பாய் நடத்திவந்த இன்பக்குடும்பம்போல. – கிறிஸ்தவ

***சரணங்கள்***

1. ஜெபமென்னும் தூபமே தினம் வானம் ஏறவும்,
திருவேத வாக்கியம் செவிகளில் கேட்கவும்,
சுப ஞானக்கீர்த்தனை துத்தியம் பாடவும்,
சுத னேசு தலைமையில் தூய வீடாகவும். – கிறிஸ்தவ

2. ஊழியம் புரியவும் ஊதியம் விரும்பாமல்,
உவந்த பெத்தானியா ஊரின் குடும்பம் போல,
நாளும் யேசு பிரானை நல்விருந்தாளி யாக்கி
நாடியவர் பாதத்தில் கூடியமர்ந்து கேட்டுக். – கிறிஸ்தவ

3. அன்போடாத்துமதாகம் அரிய பரோபகாரம்
அருமையாக நிறைந்த அயலார்க் கொளி விளக்காய்த்
துன்பஞ் செய்கிற பல தொத்து வியாதிகளைத்
தூரந்துரத்தும் வகை சொல்லிச் சேவையைச் செய்து –கிறிஸ்தவ

4. மலையதின் மேலுள்ள மாளிகையைப் போலவே,
மற்றவர்களுக்கு முன் மாதிரியாய் நின்று,
கலை உடை உணவிலும், கல்வி முயற்சியிலும்,
கர்த்தருக் கேற்ற பரிசுத்தக் குடும்பமாகக் – கிறிஸ்தவ

***– ல. பொன்னுசுவாமி***

### எங்கும் புகழ் யேசு ராசனுக்கே

**397. கரகரப்ரியை** **ஆதி தாளம்**

***பல்லவி***

**எங்கும் புகழ் யேசு ராசனுக்கே**
எழில் மாட்சிமை வளர் வாலிபரே!

***அனுபல்லவி***

உங்களையல்லவோ உண்மை வேதங் காக்கும்,
உயர்வீரரெனப் பக்தர் ஓதுகிறார். – எங்கும்

***சரணங்கள்***

1. ஆயிரத் தொருவர் ஆவிரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்;
தாயினும் மடங்கு சதம் அன்புடைய
சாமி யேசுவிக்கிதயம் தந்திடுவீர். – எங்கும்

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்
கடன்பட்டவர்கள் கண்திறக்கவே;
பல்வழி அலையும் பாதைதப்பினோரைப்
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர். – எங்கும்

3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வி?
பாழுந்துர்க்குணமும் பாவச் செய்கையாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ? – எங்கும்

4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல
தூதர் நீங்களே தூயன்வீரரே;
கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்
கருணை நிறை வசனம் கற்றிடுவீர். - எங்கும்

***- ல. பொன்னுசுவாமி***

**இமயமும் குமரியும்**

**398. ("ஜன கண மன" என்ற இசை)**

**இமயமும் குமரியும் எல்லைக்கடலுடை**
எந்தாய் நாட்டினைக் காத்தாள்
நெஞ்சார் அன்பின் தியாகசேவையே
நெறியாம் சிலுவையின் வீரம்
தங்கிடத் தேசத்தலைவர்மேல் ஆசி
சாந்தியின் வாழ்வருள் நாதா!
சமாதானம் யேசுவின் வீடே,
சகலர்க்கும் சாந்தி எம் நாடே,
சாந்தி இதற்கில்லை ஈடே,
இமயமும் குமரியும் எல்லைக்கடலுடை
எந்தாய் நாட்டினைக் காத்தாள்.
ஜெயமே, ஜெயமே, ஜெயமே!
ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே!

2. உழவெழத் தொழிலெழ உற்பத்தி மிகவே
ஓங்கிய வர்த்தகம் தாங்கப்,
பொய்யா மொழி மாகாணத்தலைவர்
புருஷோத்தம மந்திரிகள்
நற்கிறிஸ் திறைவனின் சிலுவைச் சேவை
நட்புடன் கருணை இலங்கப்
பணிவிடை நேர்மை அருளே,
பரனர செனப் பகர் தெருளே,
பாரதம் போற்றும் மெய்ப் பொருளே!
இமயமும் குமரியும் எல்லைக் கடலுடை
எந்தாய் நாட்டினைக் காத்தாள்.
ஜெயமே, ஜெயமே, ஜெயமே!
ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே!

***- சா.ஜா. நல்லையா***

## யேசு நாம கீதம்

**399. (இராகம்: "ரகுபதி ராகவ ராஜாராம்")**

**மீட்பர் யேசுவே வல்லவராம்**
மேன்மையுள்ள ஆண்டவராம்,
கேட்போர் யாருக்கும் அருள் நாதர்,
கீழோர்களை உயர்த்தவராம்,
மாட்சியுற்ற யேசுவை யாம்
மனமுவந்து பணி செய்வோம்.

***– சவரிராயன் ஏசுதாசன்***

## கர்த்தருடைய ஜெபம்

**400. (317) ஹரிகாம்போதி** **ஏகதாளம்**

**கழிநெடில்**

**உன்னதப் பரமண் டலங்களில் வசிக்கும்**
ஒளிர்பிதாவே, உனின் நாமம்
உயர் பரி சுத்த மாய்த்தொழப் படுக;
உனது ராச்சிய முறை வருக;
முன்னிய உனது சித்தமே பரத்தில்
முடியுமாப் போல, இப்புவியில்
முடிவுறச் செய்யப் படுவது மாக;
முழுதும் நின் கரத்தையே நோக்கும்
நின் அடியார்க்கன் றாடக உணவு
நிரம்பவே அருள்; பிறர் இயற்றும்
நீதிக்கே டினை யாம் பொறுப்பது போல,
நிமலனே, எம்பவம் மனியாய்;
இன்னமும் எமைச்சோ தனைக்குட் படாமல்
இடர் தவிர்த் திரக்கமாய்க் காவாய்;
இராச்சியம் வல்லமை மகிமைமற் றெவையும்
என்றும் உன் உடைமையே; ஆமென்.

***– சவரிமுத்து உபாத்தியாயர்***

## பாடலாசிரியர் அகராதி


**அண்ணாவியார், யே.,** கும்பகோணம் 44, 47, 60, 333
**அருமைநாயகம், ச.,** நாகர்கோவில் 229, 335
**அருளப்பன், யோ.ச.,** திருநெல்வேலி 155
**அருளப்பன், ம., பவுல்** 268, 275, 376
**அருளானந்தம் பிரசங்கியார்,** திருநெல்வேலி 72, 116, 117, 241, 245
**அல்லின், ஆ.,** திண்டுக்கல் 84, 206, 264
**ஆபிரகாம் பண்டிதர், மு.,** தஞ்சை 37
**ஆர்நொல்ட், ஐ. ர.,** யாழ்ப்பாணம் 262
**எரேமியா, சு.ச.,** யாழ்ப்பாணம் 301
**எலியேசர், ஐ. த.,** சென்னை 389
**ஏசடியான் உபாத்தியாயர்,** நாசரேத்தூர் 283
**ஏசடியான் ஐயர், சு. ச.,** திருநெல்வேலி 64, 277
**ஏசுதாசன், சபரிராயன், டாக்டர்,** திருப்பத்தூர் 8, 108, 328, 393, 395, 399
**ஐயாத்துரை பாகவதர், த.,** கயத்தாறு 17, 82, 101, 127
**காபிரியேல் உபதேசியார்,** பார்வதியாபுரம் 10, 38, 297
**கிருஷ்ணபிள்ளை, எ. ஆ.,** பாளையங்கோட்டை 1, 100, 153, 191, 218
**கிறிஸ்மஸ், சா. ஈ.,** சேலம் 284
**குளோரியா, எ. ஐ.,** திருச்சி 312
**சட்டம்பிள்ளை, ஆ. நா.,** பிரகாசபுரம் 258
**சத்தியநாதன் பிள்ளை, த.,** தஞ்சை 2, 85, 123, 296
**ச. ஐ.,** பாளையங்கோட்டை. 231
**சத்தியவாசகம் பண்டிதர்,** பாளையங்கோட்டை 59
**சந்தியாகு ஐயர், வே.,** மதுரை 119, 140, 142, 192, 198, 199, 215, 219, 223, 253, 267, 310, 314, 315, 326, 371
**சவரிமுத்து உபாத்தியாயர்,** பன்றிகுளம் 95, 112, 233, 400
**சவரிமுத்து போதகர், அ.,** திண்டுகல் 54, 125
**சவரிராயன், ஏசு.,** பாளையங்கோட்டை 137
**சாமுவேல் ஐயர், ஞா.,** தரங்கம்பாடி 4, 7, 22, 51, 70, 76, 91, 104, 114, 148, 170, 187, 208, 222, 226, 240, 249, 278, 279, 281, 285, 288, 290, 298, 302, 307, 330, 337, 365, 366, 372, 373, 375, 382, 383, 384
**சாமுவேல், ஐ.,** புதுச்சேரி 385
**சாமுவேல், ஐ. ஏ.,** ஆறுமுகநேரி 63
**சாமுவேல், ஐ. த.,** மெய்ஞ்ஞானபுரம் 151
**சாமுவேல், ம.,** நாகர்கோவில் 243

**சாண்ட்லர் ஐயர், ஜா. ச.,** மதுரை 203
**சிங்க், ச. ஜெ.,** நெய்யூர் 316, 364, 377
**சீமோன் ஐயர், சா.** மதுரை 39, 220, 239, 266, 272
**சுந்தரம், வீ.ப.கா.,** மதுரை 318
**ஸ்தேவான் ஐயர், ல.ஈ.,** ஈரோடு 45, 327, 378
**ஞானமணி ஐயர், ச.த.** 319, 387, 392
**ஞானமணி ஐயர், ச.பே.** 94, 251, 304, 329
**ஞானமணி, யே.,** அறுப்புக்கோட்டை 225, 263, 269
**ஞானாபரணம் பண்டிதர், தே.அ.,** நாகர்கோவில் 194
**ஜயராஜ், வீ.,** தேவாரம் 343, 348
**தாவீது ஐயர், பா.,** டோனாவூர் 109, 122, 282, 300, 350
**தாவீது ஐயர், சத்.,** சிவகாசி 317
**தானியேல், ஆ. த.,** ராமநாதபுரம் 308
**தேலர் ஐயர், யே. சா.,** மதுரை 313
**தேவசகாயம் உபாத்தியாயர்,** சாட்சியாபுரம் 145, 152, 197
**தேவசகாயம் ஐயர், மு.,** மதுரை 110, 207
**தேவசகாயம் ஐயர், வே.,** தரங்கம்பாடி 305, 358
**தேவசகாயம் ரைட்டர்,** தஞ்சை 52, 361
**தேவசிகாமணி சாஸ்திரியார்,** தஞ்சை 180
**தேவசகாயம் ஐயர், ஆ.** 28, 210, 369
**தேவவரம் முன்ஷி,** திருவனந்தபுரம் 23, 40, 75, 87, 214
**தைரியம் ரைட்டர்** 78
**நல்லையா, சா. ஜா.,** கொம்பை 398
**நாராயன வர்மன் திலகர்,** பூனா 224
**பலவேந்திரம் ஐயர், த.,** வத்தலகுண்டு 163, 195
**பரமானந்தம் ஐயர், சா.** 25, 68, 97, 129, 157, 209, 254, 311, 321, 334, 360
**பாக்கியநாதன், ஈசா,** மதுரை 124, 131, 132, 261, 322
**பால்மர், யோ.,** நாகர்கோவில் 16, 33, 43, 69, 120, 141, 147, 154, 158, 160, 161, 164, 168, 172, 175, 181, 189, 204, 229, 235, 236, 244, 259, 292, 293, 338, 342, 346, 379
**பாளையங்கோட்டைப்** பாடல் 74, 128, 227, 331, 339, 340
**பிச்சைமுத்து, ஆ.ஐ.,** தஞ்சை 107, 323, 325, 362
**பிரெக்கன்ரிஜ், ர.,** யாழ்ப்பாணம் 217
**பென்யமீன் ஐயர், வே. ஐ.,** திருக்கோவிலூர் 390
**பொன்னுசுவாமி ஐயர், ல.,** மதுரை 88, 276, 352, 396, 397

**மதுரநாயகம் உபதேசியார்,** திருநெல்வேலி 183
**மரியான் உபதேசியார்,** திருநெல்வேலி 13, 98, 138, 178, 186, 200, 255, 257, 280, 306, 353
**மாசில்லாமணி ஆசிரியர், சா.,** சாத்தன்குடி 357
**மாசில்லாமணி ஐயர், வே.,** திருவண்ணாமலை 6, 11, 34, 115, 133, 139, 144, 265, 286, 309, 359
**மிகாவேல் பிள்ளை, பா.** பிறையாறு 65
**முத்துசாமி உபாத்தியாயர், சு.,** கரம்பக்குடி 146, 213, 341
**யாக்கோபு, யோ.,** கருவூர் 35, 126, 247
**யாழ்ப்பாணப்** பாடல் 201, 303
**யோசுவா உபாத்தியாயர், ல.,** பிறையாறு 221, 248
**யோசேப்பு, ச.,** நாகர்கோவில் 31, 113, 150, 212, 274, 354, 367, 368, 370
**யோசேப்பு, த.,** நெய்யூர் 62, 143, 216, 228, 252, 256, 332
**யோவான், ப.ஈ.,** நெய்யூர் 336
**ரத்ன பரதேசியார்,** திருநெல்வேலி 55
**வில்லியம் ஐயர், ஜி.ச.,** உடுமலைப்பேட்டை 102
**வின்பிரட் போதகர்,** சென்னை 121
**வீரமா முனிவர்,** மதுரை 41
**வெப் ஐயர், ஏ.** 184
**வேதக்கண், அ.,** உபாத்தியாயர், நாகர்கோவில் 167, 185, 237
**வேதமாணிக்கம், ம.,** நெய்யூர் 5, 242, 270, 391
**வேதநாயகம் ஐயர், ஜி.சே.,** சென்னை 14, 15, 36, 135, 205, 271, 273, 289, 324, 344, 356, 374
**வேதநாயகம் பாகவதர்,** சென்னை 61, 202
**வேதநாயகம் சாஸ்திரியார்,** தஞ்சை 3, 9, 12, 18, 19, 20, 21, 24, 26, 27, 29, 30, 46, 48, 49, 50, 53, 56, 57, 58, 66, 67, 71, 73, 79, 80, 81, 83, 86, 89, 90, 92, 93, 96, 99, 103, 105, 106, 111, 118, 130, 134, 136, 156, 162, 165, 166, 169, 171, 173, 174, 176, 177, 179, 182, 188, 190, 193, 196, 211, 230, 232, 234, 238, 260, 287, 291, 294, 295, 320, 345, 347, 349, 355, 363

*skrajann@gmail.com*